
# தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஊழியர்



ஆல்ஃப்ரட் தேவதாசன்

# தேவனுடைய
# இருதயத்துக்கேற்ற ஊழியர்

(ஒவ்வொரு ஊழியரும் சபையாரும் அறிந்திருக்க வேண்டிய உண்மைகள்)

பேராசிரியர்
**Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன்,** M.Sc., M.Phil., Ph.D.
(வாழ்வியல் விளக்க வேதாகமத்தின் ஆசிரியர்)

வேர்ட் ஆஃப் கிரைஸ்ட்
சென்னை

**தேவனுடைய இருதயத்துக்கேற்ற ஊழியர்**

© Dr. Alfred Devadason

**First Edition 2010**

**Second (Revised) Edition 2012**

## அர்ப்பணம்

கிருபையாக என்னை இரட்சித்து, தமது ஊழியனாக்கிய தேவனின் பாதபடியில் இந்நூலை அர்ப்பணிக்கிறேன்

Published by

**WORD OF CHRIST MINISTRIES**
No.100/3, Nirmala Apartments, Medavakkam Tank Road,
Kellys, Chennai - 10.

# முகவுரை

2003இல் நடைபெற்ற, இந்திய தேவசபையின் அகில இந்திய போதகர் மாநாட்டில், 'தேவனுடைய இருதயத்திற்கேற்ற போதகர்' என்ற தலைப்பில் உரையாற்றுவதற்குக் கர்த்தரின் கிருபையைப் பெற்றேன். அந்தச் செய்தியை ஒரு நூலாக எழுதுவதற்கான ஆவியானவரின் வழிநடத்துதல் இருந்து வந்தது. எனது தகுதியின்மையையும் பலர் மனவருத்தப்படும் நிலையையும் கருதி, எழுதுவதற்கு மிகவும் தயங்கினேன். இறுதியில், இந்நூலை எழுதுமாறு ஆவியானவரால் எச்சரிக்கப்பட்டதால் எழுதி வெளியிடுகிறேன்.

வேதத்தின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளதால், திறந்த மனதுடன் இதை வாசித்து ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தருடைய ஊழியர் அனைவருக்கும் பொருந்துமாறு எழுதப்பட்டுள்ள போதிலும், போதகர்களுக்கென்று பல பகுதிகள் அமைந்துள்ளன. இதை வாசிக்கும் ஊழியர் ஒவ்வொருவரும் தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஊழியராகவேண்டும் (அப்:13:22) என்ற ஜெபத்துடன் இதை வெளியிடுகிறேன். கர்த்தர் உங்களோடிருப்பாராக.

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் வாசிக்கும்போதே இதிலுள்ள குறிப்புகளின்படி தங்கள் ஊழியர் தேவனுடைய இருதயத்திற்கேற்றவாறு மாறுவதற்காக ஊக்கமாக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தருக்குள் அன்புள்ள,
**ஆல்ஃப்ரட் தேவதாசன்**
E58,15வது தெரு
2,வது குறுக்குத் தெரு
பெரியார் நகர், சென்னை–82.

**குறிப்புகள்:** உங்கள் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

சில கருத்துகள் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகளில் சில அதிகாரங்களில் மீண்டும் கூறப்பட்டுள்ளன.

**இந்நூலைப் படிப்பதற்கு முன் 'வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?' என்ற நூலைப் படிப்பது தேவையானது. எல்லா கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.**

# முன்னுரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கர்த்தருக்குள் அன்புடன்,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# ஆலோசகர்கள்

**Rev. G. ஞானதாஸ்,**
இயக்குநர்,
தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி,
இந்திய தேவசபை

**Rev. R. பால் ஆனந்த்,**
இணை இயக்குநர்,
தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி,
இந்திய தேவ சபை

**Bro. D. ராஜேந்திரன்,**
**Word of Christ, Chennai**

**Rev. E. வசீகர், B.T.S., M.Div.,**
**Anglican Church,**
**Chennai - 82**

**Bro. E.L. மதன்சிங், M.A., M.Phil., M.Mis., M.Th.,**
**Director of training and development,**
**Blessing Youth Mission,**
**Vellore - 6**

**Rev. M. S. இளங்கோ அந்தோணிராஜ், B.E., M.Div.,**
**Pastor, Christ Bible Church,**
**Chennai - 90**

**சகோ. கோ. பொன்ராஜ் ஐசக்,**
பணி நிறைவு பெற்ற மிஷனரி,
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

**சகோ. கிங்ஸ்லி செல்லையா,**
பணி நிறைவு பெற்ற மிஷனரி,
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

## உள்ளே..

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பாராட்டுகள் | 01 |
| 2. | ஊழியரின் வாழ்க்கை | 03 |
| 3. | வேதத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து ஊழியங்கள் | 09 |
| 4. | ஊழியரின் பொறுப்பு | 13 |
| 5. | விசுவாச ஊழியம் | 17 |
| 6. | ஊழியரின் தகுதி | 23 |
| 7. | சபை உதவிக்காரரின் தகுதிகள் | 29 |
| 8. | மூப்பர்களின் தகுதிகள் (பட்டியல்) | 33 |
| 9. | ஊழியரின் அழைப்பு | 35 |
| 10. | பின்பற்றுதல் | 39 |
| 11. | ஊழியர் தவிர்க்க வேண்டியவை | 45 |
| 12. | ஊழியரின் கடமைகள் – தமக்கு | 55 |
| 13. | ஊழியரின் கடமைகள் – சபைக்கு , விசுவாசிகளுக்கு | 65 |
| 14. | நிகழ்ச்சிகள் | 75 |
| 15. | வீடு சந்திப்பு | 81 |
| 16. | எப்படிப் போதிக்கவேண்டும்? | 85 |
| 17. | எவற்றைப் போதிக்கலாம் | 93 |
| 18. | போதிப்பதில் தவிர்க்க வேண்டியவை | 99 |
| 19. | போதகத்தில் தவறான முறைகள் | 105 |
| 20. | இக்காலத்தில் அற்புதங்கள் நடைபெறுவதில்லையோ? | 113 |
| 21. | மந்தையின் மேய்ப்பர் | 117 |
| 22. | ஆராதனை | 121 |
| 23. | உத்தம ஊழியரை எதிர்ப்போரின் நிலை | 127 |
| 24. | தொலைக்காட்சி, பத்திரிக்கை, வேதாகம ஊழியங்கள் | 129 |
| 25. | ஆரஞ்சு நகரத்தின் கதை, இரத்தப்பழி | 133 |
| 26. | பல கிறிஸ்தவர்களின் நிலை | 139 |
| 27. | சபை வளர்ச்சி | 143 |

| | | |
|---|---|---|
| 28. | ஊழியர்களுக்கு நியாயத்தீர்ப்பு | 145 |
| 29. | இது காலமா? | 147 |
| 30. | ஊழியர் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் | 151 |
| 31. | ஊழியரின் பயம், சோர்வு | 155 |
| 32. | ஊழியத்தில் கள்ளர்கள் | 159 |
| 33. | தலைவர்கள் | 165 |
| 34. | சாத்தானின் ஊழியக்காரனின் அடையாளங்கள் | 177 |
| 35. | ஊழியர் திருமணமின்மை | 181 |
| 36. | பெண்களைப் போதகராக, தலைவராக ஏற்படுத்தலாமா? | 183 |
| 37. | ஊழியரின் மனைவி | 187 |
| 38. | சகோதரரே, ஊழியருக்காக வேண்டிக்கொள்ளுங்கள் | 193 |
| 39. | கடைசியாக | 197 |

# 1. பாராட்டுகள்

நீங்கள் ஒரு ஊழியராக இருப்பதை நான் உளமாரப் பாராட்டுகிறேன். உலகின் பல வேலைகளை ஒதுக்கிவிட்டு தேவனுக்கென்றும் ஆத்துமாக்களுக்கென்றும் உங்களின் வாழ்க்கையைத் தியாகமாக அர்ப்பணித்த உங்களைப் பாராட்டாமலிருப்பது எப்படி?

நீங்கள் செய்யும் பணி உலகிலேயே மிகச் சிறந்த பணியாகும் (1தீமோ.3:1). உலகிலுள்ள எந்தப் பணியும் இதற்கு ஈடாகாது. மருத்துவர்கள் உடலின் நோய் குணமாவதற்கு உதவலாம். நீங்களோ ஆத்தும நோய் குணமாவதற்கு உதவுகிறீர்கள். மருத்துவர் செய்யும் பணி தற்காலிகமானது. ஏனெனில் குணமாகும் எந்த மனிதனும் இறுதியில் மரணமடைவான். ஆனால் ஆத்துமப் பணி நிரந்தரமானது. ஏனெனில் அது மனிதனை இணையற்ற முடிவில்லா வாழ்விற்கு (நித்திய ஜீவன்) வழி நடத்தும். உலகின் பெரிய நிறுவனத்தின் உரிமையாளர், பெரிய அலுவலர், குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், முதலமைச்சர், நடிகர், விளையாட்டு வீரர், படைத்தலைவர், சொற்பொழிவாளர், அழகில் சிறந்தவர் போன்ற எவருக்கும் கிடைக்காத மாபெரும் சிறப்பு உங்களுக்கு உண்டு. அந்தச் சிறப்பு 'வானத்தையும், பூமியையும் படைத்த மாபெரும் தேவனானவர் உங்களை கௌரவிப்பார் (கனம்பண்ணுவார்)' என்பதாகும் (யோவா.12:26). இந்தச் சிறப்பு தற்காலிகமானதல்ல, என்றென்றுமானது. யாவரும் உங்களின் சிறப்பை நீடுழி காலமாகக் காண்பார்கள் (மல்.3:18).

நீங்கள் மறு உலகிற்குச் செல்லும்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய். அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று மகிழ்ச்சியுடன் கூறுவார் (மத்.25:21, 23). "மோசேயின் முகம் பிரகாசித்ததைக் காட்டிலும் அதிக மகிமை உண்டாயிருக்கும்" (2 கொரி.3:7–11).

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்கிறவர்கள் ஞானவான்களாயிருக்கிறபடியால் (நீதி.11:30), ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானி.12:3). இந்த மேன்மையைப் பெறுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

தேவனுடைய ஊழியக்காரர், புதிய பூமியில் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும் சேவித்து, அவருடைய சமுகத்தைக் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களின் நெற்றிகளில் இருக்கும். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் என்று வேதம் கூறுகிறது (வெளி.22:3–4). ஆம் மகிமையுள்ள வாடாத கிரீடம் தரித்தவர்களாக (1 பேது.5:4), நீங்கள் அரசாட்சி செய்யும் மாபெரும் பேறு உங்களுக்காகக் காத்திருக்கிறது.

நீங்கள் கர்த்தருடைய வசனத்தை நற்செய்தியாக அறிவிக்கும் செயலை, உங்கள் செய்தியைக் கேட்பவர்கள் மட்டுமின்றி, பரலோகத்தின் தேவதூதர்களும் ஆவலாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் (1 பேது.1:12) என்றால், உங்கள் பணியின் சிறப்பைக் கூறவும் முடியுமோ?

கர்த்தருடைய பணியைச் செய்கிற உங்களுக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுப்பவருக்கு நிச்சயம் பலன் உண்டு என்று கர்த்தர் கூறியுள்ளார் (மத்.10:42). உங்களுக்கு எந்தவொரு சிறு உதவி செய்பவருக்கும் பலன் (வெகுமதி) உண்டு எனில், அதைப்பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் பலனை அளவிடமுடியுமோ?

உலகப்பிரகாரமான பல பணிகளில் ஈடுபடுகிற பலர் கர்த்தரைத் தேடுவதற்கும், அவருடைய பிரசன்னத்தில் அமர்வதற்கும், அவர் நேரிடையாகப் பேசுவதைக் கேட்பதற்கும், வேதத்தியானத்திற்கும், கர்த்தரைப் பற்றிப் பிறரிடம் கூறுவதற்கும் போதுமான நேரம் கிடைக்காமல், வாய்ப்பு இல்லாமல் வாழ்கின்றனர். உங்களுக்கோ இவை யாவும் உங்கள் பணியின் வாயிலாகக் கிடைப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

உங்களைவிட தேவன் உங்கள் ஊழியத்தில் அக்கறையுள்ளவராக இருக்கிறார் (சக.4:10). நீங்கள் எல்லாவிதத்திலேயும் சுகமாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் வாஞ்சையாயிருக்கிறார் (சங்.35:27).

ஊழியரின் மேன்மையை அளவிடவும், முற்றிலும் சொல்லவும் முடியாது!

## உ. ஊழியரின் வாழ்க்கை

### நோக்கமுள்ள வாழ்க்கை

உங்கள் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த நோக்கம் இருப்பதோடு தொடர்ந்து அதற்காக வாழவேண்டும் (பிலி.3:14). உங்கள் தரிசனத்தைக் குறித்து நீங்கள் தெளிவாக இருக்கவேண்டும் (நீதி.29:18). உங்கள் நோக்கத்தை, தரிசனத்தை எழுதிவையுங்கள் (ஆப.2:2).

### வழிகாட்டியான வாழ்க்கை

உங்கள் வாழ்க்கை உங்கள் சபை மக்களுக்கும், ஊழிய இடத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும் (1 தீமோ.4:12). கர்த்தரின் ஊழியராயிருப்பவர்களின் ஒவ்வொரு சொல்லையும், செயலையும் அநேகர் கவனித்துக்கொண்டேயிருப் பார்கள். உங்களைப் பின்பற்றுவதற்கும் உங்களைப் போன்றே நடந்து கொள்வதற்கும் அநேகர் முயற்சி செய்வார்கள்.

எனவே, **உங்கள் காலடிகளைக் குறித்து கவனமாயிருங்கள். அநேகர் அவற்றில் நடக்கக்கூடும்.**

### தேவனை நேசிக்கும் வாழ்க்கை

தேவனை முழுமனதுடன் நேசிக்கிறவராக இருத்தல் மிகவும் அவசியம் (யோவா.21:15–17). கர்த்தரின் அன்பு, இரக்கம், கிருபை போன்றவற்றை அடிக்கடி தியானிப்பதின் வாயிலாக அவரில் அன்புகூரமுடியும். மேலும், தேவனை மிகவும் நேசித்து அவருடைய பிரசன்னத்தில் வாழ்ந்தால், பாவத்தை வெறுத்து பலவித இச்சையில் விழாமல் தப்பித்துக்கொள்ள முடியும்.

### தூய்மையான வாழ்க்கை

எப்பொழுதும் நல்மனச்சாட்சியுடனிருங்கள் (1 தீமோ.1:18,19). மாம்சத்திற் கேற்ற ஞானத்துடன் நடக்காமல் தேவனுடைய கிருபையினால் உலகத்தி லேயும், உங்கள் சபை மக்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடு நடந்தீர்களென்று உங்கள் மனது உங்களுக்குச் சொல்லும் சாட்சியுடையவர்களாக இருங்கள் (2 கொரி.1:12). வெட்கமான அந்தரங்க

காரியங்களை வெறுத்து, தந்திரமாக நடக்காமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் உங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணு மாறு தேவன் உங்களிடம் எதிர்பார்க்கிறார் (2 கொரி.4:2). வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாக இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறீர்கள் (1 தீமோ.4:12).

உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தமாயிருப்பதற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் (1 தெச.4:7; 1 பேது.1:15). அசுத்தமான சிந்தனைகளை வெறுத்து, அகற்றி, ஆவிக்குரியனவற்றைச் சிந்திப்பவர்களே சொற்களிலும் நடக்கையிலும் பரிசுத்தமாயிருக்கமுடியும். எனவே, உங்கள் எண்ணங்கள் தொடங்கி நடக்கைவரை யாவற்றிலும் பரிசுத்தமாக இருப்பீர்களாக. தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நல்மனச்சாட்சியைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியம் (அப்.24:16; 2 கொரி.4:2; 1 தீமோ.1:19; 3:9; 1 பேது.3:16).

உங்களைச் சுற்றிலும் பலர் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் பல ஊழியர்கள் தவறுகளில் இருப்பது உங்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் நீங்கள் அவர்களைப்போன்று வாழலாகாது.

**முன்மாதிரியான வாழ்க்கை**

வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் (1 தீமோ.4:12).

**நீங்கள் தவறிழைத்தால்**

நீங்கள் தவறு செய்தால் உங்களால் தேவனுடைய பெயர் ஏளனம் செய்யப்படும் (தூஷிக்கப்படும்) (ரோம.2:24). அவ்வாறு நேரிடாதபடி மிகவும் கவனமாக இருங்கள். உங்கள் வாழ்க்கையைப் பார்த்து யாரேனும் இடறலடைந்தால் (தவறிப்போனால்) உங்களுக்கு ஐயோ. ஏனெனில் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்தில் அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம். ஆனாலும் எந்த மனிதனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்று கர்த்தர் கூறியிருக்கிறார் (மத்.18:6–7).

"மற்றவருக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் (காணிக்கைப் பணத்தைக்) கொள்ளையிடலாமா?" என்று வேதம் உங்களைக் கேட்கிறது (ரோம.2:21–22). நீங்கள் மிகவும் முக்கியமானவர்கள். ஏனெனில் உங்கள் சபையிலும், நீங்கள் வாழும் பகுதியிலும் நீங்கள் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்களைப் பின்பற்றும்படி வாழ்ந்து காட்டுங்கள் (மத்.5:16).

**பரிசுத்தம் இல்லாமல் 'ஊழியம்' செய்ய முடியும்.**
**அது ஊழியமல்ல, அட்டூழியம்.**

**குறிக்கோளுள்ள வாழ்க்கை**

**உங்கள் குறிக்கோள் கீழ்க்கண்டவாறு அமையவேண்டும்:**

எல்லோரும் உண்மையற்றவர்களாக இருந்தாலும் நான் உண்மையுள்ளவனாயிருப்பேன்.

எல்லோரும் ஏமாற்றுகிறவர்களாக இருந்தாலும் நான் நம்பிக்கைக்குரியவனாக இருப்பேன்.

எல்லோரும் கறைபடிந்தவர்களாக இருந்தாலும் நான் கறையற்றவனாக இருப்பேன்.

எல்லோரும் சண்டையிடுகிறவர்களாக இருந்தாலும் நான் அன்புடனும் ஒற்றுமையுடனும் இருப்பேன்.

எல்லோரும் திருடுகிறவர்களாக இருந்தாலும் நான் திருடமாட்டேன்.

எல்லோரும் பொய்க்கணக்கு காட்டினாலும் நான் சரியான கணக்கு எழுதுவேன்.

எல்லோரும் பணியில் கவனக்குறைவாக இருப்பினும் நான் கருத்தாகப் பணி செய்வேன்.

எல்லோரும் கால தாமதம் செய்தாலும் நான் குறித்த நேரத்தில் செயல்படுவேன்.

**ஓநாய்கள் மத்தியில் ஓநாயாக இருக்கும்படி அல்ல,**
**ஓநாய்கள் மத்தியில் ஆட்டைப்போன்று இருப்பதற்காகவே**
**கர்த்தர் உங்களை அழைத்திருக்கிறார்** (மத்.10:16; லூக்.10:3).

### விசுவாச வாழ்க்கை

ஊழியருக்கு மிகவும் தேவையானது விசுவாசம் ஆகும். உலகப் பொருளுக்காக விசுவாசிப்பதையே பலர் முக்கியப்படுத்துகிறார்கள். அன்றன்று நடத்துவதிலும், ஊழியத்திலும் குடும்பத்திலும் அற்புதங்களை எதிர்பார்த்தும், தேவன் நடத்துவார் என்று முழு நிச்சயமாக நம்புவதிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தவேண்டும். சிந்தனையிலும், சொற்களிலும், செயல்களிலும் விசுவாசம் வெளிப்படவேண்டும்.

### உண்மையுள்ள வாழ்க்கை

கர்த்தர் மோசேயைக் குறித்து, "என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்" என்று கூறினார் (எண்.12:7). 'என்னைப்பற்றி தேவன் இவ்வாறு கூறுவாரா?' என்று எண்ணிப்பார்த்து வாழுங்கள். எண்.12:6–8ஐத் தியானியுங்கள்.

### தேவ சமுகப் பழக்கமுள்ள வாழ்க்கை

தேவ ஊழியர் ஒவ்வொருவரும் தேவ சமுகத்தில் வாழும் பழக்கமுள்ளவர்களாக இருப்பது அவசியம். எலியாவுக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கும் பழக்கம் இருந்தது (1 இரா.17:1; 18:15). தேவனுடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்கள் தேவ செய்தி அளிப்பது எப்படி? தன் ஊழியத்திற்காகவும் செய்திக்காவும் ஜெபித்து, பதில்பெற்று, அதன்படி செய்கிறவரே சரியான ஊழியர்.

### ஊழியரும் மனிதர்தான்

கர்த்தரைத் தவிர எந்தவொரு ஊழியரும் பரலோகத்திலிருந்து வரவில்லை. ஆனால் ஒவ்வொரு உழியரும் பரலோகத்தை நோக்கிச் செல்கிறவர்களாகவும் மற்றவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். மேலும் எந்தவொரு ஊழியரும் முற்றிலும் தேறினவரல்ல (பிலி.3:12). எனவே, ஊழியர் சற்று தவறுவது நடக்கக்கூடியதே. ஆகவே, ஊழியர் மிகவும் கவனமாக வாழவேண்டும். இதற்கு அடிப்படையாக, ஊழியரின் மனப்பான்மை சரியாக அமைய வேண்டும். உயரிய நோக்கங்களிலும், கிறிஸ்துவைப்பற்றிய சிந்தனைகளிலும் நிறைந்திருக்கும்போது தவறிவிடாமல் வாழமுடியும்.

தவறும் சூழ்நிலை ஏற்பட்டாலும், சற்று நிலை தடுமாறினாலும், திடீரென விழுந்துவிட்டாலும் உடனடியாகக் கர்த்தரிடம் திரும்பி, மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு ஒழுங்காக வாழவேண்டும் (1 யோவா.1:7, 9). பல முறை இவ்வாறு விழுந்து எழும்புதல் சரியல்ல (நீதி.28:13).

**உயர் பதவிகளை நாடாதீர்**

கர்த்தர் அளிக்கும் பொறுப்புகளை மட்டும் கருத்தாகச் செய்யுங்கள். ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள் (1 பேது.5:5, 6). உலகப்பிரகாரமான உயர்வையோ, செல்வத்தில் உயர்வையோ, மனிதருக்கு முன்பான உயர்வையோ எதிர்பார்க்காதீர்கள். தேவன் அருளும் ஆவிக்குரிய உயர்வை, அவரது பிரசன்னத்தை, அதிக பயனுள்ள வாழ்க்கையை நாடுங்கள். தேவன் உங்களை உலகப்பிரகாரமாக உயர்த்தாவிட்டாலும் உயர்பதவி அளிக்கா விட்டாலும் தொடர்ந்து ஊழியம் செய்துகொண்டே இருங்கள். பரலோகத்தில் நிச்சயமாகப் பலனளிக்கப்படும் (வெளி.22:12).

**பயனுள்ள பாத்திரம்**

தன்னைச் சுத்திகரித்துக்கொள்பவனே பயனுள்ள பாத்திரமாக இருக்க முடியும் (2 தீமோ.2:20,21). கீழ்க்கண்ட தவறுகள் உங்களிடம் இருக்குமானால் அவற்றை அறிக்கைசெய்து விட்டுவிட்டு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள் (நீதி.28:13; 1 யோவா.1:7–9).

கோள்சொல்லித் திரிதல் (லேவி.19:16; நீதி.16:28; 29:12), சகோதரனைப் பகைத்தல் (1 யோவா.3:15), ஜெபம் செய்யாமை (1 சாமு.12:23), நன்மை செய்யாமை (யாக்.4:17), தகுதியின்றி கர்த்தரின் பந்தியில் பங்கேற்பது (1 கொரி.11:28–30), இச்சை (மத்.5:27–28), முரட்டாட்டம் (1 சாமு.15:23), மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை (1 யோவா. 2:16), சீர்கேடான வீண்பேச்சு (2 தீமோ.2:16), அநியாயம் (2 தீமோ.2:19), விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், வைராக்கியங்கள், விரோதங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், குடிவெறிகள், களியாட்டுகள் (கலா.5:19–21) போன்ற யாவையும் உங்களை விட்டு விலக்குங்கள்.

**ஆகாதவனாகப் போகாதபடி கவனம்**

மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிறவரும் ஆகாதவராகப் போகமுடியும் (1 கொரி.9:27). எனவே மிகவும் கவனமாக வாழுங்கள். “கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல” என்று கர்த்தர் கூறியுள்ளார் (லூக்.9:62). உலகத்தையும் மாம்சத்தையும் பின்னிட்டுப் பாராதீர்.

**பணி இடமாற்றங்கள்:** தேவசித்தமில்லாமல் உங்களை யாரும் (கண்காணிப்பாளரோ, பேராயரோ, உயர்மட்டக்குழுவோ) இடமாற்றம் செய்ய முடியாது. உங்கள் இடமாற்றத்தைத் தேவனுடைய சித்தமாக ஏற்றுக் கொண்டு அது உங்கள் நன்மைக்காக ஏற்படுகிறது என்ற விசுவாசத்துடன் கீழ்ப்படியக்கூடாதா? ரோம.8:28ஐ நீங்கள் விசுவாசிக்கவில்லையோ? இடமாற்றம் காரணமாக, தங்களைப் பல ஆண்டுகளாக ஆதரித்து வந்த நிறுவனத்தை விட்டுவிட்டு வெளியே செல்வது கர்த்தருடைய பார்வையில் சரியாக இருக்குமோ? கீழ்ப்படிகிறவர்களைக் கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

**தினமும் ஆய்வு**

'இன்று என்னால் என் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், பிறருக்கும், தேவனுக்கும், நான் பணிபுரியும் சபை அல்லது நிறுவனத்திற்கும் என்ன பயன்?' என்று அனுதினமும் உங்களை ஆராய்ந்து பார்த்து திருந்துங்கள்.

**அர்ப்பணிப்புள்ள வாழ்க்கை**

> **'கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கையின் மூலமும்**
> **ஊழியத்தின் மூலமும்**
> **எத்தனை பேரைப் பரலோகம் சேர்க்க முடியுமோ**
> **எவ்வளவு நேரம் அதற்காக உழைக்கவேண்டுமோ**
> **எவ்வளவு பணம் அதற்காகச் செலவு செய்யவேண்டுமோ**
> **எவ்வளவு தூரம் அதற்காகப் பயணம் செய்யவேண்டுமோ**
> **எவ்வளவு சிரமங்கள் அதற்காக அடையவேண்டுமோ**
> **இவை அனைத்தையும் நான் செய்வேன்'**

என்ற அர்ப்பணிப்பு ஒவ்வொரு ஊழியருக்கும் தேவை.

இவ்வாறில்லாதவர் தன்னைக் கர்த்தருடைய ஊழியர் என்று எண்ணுவது சரியாகுமா?

எப்பொழுதும் பரலோகத்தின் மீது கருத்தைச் செலுத்துபவராக வாழுங்கள்.

# 3. வேதத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து ஊழியங்கள்

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்ற ஐந்துவகை ஊழியங்களை எபே.4:13 கூறுகிறது. ஒரு மனிதருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஊழியங்கள் இருக்கமுடியும். பவுல், அப்போஸ்தலராகவும் பிரசங்கியாகவும் போதகராகவும் இருந்ததோடு (1 தீமோ.2:7; 2 தீமோ.1:11), பல தீர்க்கதரிசனங்கள் உரைத்துள்ளது (1 கொரி.15; 1 தெச.4:13–17) இதற்கு எடுத்துக்காட்டு.

எந்தவொரு ஊழியத்தைப் பெற்றிருந்தாலும் எல்லா உண்மை ஊழியரிடத்திலும் அன்பு செலுத்தி, அவர்களை மதித்து, அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவுவது ஒவ்வொரு ஊழியரின் கடமையாகும். ஐவகை ஊழியங்களைப் பற்றி சுருக்கமாகக் காண்போம்.

**1. அப்போஸ்தலர்**

அப்போஸ்தல ஊழியம் என்பது மனிதருக்கு அருளப்பட்டிருக்கும் பணிகள் யாவற்றிலும், பொறுப்பு யாவற்றிலும், பதவி யாவற்றிலும் மிகவும் உன்னத மானதாகும். அப்போஸ்தலன் என்றால் அனுப்பப்பட்டவன் என்று பொருள். பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் அப்போஸ்தலர் நியமிக்கப்படுகிறார்கள் (கலா.1:1; 1 தீமோ.1:1). இவர்கள் சபையின் அஸ்திபாரமாகத் திகழ்பவர்கள் (எபே.2:20). தேவனுடைய வெளிப் பாடுகளை இவர்கள் பெற்று, சபைக்குப் பகிர்ந்தளிப்பார்கள் (எபே.3:6). சபைக்குக் கட்டளையிட இவர்களுக்கு அதிகாரம் உண்டு (2 பேது.3:2). சபையை வலுவாகக்கட்டி, கோட்பாடுகளையும் அறிவுரைகளையும் வழி காட்டுதல்களையும் நல்குவார்கள். மேலும் இவர்கள் எழுதும் கடிதங்களும் (நிருபங்களும்) வேதத்தின் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் (2 பேது.3:15–16). அப்போஸ்தலராயிருப்பவர் அதற்குரிய அடையாளங்களை எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும் விசுவாசிகளுக்குள்ளே நடப்பிப்பார் (2 கொரி.12:12). மேலும், பாடுகளையும் நிந்தைகளையும் பொறுமையாகச் சகிப்பார் (1 கொரி.4:5–13).

1 கொரி.15:7–8ஐக் கவனமாகப் படியுங்கள். உயிர்த்தெழுந்த கர்த்தர் அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு ...

எனக்கும் தரிசனமானார்' என்று பவுல் கூறுவதிலிருந்து பவுல்தான் கடைசி அப்போஸ்தலர் என்று பல வேத வல்லுநர்கள் கருதுகின்றனர்

பவுல், பேதுரு, யோவான் போன்று எல்லா கிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும், வேதத்தின் பகுதிகளை எழுதுகிறவர்களுமாகிய அப்போஸ்தலர் அதன்பின்பு எழும்பவில்லையென்பது உண்மைதான். ஆனால், அப்போஸ்தல ஊழியம் என்று தேவனால் ஏற்படுத்தப்பட்டது அழிந்துபோகவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. பல நாடுகளில் பல தேவனுடைய தாசர்கள் அப்போஸ்தல ஊழியம் செய்துவந்தனர் என்று நிச்சயமாகக் கூறலாம். பல நாடுகளுக்கு நற்செய்தியைக் கொண்டுசென்று சபைகளை நிறுவியவர்களும் எழுப்புதல்களை ஏற்படுத்தியவர்களும் ஏராளம். அப்போஸ்தலரின் நடபடிகள் புத்தகம் 'ஆமென்' என்று முடிக்கப்படவில்லை என்பதால் அப்போஸ்தல ஊழியமும் முடிந்துவிடவில்லை என்று கூறலாம்.

தங்களைத் தாங்களே அப்போஸ்தலர் என்று அழைத்துக்கொள்வதும், அப்போஸ்தலர் என்று பிறரால் அழைக்கும்படி அனுமதிப்பதும் தவறு. இவ்வாறு தங்களை அழைத்துக்கொண்ட பலர் விழுந்துவிட்டனர். சிறிது பிரபலமானதும் பெருமைகொள்வதினால் சிலர் தங்களை அப்போஸ்தல ரென்று கூறிக்கொள்ளத் தயங்குவதில்லை. பிதாவாகிய தேவனாலும் கிறிஸ்துவினாலும் அப்போஸ்தல ஊழியத்திற்கென்ற அடையாளங்களோடு நியமிக்கப்படுகிறவர்களே அப்போஸ்தலர்கள் ஆவார்கள்.

**2. தீர்க்கதரிசிகள்**

ஆவியானவரின் ஏவுதலால் இரகசியங்களை வெளிப்படுத்தவும், பின்வருங்காரியங்களை முன்னறிவிக்கவும் கர்த்தரின் நாமத்தில் பேசுகிறவர் தீர்க்கதரிசியாவார். தேவ மக்களைத் தேற்றுதல், எச்சரித்தல், திருத்துதல், வழிகாட்டுதல் போன்ற பணிகளை இவர் செய்வார். தேவனிடம் கேட்டு ஆலோசனைகள் வழங்கும் பணியையும் இவர் செய்வார். தீர்க்கதரிசிகள் தங்களுக்குத் தோன்றுகிறபடி சொல்லாமல் ஆவியானவர் அருளிச்செய்கிறார் என்ற நிச்சயத்துடன் தீர்க்கதரிசனம் உரைக்கவேண்டும். மேலும் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றபடி தீர்க்கதரிசனம் கூறவேண்டும் (ரோம.12:6).

தீர்க்கதரிசன வரத்தை நாடுங்கள் என்று வேதம் நம்மை உற்சாகப் படுத்துகிறது (1 கொரி.14:1). உலகெங்கும் தேவனுடைய உண்மையான தீர்க்க தரிசிகள் எழும்பும்படியாக எதிர்பார்த்து ஜெபிக்கவேண்டும். சபை ஆராதனை களிலும் கர்த்தருடைய மக்கள் சேர்ந்து ஜெபிக்கும் வேளைகளிலும் தீர்க்க தரிசனத்திற்கென்று நேரம் ஒதுக்கி, காத்திருந்து, பெற்றுக்கொள்ளவேண்டும்.

பெண் தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இருந்தனர் (யாத்.15:20; நியா.4:4; 2 இரா.22:14; லூக்.2:36; அப்.21:9). உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் என்று வேதம் கூறுகிறது (அப்.2:17–18). தீர்க்கதரிசனம் உரைக்கும்போது ஆண்கள் தலையை மூடிக்கொள்ளக்கூடாது, பெண்கள் தலையை மூடிக்கொள்ளவேண்டும் (1 கொரி.11:4–5).

### 3. சுவிசேஷகர் (நற்செய்திப் பணியாளர்)

மறுபடியும் பிறந்த அனுபவமுள்ள ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயம் செய்யவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். "என்னிடத்தில் (ஆத்துமாக்களைக் கொண்டுவந்து) சேர்க்காதவன் சிதறடிக்கிறான்," என்று கிறிஸ்து கூறியுள்ளார் (லூக்.11:23). ஆத்தும ஆதாயம் செய்யாத விசுவாசி, மூப்பர், போதகர் (ஆயர்), தலைமைப் போதகர் (பேராயர்), கிறிஸ்தவ நிறுவனத் தலைவர், ஒவ்வொருவரும் சிதறடிக்கிறவர்களே. 'ஊழியர்' என்று மக்களால் அழைக்கப்படும் ஆத்தும ஆதாயம் செய்யாத நபரை ஆண்டவர் 'சிதறடிக்கிறவரே' என்றே அழைப்பார். விசுவாசிகளும், மூப்பர்களும், போதகர்களும், தலைமைப் போதகர்களும், பிற ஊழியரும் ஆத்தும ஆதாயம் செய்யாததால்தான் சபையில் பல குழப்பங்கள் இருக்கின்றன.

ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயப்பணி செய்தாலும் சுவிசேஷகர் (நற்செய்திப் பணியாளர்) என்பவர் நற்செய்தியை அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்வதையே தமது முதன்மையான பணியாகக் கொண்டிருப்பார். சபை கண்காணிப்பில் ஈடுபடாமல் பல இடங்களுக்குச் சென்று ஆத்தும ஆதாயம் செய்வார். பல மிஷனரிகளும் தன்னார்வ ஊழியரும் இவ்வாறு செய்துவருகின்றனர்.

### 4. மேய்ப்பர்கள்

ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள சபையை (இக்காலத்தில் சபைப்பிரிவை)ப் பொறுப்பேற்று, கண்காணித்து நடத்துபவரை மேய்ப்பர் (ஆயர்) என்று அழைக்கலாம். பலம் குறைந்த, தள்ளாடுகின்ற, ஆவிக்குரிய வளர்ச்சியற்ற விசுவாசிகளையும் அணைத்துக்கொண்டு, வழிவிலகாது நடக்கச்செய்யும் பணியைச் செய்பவர் இவர். மேய்ப்பர் பாதுகாப்பார், ஆவிக்குரிய உணவு ஊட்டுவார் (போஷிப்பார்), ஆற்றித் தேற்றுவார், நீதியான பாதையில் நடத்துவார், ஆபத்தை எதிர்த்துப் போரிடுவார், பாதுகாப்பார், (எண்ணெய் பூசி) சுகமாக்குவார், அபிஷேகத்திற்கு வழிநடத்துவார், தனது கையின்கீழுள்ள விசுவாசிகள் அனைவரையும் பொறுப்பேற்று நடத்துவார். இவரின் ஊழியம் மிகவும் கடினமானதும் பொறுப்புள்ளதும் இறுதியில் கணக்கொப்புவிப்பதாகவும் அமைந்துள்ளது.

### 5. போதகர் (Teacher)

வேதத்தின் உபதேசங்களைப் போதித்தல், எளிமையாகப் புரியவைத்தல், வேதத்திலிருந்து சரியான அறிவுரைகள் கூறுதல் ஆகியவை இவர்களின் பணியாகும். வேதத்தைப் படிப்பதற்குக் கற்றுக்கொடுப்பதுடன், தவறான போதகங்களை அடையாளங்கண்டு, வேதத்தின்படி வாழ்வதற்கு வழிநடத்துவார்.

### பிற பணிகள்

புதிய ஏற்பாட்டின் ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு ஊரில் இருந்த சபையிலும் சில உதவிக்காரர் இருந்ததை வேதம் கூறுகிறது. பந்தி விசாரணை செய்வதற்கென்று ஏழுபேரை அப்போஸ்தலர்கள் ஏற்படுத்தினதையும் அப்.6:1–6 கூறுகிறது.

கர்த்தருடைய உத்தமமான ஊழியத்தில் ஏதாவது உதவி செய்வதும் ஊழியம்தான்.

எழுத்து வடிவம் இல்லாத மொழிகளைப் பேசும் ஆதிவாசிகள் மத்தியில் வாழ்ந்து, அவர்களின் மொழியைக் கற்று, அவர்களின் மொழிக்கு எழுத்துகளை உருவாக்கி, அம்மொழியில் வேதத்தை மொழிபெயர்த்து அளிக்கும்பணி மிகவும் சிரமமானதும், சிறந்ததும், தியாகமானதும் ஆகும்.

தொலைக்காட்சி, வானொலி மூலம் நற்செய்திப்பணி செய்யும் பலரை தேவன் இக்காலத்தில் எழுப்பியுள்ளார். கைப்பிரதிகள், நூல்கள், பத்திரிகைகள் **(Magazines)** போன்றவற்றை எழுதுதல், வெளியிடுதல், விநியோகித்தல் போன்ற ஊழியமும் நடைபெற்றுவருகிறது. பல இடங்களில் கூட்டங்கள் நடத்தி ஊழியம் செய்பவர் பலருண்டு. தொலைபேசி வாயிலாக ஜெப ஊழியங்கள் நடக்கின்றன. ஆவிக்குரிய, வேதாகம பயிற்சியளிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. கிராம ஊழியம், சிறுவர் ஊழியம், நோயுற்றோர் சந்திப்பு, சிறைச்சாலையிலுள்ளோரைச் சந்தித்தல், பலவித ஜெபக்குழுக்களை நடத்துதல், வீட்டு ஜெபக்குழுக்கள் நடத்துதல் போன்ற பல்வேறு ஊழியங்கள் உண்டு. இவ்விதமான ஒவ்வொரு பணியும் கர்த்தரின் பணிதான்.

பல வீடுகளுக்குச் சென்று, ஜெபித்து, காணிக்கை சேகரித்து அதை நற்செய்திப் பணியாளரை அனுப்பும் நிறுவனங்களுக்கு அனுப்பும் தன்னார்வ ஊழியர் உண்டு. இவர்கள் செய்வதும் தேவையான ஊழியமே.

## 4. ஊழியரின் பொறுப்பு

ஊழியம் என்பது மக்களைப் பரலோகத்திற்கு வழிநடத்தும் பொறுப்பான பணியாகும். அதை மிகவும் கவனமாகச் செய்யும்படி ஒவ்வொரு ஊழியரும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**எடுத்துக்காட்டு: கப்பல் பயணம்**

ஆழ்கடலில் சென்றுகொண்டிருக்கும் கப்பலின் மாலுமிக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. பயணிகளுக்குக் கப்பல் ஓட்டத்தெரியாது. பல பயணிகளுக்கு நீந்தவும் தெரியாது. எனவே, புயல் அடித்தாலும், கடல் கொந்தளித்தாலும், பலவித ஆபத்துகள் எதிர்கொண்டாலும் கப்பலைப் பாதுகாப்பாகச் செலுத்தி, பயணிகள் யாவரையும் செல்லவேண்டிய இடத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டுசேர்ப்பது மாலுமியின் கடமை. தன்னுடைய அறிவு, திறமை, கடின உழைப்பு ஆகியவற்றால் கருத்தாகக் கப்பலைத் தொடர்ந்து செலுத்தி, முழுமூச்சுடன் முயற்சி செய்பவரே சிறந்த மாலுமி. தன்னுடைய உயிரைவிட தனது கப்பலில் பயணம் செய்யும் பிறரின் உயிரை அதிகமாக மதித்து, யாவரும் பத்திரமாகக் கரைசேரும்வரை கப்பலிலே இருந்து கடைசியாகத் தன்னைக் காத்துக்கொள்வதற்கு முயற்சி செய்வார் இவர்.

இவ்வுலக வாழ்க்கை என்ற கடலில், சபை என்னும் கப்பலில் பயணம் செய்யும் உங்கள் பொறுப்பிலுள்ள மக்களுக்கு, உலகம், மாம்சம், பிசாசு ஆகிய ஆபத்துகளால் தாக்கப்பட்டு, மூழ்கி, இறுதியில் நரகத்திற்குச் செல்லும் ஆபத்து எப்பொழுதும் உண்டு. ஒவ்வொருவருக்காகவும் ஊக்கமாக ஜெபித்து, தேவனிடம் ஆலோசனை பெற்று, எச்சரித்து, ஆலோசனை கூறி, வழி நடத்தி, இறுதியில் பரலோகம் சேர்ப்பதற்கான முயற்சியை அனுதினமும் முழுமூச்சுடன் செய்பவரே சரியான போதகர். நீங்கள் ஜெபித்து அறிவுரை வழங்கிய போதிலும் ஒருவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை என்றால் உங்கள்மேல் குற்றம் சுமராது. அவ்வாறில்லையெனில் உங்கள் சபையினர் யார் நரகத்திற்குச் சென்றாலும் அவர்களின் இரத்தப்பழி உங்கள்மேல் இருக்கிறது என்று கர்த்தர் உரைக்கிறார் (எசே.3:17–21; 33:2–9). ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் நீங்களே உத்தரவாதம் சொல்லவேண்டும் (எபி.13:17). எனவே, ஜெபத்துடனும் பயத்துடனும் நடுக்கத்துடனும் கர்த்தரைச் சேவிக்க வேண்டிய கட்டாயத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை எந்நேரத்திலும் மறந்துபோகக்கூடாது.

**கிறிஸ்துவின் சரீரப்பராமரிப்பு**

சபையானது கிறிஸ்துவின் சரீரமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை யாவரும் அறிவோம் (1 கொரி.12:12–14,27; எபே.1:23). எந்தவொரு மனிதனும் தனது சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்தல், அதற்குச் சரியான உணவு அளித்தல், தகுதியான ஆடை அணிவித்தல், தங்குவதற்கான இடம் ஏற்பாடு செய்தல், நோய் தடுப்பிற்கானவற்றைச் செய்தல், நோய் வந்தால் சரீரத்தைப் பேணுதல், சரீரத்தின் பிற தேவைகளைச் சந்தித்தல் போன்ற பலவற்றைச் செய்யவேண்டும். இவற்றைக் குறித்து கவலையற்றிருப்பவர்களை மனநிலை சரியில்லாதவர்கள் என்று கூறுகிறோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குப் பொறுப்பாயிருக்கும் ஊழியர் சபையைப் பரிசுத்தத்தில் வழிநடத்தி, ஆவிக்குரிய ஆகாரம் அளித்து, சபையின் எல்லாத் தேவைகளையும் சந்திப்பதற்கு முயற்சி செய்யாவிடில் சபை ஆரோக்கியமான நிலையில் இருக்காது. சபை ஊழியரே அதற்குப் பொறுப்பு.

**எடுத்துக்காட்டு: பேருந்து பயணம்**

ஒரு சமயம் ஒரு மலையின்மீது குறுகலான சிரமமான பாதையில் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தேன். பேருந்தின் ஓட்டுனர் தன் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டே பேருந்தை ஓட்டிக்கொண்டிருந்தார். நான் அவரை நோக்கி, "பேச்சில் கவனம் செலுத்தாமல் கவனமாக ஓட்டுங்கள்" என்று கூறினேன். அவரோ "பாதை எனக்கு நன்றாகத் தெரியும்" என்று கூறினார். நான் அதற்குப் பதிலாக, "பாதை உங்களுக்கு நன்கு தெரியும் என்பது உண்மைதான். ஆனால் உங்களின் பேச்சு கவனத்தில் சற்று தவறு நேர்ந்தால் பேருந்தில் உள்ள அனைவரும் பள்ளத்தாக்கில் விழுந்து சாக நேரிடும். எங்கள் உயிருக்கு நீங்கள்தான் பொறுப்பு. எனவே கவனமாக ஓட்டுங்கள்" என்று கூறினேன். ஓட்டுனரின் நண்பரும் பேருந்தில் இருந்த யாவரும் நான் கூறியதை ஆமோதித்தனர். ஓட்டுனரும் அதை ஏற்றுக்கொண்டு, நண்பருடன் பேசுவதை நிறுத்திவிட்டு, கவனமாகப் பணிபுரிந்தார். உங்கள் சபையை ஒரு பேருந்தாகவும் உங்களை ஓட்டுனராகவும் ஒப்பிடலாம். "ஐயா, எங்கள் உயிர் உங்கள் கையில் இருக்கிறது" என்று சபையினர் கூறுவது உங்கள் இதயத்தில் எப்பொழுதும் தொனித்துக்கொண்டே இருப்பதாக.

**உங்கள் முக்கிய பொறுப்பு**

உங்களையும், உங்கள் அருளுரைகளைக் கேட்கும் சபை மக்களையும் இரட்சித்துக்கொள்வது (இறுதி இரட்சிப்பாகிய தேவனுடைய அரசிற்குள் சேர்ப்பது) உங்கள் தலையாய கடமை என்பதை 1 தீமோ.4:16இல் காணலாம்.

உங்களின் பொறுப்பிலுள்ள சபையைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே கணவருக்கு ஒப்புக்கொடுக்க நியமித்து, அதற்கென்று தேவவைராக்கியமான வைராக்கியத்துடன் உழைப்பது உங்கள் கடமையாயிருக்கிறது (2 கொரி.11:2). நீங்கள் அவ்வாறு இருக்கிறீர்களா?

எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு மட்டுமே உண்டு (கொலோ.1:28). இதற்காக, கிறிஸ்துவையே அறிவித்து, எந்த மனிதனுக்கும் புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணும்படி அழைக்கப்பட்ட நீங்கள், அதற்கென்று, உங்களுக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படும்படி தேவனால் எதிர்பார்க்கப்படுகிறீர்கள் (கொலோ.1:28–29).

நிச்சயமில்லாதவர்களாக ஓடுகிறவர்களும், ஆகாயத்தில் அடிப்பவர்களாகச் சிலம்பம்பண்ணுகிறவர்களும் உண்டு. கர்த்தருடைய ஊழியர் அவ்வாறு இருக்கலாகாது (1 கொரி.9:26). தெளிவான நோக்கத்துடன் பணிசெய்யுங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும், உங்கள் சொற்களிலும் கர்த்தர் உங்களுக்கு அளித்துள்ள பொறுப்பை நிறைவேற்றும்படி கருத்தாயிருங்கள்.

**அன்பார்ந்த ஊழியர் அவர்களே,**
**எப்படியாவது எங்கள் ஒவ்வொருவரையும்**
**கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும்படி**
**உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**உத்தரவாதம்**

உங்கள் கையில் ஒப்புவிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவையும் குறித்து உங்களிடத்தில் கணக்கு கேட்கப்படும் (எபி.13:17). நீங்கள் முயற்சி செய்தும் அந்த ஆத்துமா கடினப்பட்டுப்போனால் உங்கள்மேல் குற்றம் சுமராது. இல்லையேல் அந்த ஆத்துமாவின் இரத்தப்பழி உங்களிடம் கேட்கப்படும் (எசே.3:18–21; 33:7–9). இது பயங்கரமாகத் தோன்றியபோதிலும் உண்மையாகும்.

**ஊழியத்தின் மையம்**

கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஊழியமாக அமைய வேண்டும். எந்தவொரு தலைவரையோ, போதகரையோ, புகழையோ, பணத்தையோ மையமாகக் கொண்டிருக்கக்கூடாது.

> சபையென்பது பரலோக அரசிற்கு ஆட்களைச் சேகரித்து, பயிற்றுவிக்கும் நிறுவனமாகச் செயல்படவேண்டும்.
> அவ்வாறு இல்லையெனில்
> அது உறுப்பினர்களின் பொழுதுபோக்கு மையம் மட்டுமே.
> (A church should be a recruiting and training agency for the kingdom of heaven.
> Otherwise it will only be a recreation club for its members).
> உங்கள் சபை (நிறுவனம்) எப்படிப்பட்டது?

**ஊழியத்திற்கு அனுப்புவோரின் பொறுப்பு**

வடமாநிலம் ஒன்றில் ஒரு மிஷனரியைச் சந்தித்தேன். சில ஆண்டுகள் உழைத்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, ஏறத்தாழ பத்து ஆராதிக்கும் குழுக்களை உருவாக்கியிருந்தார். அவற்றைச் சபைகளாக நிறுவி, சிறு ஆலயங்களைக் கட்டி, பணியை விரிவுபடுத்தவேண்டும் என்று திட்ட மிட்டிருந்தார். ஆனால் அவரை அனுப்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த சபையினர் அவருக்கு ஊதியம் தருவதைத் திடீரென நிறுத்தினர். எத்தனை முறை கேட்டுப்பார்த்தும் யாரும் உதவிசெய்யவில்லை. எனவே, உணவிற்கு வழியின்றி அவரும் அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் தவித்தனர். பின்னர் அவர், பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி **(tuition)** அளிப்பதில் ஈடுபட்டு தனது குடும்பத்தை நடத்தவேண்டியதாயிற்று. தன்னை ஊழியத்திற்கு அனுப்பியவர்கள் கைவிட்டபடியால் வறுமையில் வாடி மரணமடைந்த ஊழியரும் உண்டு.

ஊழியத்திற்கென்று அனுப்புகின்ற யாராயினும் தொடர்ந்து தாங்குவது மிகவும் அவசியம்.

**சரியான ஊதியம் அளித்தல்**

அதிகமான ஊழியரை அனுப்பவேண்டும் என்று கருதி நிறுவனத்தின் ஊழியர் யாவருக்கும் மிகவும் குறைவான ஊதியம் கொடுப்பது சரியன்று.

# 5. விசுவாச ஊழியம்

'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்' என்று வேதம் கூறுகிறது (எபி.11:6). ஒவ்வொரு மனிதனுக்கும் விசுவாசம் தேவையென்றால் தேவனுடைய ஊழியருக்கு அது நிச்சயமாகத் தேவை. சூழ்நிலை சாதகமாயிருக்கும்போதும், நம்மால் செய்யமுடியும் என்றிருக்கும் போதும் விசுவாசிப்பது சிறந்த விசுவாசமன்று. சூழ்நிலை எவ்வாறு இருந்தாலும், நம்மால் செய்ய முடியாததையும் 'தேவன் தாம் கூறியபடியே செய்வார்' என்று முழு நிச்சயமாய் நம்புவதே விசுவாசம். சுற்றிச்சுற்றி நடந்தால் எந்தச் சுவரும் இடிந்து விழாது என்று தெரிந்திருந்தபோதிலும் கர்த்தர் கூறியதால் அவ்வாறு இஸ்ரவேலர் எரிகோ நகரைச் சுற்றி நடந்தது விசுவாசத்தின் எடுத்துக் காட்டு (யோசு.6:1–24).

**விசுவாசம், வரமும் கனியும்**

ஆவியின் வரங்களின் பட்டியலில் விசுவாசம் ஒரு வரமாகக் கூறப்பட்டுள்ளது (1 கொரி.12:4–10). ஆவியின் கனியிலும் விசுவாசம் கூறப்பட்டிருப்பதை கலா.5:22–23இல் வாசிக்கிறோம்.

மேலும் நாம் கர்த்தருடன் நடப்பதற்கு எடுத்துவைக்கும் முதலாவது அடியே விசுவாசத்தினால்தான் நடைபெறுகிறது. ஏனெனில், கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு நாம் இரட்சிக்கப்படுகிறோம் (எபே.2:8). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றும் வேதம் கூறுகிறது (அப்.16:31).

நமது அனுதின வாழ்க்கையில், கர்த்தர் நம் தேவைகளைச் சந்திப்பார் என்றும் கர்த்தர் நமது காரியங்களை வாய்க்கச்செய்வார் என்றும் நமது சிந்தனைகளிலும் சொற்களிலும், செயல்களிலும் நமது நம்பிக்கையை வெளிப் படுத்துவது ஆவியின் கனியாகிய விசுவாசம் என்று கருதலாம்.

சூழ்நிலை சாதகமாக இல்லாவிட்டாலும், கர்த்தரையும் அவரது வார்த்தையையும் நம்பி செயலாற்றுவது வரம் என்னும் அளவில் செயல்படும் விசுவாசம் ஆகும். 'ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்' என்று கூறி (1 சாமு.17:26), பின்னர் கோலியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற்றது தாவீதில் செயல்பட்ட விசுவாச வரத்தினால் நடந்தது (1 சாமு.17:21–51).

முந்நூறு வீரர்களுடன் கர்த்தரின் வார்த்தையை மட்டும் நம்பி திரளான சேனைக்கு எதிர்த்துப் போரிடச் சென்றது கிதியோனிடம் செயல்பட்ட விசுவாச வரத்தின் விளைவு ஆகும் (நியா.7:1–25).

### அழைத்தவர் நடத்தமாட்டாரோ?

கர்த்தர் உங்களைத் தமது ஊழியத்திற்கென்று அழைத்தது உண்மை யானால் அவர் உங்களைப் பராமரிக்காமல் இருப்பாரா? உங்களின் ஒவ்வொரு தேவையையும் ஏற்ற நேரத்தில் சந்திக்காமல் இருப்பாரா? எனவே, உங்களின் தேவைகளையும் உங்கள் குடும்பத்தின் தேவைகளையும் அவர் நிச்சயம் சந்திப்பார் என்று முழு இருதயத்தோடு விசுவாசிப்பது உங்களுக்குக் கடினமாக இருப்பது ஏன்? அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலை களையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் (1 பேது.5:7). உங்களை மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தையும் அவர் நடத்துவார். 'உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்' என்ற வாக்குத்தத்தம் நமக்கு உண்டு (சங்.128:3). நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்தால் அவ்வாறு இல்லாதிருப்பது எப்படி? சங்.128:1–4ஐத் தியானித்து, விசுவாசித்து, துதித்துக்கொண்டே யிருங்கள். எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் (நன்றி) செலுத்துங்கள் என்று வேதம் வலியுறுத்துகிறது (1 தெச.5:18).

நீங்கள் நீதிமானாக, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதில் தியானமாயிருந்தால் நீங்கள் செய்வது வாய்க்காதிருப்பது எப்படி? சங்.1:1–3ஐத் தியானித்து வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொள்ளுங்கள். நம்முடைய தேவன் கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் நம்மை வெற்றிசிறக்கப்பண்ணுகிறவர் அல்லவா (2 கொரி.2:14)!

### பிரச்சனைகளில் விசுவாசம்

போராட்டங்கள், பிரச்சனைகள், கடின உழைப்பு இல்லாத ஊழியம் கிடையாது. உங்கள் ஊழியத்தில் இவை இல்லையெனில் ஊழியம் சரியில்லை என்று பொருள். ஊழியத்தின் ஏதாவது சில சந்தர்ப்பங்களிலேனும் நமது எதிரியான சாத்தானின் தாக்குதல் நிச்சயம் உண்டு. இவற்றினால் சோர்ந்து போகக்கூடாது. நமக்கு எதிரி இருந்து, அவன் நம்முடன் போரிட்டால்தான் நாம் வெற்றியடைய முடியும். எனவே, போராட்டங்களை எதிர்பார்த்து, 'வெற்றிபெறுவேன்' என்ற உறுதியான விசுவாசத்துடன் கர்த்தரைச் சார்ந்து

ஊழியம் செய்யுங்கள். போரிடாதவர்களுக்கு வெற்றி இல்லை. உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவராக இருக்கும்போது (1யோவா.4:4) ஏன் பயப்படவேண்டும்? ஏன் சந்தேகப்பட வேண்டும்? சத்துருவின் சகல வல்லமையின்மீதும் இயேசு உங்களுக்கு அதிகாரத்தை அளித்திருக்கிறார் என்பதையும் ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது என்பதையும் ஒருநாளும் மறந்து போகாதீர்கள் (லூக்.10:19). நமக்கு ஒத்தாசை வரும் பர்வதம் நமக்கு உண்டு. வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய (சர்வ வல்லமையுள்ள) கர்த்தரிடமிருந்து நமக்கு ஒத்தாசை வரும் (சங்.121:1–2). நம்முடைய தகுதிக்கு மிஞ்சிய சோதனைகளை தேவன் அனுமதிப்பதில்லை. சோதனையில் தப்பித்துக் கொள்ளும் போக்கை அவர் உண்டாக்குவார் (1 கொரி.10:13). என்ன நடந்தாலும் தேவன் நம்மோடிருக்கிறார். அவர் நம்மைவிட்டு விலகுவது மில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை (எபி.13:5).

'சோர்ந்து போகாதே, மனமே சோர்ந்து போகாதே,
கண்டுன்னை அழைத்த தேவன் கைவிடுவாரோ!'

**பலனைக் காணாவிட்டாலும் விசுவாசம்**

'ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சாராள் ஆகிய இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்' (எபி.11:13). இவ்விதமாக நமது ஊழியத்திற்கு உடனடியான பலன் கிடைக்காமல் காலதாமதம் ஆகக்கூடும். நமது வாழ்நாளில் பெரிய அறுவடையைக் காணாமலும் போகலாம். ஆனால், நமது பணி முடிவடைந்தாலும் நாம் விதைத்த விதைகள் ஏற்ற நேரத்தில் முளைத்து வளர்ந்து பலன் தரும் என்று விசுவாசிப்போமாக.

ரோமப் பேரரசினால் இரத்தச் சாட்சியாகக் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்கள், தங்களின் இரத்தம் கிறிஸ்தவத்தின் விதையாக ஆகி, கிறிஸ்தவம் பரவுவதற்குக் காரணமாகும் என்றும், தங்களைக் கொன்று குவிக்கும் அந்த அரசாங்கம் கிறிஸ்துவ அரசாக மாறும் என்றும் அறிந்திருக்கவில்லை. எனினும், விசுவாசத்தோடே முடிவுமட்டும் நிலை நின்றார்கள் (மத்.24:13).

ஆப்பிரிக்கா கண்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முன்னோடி மிஷனரியாகச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டன், மாலவி (**Malawi**) என்ற நாட்டில் ஆத்துமாக்கள் கிடைக்காத சூழ்நிலையில் 'பின்னாட்களில் (நூறு ஆண்டு

களுக்குப் பின்) பல்லாயிரம் மக்கள் மனந்திரும்புவார்கள்' என்று தீர்க்க தரிசனம் உரைத்து, தன் வாழ்நாளில் அதைக் காணாமல் விசுவாசத்துடன் இவ்வுலகைவிட்டுக் கடந்துசென்றார். அதே ஊரில் இந்நாட்களில் நடை பெற்ற ஒரு எழுப்புதல் ஊழியரின் சில நாட்கள் கூட்டத்திலேயே பல இலட்சம்பேர் இரட்சிக்கப்பட்டனர். '(டேவிட் லிவிங்ஸ்டன் போன்ற) முன்னாட்களின் தேவதாசர்களுடைய கண்ணீர் மீதும் (வியர்வையின் மீதும், இரத்தத்தின் மீதும், ஊக்கமான ஜெபத்தின் மீதும்) நீ நடந்து கொண்டி ருக்கிறாய்' என்று தேவன் அந்த எழுப்புதல் ஊழியருக்கு உணர்த்தினார். தேவனுக்கு உண்மையாக உழைத்தவர்களின் பிரயாசத்தை மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபி.6:10).

மேலும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டவர்களும், நிந்தைகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தவர்களும், கல்லெறியுண்டவர்களும், வாளால் அறுப்புண்டவர்களும், பரிட்சை பார்க்கப்பட்டவர்களும், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தவர்களும், செம்மறியாட்டுத் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்துக்கொண்டு திரிந்தவர்களும், குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தவர்களும், வனாந்தரங்களி லேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தவர்களும் நமக்கு முன்னோடிகளாகச் சென்றுள்ளனர். உலகம் இவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை (எபி.11:35–38). நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது (பிலி.3:20). என்ன பாடுகள் வந்தாலும் ஆவியானவரின் நிறைவுடன் நாம் சந்திக்க முடியும். விசுவாசத்துடன் தளராமல் உழைக்க உங்களை அர்ப்பணியுங்கள்.

கடந்த நூற்றாண்டில் பல பொதுவுடமை (கம்யூனிஸ்ட்) நாடுகளில் சொல்லொணாத வேதனைகளையும், சிறைவாசத்தையும், இரத்தச் சாட்சியாக மரிப்பதையும் பொருட்படுத்தாமல் அநேக தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகைவிட்டுக் கடந்துசென்றனர். ஆனால், அந்த நாடுகளிளெல்லாம் இப்பொழுது சபை வளர்ந்து வருகின்றது.

நாம் செய்ய வேண்டியது என்னவெனில், 'கர்த்தர் நமக்குக் கொடுத்த பணியை ஜெபத்தோடும், ஆவியானவரின் வழிநடத்துதலோடும் ஊக்கமாகச் செய்து நமது ஓட்டத்தை முடிப்பதாகும்' (2 தீமோ.4:7,8).

**வளர்ச்சி குன்றுதல்**

தொடங்கும்போது உற்சாகமாகவும் விசுவாசத்துடனும் ஆவியில்

அனலுடனும் பணிபுரியும் ஊழியர்களில் பலர், நாட்கள் செல்லச்செல்ல யாவற்றிலும் குறைந்துபோவதை நாம் காண்கிறோம். அவ்வாறு இருக்க லாகாது. காலங்கள் கடந்துசெல்லும்போது நாம் வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். ஆவியினாலே ஆரம்பம்பண்ணி மாம்சத்தினாலே முடிவு பெறுவது புத்தியீனமாகும் (கலா.3:3). ஒவ்வொரு ஆண்டும் நான், எனது சபை, என் பொறுப்பிலிருக்கும் நிறுவனம், எவ்வளவு ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்று எண்ணிப்பார்த்து முன்னேறுங்கள்.

**முன்னேற்றமில்லாத யாவரும் பின்மாற்றமாயிருக்கின்றனர். கவனமாக முன்னேறுங்கள்.**

**தேவனைப் பின்பற்றுவதில் உறுதி**

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற தேவனுடைய தாசர்கள் நேபுகாத்நேச்சார் அரசனை நோக்கி "... நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" என்று கூறியது மட்டுமின்றி, "விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது" என்று உறுதியாகச் சொன்னார்கள் (தானி.3:16-18). இவ்விதமாக, '**உயிர் போனாலும் தேவனைவிட்டுப் பின்வாங்கமாட்டேன்**' என்ற உறுதியுடன் வாழும்படி ஒவ்வொரு விசுவாசியும், குறிப்பாக ஊழியரும் எதிர்பார்க்கப்படுகிறோம். இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருப்பதில் பயன் இல்லை (1 கொரி.15:19). நம்முடைய குடியிருப்போ, பரலோகத்திலிருக்கிறது (பிலி.3:20). எனவே, எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்கிற உறுதியான விசுவாசத்தோடு, கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம் (எபி.12:1,2).

**ஊழியத்தில் பற்றாக்குறை**

ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படாமல் அவதிக்குள்ளாகும் நிலை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். அவ்வாறு ஏற்படும் பொழுது ஊழியர்கள் தங்களையும், தங்கள் நோக்கங்களையும், தங்கள் ஊழிய நிறுவனத்தின் நோக்கத்தையும், தாங்கள் பின்பற்றும் வழி முறைகளையும் ஆராய்ந்து, தவறு இருந்தால் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

தங்கள் நிறுவனத்தின் ஊழியருக்குரிய மாதச் சம்பளத்தைச் சரியாகத் தருவதற்கு முடியவில்லை என்று பல ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் தங்கள் நிறுவனத்தின் செய்தி மலரில் வெளியிடும் 'ஊழியம்' ஒன்று இருக்கிறது. ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்த உபதேசத்தை இருட்டடிப்புச் செய்யவேண்டும் என்பதில் அவர்கள் தீவிரமாக இருப்பதால் இவ்விதம் நடக்கிறது என்பதை அறிந்தும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வில்லை. இதனால் இன்றும் பற்றாக்குறையுடன் இருக்கின்றனர்.

ஊழியத்தின் 'தலைவர்' துணிகரமான பாவத்தில் ஈடுபட்டால் ஊழிய நிறுவனத்தின் தரமும், அதற்கு மக்களிடையே இருக்கும் மதிப்பும், படிப்படி யாகக் குறையும். பற்றாக்குறை படிப்படியாக அதிகரிக்கும். மேலும் இப்படிப் பட்ட தலைவர் வஞ்சக ஆவியினால் பிடிக்கப்பட்டு, யாரும் அறியாவண்ணம் தவறான போதகங்களைத் தமது கவர்ச்சியான சொற்களால் மக்களிடையே பரப்புவதும் நடக்கின்றது. பாலில் சில துளி நச்சுப்பொருளைக் (விஷத்தைக்) கலப்பது போன்று செயல்படுகிறவர்கள் உண்டு. 'சாரமற்ற உப்பாகவும், இரசமிழந்த கண்ணாடியைப் போன்றும் இருக்கும் இத்தலைவர்களை வெளியே கொட்டாமல் இருக்கும்வரை' அவ்வூழியம் உயர்வு பெறுவது எப்படி?

**ஊழியரின் மீது கரிசனை**

ஒரு ஊழிய நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு சகோதரர், ஒரு சிலரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், நிறுவனத்திலிருந்து பணி நிறைவு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு தலைவரும் இவ்விதமாக மிஷனரிகள் மீது அக்கறையுடன் செயல்படவேண்டும்.

மிஷனரிகளின் எதிர்காலத்திற்கென்று 'பணியாளர் வைப்பு நிதியில்' **(Employees Provident Fund - EPF)** சேமிப்பது நல்லது. விசுவாச ஊழியம் என்ற பெயரில் கவனக்குறைவாக இருக்கலாகாது. மனிதரைப் படைப்பதற்கு முன்பே அவர்களின் உணவுக்கானவற்றை தேவன் உருவாக்கினார். அவர் யாவற்றையும் திட்டமிட்டுச் செய்பவர். அவ்வாறே ஒவ்வொரு நிறுவனமும் செயல்படுவது சிறந்தது.

# 6. ஊழியரின் தகுதி

## சபைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கான தகுதிகள்

சபைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கான தகுதிகளை 1 தீமோ.3:1–7; தீத்.1:5–9 இலிருந்து காண்போம். சபைப் பொறுப்பில் இருப்பவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாகவும், சபை மக்களாலும் பிறராலும் நற்சாட்சி பெற்றவர்களாகவும் இருப்பது அவசியம். ஒரு மனைவியை உடைய மனிதராக இருக்கவேண்டும். தன் மனைவிக்குத் துரோகம் செய்பவன் தலைமைப் பொறுப்பில் இருப்பதற்குத் தகுதியுடையவனல்ல. தேவனுடைய அரசிற்காக திருமணம் செய்யாமலிருப்பதற்குத் தாங்களாக முன் வருபவர்கள் சபைப் பொறுப்பு வகிக்கலாம் (மத்.19:12). பொதுவாக, திருமணம் செய்து தனது பிள்ளைகளைச் சரிவர நடத்துகிறவர்களைச் சபைப்பொறுப்பில் அமர்த்துவது சிறந்தது. தனது பிள்ளைகளைச் சரியாக நடத்தாதவர், சபைப் பொறுப்பிற்குத் தகுதியானவரல்ல. எதிலும் நிதானத்தோடு கவனமாயிருப்பவரும், யாவற்றையும் குறித்து சரியான அறிவுள்ளவரும், நல்ல வாழ்க்கை நடத்துகிறவரும், அந்நியரை உபசரிக்கிறவருமாயிருக்கவேண்டும்.

மதுபானப் பிரியரும், முன்கோபக்காரரும், அடிக்கிறவரும், சண்டை போடுகிறவரும், இழிவான ஆதாயத்தை இச்சிப்பவரும் இப்பதவிக்குத் தகுதியுள்ளவரல்ல. பொறுமையுள்ளவரும் பண ஆசையில்லாதவருமே சபைப் பொறுப்பில் இருப்பதற்குத் தகுதியுடையவர். தனது விருப்பப்படி நடவாமல் வேத வசனப்படியும் மற்றவர்களின் நன்மைக்காகவும் நடக்கிறவராக இருக்க வேண்டும்.

புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களை (நூதன சீஷன்) சபைப் பொறுப்பில் அமர்த்தக்கூடாது.

### தகுதியின்மை

> **கிறிஸ்தவர்கள் என்பது தேவனுடைய அரசை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டம் என்று கூறலாம்.**
> **இக்கூட்டத்தில் வழிகாட்டியாகச் செயல்படும் ஊழியருக்கு, 'தான் தேவனுடைய இராஜ்யத்தில் (அரசில்) பங்கேற்பேன்' என்ற நிச்சயம் வேண்டும்.**

மறுபடியும் பிறக்கும் அனுபவம் பெறாத யாராயினும் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்காத யாராயினும் தேவனுடைய அரசிற்குள் செல்ல

முடியாது. எனவே இந்த அனுபவம் இல்லாத யாராயினும் போதக ஊழியம் செய்ய முனைவாரானால், அவர் குருடருக்கு வழிகாட்டும் குருடனைப் போன்றவர் (யோவா.3:3,5; மத்.15:14). இந்த வசனங்களை ஆராய்ந்து பார்க்கும் எவரும் இக்கருத்தை ஒப்புக்கொள்வர்.

தன் பெற்றோர், உறவினர், நண்பர், மனைவி, குழந்தைகள், உடைமைகள், உயிர் ஆகியவற்றை வெறுக்காதவர் தேவனுக்கு ஏற்ற ஊழியர் அல்ல (லூக்.14:26–27). உயிரை வெறுத்தல் என்பது தற்கொலை செய்வது என்று பொருள்படாது. எனவே இவற்றை வெறுக்கவேண்டும் என்பது கர்த்தரை நேசிப்பதைவிட இதில் எதையும் நேசிக்கக்கூடாது என்று பொருள்படும். தன் சிலுவையைச் (பாடுகளை, நிந்தையை) சுமந்து கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றாதவன் கர்த்தரின் சீடனல்ல (லூக்.9:23; 14:27,33; மத்.10:37–39).

நீதிமானாகவும், பரிசுத்தவானாகவும், நல்லவர்கள்மேல் வாஞ்சை யுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

போதிப்பதில் வல்லவராயும், உபதேசங்களைத் தவறின்றி சரியாகக் கூறுகிறவரும், புத்திசொல்லுவதிலும் எதிர்பேசுகிறவர்களுக்குச் சரியாய்ப் பதிலளிப்பதிலும் திறமையும் வேத அறிவும் உள்ளவருமாக இருக்கவேண்டும். மேலும் வேத வசனத்தின்படி நடக்கிறவராயிருக்கவேண்டும்.

வேத அறிவும் தேவனைப்பற்றிய அறிவும் இருந்தால் மட்டும் போதாது. பிதாவாகிய தேவனையும் கிறிஸ்துவையும் (நேரடியாக) அறிந்திருக்க வேண்டும் (யோவா.17:3). அதாவது, ஊழியர் ஒவ்வொருவரும் தேவனுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருப்பது மிகவும் அவசியம். தேவனிடமிருந்து செய்திகளைப் பெற்று, தேவனுடைய வாயாகச் செயலாற்றி, சபை மக்களுக்குக் கூறுவது அவரது கடமை. மேலும் சபை மக்களைப் பற்றி தேவனிடம் பேசி அவர் களுக்காக மன்றாட வேண்டியதும் சபை ஊழியரின் கடமை. தேவனுடைய மக்களின் வாழ்க்கையைக் கவனமாகப் பார்த்து அவர்கள் வழிதவறும்போது எச்சரித்து வழிநடத்துவதும் அவருடைய பொறுப்பாகும். இவற்றிற்காக தேவனிடம் நெருங்கிய தொடர்பு உடையவரே சபை ஊழியராக இருப்பதற்குத் தகுதியுடையவர்.

**தகுதியில்லை என்ற தாழ்மையுள்ளம்**

எனது தாயின் சகோதரரான காலஞ்சென்ற **Rev. A.** பிரடெரிக் சாமுவேல் அவர்கள் (1911 – 1994) திருமறையூரில் வேதாகமக் கல்லூரியில் படித்துக்

கொண்டிருந்தபோது தன்னுடைய தகுதியின்மையை உணர்ந்து, கல்லூரி முதல்வரான **Rev.** சித்தர் அவர்களைப் பார்த்து "ஐயா, என்னை விட்டுவிடுங்கள். இந்த மகிமையான ஊழியத்திற்கு நான் தகுதியுள்ளவனல்ல" என்றார்கள். கல்லூரி முதல்வர் மறுமொழியாக "நீ உன்னைத் தகுதியுள்ளவனல்ல என்று கருதுகின்றாயே, இதில்தான் உன் தகுதியிருக்கிறது" என்று கூறினார்கள். கர்த்தருக்குப் பணி செய்வதற்கு தன்னில்தானே தகுதியுடையவர் ஒருவருமில்லை. "நான் பாத்திரன் அல்ல" என்று பவுல் கூறுவது போன்று உள்ளத்தில் உணர்கிறவரே தகுதியுள்ளவர் **(1 கொரி.15:9–10)**. வேதாகமக் கல்லூரியில் பயின்று வேதத்தைக் கற்றுக்கொள்வது நல்லதுதான். ஆனால் அதனால் மட்டும் தகுதி வந்துவிடாது.

உங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நீங்கள் உங்களாலே தகுதியானவர்களல்ல, உங்கள் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது **(2 கொரி.3:5)**. இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நீங்கள் இரக்கம் பெற்றிருக்கிறீர்கள் **(2 கொரி.4:1)**. மண்பாண்டங்களாகிய நீங்கள், தேவனால் உண்டான வல்லமையென்ற பொக்கிஷத்தைப் பெற்றிருக்கவேண்டும் **(2 கொரி.4:7)**. 'நான் பிரதான பாவி ... இரக்கம் பெற்றேன்' என்ற எண்ணம் இருக்கவேண்டும் **(1 தீமோ.1:15–16)**. அவ்வாறு இருந்தால்தான் எவ்வளவு கொடிய பாவிக்காகவும் பரிதபிக்க முடியும்.

## தகுதி, ஆவியானவரின் உதவி

ஊழியம் செய்யும்படி தகுதிப்படுத்துகிற தேவனுடைய கிருபையினாலே ஊழியம் செய்யவேண்டும். உங்கள் நாவன்மையாலோ, திறமையினாலே, பெலத்தினாலோ, வேத அறிவினாலோ அல்ல, தேவனுடைய ஆவியினால் மட்டுமே உங்கள் ஊழியம் சரியான நிலையில் இருக்க முடியும் **(சக.4:6)**. இதற்காக நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரம்பியவர்களாக ஊழியம் செய்வது மிகவும் அவசியம் ஆகும். தேவனுடைய அரசு பேச்சிலல்ல, பெலத்திலிருக்கிறது **(1 கொரி.4:20)**. ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறாதவர்கள் பெலனற்றவர்கள் **(அப்.1:8)**.

உங்கள் சபைமக்களின் விசுவாசம் மனிதனுடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, உங்கள் பேச்சும் உங்கள் அருளுரைகளும் (பிரசங்கங்களும்) மனித ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டும் அல்லவா **(1 கொரி.2:5)?** கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல **(ரோம.8:9)**.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவியானவரால் நிரப்பப்பட்ட பின்னரே ஊழியம் செய்யத் தொடங்கினார் என்றால், அவருக்கு ஊழியம் செய்யும் யாராயினும் வேதத்தின்படியான ஆவியின் அபிஷேகம் பெறாமல் ஊழியம் செய்வது முறையாகுமா?**

சபையில் பந்திவிசாரணை (உணவு பரிமாறுதல்) செய்பவரும் பரிசுத்த ஆவியினாலும் ஞானத்தினாலும் நிரம்பியவராகவும் நற்சாட்சி பெற்றிருக்கிறவராகவும் இருக்கவேண்டும் (அப்.6:1–3) என்றால், எல்லா ஊழியரும் இவற்றைப் பெற்றிருக்கவேண்டியது அதிக அவசியம் அல்லவா!

**பரிசுத்த அக்கினி இல்லாத ஊழியம்,**

**முலாம்பூசப்பட்ட (கவரிங்) நகையைப் போன்றது.**

## ஆவியின் வரங்கள், கனி

ஆவியின் வரங்கள் ஒவ்வொரு ஊழியருக்கும் தேவை. ஊக்கமாக ஜெபித்து பெற்றுக்கொள்ளுங்கள் (1 கொரி.12:8–10,31; 14:1; மத்.7:7–11). இதைவிட முக்கியமாக, உங்கள் வாழ்க்கையில் ஆவியின் கனி (கலா.5:19–21) காணப் படுவதோடு நீங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தவர்களாகவும், ஆவியினால் நடத்தப்படுகிறவர் களாகவும் இருக்க வேண்டும் (கலா.5:24). மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் (ரோம.8:8).

## பாடுகளை அனுபவிப்பது ஒரு முக்கிய தகுதி

உபத்திரவத்தில் அகப்படுகிறவர்களுக்கு ஆறுதல் செய்யத் தகுதி யுள்ளவர்களாக ஆவதற்கு, உபத்திரவங்களை அனுபவித்து தேவனால் ஆறுதல் பெற்றவராயிருப்பது அவசியம் (2 கொரி.1:4–6).

## மனிதனை அல்ல, தேவனைப் பிரியப்படுத்தும் ஊழியர்

பல ஊழியர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் சபையின் தலைமை ஊழியர், பேராயர், சபை மூப்பர்கள், சபை மக்கள் போன்றவர்களின் தயவில் இருக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் வேதத்தின்படியில்லாத சில செயல்களைச் செய்யும்படி ஊழியர்கள் முற்படுகின்றனர். இவ்வாறு இருக்கலாகாது. எந்த மனிதனையும் பிரியப்படுத்துவதற்காக ஊழியம் செய்யாமல், கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்கென்றே மனப்பூர்வமாய் தேவனுக்கென்று ஊழியம் செய்யுங்கள் (எபே.6:6). நீங்கள் மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களென்றால் நீங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரல்ல (கலா.1:10).

### சிறப்பான ஊழியத்தில் சோதனை

உங்கள் ஊழியம் சிறப்பாயிருந்தால் சோதனைகளும் அதிகமாக இருக்கும். அநேகரால் புகழப்பட்டு, நிலை தடுமாறும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எவ்வளவு சிறப்பான ஊழியம் செய்தாலும், "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக் காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்" என்று உண்மையாக உணர்ந்து சொல்லுங்கள் (லூக்.17:10). ஏனெனில் 'நீங்கள் ஊழியராயிருப்பதும், சிறப்பான ஊழியம் செய்வதும் கர்த்தருடைய கிருபையினால் மட்டுமே' என்பதை எக்காலத்திலும் மறந்துபோகாதீர்கள். 'சீடன் தன் போதகரிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேம்பட்டவனல்ல. சீடன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும்' என்பதை நினைவிற்கொண்டு பணி செய்யுங்கள் (மத்.10:24–25; யோவா.15:20).

உங்களுக்குத் தொல்லை கொடுப்பவர்கள் சபைக்குள்ளும் வெளியிலும் இருப்பார்கள். எல்லாரும் உங்களைப் புகழ்ந்தால் உங்கள் ஊழியத்தில் ஏதோ தவறு இருக்கிறது என்று பொருள் (லூக்.6:26).

### ஊழியர்பேரில் கர்த்தருக்குப் பிரியமில்லாமல் போதல்

புதுமனை புகு விழாவிற்குச் சென்றிருந்தபோது அந்த சபையின் போதகர்களை அழைத்திருந்தனர். 'சபையின் போதகர்கள் யாவரும் சேர்ந்து தான் வருவார்கள். ஒவ்வொரு போதகருக்கும் கட்டணம் (fees) சென்று சேரவேண்டும் என்பதற்காக போதகர்கள் இவ்வாறு ஒழுங்கு செய்துள்ளனர்' என்று வீட்டின் உரிமையாளர் கூறினார். எந்தவொரு செயலுக்கும் பணம் வாங்கும் போதகர்கள் மீது கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? கூலியைக் கருத்திற்கொண்டு பணி செய்யும் ஊழியர்மேல் தமக்குப் பிரியமில்லை என்று கர்த்தர் கூறியுள்ளாரே (மல்.1:10).

**வேதத்தை அறிந்திருப்பதும் வேதத்தைப் போதிப்பதும் வேறு, கர்த்தரை அறிந்திருப்பது வேறு (எரே.2:8).**
**கர்த்தரை (நேரடியாக, அனுபவத்தில்) அறியாமல் வேதத்தைப் போதிப்பவர்களோடும் அவர்களின் பிள்ளைகளின் பிள்ளை களோடும் கர்த்தர் வழக்காடுவார் (எரே.2:8,9).**
**கர்த்தரை அறியாத 'ஊழியர்' கர்த்தருடைய பார்வையில் குருடர் (ஏசா.42:19).**

# 7 சபை உதவிக்காரரின் தகுதிகள்

**சபையில் உண்டான முதல் முறுமுறுப்பு**

அன்றாட விசாரணையில் சிலரைச் சரியாகக் கவனிக்காமலிருப்பது எக்காலத்திலும் இருந்து வருகிறது. கவலையீனத்தினால் மட்டுமின்றி வேண்டுமென்றே அப்படிச் செய்வது பல இடங்களில் காணப்படும் காரியமே. மொழிப் பிரச்சனையினால் நாடுகளுக்குள்ளும் மக்களுக்குள்ளும் தகராறு வருவது சபையிலும் பரவலாக இருந்து வருகிறது. யாவரும் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை உதட்டளவில் மட்டுமே பலர் கூறிவருகின்றனர்.

அப்போஸ்தலர் நேரிடையாகப் பாரபட்சம் காட்டவில்லை. சபை பெருகியபோது அதன் அலுவல்களும் பெருகியதால் சபையின் காரியங்கள் யாவற்றையும் நேரிடையாகக் கவனிக்க அப்போஸ்தலரால் முடியாமற் போயிற்று. எனவே, சிலர் முறுமுறுக்கும் சூழ்நிலை உண்டாயிற்று (அப்.6:1).

**முறுமுறுப்பைத் தீர்ப்பதற்கான வழி**

முறுமுறுப்பைத் தீர்ப்பதற்காக சபை அங்கத்தினர் யாவரும் கூட்டப்பட்டனர் (அப்.6:2). சபையின் முக்கிய காரியங்களை முடிவு செய்வதற்கு யாவரையும் கலந்தாலோசிப்பது நல்லது.

**அப்போஸ்தலர் தங்கள் ஊழியத்தைத் திட்டம்பண்ணினார்கள்**

அப்போஸ்தலரின் தீர்மானத்தின்படி சபையின் பிரதான பொறுப்பில் இருப்பவர்கள் (அப்போஸ்தலரைப் போன்று இருப்பவர்கள்) ஜெபம்பண்ணுவதிலும், வேத வசனத்தைப் போதிப்பதிலும் இடைவிடாமல் தரித்திருக்க வேண்டும் (அப்.6:3–4). பணக் கணக்குகளைக் கவனிப்பதும் பந்தி விசாரணை செய்வதும் அவர்களின் ஊழியத்தின் தரத்திற்குக் குறைவு ஆகும்.

இக்காலத்திலுள்ள சபைப்பிரிவுகளில் பெரும்பாலானவற்றில் போதகராக, தலைமைப் போதகராக இருப்பவர்கள் ஜெபம் பண்ணுவதிலும் வேத வசனத்தைப் போதிப்பதிலும் கவனம் செலுத்துவதைவிட தங்கள் சபைப் பிரிவுகளை ஆளுவதிலும், பலவித குழுக்களில் (கமிற்றிகளில்) பங்கேற்பதிலும் கவனத்தை அதிகம் செலவிடுகின்றனர். சபையின் அன்றாடக அலுவல்களிலும் பணக்கணக்குகளிலும் ஈடுபடுதல் அவர்களுக்கு அடுத்ததல்ல என்பதை உணர்ந்துகொண்டு தேவனோடு அதிக நேரத்தைச்

செலவிட்டு, அவருடைய வார்த்தையைக் கருத்தாக ஆராய்ந்து, தேவசித்தத்தையும் செய்திகளையும் நேரிடையாகப் பெற்று, மக்களுக்கு அளிப்பார்களென்றால் அவர்களுடைய ஊழியத்தில் தேவனுடைய மகிமை காணப்படும்.

**அன்றாடக அலுவல்களைக் கவனிப்பவர்களின் தகுதிகள் எவை?**

சபையின் அன்றாடக அலுவல்களைக் கவனிக்கும்படி ஏழுபேர் ஆதித் திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டனர். இவர்கள் உதவிக்காரர் **(deacons)** என்று நாளடைவில் அழைக்கப்பட்டனர். எப்படிப்பட்டவர்கள் இப்பொறுப்பில் அமர்த்தப்படவேண்டும் என்று காண்போம். முதலாவதான தகுதி பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருத்தலாகும் (அப்.6:3). பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படாதவர் போதகராயிருப்பதற்கு மட்டுமல்ல, பந்தி விசாரிப்புக்காரராக இருப்பதற்கும் அருகதை இல்லாதவர் என்பதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். இதை வாசிக்கும் சகோதரரே, பரிசுத்த ஆவியானவரின் நிறைவை இதுவரை பெற்றிருக்காவிடில் ஊக்கமாக அதற்கென்று ஜெபித்துப் பெற்றுக்கொள்வீராக.

**பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாதவர்,**
**போதகராயிருப்பதற்கு மட்டுமல்ல,**
**சபையில் பந்திவிசாரிப்புக்காரராக இருப்பதற்கும்,**
**(சபையில் எந்த பொறுப்பில் இருக்கவும்) அருகதையற்றவர்**

சபையின் எந்தப் பொறுப்பில் இருப்பவர்களும் ஞானமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதுமட்டுமல்ல நற்சாட்சி பெற்றவர்களுக்கு மட்டுமே சபையில் பொறுப்புகள் தரப்பட வேண்டும் (அப்.6:3). புதிதாக சபையில் சேர்ந்தவர்களையும், சந்தேகத்திற்கு இடமாக நடந்துகொள்பவர்களையும், தவறான நடக்கையுள்ளவர்களாக அறியப்பட்டவர்களையும் சபையின் எந்தப்பொறுப்பிலும் வைத்திருப்பது தவறாகும். நற்சாட்சி இல்லாத அநேகர் சபைப்பிரிவுகளின் பதவிகளில் பல விதங்களில் நுழைந்து பணத்தைக் கொள்ளையிடுவதையும், தங்கள் நடக்கையினால் கர்த்தருடைய நாமத்தைக் கனவீனப்படுத்துவதையும் நாம் கேள்விப்பட்டு வேதனைப்படுகிறோம். இந்நிலை மாறும்படியாக ஊக்கமாக ஜெபியுங்கள். உலகின் எல்லாச் சபைப்பிரிவுகளிலும் கர்த்தரின் வசனப்படி தகுதி பெற்றவர்கள் பொறுப்பேற்கும்படி ஜெபியுங்கள்.

சபைக்கு வெளியிருப்பவர்களிடம் சபையின் பொறுப்புகளைத் தருவதும் தவறாகும் **(No guest members of the committee).**

**தேர்தல் தேவையா?**

வேதத்தில் கூறப்பட்டிருக்கும் தகுதியுடையவர்கள், தாங்கள்தான் பதவியில் இருக்கவேண்டும் என்று முயற்சி செய்யமாட்டார்கள். தேவன் தங்களுக்கு அளித்தால் மட்டுமே தாழ்மையோடு ஏற்றுக்கொள்வார்கள். எங்களைத் தேர்ந்தெடுங்கள் என்று பிரச்சாரம் செய்வதும், வாக்குறுதிகள் அளிப்பதும், தேர்தல் கூட்டணி அமைப்பதும், போட்டியிட்டு பிரிவினைகளை உருவாக்குவதும், பலவித தேர்தல் குற்றங்கள் புரிவதும், பணம் கொடுத்து வாக்குகளைச் சேகரிப்பதும் இக்காலச் சபைப்பிரிவுகளின் நிலையாகும். இவை ஆதி சபையில் கிடையாது. சரியான தகுதியுடையவர்கள் என்று சபை மக்களால் கருதப்பட்டவர்கள் ஒருமனதோடு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான தகுதியில்லாதவர்கள் செய்யும் அமளியே இக்காலச் சபைப்பிரிவுகளில் தேர்தலாகக் கருதப்படுகிறது. அங்கத்தினர்களைக் கடத்துதல், வாக்கு அளிப்பதற்கென்று பணம் அளிப்பது, தேர்தல் வழக்குகள் நடத்துதல், தடுப்பு ஆணை **(stay order)** வாங்குதல் போன்றவை வேதத்தின்படி சரியல்ல. இவற்றைச் செய்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கமுடியாது.

**பொறுப்பு எவ்விதத்தில் தரப்பட்டது?**

அப்போஸ்தலர் ஜெபம்பண்ணி, சபை மக்களால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது கைகளை வைத்து சபையில் சரியான உதவிக்காரரை நியமித்தனர். இதின் உடனடி விளைவு என்ன? தேவவசனம் விருத்தியடைந்து சீடரின் தொகை எருசலேமில் பெருகிற்று. ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தனர் (அப்.6:6–7).

**பந்தி விசாரிப்பவர்கள் பிரசங்கிக்கலாமா?**

ஆம். சபையில் எந்தப் பொறுப்பில் இருப்பவர்களும் நற்செய்தி அறிவிக்கும் பணி (சுவிசேஷ ஊழியம்) செய்யலாம் என்பதை (அப்.6:8; 8:6–12, 30–40)இலிருந்து காணலாம். சபையின் மக்கள் (இரட்சிப்பைப் பெற்ற) ஒவ்வொருவரும் நற்செய்திப்பணியில் ஈடுபட்டனர். பந்தி விசாரிப்புக் காரராகிய ஸ்தேவான், பிலிப்பு மூலமாக தேவன் அற்புதங்கள், அடையாளங்கள் நிகழ்த்தினர். இன்றும் தன்னுடைய பிள்ளைகள் மூலமாக அவ்வாறு செய்ய ஆவலாயிருக்கிறார். நீங்களும் இவ்வாறு செய்யலாமே!

**குறிப்பு :** உதவிக்காரரின் தகுதிகள் 1 தீமோ.3:8–10, 12 என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளன. இவற்றை ஆராயுங்கள்.

# 8. மூப்பர்களின் தகுதிகள் (பட்டியல்)

1. ஊழியம் செய்ய விரும்புதல் (1 தீமோ.3:1)
2. கட்டாயமின்றி, மனப்பூர்வமாய் ஊழியம் செய்தல் (1 பேது.5:2)
3. உற்சாகமாய் ஊழியம் செய்தல் (1 பேது.5:2)
4. குற்றம் சாட்டப்படாதிருத்தல் (1 தீமோ.3:2; தீத்து 1:6,7)
5. ஒரே மனைவியைக் கொண்டிருத்தல் (1 தீமோ.3:2; தீத்து 1:6)
6. விசுவாசமுள்ள பிள்ளைகளைக் கொண்டிருத்தல் (தீத்து 1:6)
7. தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப்பண்ணுதல் (1 தீமோ.3:4)
8. அடங்காதவர்கள் என்று பேரெடுக்காத பிள்ளைகளைக் கொண்டிருத்தல் (தீத்து 1:6)
9. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துதல் (1 தீமோ.3:4–5)
10. ஜாக்கிரதையுள்ளவராயிருத்தல் (1 தீமோ.3:2)
11. தெளிந்த புத்தியுள்ளவராயிருத்தல் (1 தீமோ.3:2)
12. யோக்கியதையுள்ளவராயிருத்தல் (1 தீமோ.3:2)
13. நல்ல உக்கிராணத்துவத்திற்கேற்ற திறமை (தீத்து 1:7)
14. தன் இஷ்டப்படி செய்யாதவராயிருத்தல் (தீத்து 1:7)
15. முற்கோபமில்லாதவராயிருத்தல் (தீத்து 1:7)
16. அடியாதவராயிருத்தல் (1 தீமோ.3:3; தீத்து 1:7)
17. சண்டை பண்ணாதவராயிருத்தல் (1 தீமோ.3:3)
18. இழிவான ஆதாயத்தை இச்சியாதவராயிருத்தல் (1 தீமோ.3:3; தீத்து 1:7).
19. பண ஆசை இல்லாதவராயிருத்தல் (1 தீமோ.3:3).
20. மதுபானப் பிரியமில்லாதவராயிருத்தல் (1 தீமோ.3:3; தீத்து 1:7)
21. அந்நியரை உபசரிக்கிறவராயிருத்தல் (1 தீமோ.3:2; தீத்து 1:8)
22. பொறுமையுள்ளவராயிருத்தல் (1 தீமோ.3:3)

23. நீதிமானாயிருத்தல் (தீத்து 1:8)

24. பரிசுத்தமுள்ளவராயிருத்தல் (தீத்து 1:8)

25. இச்சையடக்கமுள்ளவராயிருத்தல் (தீத்து 1:8)

26. நல்லோர்மேல் பிரியமுள்ளவராயிருத்தல் (தீத்து 1:8)

27. உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்பவராயிருத்தல் (தீத்து 1:9)

28. புத்தி சொல்பவராயிருத்தல் (தீத்து 1:9)

29. போதக சமர்த்தராயிருத்தல் (1 தீமோ.3:2).

30. வசனத்திற்கு எதிர்பேசுகிறவர்களைக் கண்டிக்க வல்லவராயிருத்தல் (தீத்து 1:9)

31. நூதன சீஷனாயில்லாமலிருத்தல் (புதிதாக இரட்சிக்கப்பட்டவரா யில்லாதிருத்தல்) (1 தீமோ.3:6)

32. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவராயிருத்தல் (1 தீமோ.3:7)

33. தேவனுடைய மந்தையை மேய்க்கிறவராயிருத்தல் (1 பேது.5:2; எபே.4:11–13)

34. தேவனுடைய ஜனங்களுக்குக் கண்காணியாயிருத்தல் (1 பேது.5:3; அப்.20:28)

35. சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளாமலிருத்தல் (1 பேது.5:3)

36. சபைக்கு மாதிரியாயிருத்தல் (1 பேது.5:3)

37. தன்னைக் குறித்து எச்சரிக்கையாயிருத்தல் (அப்.20:28)

38. மந்தையின் தேவை குறித்து எச்சரிக்கையாயிருத்தல் (அப்.20:28)

39. மந்தையின் பாதுகாப்பு குறித்து கவனமாயிருத்தல் (அப்.20:29–31)

40. தேவையானால் கண்டனத்தை ஏற்பவராயிருத்தல் (1 தீமோ.5:19–20).

**மூப்பரே, சபைக்குழு (Committee) உறுப்பினரே,**
**மேலே கூறப்பட்டுள்ள தகுதிகள் இல்லாவிடில்**
**உமது பொறுப்பைவிட்டு விலகுதல் நல்லது.**
**கர்த்தர் ஒருநாள் கணக்கு கேட்பார்.**

# 9. ஊழியரின் அழைப்பு

> **ஊழியம் என்பது பிழைப்பு அல்ல, தொழிலும் அல்ல; அது தேவனுடைய அழைப்பு ஆகும்.**

### பல வகைகளில் ஊழிய அழைப்பு

நன்கு படித்து (பட்டம் பெற்று), வேதாகமக் கல்லூரியில் கற்று, இறையியல் பட்டம் பெற்று, அவ்வாறு கற்றதின் அடிப்படையில் ஒரு சபையின் போதகராக நியமிக்கப்படுவோர் உண்டு. ரோமன் கத்தோலிக்க சபை, தென்னிந்திய சபை, லுத்தரன் சபை போன்றவற்றிலும் பல்வேறு சபைகளிலும் இத்தகைய ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. இவர்களில் பலர் ஏற்கனவே இயங்கிவரும் கிராம அல்லது நகர சபையின் போதகராகப் பொறுப்பேற்று, பணிபுரிகின்றனர். இவர்களைத் தவிர, தாங்களாக வேதத்தைக் கற்று, ஆத்தும ஆதாயம் செய்து, புதிய சபையினை உருவாக்கி அதில் போதகராயிருப்போரும் உண்டு. இந்த இரு வகையினரும் "தேவன் தன்னைப் போதக ஊழியத்திற்கு அழைத்தார்" என்ற நிச்சயம் பெற்றிருக்கக்கூடும். இது தவிர பல்வேறு விதமான ஊழிய அழைப்புகள் உண்டு. ஊழியம் செய்யும்யாராயிருந்தாலும், 'கர்த்தர் என்னை இந்த ஊழியத்திற்கு அழைத்தார்' என்ற நிச்சயமுள்ளவர் களாயிருக்கவேண்டும்.

### அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்தல்

பலவிதமாக தேவன் தமது அழைப்பை உறுதிப்படுத்துவார். ஆரோனின் கோலைத் துளிர்க்கச்செய்து ஆரோனின் அழைப்பை யாவருக்கும் தேவன் உறுதிப்படுத்தினார் (எண்.17:1–11). மோசேயின் அழைப்பை அற்புதங்களினால் உறுதிப்படுத்தினார் (யாத்.4:1–9). கிதியோனின் அழைப்பையும் தேவன் அற்புதங்களினால் உறுதிப்படுத்தினார் (நியா.6:36–40). பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு, மத்தேயு போன்ற சீடர்களைக் கர்த்தர் நேரடியாக அழைத்தார். பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளப்பற்றினார் (அப்.13:2). தேவனிடத்திலிருந்து இவ்விதமான ஓர் உறுதியான அழைப்பு ஒவ்வொரு ஊழியருக்கும் தேவை.

ஆரோனைப்போல அழைக்கப்பட்டாலொழிய ஊழியத்தில் சிறப்பாயிருக்க முடியாது. எனவே, முதலாவதாக உங்கள் அழைப்பை நிச்சயப்படுத்திக்

கொள்ளுங்கள். மேலும் கிதியோனைப் போன்று (நியா.6:36–40) உங்கள் அழைப்பை மீண்டும் உங்களுக்கு உறுதிப்படுத்தும்படி நீங்கள் ஊக்கமாக ஜெபித்து, கர்த்தரிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். தேவன் உங்களை அழைத்தது உண்மையானால் அந்த அழைப்பு ஒருநாளும் மாறாது (ரோம.11:29).

**பல்வேறு ஊழியங்களுக்கு அழைப்பு**

போதகராயிருப்பது மட்டுமின்றி பல்வேறு ஊழியங்களுக்கென்று தேவன் மக்களைப் பிரித்தெடுத்து அழைக்கிறார். **உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி கவனமாயிருங்கள். தேவனுடைய அழைப்பில் நிலைத்திருங்கள் (2 பேது.1:10).** உங்களுக்கு அவர் அளிக்காத பணிகளில் தலையிடாதீர்கள். பிற பணிகளில் இருப்பவர்களுக்கு உதவிசெய்வதில் கவனமாயிருங்கள். பிற ஊழியரைப்போல பாசாங்கு செய்து (காப்பி அடித்து) ஊழியம் செய்யாதீர்.

**சிறிய பணியையும் மனப்பூர்வமாகச் செய்தல்**

வெளியூர் ஒன்றில் ஞாயிறு ஆராதனையில் செய்தி அளிக்கவும், அதற்குப் பின்னர் பகலில் நடைபெறும் வாலிபர் கூட்டத்தில் செய்தி அளிக்கவும் அழைக்கப்பட்டிருந்தேன். அழைத்திருந்தவர்களிடையே ஒருமனமின்மையால் ஆலய ஆராதனையில் வேறொருவரைப் பேசச் செய்தனர். அதற்குப் பின்னர் வாலிபர் கூட்டத்திலும் நான் பேசக்கூடாது என்று என்னை அழைத்த குழுவில் ஒரு சிலர் கூறினர். அவர்களில் ஒருவர், "நாம் அழைத்தவரைப் பேசச் சொல்வது நமது கடமையல்லவா?" என்று கேட்டார். அதற்கு ஒரு வாலிபன், "அவர் கூட்டத்தில்தான் பேச வேண்டுமோ? கூட்டத்தினரைச் சிறு கருத்துரையாடல் குழுக்களாகப் (small discussion group) பிரிக்கும்போது அதிலுள்ள ஒரு சிறு குழுவிற்கு மட்டும் ஆலோசனை கொடுக்கட்டுமே? அதுவும் ஊழியம்தானே?" என்று நான் கேட்கும்படி கூறினார். எனக்கு அது அதிர்ச்சியைக் கொடுத்தபோதிலும், 'அவர் கூறுவது உண்மைதானே? ஒரிரு நபர்களாயினும் அவர்களுக்கு இரட்சிப்பின் வழியை நான் காண்பிக்கலாம் அல்லவா?' என்று நான் உணர்ந்தேன். தேவன் அன்று எனக்கு அளித்த அந்த ஊழியத்தை மனப்பூர்வமாக நிறைவேற்றுவதற்கு தேவன் உதவி செய்தார்.

சிறு ஊழியம், பெரிய ஊழியம் என்பது முக்கியமல்ல. தேவன் நமக்கு அளிக்கும் ஊழியத்தை மனப்பூர்வமாக நிறைவேற்றுவோமாக. ஒரு ஆத்துமாவானாலும் கருத்தாக வழிநடத்துவோமாக.

### என்ன அழைப்பானாலும் ஆத்தும ஆதாயம்

நீங்கள் எந்த அழைப்பைப் பெற்றிருந்தாலும், தனிநபர் ஆத்தும ஆதாயம் செய்வதை விட்டுவிடாதீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஊழியப் பாதையில் சமாரியப் பெண் (யோவா.4:1–42), 38 ஆண்டுகளாக பக்கவாதத்தால் அவதிப்பட்டவர் (யோவா.5:1–15), பிறவிக்குருடன் (யோவா.9:1–38), லேகியோன் ஆவிகள் பிடித்திருந்த மனிதன் (லூக்.8:27–39), சிலுவையில் தமதருகில் அறையப்பட்டிருந்த கள்ளன் (லூக்.23:39–43) போன்ற தனி நபர்களைச் சந்தித்தார். நீங்கள் எவ்வளவு பெரிய தலைவராயிருந்தாலும் ஆத்தும ஆதாயம் செய்யாமல் சும்மாயிராதேயுங்கள். கர்த்தரைப் பின்பற்றுங்கள்.

### பரமபிதா நடாத நாற்று

தேவனுடைய அழைப்பைப் பெறாமல் வேறு காரணங்களால் ஊழியத்திற்கு வந்தவர்களைக் கர்த்தர் 'பரமபிதா நடாத நாற்று' என்று கூறுகிறார். இந்த நாற்றுகள் வேரோடே பிடுங்கப்படும் (மத்.15:13).

வயல் நிலங்களில் களைகள் இருப்பது போன்று எல்லா சபைகளிலும் ஊழியங்களிலும் களைகள் உண்டு. களைகளாகச் செயல்படும் ஊழியரையும் உறுப்பினரையும் உடனடியாகப் பிடுங்காமல் அறுப்புக்காலம் வரைக்கும் தேவன் அனுமதித்திருக்கிறார். அறுப்புக்காலத்தில் களைகள் பிடுங்கப்பட்டு சுட்டெரிக்கப்படும் (மத்.13:24–30). நீங்கள் பயிராக இருந்து பலன் தருகிறீர்களா? அல்லது களையாக இருக்கிறீர்களா?

### 'தேவைதான் அழைப்பு' என்பது சரியா?

தேவையைக் கண்டு மனதுருகுவதும் தம்மாலானவற்றைச் செய்வதும் சிறந்தவைதான். அந்தத் தேவையை நிறைவு செய்வதற்கு மனிதன் மட்டும் முயன்றால் போதாது. மனிதனைவிட தேவன் அத்தேவைகளைச் சந்திக்க ஆவலாயிருக்கிறார். எனவே, தாம் தெரிந்தெடுக்கும் மனிதரை தேவன் அழைக்கிறார். தேவன் என்னைத் தெளிவாக அழைத்தார் என்ற நிச்சயமில்லாமல், தேவைதான் அழைப்பு **(Need is the call)** என்பது சரியல்ல.

### வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவன்

ஊழியரில், வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவன் என்றும், வாசல் வழியாய்ப் பிரவேசியாமல் வேறு வழியாய் ஏறுகிறவன் என்றும் இரு வகையினர் உண்டு (யோவா.10:1–2). இதற்கு அடுத்ததாக 'நானே வாசல்' என்று கர்த்தர் கூறினார் (யோவான்.10:9). கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவர் வழியாக (அவர் அழைத்ததால்) ஊழியத்திற்கு வருவதே சரியானது. தனது ஆடுகள் பேரில் கரிசனையுள்ள மேய்ப்பருக்கும் கூலியாட்களுக்கும் அநேக வேறு பாடுகள் உண்டு. மேய்ப்பன் தனது ஆடுகளுக்காகத் தன் உயிரைவிடவும் தயங்கமாட்டான். கூலியாள் ஓடிப்போவான். நீங்கள் மேய்ப்பராக இருக்கிறீர்களா அல்லது கூலியாளா என்று உங்களையே ஆராய்ந்து பாருங்கள்.

**அழைப்பு இன்றி 'ஊழியராக' இருப்பவர் 'பரமபிதா நடாத நாற்று' ஆவார் (மத்.15:13)**

**ஆராய்க:** உங்கள் பணியில் கடந்த ஓராண்டில் புதிதாக மனந்திரும்பியவர் எத்தனைபேர்?

சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி என்று நீங்கள் கூறக்கூடிய ஏதேனும் உண்டா?

நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதைவிட பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறீர்களா?

சபை பரலோக அரசிற்கு ஆட்களைச் சேர்க்காவிட்டால், வெறும் பொழுதுபோக்கு நிறுவனமாகவே செயல்படுகிறது. உங்கள் சபை, நிறுவனம் எப்படி செயல்படுகிறது?

**தியானிக்க:** யோவா.10:1-16, 27-29

**சாட்சி:** தேவனாகிய கர்த்தர், இந்நூலை எழுதிய என்னை மிகவும் தெளிவாக அழைத்து, தமது அழைப்பை உறுதிப்படுத்தினார். அவர் எனக்கு அளிக்கும் பணியை நான் செய்துவருகிறேன்.

**புகழ், அந்தஸ்து, மரியாதை, பிறரால் மதிக்கப்படுதல், பதவி, பணம், சமுதாயத்தில் அங்கிகாரம் போன்றவற்றிற்காகவா?**

**அல்லது**

**ஆத்துமாக்கள் மீதுள்ள மனதுருக்கத்தால் அவர்களை வழி நடத்தி தேவனுடைய அரசில் சேர்ப்பதற்காகத் தியாகமாய் உழைப்பதற்காகவா?**

**எதற்காக ஊழியராக இருக்கிறீர்கள்?**

# 10. பின்பற்றுதல்

**ஊழியன் என்றால் அடிமை என்று பொருள்.**

**கர்த்தருக்கு அடிமையாக, முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்பவரே உண்மை ஊழியர்.**

கர்த்தர் தம்முடைய சீடர்களை அழைத்தபோது "என்னைப் பின்பற்று" என்று கூறினார் (மத்.4:19; 8:22; 9:9; 19:21; மாற்.2:14; லூக்.5:27; 9:59; 18:22; யோவா.1:43; 21:19,22). மேலும் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கர்த்தர் தெளிவாகக் கூறியுள்ளார் (யோவா.12:26). இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓட நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம் (எபி.12:1). **கர்த்தரைப் பின்பற்றாமல் 'ஊழியம்' செய்ய முடியும். அநேகர் அவ்விதம் இருக்கின்றனர். நீர் அவ்வாறு இருக்காதீர்.**

**கிறிஸ்துவைப்போன்று வாழ்வது அவரைப் பின்பற்றுவதாகும். கிறிஸ்துவைப் பின்பற்றுவதைவிட அவரை அதிகமாக ஆராதிக்கி றோம். அவரைப் பின்பற்றுவதை விசுவாசப்பிரமாணம், உணர்ச்சிகள், பாடல்கள், இசை, ஆராதனை, சமுதாயப்பணி, பெரிய ஆலயக் கட்டிடம் கட்டுதல், காணிக்கை கொடுத்தல், ஞாயிறு ஆராதனை, போன்றவற்றிற்குள் அடக்கிவிட்டோம்.**

### தன் சிலுவையை எடுத்துக்கொண்டு பின்பற்றுதல்

"ஒருவன் என் பின்னே வர விருப்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கர்த்தர் கூறியுள்ளார் (லூக்.9:23). உபத்திரவங்கள் இருந்தாலும், அதின் மத்தியிலும் கடினமாக உழைப்பவரே கர்த்தரைப் பின்பற்றுபவர். கம்யூனிச நாடுகளில் கிறிஸ்தவர்கள் கொடுமையாக சித்திரவதை செய்யப்பட்ட காலத்திலும் ஊழியம் செய்து பாடுகளை அனுபவித்தவர்கள் உண்டு. பல இஸ்லாமிய நாடுகளில் இன்றும் இரகசியமாகக் கர்த்தருக்கென்று பணிபுரிகிறவர்கள் உண்டு. மக்களைச் சந்திப்பதிலும், கர்த்தருடைய பாதத்தில் பல மணிநேரம் அமர்ந்திருந்து செய்திகளைப் பெற்று மக்களுக்குச் சொல்வதிலும், கர்த்தருக்கென்று மேற்கொள்ளும் பயணங்களிலும், பல மணி நேரங்கள் எழுதுவதிலும் கருத்தாக இருப்பவர்கள் உண்டு.

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு கர்த்தருக்குப் பின் செல்லாதவன் அவருக்கு சீடனாயிருக்கமாட்டான் (லூக்.14:27). அதாவது, உங்களுக்கொரு சிலுவை இருக்கவேண்டும். அதை நீங்கள் சுமக்கவேண்டும்.

**கிறிஸ்துவின் சிலுவை**

மனுக்குலத்தை மீட்பதே கிறிஸ்துவின் சிலுவை. தமக்கு முன்பாக இருந்த இந்த இலக்கைப் பற்றிய கரிசனையுள்ளவராகவே அவர் வாழ்ந்தார். எனவே எருசலேமுக்குச் சென்று மரணமடைவதில் கவனமாயிருந்தார் (லூக்.9:51,53; 12:50). தமது சிலுவை மரணம் உலகத்தோற்றமுதல் அவருக்குத் தெரிந்திருந்தது (வெளி.13:8). தம்மைப்பற்றி வேதத்தில் கூறப்பட்டிருந்த யாவையும் (ஆதி.3:15; சங்.22; ஏசா.53 போன்றவை) அவர் அறிந்திருந்தார். மேலும் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த இயேசு, ஆத்தும ஆதாயம் செய்வதில் (சிறப்பாக தனி நபர் ஆத்தும ஆதாயம் செய்வதில்) கவனமாயிருந்தார்.

சமாரியப் பெண் (யோவா.4:1–42), 38 ஆண்டு நோயுற்றிருந்தவர் (யோவா.5:1–14), பர்திமேயு (மாற்.10:46–52), சகேயு (லூக்.19:1–10), தமதருகில் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்ளன் (லூக்.23:42–43) போன்ற பலரைச் சந்தித்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்றால் அவர் கொண்டிருந்த நோக்கம் நிறைவேறுவதற்காக உழைக்கவேண்டும். அவரைப் பின்பற்றி ஆத்தும ஆதாயம் செய்யவேண்டும்.

**கர்த்தருடைய சாந்தத்தையும் பொறுமையையும் பின்பற்றுதல்**

கர்த்தருடைய சாந்தத்தைப் பின்பற்ற நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத்.11:29; 1 பேது.2:21). தம்மைப் பாடுபடுத்தி, சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னிக்கும்படி கர்த்தர் வேண்டினார் (லூக்.23:34). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேது.2:23). நம்மைப் பிறர் பொய்யாகக் குற்றஞ்சாட்டும்போதும், துன்புறுத்தும்போதும் நாம் பொறுமையாகச் சகிப்பதும் கர்த்தரைப் பின்பற்றுவதாகும் (1 பேது.2:19–21).

**கர்த்தருடைய மனத்தாழ்மையைப் பின்பற்றுதல்**

கர்த்தருடைய மனத்தாழ்மையைப் பின்பற்றுவோமாக (மத்.11:29). தம்மைத் தாழ்த்தி தேவதூதரிலும் சற்று சிறிய மனிதராக வந்தார். சிலுவைபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (பிலி.2:5–8). கர்த்தர் தம்மை இவ்விதமாகத்

தாழ்த்தியிருக்கும்போது நாம் எல்லாவிதத்திலும் தாழ்மையாயிருப்பது எவ்வளவு அவசியம்? கர்த்தர் தமது சீடர்களின் கால்களைக் கழுவியதை நாம் பின்பற்ற வேண்டும் அல்லவா (யோவா.13:14–15)?

**கர்த்தரின் மனதுருக்கத்தைப் பின்பற்றுதல்**

கர்த்தரின் மனுதுருக்கத்தைப் பின்பற்றுவோமாக (மத்.9:36; 14:14; 15:32; 20:34; மாற்.1:41; 6:34; 8:2; லூக்.7:13). மனதுருகினால் மட்டும் போதாது. மனதுருக்கத்தால் யாவருக்கும் உதவி செய்யுங்கள்.

**பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியதைப் பின்பற்றுதல்**

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் கர்த்தராகிய இயேசு கவனமாயிருந்ததையும் நாம் பின்பற்றக்கடவோம் (எபி.10:7). "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே எனக்குப் போஜனமாயிருக்கிறது" என்று கர்த்தர் தெளிவாகக் கூறினார் (யோவா.4:34). எனவே அவர் தொடர்ந்து ஆத்தும ஆதாயம் செய்ததுபோன்று நாமும் செய்வோமாக. மேலும், தம்மைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுப்பதே பிதாவின் சித்தம் என்றறிந்திருந்த இயேசு (ஏசா.53:10), எப்பொழுதும் சிலுவை மரணத்தைக் கருத்தில் கொண்டு அதை நோக்கியே தமது வாழ்வைத் தொடர்ந்தார் (லூக்.12:50; மத்.16:21; 20:17–19; லூக்.9:51,53). மிகுந்த துக்கமாயிருந்தபோதிலும் பிதாவின் சித்தத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தார் (மத்.26:38–39). உங்கள் வாழ்க்கையில் பிதாவின் சித்தத்தை அவரிடமிருந்து அறிந்துகொண்டு அதை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டேயிருப்பீர்களாக.

**தனிப்பட்ட வாழ்க்கையில் பின்பற்றுதல்**

இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அவரைப்போல வேத அறிவுள்ளவர்களாக (லூக்.2:46–47; மத்.4:4,7,10; யோவா.7:15) மாறுவதற்காக வேதத்தை அநுதினமும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் (யோவா.5:39). அவரைப்போல தனிஜெபத்தில் தரித்திருக்கிறவர்களாக இருக்கவேண்டும் (மத்.14:23; 26:36–40; மாற்.1:35; 6:46; லூக்.5:16; 6:12; 9:18,28; 11:1). மேலும் அவர் தமது சீடருடன் தொடர்ந்து இருந்ததைப்போல நாமும் ஆவிக்குரிய சகோதரரோடு தொடர்ந்து ஐக்கியத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

**பவுலைப் பின்பற்றுதல்**

"என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்", என்று கூறிய ஒரே அப்போஸ்தலனாகிய பவுலின் (1 கொரி.4:16; 11:1) வாழ்க்கையை நாம்

பின்பற்றுவது தேவையானது. பலவித பாடுகளைப் பொறுமையாகச் சகித்து, வெகு மனத்தாழ்மையோடும் மிகுந்த கண்ணீரோடும் பவுல் கர்த்தரைச் சேவித்தார் (அப்.20:19). தனக்கும் தன்னுடன் இருந்தவர்களுக்கும் வேண்டியவற்றிற்காகத் தனது சொந்தக் கையினால் பவுல் வேலை செய்தார் (அப்.20:34). யாருடைய பொருளையும் இச்சிக்காமலும் தாழ்மையோடும் வாழ்ந்ததுமட்டுமின்றி இரவும் பகலும் கண்ணீரோடே புத்தி சொல்லிக் கொண்டுவந்தார் (அப்.20:31,33). தனது ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும் தான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே பவுல் விருப்பங்கொண்டிருந்தார் (அப்.20:24). இதற்காக ஆசையாகத் தொடர்ந்தார் (பிலி.3:12). நாம் பவுலைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போமாக.

கட்டுகளும் உபத்திரவங்களும் தனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவரால் முன்னுரைக்கப்பட்டபோதிலும் அவற்றில் ஒன்றைக் குறித்தும் கவலைப்படாமல், தனது பிராணனையும் அருமையாக எண்ணாமல் ஊழியத்தை நிறைவேற்ற முனைந்த பவுலைப்போன்று நாம் மாறுவோமாக. கர்த்தருக்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, கர்த்தருக்காக மரணமடையவும் ஆயத்தமாக இருக்கிறோமா? அப்.20:23–24; 21:10–13 நமது உள்ளத்தின் உறுதியாக இருக்கக்கடவது. கர்த்தருக்கென்று மனவுறுதியுடன் மனப்பூர்வமாகத் தன்னை அர்ப்பணித்த பவுலைத் தேடி கர்த்தர் வந்தார், அருகில் நின்றார், பேசினார், திடப்படுத்தினார், முன்னறிவித்தார். நாம் உறுதியுடன் இருந்தால் நம்முடனும் இயேசு இவ்விதம் செயல்படுவார் (அப்.23:11).

### நோக்கமுள்ள வாழ்க்கை

பவுல் தன்னுடைய வாழ்க்கைக்கு ஓர் இலக்கை வைத்திருந்து அந்த இலக்கை நோக்கித் தொடர்ந்தார் (பிலி.3:12–14). நமது வாழ்க்கைக்கும் ஒரு நோக்கம் (இலக்கு) இருக்கவேண்டும். நோக்கமில்லாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகும். உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தையும் (இலக்கு) அதை நோக்கித் தொடர்வதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றும் ஆராய்ந்து பாருங்கள். ஒரு இலக்கை நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். அனுதினமும் அந்த இலக்கை நோக்கித் தொடருங்கள்.

### பின்பற்றுகிறவர்களைப் பயிற்றுவியுங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அப்போஸ்தலர்களை நியமித்ததுபோலவும், பவுல் தனது

காலத்துக்குப் பின்பு ஊழியம் செய்வதற்கு தீமோத்தேயு, தீத்து, தீகிக்கு, எப்பாப்பிரா, அர்க்கிப்பு, ஒநேசிமு போன்ற பலரை ஏற்படுத்தியதுபோலவும் நாமும் செய்வது சிறந்தது. மோசே தனக்குப்பின் இஸ்ரவேலரை நடத்திச் செல்வதற்கு ஒரு மனிதனை நியமிக்கும்படி தேவனை வேண்டிக்கொண்டது போல நாமும் ஜெபித்து ஏற்ற நபர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்.

**பின்பற்றாதவர் பகைஞர்**

**பின்பற்றாதவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (பிலி.3:17–19).**

**ஓய்வு பெற்றாலும் பின்பற்றுதல்**

ஒரு ஊழியரின் அழைப்பில் முக்கியமான பகுதி ஆத்தும ஆதாயம் என்பது யாவரும் அறிந்ததே. சபைப் பொறுப்பு, ஊழிய நிறுவனத்தின் பணி அல்லது எந்தப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனிநபர் ஆத்தும ஆதாய ஊழியத்தை யாவரும் செய்யலாம். வாழ்நாள் முழுவதும் கர்த்தரைப் பின்பற்றி, பணி செய்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஓய்வுபெற்ற போதகர், மிஷனரி போன்றோரை, சபைகளிலும் கூட்டங்களிலும் பேசும்படி அழைப்பதையும் அவர்களைப் பலவிதங்களில் கௌரவிப்பதையும் நாம் காண்கிறோம். இவற்றைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வது தவறு அல்ல. ஆனால், மனிதரால் வரும் கனத்தை விரும்பி அதற்கான சந்தர்ப்பங்களை நாடுவது நல்லதல்ல (யோவா.5:44). அதைவிட ஆத்தும ஆதாயம் செய்வது சிறந்தது. நீங்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். கர்த்தர் நமது ஊழியத்தைப் பரலோகத்தில் பாராட்டுவதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும் (மத்.25:21,23).

தனது எண்பத்து ஏழாவது வயதிலும் தனிநபர் ஆத்தும ஆதாயத்தையும் கிராம ஊழியத்தையும் தொடர்ந்து செய்துவரும் பெரியவர் ஒருவர், என்னுடனும் சேர்ந்து ஊழியங்களில் பங்கேற்கிறார். நீங்களும் அவரைப் போல ஏன் ஆத்தும ஆதாயம் செய்யக்கூடாது?

நமது ஊழியத்தைக் குறித்து சாட்சி கூறுவது நல்லதுதான். ஆனால் அது தற்புகழ்ச்சியாகிவிடக்கூடாது. பிறரால் புகழப்படவும் மதிக்கப்படவும் விரும்பி அவற்றைப் பெற்றுக்கொண்டால், நமது ஊழியத்திற்கான பலனைப் பெற்றுத் தீர்ந்தது என்று ஆகிவிடும் (மத்.6:2,5,16). நமது சாட்சிகள் கர்த்தருக்கு

மகிமையாகவும் கேட்போரைப் பக்திவிருத்தியடையச் செய்வதாகவும் அமைவதுதான் சரியானது. நமது ஊழியத்தை வெற்றியாக அமைப்பது ஆவியானவர்தான். எனவே, அதில் மேன்மை பாராட்டுவதற்கு நமக்கு ஒன்றுமில்லை.

'ஓய்வு பெற்றுவிட்டேன்' என்று 'சும்மா இருக்காமல்' இழந்து போனதைத் தேடி (லூக்.19:10), கர்த்தரின் தொழுவத்திலில்லாததை மந்தைக்குள் வழிநடத்தி (யோவா.16:10), தப்பிப்போன மார்க்கத்திலிருந்து பாவியைத் திருப்பி, ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடி (யாக்.5:20), சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியினின்று இழுத்துவிட்டு பயத்தோடே இரட்சித்து (யூதா 22), கடைசிவரை நிலை நிற்கும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத்.24:14).

உங்களால் முடிந்த உத்தமமான பயனுள்ள ஊழியம் செய்யாமல் சோம்பலாயிராதேயுங்கள்.

**தேவனால் வரும் மகிமையா,**
**மனிதரால் வரும் மகிமையா,**
**எது வேண்டும்?**
**(யோவா.12:43)**

# 11. ஊழியர் தவிர்க்க வேண்டியவை

### 1. வீணான பேச்சு

வீணான பேச்சு, புறங்கூறுதல், பக்தி விருத்திக்கேதுவல்லாத உரையாடல்கள் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக, உடன் ஊழியரையும் விசுவாசிகளையும் தலைவர்களையும் பிரபலமான பல ஊழியரையும் குறித்துப் பேசுதல் தகாத செயலாகும் (1 பேது.2:2). அவர்களுக்காக ஜெபிப்பது அதனினும் சிறந்தது. நாவினால் புறங்கூறுகிறவர்களும், அயலான்மீது நிந்தையாகப் பேசுபவர்களும் கர்த்தருடைய கூடாரத்தில் தங்க முடியாது (சங்.15:1–3). புறங்கூறுகிறவர்களும், அவதூறுபண்ணுகிறவர்களும் மரணத்திற்குப் பாத்திரர் (ரோம.1:30,32). உங்கள் நாவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவேண்டும் (யாக்.3:1–12). உங்கள் உதடுகள் அறிவைக் காக்கவேண்டும். வேதத்தை உங்கள் வாயில் தேடுவார்களே (மல்.2:7). மிகவும் கவனமாகப் பேசுங்கள்.

### 2. பெருமை

பெருமையைத் தவிர்க்கவேண்டும். உரிமைகளுக்கும், மதிப்பு மரியாதைகளுக்கும் மரித்தவராயிருக்கவேண்டும். நீங்கள் மிகச்சிறந்த ஊழியர் என்று எண்ணலாகாது.

நீங்கள் சிறந்த பரிசுத்தவான் என்பதாலோ, அறிவில் சிறந்தவர் என்பதாலோ, வல்லவர் என்பதாலோ, பெரிய பிரபு என்பதாலோ தேவன் உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் உலகத்துக்குப் பைத்தியமானவர், பலவீனர், இழிவானவர், இல்லாதவர் என்பதால்தான் உங்களைத் தெரிந்து கொண்டார் (1 கொரி.1:26–29). உங்களுக்கு இருக்கும் எதுவும் தேவனால் உங்களுக்குக் கிருபையாகக் கொடுக்கப்பட்டவை என்பதை மறந்துபோகாதீர் (1 கொரி.4:7). நன்றாக ஊழியம் செய்யும் பிற போதகர்களையும், ஆத்தும ஆதாயம் செய்பவர்களையும், மிஷனரிகளையும் உளமாரப் பாராட்டுகிறவர்களாகவும், அவர்களுக்கர்க ஜெபிக்கிறவர்களாகவும், அவர்களுக்கு உதவுகிறவர்களாகவும் வாழ்வீர்களாக.

**யார் பெரியவன்?** கடைசியாயிருப்பவரும் பிறருக்குப் பணிவிடை செய்கிறவருமே பெரியவர் (மத்.20:26–27; 23:11; மாற்.9:34–35). பிறரின் கால்களைக் கழுவும் அளவிற்குத் தாழ்மையுள்ளவராயிருப்பவரே சிறந்த ஊழியர் (யோவா.13:14–15). பெருமையுள்ளவனுக்கு (பெருமையுள்ள

ஊழியருக்கும்) தேவன் எதிர்த்து நிற்கிறார் (யாக்.4:6; 1 பேது.5:5). தேவன் உங்களுக்கு எதிர்த்து நிற்கும்படி (விரோதியாயிருக்கும்படி) நீங்கள் ஏன் நடந்துகொள்ளவேண்டும்? உண்மையான தாழ்மையுடன் இருப்பீராக. இன்று மரணமடைந்தால், பேச முடியாத ஊமையானால், மனநலக்கோளாறு அடைந்தால் அல்லது கொடிய அருவருப்பான வியாதியால் தாக்கப்பட்டால் எப்படியிருப்போம் என்று சிந்தித்துப் பார்த்து, தாழ்மையுடன் இருப்போமாக.

காடுகளிலும் மலைகளிலும் பாலைவனங்களிலும் வாழும் மக்களைச் சந்திப்பதற்காக, வனவிலங்குகளும் பலவித ஆபத்துகளும் நிறைந்த இடங்களுக்குச் சென்று, தியாகமாக வாழ்ந்து, அந்த மக்களின் மொழிகளைக் கற்று, நற்செய்தியை அறிவிக்கும் ஊழியர் எந்தத் தலைமைப் போதகருக்கும் எந்தத் தொலைக்காட்சி ஊழியருக்கும் குறைந்தவரல்ல. நோயுற்றோரைத் தேடிச்சென்று கர்த்தரைப்பற்றி அறிவித்து, ஜெபித்து, ஆறுதலளிக்கும் பணியைச் செய்யும் யாரும் சிறியவர் அல்ல. இவ்வுலகில் பெரிய ஊழியராகக் காட்சியளிக்கும் பலர் பரலோகத்தின் பார்வையில் சிறியவராகக் காணப்படலாம். "நான் பிரபலமடையவும் உலக ஆடம்பர வாழ்க்கை பெறவும் வேண்டாம். கர்த்தர் அளிக்கும் பணியை விளம்பரமின்றி நிறைவேற்றுகிறேன். வேதத்தைக் கைக்கொண்டு போதிக்கிறேன்", என்று எளிமையாக ஊழியம் செய்வோர் பரலோகில் பெரியவராயிருப்பார் அல்லவா (மத்.5:19)?

'யார் பெரியவன்' என்ற கேள்வி இயேசுவின் காலத்திலிருந்தே இருந்துவருகிறது. தம்மை ஒருவன் காட்டிக்கொடுப்பதைக் குறித்து இயேசு கூறியவுடனே 'யார் பெரியவன்' என்ற வாக்குவாதம் உண்டாயிற்று. 'பெரியவனாவதா, கிறிஸ்துவின் பாடுகளுக்கும் மரணத்திற்கும் அன்புக் காணிக்கையா?' எது உமது ஊழியத்தின் அடித்தளம்? கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் அழிந்துகொண்டிருக்கும்போது அநேக கிறிஸ்தவர்களும் ஊழியரும் புகழையும், தலைமைப் பதவியையும், உலக மேன்மையையும் எதிர்பார்ப்பது மனவேதனைக்குரியதாகும்.

'நான் நன்கு போதிக்கிறேன், நான் சிறப்பாகவும் ஊக்கமாகவும் நிறைய நேரம் ஜெபிக்கிறேன், என் ஊழியம் சிறந்தது, என் உழியத்தில் வெற்றி இருக்கிறது, கர்த்தர் நிறைய பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்' என்பவை பெருமையடையச் செய்யும். சொல்வன்மை, நகைச்சுவையான பேச்சு, வெளிப்பாடுகள், வேத அறிவு, பட்டங்கள், பதவிகள், சிறப்பான ஆடை, திருமணமின்மை, பணம், பெரிய வீடு, வரங்கள், ஊழிய வளர்ச்சி, சொகுசான கார், குடும்பம், செல்வாக்கு போன்றவை நமக்குப் பெருமையை உண்டாக்க நமக்குக் கண்ணிகளாகக்கூடும். மிகுந்த கவனம் தேவை. நம்மைக் குறித்தும்

நாம் செய்யும் ஊழியத்தைக் குறித்தும் மேட்டிமையாக நினைக்கும் சோதனையில் விழுந்து விழாதபடி கவனமாயிருங்கள்.

**உங்களைக் கண்டதும் வணக்கம் செலுத்துவதும்,**
**எழுந்து நிற்பதும்**
**உங்களைப் பெருமையடையச் செய்யாதிருப்பதாக.**
**இயேசுவை மதிப்பதால் உங்களை மதிக்கிறார்கள்,**
**இயேசுவை நேசிப்பதால் உங்களை நேசிக்கிறார்கள்**
**என்பதை உணர்ந்து,**
**தாழ்மையுடனிருந்து**
**கர்த்தரை மேன்மைப்படுத்துங்கள்.**

நமது ஊழியம் வளரும்போது பெருமைக்கான சோதனை அதிகரிக்கும். உள்ளான ஆத்தும பாரமும், ஊழிய வாஞ்சையும் தேவனால் வந்தவை. எனவே, என் முயற்சி, எனக்கிருக்கும் ஆத்துமபாரம் என்றெல்லாம் பெருமையடையாதீர்கள். சபையைக் கட்டுகிறவர் இயேசுவே (மத்.16:18). 'நமக்குப் பெயரை உண்டுபண்ணுவோம்?' என்கிற பாபேலின் ஆவி (ஆதி.11:4) உங்களிடம் காணப்படாதிருப்பதாக. பணம் கொடுத்து டாக்டர் பட்டம் வாங்காதீர்.

உண்மையான ஊழியர் தன் சொந்த இராஜ்யத்தைக் கட்டியெழுப்ப மாட்டார்.

**3. பொறாமை**

பொறாமையைத் தவிர்க்கவேண்டும். தேவன் கொடுத்த பொறுப்புடன் திருப்தியாயிருங்கள். தேவன் உங்களை உயர்த்துவதற்காகப் பொறுமையுடன் காத்திருங்கள் (1 பேது.5:6). நீங்களாக உங்களை உயர்த்துவதற்கு முயற்சி செய்யாதீர்கள். உங்களின் கீழ் உங்களைவிட சிறப்பானவர் இருக்கக்கூடும். அவர் மீது பொறாமை கொள்ளாமல், அவருக்காகத் தேவனைத் துதித்து, அவரைப் பயன்படுத்தவேண்டும்.

**4. சண்டையிடுதல்**

மற்ற ஊழியரோடும், சபையினரிடமும், பிறரோடும் குழு அமைத்து அல்லது ஏற்கனவே இருக்கும் குழுவில் சேர்ந்து சண்டையிடக் கூடாது (1 தீமோ.3:3). மற்றவர்களின் நற்செயல்களைப் பாராட்டுகிறவர்களாக இருக்கவேண்டும் . யாரிடமும் கோபத்தைப் பேணி வைக்கக்கூடாது (நீதி.27:4).

### 5. இச்சையைத் தூண்டும் சூழ்நிலை

இச்சையைத் தூண்டும் யாவற்றையும் தவிர்க்கவேண்டும் (2 தீமோ.2:22). ஆகாதவனாகப் போகாதபடிக்கு உங்கள் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும் (1 கொரி.9:27). இச்சையான சோதனை வரும்போது யோசேப்பைப் போன்று ஓடிப்போகவேண்டும் (ஆதி.39:7–12). காலம் தாழ்த்தினால் சோதனையின் கவர்ச்சியில் விழவேண்டியதிருக்கும். மாம்சத்துடன் போராடி எப்பொழுதும் வெற்றியுடன் வாழ வேண்டும்.

இச்சையில் விழுந்தவர்களில் வெகு சிலர் மட்டுமே தாவீதைப் போன்று திரும்பினர். பலர் திரும்பவில்லை. சாத்தானின் மிகப்பெரிய ஆயுதம் இது. கவனமாயிருப்பீராக. தேவ பிரசன்னத்தில் வாழ்ந்து (ஆதி.39:7–9), வேத வசனத்தால் மேற்கொள்வீர்களாக (மத்.4:1–10). ஆண்களைச் சீரழிக்கும் தெலீலாக்களும் (நியா.16:4–21), பெண்களைச் சீரழிக்கும் அம்னோன்களும் (2 சாமு.13:1–19) ஏராளம் உண்டு. மிகவும் கவனமாயிருப்பீராக.

### 6. பண ஆசை

பணத்தைத் தவறாகக் கையாளுதல் கூடாது. தனது மந்தையில் கிடைக்கும் பாலை ஒரு மேய்ப்பன் அருந்தலாம் (1 கொரி.9:7). ஆனால் ஆட்டையே தின்று மந்தையைப் பாழாக்கக்கூடாது. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்பது உண்மைதான் (1 தீமோ.5:18; 1 கொரி.9:7–11). உங்கள் தேவைக்கேற்ப நியாயமான அளவு செலவு செய்யுங்கள். காணிக்கைப் பணத்தில் சொத்துக்களைச் சேர்ப்பதும் ஆடம்பரமாக வாழ்வதும் சரியல்ல. பணத்தைப் பொறுத்த அளவில் உண்மையாயிருந்தால் சிறிது சிரமங்கள் ஏற்படலாம். ஆனால், தேவன் உங்கள் எல்லாத் தேவைகளையும் சந்திப்பதோடு உங்கள் பிள்ளைகளையும் அவர்களின் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார். அவ்வாறு உண்மையாயிராதவர்களின் அடுத்த தலை முறையினர் பலவித பாடுகளை அனுபவிப்பதை நீங்கள் காண்பீர்கள். 1 தீமோ.6:6–10 வாசியுங்கள். நீங்கள் உத்தமமாக ஊழியம் செய்தால் உங்கள் தேவைகள் அனைத்தையும் தேவன் நிச்சயம் சந்திப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார் (மத்.6:33).

வேசித்தனம், அசுத்தம், பொருளாசை போன்றவற்றின் பெயர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. இவைகளில் ஈடுபடுகிறவர்கள் தேவனுடைய அரசில் பங்கடைவதில்லை (எபே.5:3–6). பணம், அன்பளிப்பு ஆகியவற்றை எதிர்பார்த்து ஊழியம் செய்யாதீர்.

சில போதகர்கள் தசமபாகம் பெறுவதிலேயே குறியாக இருப்பார்கள். திருமண பேரம் பேசுவதில் கலந்துகொண்டு 'ரொக்கப் பணத்தில்' தசமபாகம்

பெறும் ஊழியரும் இருக்கின்றனர். இவ்வாறு பெறுவது சரியாகுமோ? பெண் வீட்டாரின் பணத்தை இச்சித்து, அதைப் பேரம் பேசும் இடத்தில் போதகரின் வேலை அதைக் கண்டித்துப் பேசுவதே. சமுதாயத்தின் பாவங்களில் போதகர் ஒத்துப்போவது சிறந்ததன்று. உலக மக்கள் பண ஆசையுள்ளவர்களா யிருப்பார்கள். 'நீரோ தேவனுடைய மனிதனே பணம் சொத்து ஆகியவற்றின் மீதான இச்சையை விட்டு ஓடுவீராக' (1 தீமோ.6:11). தேவ பக்தியையும், ஊழியத்தையும், ஆதாயத் தொழிலாக்குபவர்கள் உண்டு. நீர் அவ்வாறு இருக்காதீர். அவர்களைவிட்டு விலகுவீராக (1 தீமோ.6:5). சிலர் ஆலய கட்டடத்திற்காகப் பணம் சேகரிப்பார்கள். ஆனால் தேவையான அளவு சேர்ந்த பின்னரும் சேகரித்துக் கொண்டேயிருப்பார்கள். ஆலயத்துக்கான வாகனம் வாங்குவதற்குக் காணிக்கை வாங்கி, தனது வீட்டிற்காக மகிழுந்து (கார்) வாங்குவார்கள். அவ்வாறு இருக்கலாகாது. காணிக்கையினால் சொகுசாக வாழ்பவர்கள் மனிதரின் பார்வையில் பெரியவர்களாகத் தோன்றுவார்கள். ஆனால், ஆண்டவரின் பார்வையில் இவர்கள் அற்பமானவர்கள்.

நன்கு ஊழியத்தைத் தொடங்கிய சிலர், தங்களுக்கு வசதிகள் பெருகிய பின்பு செல்வத்திற்கும் வசதிகளுக்கும் அடிமைகளாகிவிட்டனர். வெளிநாட்டுப் பணத்தால் கறைபட்டு தங்களின் பெயரைக் கெடுத்துக் கொண்டவர்களும் உண்டு. பண மோசடி செய்தால் இவ்வுலகைவிட்டுப் போகும்வரை மனச்சாட்சி வாதிக்கும். இவ்வுலகைவிட்டுப் போகும்போது வெறுங்கையோடு மட்டுமின்றி, பணத்தைக் கையாடிய பாவக்கறையுடன் செல்லவேண்டியதிருக்கும்.

வெளிநாடு சென்றிருந்த ஒரு 'ஊழியர்' ஒரு குடும்பத்தினருடன் ஒரு நாள் தங்கினார். அவர்கள் வீட்டிலிருந்த ஒரு பொருள் மிகவும் நன்றாக இருக்கிறது என்றும் அது தன்னிடம் இல்லையென்றும் பலமுறை அவர் கூறியதால் அந்தப்பொருளை அக்குடும்பத்தினர் அவரிடம் கொடுத்தனர். இவ்விதமாக, தான் சந்திக்கும் ஒவ்வொரு குடும்பத்திடமும் பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பினார். அவரை எங்கள் இல்லத்திற்கு அனுப்ப வேண்டாம் என்று மக்கள் அவர் இருந்த நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டனர். இவ்வித கௌரவ பிச்சையெடுப்பவர்களாக ஊழியர் இருக்கக்கூடாது. தேவனிடம் கேட்டு, தேவன் தருவதை மட்டும் பெற்று வாழ்வதே சிறந்தது. பணத்தை முக்கியமாகக் கருதி ஊழியம் செய்பவர்கள் தேவனுக்கு உகந்த ஊழியரல்ல, இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யாதீர் (லூக்.16:13). உலகத்திலும் அதிலுள்ளவற்றிலும் அன்பு கூராதிருங்கள் (யாக்.4:4,5; 1 யோவா.2:15–17).

'யாருடைய பொருளை நான் அபகரித்தேன்? யாரிடம் பரிதானம் வாங்கினேன்?' என்று இஸ்ரவேலரை நோக்கி சவால்விட்ட சாமுவேலைப் போன்றும் (1 சாமு.12:3–5), 'ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை' என்று கூறிய பவுலைப்போன்றும் (அப்.20:33) தூய்மையாக வாழ்வீராக.

**ஏசா செய்ததைப்போன்று**
**ஒரு கிண்ணம் சிவப்பான கூழுக்காக**
**(பணத்திற்காக, சொத்திற்காக)**
**உமது ஆத்துமாவை விற்றுப் போடாதீர் (எபி.12:16).**

**7. ஆத்துமாக்களைத் திருடுதல்**

மற்ற சபைகளின் ஆத்துமாக்களைத் திருடுவதைத் தவிர்க்கவேண்டும்.

**8. வரம்பு மீறுதல்**

உங்களுக்கு அளிக்கப்பட்ட பணியில் உண்மையாயிருங்கள் (லூக்.19:17). வரம்பு மீறாதிருங்கள். உங்களுக்குத் தெரியாததை, "எனக்குத் தெரியாது" என்று தாழ்மையுடன் ஒப்புக்கொள்ளுங்கள்.

**9. உங்கள் திறமையைச் சார்ந்துகொள்தல்**

உங்களுடைய தகுதி, நாவன்மை போன்றவற்றைச் சார்ந்து ஊழியம் செய்யாதீர்கள். தேவனுடைய அரசு பேச்சிலல்ல, பெலத்தில் இருக்கிறது (1 கொரி.4:20). உன்னதத்திலிருந்து வரும் பெலனாகிய ஆவியானவரைப் பெற்று (லூக்.24:49; அப்.1:8) அனுதினமும் ஆவியில் நிரம்பியவர்களாகப் பணி செய்யுங்கள். சுயநம்பிக்கையில், திறமைகளில், அறிவில் சார்ந்துகொள்ளாமல் கர்த்தரையே சார்ந்துகொள்ளுங்கள் (நீதி.3:5,6; எரே.17:5–8). 'பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, சேனைகளின் கர்த்தருடைய ஆவியினாலேயே ஆகும்' (சக.4:6). 'நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச்செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும்' என்பதை எப்பொழுதும் கருத்தில் கொள்வீராக (1 கொரி.3:7).

**10. பிற தேவையற்ற அலுவல்கள்**

பணத்துக்காகவோ, புகழுக்காகவோ பிற தேவையற்றதும் பக்திவிருத்திக் கேதுவல்லாததுமான அலுவல்களில் சிக்கிக்கொள்ளாதீர்கள் (2 தீமோ.2:4). உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவதற்குக் கவனமாயிருங்கள் (2 தீமோ.4:5). பகுதி நேர ஊழியம் செய்வது சரியானதுதான். பவுல் பகுதி நேர ஊழியம்

செய்துள்ளார் (அப்.20:34; 2 தெச.3:8,9). ஆனால், தேவையற்ற செயல்களில் ஈடுபடாதீர். நாய்கள் வளர்த்து விற்கும், அலங்கார மீன்கள் விற்பனை செய்யும் போதகர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களின் 'ஊழியம்' பயனுள்ளதாக அமையாதது வியப்பல்ல.

**11. கொண்டாட்டங்கள்**

தேவனுடைய அரசு புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோம.14:17). எனவே சபையில் நீதியும் சமாதானமும் இருக்கும்படியும் யாவரும் ஆவியான வரால் வரும் மகிழ்ச்சியில் நிரம்பியிருக்கவும் வழிநடத்துங்கள். பண்டிகைகள், விருந்துகள், விழாக்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தருவது சிறந்ததல்ல.

**12. பார்வைக்காக ஊழியம்**

மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், மக்களால் புகழப்படவும் பார்வைக்கு நீண்ட ஜெபம் செய்தல், பகட்டாக ஊழியம் செய்தல், உங்கள் திறமைகளைப் பறைசாற்றுதல், சிறப்பாக ஆடை அணிதல் போன்றவற்றில் விழுந்துவிடாதீர்கள். இவ்வாறு இருந்தால் நீங்கள் வேதபாரகரைப்போன்றும் பரிசேயரைப்போன்றும் இருக்கிறீர்கள். எந்தவொரு கூட்டத்திலும் சபையிலும் தான் முன்பாக நிற்கவேண்டும், முதன்மையான இடத்தில் உட்கார வேண்டும், பலர் தன்னைப் பாராட்டவேண்டும், என்று நாடும் (பரிசேயரான) ஊழியரே, உங்களைப் பார்த்து கிறிஸ்து 'ஐயோ' என்றுதானே கூறுவார் (மத்.23:5–7, 14). எல்லாவற்றிலும் தேவனால் அங்கீகரிக்கப்படும்படி நாடுங்கள். ஆத்தும ஆதாயத்தையும் சீடராக்கும் பணியைச் செய்வதையுமே நோக்கமாகக் கொள்ளுங்கள்.

**13. பதறிப் பேசுதல்**

பேசுவதிலும் கவனமாயிருக்கவேண்டும். பதறிப்பேசின மோசேக்குத் தண்டனை கிடைத்ததை நினைவிற்கொண்டு கவனமாகப் பேசுங்கள் (சங்.106:32,33).

**14. அரைகுறை உண்மை**

உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறேன் என்று பொய் அல்லது அரைகுறை உண்மையைக் கூறவேண்டாம்.

**15. பணம் கொடுக்கும்படி மக்களை வற்புறுத்துதல்**

தசமபாகத்தைத் தங்களுக்குமட்டும் கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்

படுத்துவதும், சாபம் வரும் என்று எச்சரித்தலும் கூடாது. 'வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே நலம்' என்று போதிக்கவேண்டிய (அப்.20:35) நீங்கள், கொடுப்பவர்களாக வாழ்ந்துகாட்டுங்கள். பல ஊழியங்களையும், ஏழை எளியவர்களையும் தாங்குங்கள்.

கர்த்தருக்கு தசமபாகமும் காணிக்கையும் கொடுக்கும்படி போதிப்பது தவறல்ல. அடிக்கடி இதைக்கூறுவதும், கட்டாயப்படுத்துவதும், பய முறுத்துதலும் நன்றன்று.

**16. சாதகமான சூழ்நிலைக்காகக் காத்திருத்தல்**

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் பணிசெய்யவேண்டும் (2 தீமோ.4:2). திட்டம் தீட்டிக்கொண்டேயிருப்பவர்கள் அப்படியேதான் இருப்பார்கள். காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான். மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான் (பிர.11:4). பல நாட்களாகத் திட்டம் போட்டுக்கொண்டேயிருக்காமல் சீக்கிரம் செயல்படுங்கள்.

**17. பிடிவாதம்**

பிடிவாதகுணம் இருக்கலாகாது. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு தேவை. உங்கள் குறைகளைக் கேட்டறிந்து திருத்தப்படுவதற்கு ஆவலாயிருங்கள் (கலா.2:11).

**18. சுயநலம்**

தனக்கானதை மட்டும் நாடுகிறவராக இருக்கக் கூடாது (கலா.6:2; பிலி.2:4). மேலும், சொந்த வசதிகளை விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு தேவை. சுயநலத்தை நாடுவது சரியல்ல.

**19. பின்னிட்டுப் பார்த்தல்**

தேவன் உங்களை அழைத்தது உண்மையென்றால் எந்தச் சூழ்நிலையிலும் அவர் நடத்துவார். எனவே, ஊழியத்தைவிட்டுப் பின்வாங்காதீர். கலப்பையின் மேல் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல (லூக்.9:62).

**'கடினம் என்று பின்வாங்குகிறவன் கோழை.**
**கடினமாக இருப்பதால் கடினமாக உழைப்பவரே செயல்வீரர்'.**
**ஆவியானவரின்மேல் சார்ந்து,**
**தாழ்மையுடனும் விசுவாசத்துடனும் செய்யும்**
**எந்த ஊழியமும் தோல்வியடையும்படி**
**தேவன் விடமாட்டார்.**

**20. சிறு கூட்டத்தில் பேசுவதைப் புறக்கணித்தல்**

சிறு கூட்டங்களில் பேசுவதை அலட்சியம் செய்யக்கூடாது. 'நான் வரவேண்டுமானால் இவ்வளவு பேர் கூட்டத்திற்கு வரவேண்டும்' என்று எண்ணுவதும் கூறுவதும் தாழ்மையின்மையைக் குறிக்கிறது.

**21. ஏற்றுக்கொண்ட பணியைக் கடைசி நேரத்தில் கைவிடுதல்**

பல பிரபலமான பேச்சாளர்கள் தாங்கள் ஒரு இடத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பேசுவதற்கு ஏற்றுக்கொண்டு, பின்னர் 'என்னால் வரமுடியவில்லை' என்று சொல்லி கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்களைச் சிரமத்திற்குள்ளும், மனவேதனைக்குள்ளும், பிறர் முன்பு அவமானப்படுவதற்குள்ளும் அமிழ்த்துவார்கள். தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலொழிய இவ்வாறு செய்பவர் பொறுப்பற்ற ஊழியர் ஆவார்.

**22. உற்சாகமிழத்தல்**

ஆதி அன்பை இழந்துவிடாதபடி கவனமாக இருப்பீராக (வெளி.2:4–5). நெகேமியாவைப் போன்று கர்த்தருக்குள் தைரியமாக ஊழியம் செய்யுங்கள். பிலேயாம், சிம்சோன், சாலொமோன் போன்ற பின்மாற்றக்காரர் நமக்கு எச்சரிப்பாக உள்ளனர்.

**23. அர்ப்பணிப்பின்மை**

**அர்ப்பணிப்பில்லாத ஊழியம் சிறப்பாக இருக்காது**

**ஆண்டவர் காட்டும் இடத்திற்குச் செல்லவேண்டும்.**

**ஆண்டவர் செய்யச் சொல்வதைச் செய்யவேண்டும்.**

**ஆண்டவர் தரும் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.**

**ஆண்டவருக்கு மட்டும் மகிமை செலுத்தவேண்டும்.**

**ஆண்டவருக்கு மட்டும் சீடர்களை உருவாக்கவேண்டும்.**

**ஆண்டவரின் சித்தம் மட்டும் செய்ய அர்ப்பணித்து வாழவேண்டும்.**

**ஆண்டவரிடம் மட்டும் இருந்து கனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.**

**ஆண்டவரை மட்டும் பிரியப்படுத்தவேண்டும்.**

**இவையே ஊழியரின் நோக்கமாக இருக்கவேண்டும்.**

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். . .
எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ
அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் (லூக்.12:47,48).

# 12. ஊழியரின் கடமைகள் - தமக்கு

ஒவ்வொரு ஊழியரும் தன்னைக் குறித்து எச்சரிக்கையுள்ளவராக இருப்பது அவசியமாகும் (1 தீமோ.4:16). கர்த்தருக்கு ஏற்ற சாட்சியுள்ள வாழ்க்கையுடன் சாட்சியை அறிவிப்பவராகவும் இருத்தல் அவசியம்.

**1. வாசித்து, கற்றுக்கொள்ளவேண்டும் (1 தீமோ.4:13; 2 தீமோ.2:15:)**

ஒரு ஊழியர் எப்பொழுதும் ஒரு மாணவராகவும் இருக்கவேண்டும். வேதத்தை நன்கு கற்று, அதின் முக்கிய உபதேசங்களில் தெளிவுள்ளவராக இருத்தல் வேண்டும். எதைப் போதித்தாலும் அதற்கு முன்பாக அதை நன்கு கற்றுக்கொள்ளவேண்டும். ஒரு குறிப்பிட்ட தலைப்பின் முழு உண்மைகளும் சரியாகத் தெரியாவிடில் (முரண்பாடுகள் இருப்பதாகத் தோன்றினால்) அந்தத் தலைப்பைக் குறித்து உடனடியாகப் பேசக்கூடாது. மேலும் கற்று, தியானித்து, குறிப்புகள் எடுத்து, ஜெபித்து, ஆவியானவரிடம் விளக்கங்கள் பெற்று முழு நிச்சயத்துடன் பேசவேண்டும். வசனத்தைச் சரியாகப் பகுத்துப் போதிப்பதற்குக் கவனமாக இருக்கவேண்டும். எல்லாம் தெரிந்தவர்கள் யாருமில்லை. எனவே, 'எனக்குத் தெரியும்' என்றிராமல் எல்லா வழியிலும் சபையாரிடமிருந்தும் பிறரிடமிருந்தும் கற்றுக்கொள்ளும் தாழ்மையுடன் இருக்கவேண்டும். தனது பணியில் கருத்தாக இருந்தபோதிலும், நன்மை யானவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இருந்தபோதிலும், நிக்கோதேமுவைப் போன்று சில அடிப்படை உபதேசங்களை அறியாத ஊழியர் பலருண்டு (யோவா.3:10). நிக்கோதேமுவைப்போன்று கற்றுக்கொள்ளும் தாழ்மை ஒவ்வொரு ஊழியருக்கும் அவசியமாகும். ஒரு சிறு கையேட்டில் **(Note Book)** நல்ல புதிய கருத்துகள், விளக்கங்கள், எடுத்துக்காட்டுகள், சிறு கதைகள் ஆகியவற்றை, அவற்றைச் சார்ந்த வேத வசனங்களுடன் குறித்துக் கொள்வது பயன்தரும்.

குறைந்தது ஒவ்வொரு ஆண்டிலும் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் வேதம் முழுவதையும் தியானித்து குறிப்புகள் எழுதுவது சிறந்தது. ஒவ்வொரு நாளும் 4 பக்கங்கள் தியானித்தால் ஒரு ஆண்டில் வேதம் முழுவதையும் தியானிக்க முடியும்.

மேலும் வேத வசனத்தை முற்றிலும் விசுவாசிப்பவராகவும், வசனத்திற்கு நடுங்குபவராகவும் இருப்பது மிகவும் அவசியம் (ஏசா.66:1–2).

**முழு வேதமும் தேவனுடைய ஆவியானவரால் அருளப்பட்டது என்பதை விசுவாசியாதவர் ஊழியம் செய்வது மாய்மாலமாகும்.**

**2. ஜெபிக்கிற மனிதனாக இருக்கவேண்டும் (1 தெச.5:17)**

தேவனுடன் நேரடித் தொடர்புகொண்டு அவருடைய குரலைக் கேட்கிறவராக இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு மணி நேரம் ஜெபிக்கவேண்டும். உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் ஊழியத்திலும் தேவ கிருபைக்காகவும், வரங்களுக்காகவும், ஆவியானவரின் பலத்த செயல்களுக்காகவும் ஊக்கமாக வேண்டிக்கொள்ளுங்கள். உங்களிலும் உங்கள் மனைவியிலும் ஆவியின்கனி எப்பொழுதும் காணப்பட ஊக்கமாக ஜெபியுங்கள்.

உங்கள் குடும்பத்திற்காக, உங்கள் சபைக்காக, அருகிலுள்ள சபைகளுக்காக, உங்கள் பகுதியிலுள்ள கிறிஸ்தவரல்லாதோர்க்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்களுக்காக, மற்றும் பல குறிப்புகளுக்காக, பரிசுத்த ஆவிக்குள் ஜெபியுங்கள். தேவனிடம் தனது சபையைக் (பணியிடத்தை), குறித்தும் சபையிடம் (மக்களிடம்) தேவனைக் குறித்தும் கருத்தாகப் பேசுவது போதகரின் (ஊழியரின்) கடமையாகும். ஒரு குறிப்பேடு **(Note Book)** எடுத்துக் கொண்டு அதில் 1) உங்கள் சபையிலுள்ள (பணியைச் சார்ந்த) குடும்பங்கள், குடும்பங்களின் அங்கத்தினர் ஒவ்வொருவரின் பெயர்கள், அவர்களின் தேவைகள் போன்றவற்றை எழுதிக்கொண்டு ஒவ்வொரு வருக்காகவும் பெயர் பெயராக ஜெபியுங்கள். மேலும் 2) உங்களுக்கு உதவி செய்தவர்களின் பெயர்கள் 3) உங்களுக்குத் தொல்லை கொடுப்பவரின் பெயர்கள் 4) மற்ற ஜெபக் குறிப்புகள் ஆகியவற்றை எழுதி ஜெபியுங்கள். ஒரு ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் அளித்ததும் அந்தத் தேதியை குறிப்பேட்டில் எழுதி, தேவனைத் துதியுங்கள். யாருக்கும் புரியாதபடி உங்கள் குறைகளை அதில் எழுதி வைத்து அவற்றிற்காக ஜெபித்து அவற்றை மேற்கொண்ட பின்னர் நீங்கள் எழுதியதை அடித்துவிடுங்கள். பவுலின் ஜெபங்களைத் தியானித்து அவற்றைப் போன்றும் ஜெபியுங்கள். எபே.1:16–19; 3:16–19; பிலி.1:4–6, 9–11; ரோம.1:8–9; 1 கொரி.1:6; கொலோ.1:4–5; 1 தெச.1:2–4; 3:12–13; 2 தெச.1:3, 11–12; பிலே.5–6 போன்ற ஜெபங்களைப் பயன்படுத்துங்கள். எசே.13:5ஐத் தியானிக்கும்போது கள்ளத்தீர்க்கதரிசிகளின் ஓர் அடையாளத்தைக் காண்கிறோம். அது என்னவெனில் 'கள்ளத் தீர்க்க தரிசிகள் ஜெபிக்கிறவர்களாக இருக்க மாட்டார்கள்' என்பதே. நீங்கள் அவ்வாறு இருக்கலாகாது.

> **ஊழியம் என்பது பிசாசின் கையிலிருந்து ஆத்துமாக்களைப் பிடுங்கியெடுத்து, ஆண்டவரிடம் சேர்க்கும் பணியாகும். அது சாத்தானின் அரசைத் தகர்த்து தேவனுடைய அரசை நிலை நாட்டும் பணி. ஜெப வீரராயிராவிடில், ஆவியானவரின் பெலன் இல்லாவிடில் அதைச் சிறப்பாகச் செய்ய முடியாது.**

**3. உங்கள் பொறுப்புகளில் கவனமாக இருக்கவேண்டும் (2 பேது.1:10; 1 தீமோ.4:13; 2 தீமோ.4:2, 5)**

ஜெபத்தோடு சிந்தித்துத் திட்டங்கள் தீட்டுவதற்கு நேரம் செலவிட வேண்டும். கிறிஸ்து செய்தது போன்று தனிப்பட்ட ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும். சுகவீனரைச் சந்தியுங்கள், தேவையுள்ளவர்களுக்கு உதவுங்கள், தொலைந்து போனவர்களைத் தேடுங்கள், சிதறடிக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேருங்கள், பின்மாற்றமாயிருப்பவர்களைத் திரும்பவும் கொண்டு வாருங்கள். சுகவீனம் நீங்கும்படி ஜெபிக்கப் பின்வாங்காதேயுங்கள் (யாக்.5:13–15). பரிசுத்த தைரியத்தோடும் விசுவாசத்தோடும் பிசாசுகளைத் துரத்துங்கள் (மாற்.16:17–18). கிறிஸ்து நமக்கு அதிகாரம் தந்துள்ளார் (லூக்.10:19).

**4. அனுதின, வாராந்திரக் கடமைகள்**

சகலத்தையும் ஒழுங்கும் கிரமமாகவும் செய்யும் தேவனுக்கு ஊழியம் செய்பவரும் அவ்வாறு இருப்பது அவசியம். அதிகாலையில் தேவனை ஆராதித்துத் துதிக்கவேண்டும். வேதத்தைக் கிரமமாகப் படித்து, தனக்குத் தேவையான ஆத்தும ஆகாரத்தைத் தினமும் பெற்று, விசுவாசத்தில் பெலப் படவேண்டும்.

ஒவ்வொரு வாரத்தின் தொடக்கத்திலும், தான் அந்த வாரத்தில் செய்யப் போகும் ஊழியத்திற்காக ஜெபித்து, தேவனுடைய சித்தத்தை அறிந்து திட்டமிடவேண்டும். அதைச் செயல்படுத்துவதற்கு அவருடைய பெலத்தை அனுதினமும் நாடவேண்டும். செய்து முடித்த பின்னர் அதை மதிப்பிட்டு, குறைகளை அகற்ற வேண்டும். தன்னைக் கர்த்தர் பயன்படுத்தியதற்காக நன்றி செலுத்தவேண்டும்.

**5. உங்கள் குடும்பத்தை நன்கு கவனிக்கவேண்டும்**

உங்கள் குடும்ப வாழ்க்கை யாவருக்கும் முன்மாதிரியாக அமையத்தக்கதாக, உங்கள் குடும்பத்தைச் சரியான வழியில் நடத்துங்கள். குடும்பத்தோடு நேரம் செலவிடுங்கள் (1 தீமோ.3:4–5). உங்கள் பிள்ளைகள் கர்த்தரைப் பின்பற்றும்

படி யாவற்றையும் உங்கள் நடக்கையாலும் வழி நடத்துதலாலும் செய்யுங்கள் (ஆதி.18:19).

**6. தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் தாழ்மையோடிருங்கள் (யாக்.4:10; 1 பேது.5:5)**

நீங்கள் போதகராயிருப்பதும், பெற்றிருக்கும் யாவும் தேவனுடைய கிருபையால் வந்தன. இவற்றை எப்பொழுதும் ஒத்துக்கொண்டு நன்றியுடையவர்களாக இருங்கள். "நான் பயனற்ற ஊழியன். என் கடமையை மட்டும் செய்தேன்" என்று உணர்ந்து கூறுங்கள் (லூக்.17:10). உங்கள் வெற்றிகள் யாவற்றிற்கும் தேவனுக்குரிய மகிமையைச் செலுத்துங்கள். அவ்வாறு செலுத்தாவிடில் தேவனது கோபத்தைச் சந்திக்க நேரிடும். ஏரோது அரசன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தத் தவறியதால் கோர மரணம் அடைந்தது யாவருக்கும் எச்சரிப்பாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது (அப்.12:21–23). கிறிஸ்து தமது சீடர்களின் கால்களைக் கழுவியது போன்ற தாழ்மை உங்கள் சொற்களிலும் செயல்களிலும் காணப்படவேண்டும் (யோவா.13:3–14). உங்கள் சபையாரின் கால்களை ஆண்டிற்கு ஒரு தடவையாவது கழுவலாம். இது கர்த்தரின் கட்டளை (யோவா.13:14). இவ்வாறு செய்யும் மனப்பாங்கு முக்கியமானது. உங்களைக் குறித்து அல்ல, கிறிஸ்துவைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள் (கலா.6:14). உங்கள் தவறுகளுக்கு மன்னிப்பு கேளுங்கள். யாருக்கு எதிராக தவறு செய்தீர்களோ அவர்களிடம் கேளுங்கள். பிறர் உங்களுக்கு நன்றி கூறுவதற்கு முன், உங்களைப் பாராட்டுவதற்குமுன், உங்களுக்குப் பதில் செய்யுமுன் போய்விடுவது சிறந்தது. 'உங்களுக்கு நன்றி' என்று யாரேனும் சொன்னால், 'கர்த்தருக்கு நன்றி' என்று பதில் கூறுங்கள். உங்கள் தவறுகளுக்குப் பிறரிடம் (மனைவி, கணவன், சபையினர்) மன்னிப்பு கேட்பது தேவையானது.

**7. விசுவாசமுள்ளவராய் இருங்கள்**

உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் உள்ள எல்லா தேவைகளுக்கும் தயக்கமோ சந்தேகமோ இல்லாமல், கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற விசுவாசத்துடன் இருக்கவேண்டும் (1 தீமோ.1:18). விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் (1 தீமோ.6:12). 'சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது' என்பதை விசுவாசித்து, துன்பத்திலும் ஸ்தோத்திரம் செலுத்துபவராக இருக்கவேண்டும் (ரோம.8:28; யோபு 1:20–22). பணத்திற்காக மாத்திரமல்ல, ஆத்துமாக்கள், அற்புதங்கள், ஊழிய வளர்ச்சி போன்ற யாவற்றிற்கும் விசுவாசம் தேவை. விசுவாச

மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியாது (எபி.11:6). வாரந்தோறும் மக்கள் நிச்சயமாக ஆராதனைக்கு வருவார்கள் என்ற நிலையுள்ள சபையாயிருந்தாலும் ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் எதிர்பார்க்க வேண்டும்.

## 8. மற்றவர்களின் ஊழியத்திற்கு உதவி செய்கிறவர்களாக இருங்கள்

உங்கள் இடத்தில் யார் எந்தவிதத்தில் ஊழியம் செய்தாலும் அதற்கு உங்களாலானவரை உதவி செய்யுங்கள். போதகர்களின் (ஊழியர்களின்) ஐக்கியங்கள் அமைத்து, ஏழையாயிருக்கும் போதகர்களுக்கு (ஊழியர்களுக்கு) உதவுங்கள். எல்லா ஐக்கியங்களோடும் சமாதானமாக இருந்து இணைந்து செயல்படுங்கள்.

## 9. ஆத்தும ஆதாயம்

கர்த்தரால் அழைக்கப்பட்ட யாராயிருந்தாலும் அவர்கள் மனிதரைப் பிடிக்கிறவர்களாக இருக்கவேண்டும் (மத்.4:19). போதகம்பண்ணுவதே எனது கடமை என்று கருதாதீர். கர்த்தராகிய இயேசு தனிநபர் ஆத்தும ஆதாயம் செய்து சமாரியப் பெண்ணையும் (யோவா.4), 38 ஆண்டுகள் சுகவீனமாயிருந்த மனிதரையும் சந்தித்தார் (யோவா.5:1–9). நல்ல மேய்ப்பரும் (யோவா.10:11, 14–16), ஆடுகளின் பெரிய மேய்ப்பருமான கிறிஸ்துவிடம் (எபி.13:20) பணிசெய்யும் மேய்ப்பரே, அவரைவிட நீர் பெரியவரோ? அவரைப் பின்பற்றி ஆத்தும ஆதாயம் செய்யாவிடில் நீர் எத்தகைய மேய்ப்பர்? ஒரே ஒரு ஆத்துமாவானாலும் தேடிச் செல்பவரே சரியான மேய்ப்பர். ஆத்தும ஆதாயம் செய்யாத யாராயிருந்தாலும் அவர் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) கொடுப்பதற்குத் தகுதியற்றவர் (மத்.28:18–20).

நீங்கள் சமீபத்தில் ஒரு சில ஆத்துமாக்களையேனும் ஆதாயம் செய்திருந்தால் அவர்களுக்கும், உங்கள் சபையினராலும் உடன் ஊழியராலும் ஆதாயம் செய்யப்பட்டவர்களுக்கும், இரட்சிக்கப்பட்ட பிறருக்கும் நீங்கள் திருமுழுக்கு அளிக்கலாம். நீங்களாக ஒரு ஆத்துமாவையும் ஆதாயம் செய்யாவிடில், ஒருவருக்கும் திருமுழுக்கு அளிப்பதற்கு உங்களுக்கு வேதத்தின்படி தகுதியில்லை.

## 10. தீங்கனுபவித்தல்

பொறுமையுடன் தீங்கனுபவிக்கிறவராக இருக்கவேண்டும் (2 தீமோ.2:3; 1 பேது.2:19–23). வெகு போராட்டம் இருந்தாலும் தைரியமாக உழைக்க வேண்டும் (மத்.10:9–20, 28–30; அப்.4:30–31; 1 தெச.2:2). உங்கள்

எதிரிகளையும் துரோகிகளையும் சிநேகியுங்கள் (மத்.5:44). தங்களுக்கு மிகுந்த உபத்திரவங்கள் அளித்த அதிகாரிகளையும், சிறைக் காவலரையும், அரசாட்சி செய்பவரையும் நேசிக்கும் கிறிஸ்தவர்கள் உண்டு.

**11. ஆயத்தம்**

தேவனுடைய முழுப் போர்க்கவசத்தையும் (சர்வாயுத வர்க்கத்தையும்) அணிந்தவர்களாக நிற்கவேண்டும் (எபே.6:10–18). இந்த வேதப்பகுதியைத் தியானித்து ஒவ்வொரு படைக்கலனின் பயன்பாட்டையும் சிந்தியுங்கள்.

**12. காத்துக்கொள்தல்**

தேவன் உங்களுக்கு அளித்துள்ள நற்பொருளை (விசுவாசத்தை, பொறுமையை, பரிசுத்தத்தை, ஊழியத்தை) இறுதிவரை காத்துக்கொள்ள வேண்டும் (2 தீமோ.1:14). உங்கள் ஊழியத்தைத் தொடர்ந்து நிறை வேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் (2 தீமோ.4:5).

**13. கீழ்ப்படிதல்**

எப்பொழுதும் தேவனுக்கு, தேவனுடைய வார்த்தையாகிய வேதத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் (யாக்.4:7; 1 பேது.1:14; எபி.4:11). கிறிஸ்துவும் (பிலி.2:8), மரியாளின் கணவனான யோசேப்பும் (மத்.1,2; லூக்.2) இதற்கு முன் மாதிரிகள். மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல் தேவையானதுதான் (ரோம.13:1–3). ஆனால் அவர்கள் தவறு செய்யும்படி கட்டளையிட்டால் கீழ்ப்படியக்கூடாது.

**14. ஓய்வு**

கடினமாகவும், கவனமாகவும் உழைக்கவேண்டும். ஆனால் தேவையான அளவு ஓய்வெடுத்துக்கொள்வதும் அவசியம் (மாற்.6:31).

**15. எளிய, திருப்தியான வாழ்க்கை**

திருமுழுக்கு யோவான் போன்று (மத்.3:4) முடிந்தவரை எளிமையாக, வசதிகளைப் பெருக்கிக்கொள்ளாமல் வாழுங்கள். உங்கள் சரீரத்தை அடக்கி ஆளவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் ஆகாதவனாகப் போக நேரிடலாம் (1 கொரி.9:27). எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் (பிலி.4:11,12).

**16. பின்வாங்காமை**

எக்காரணத்தைக் கொண்டும் ஊழியத்தைவிட்டுப் பின்வாங்கி வேறு

தொழிலுக்குச் செல்லாதிருங்கள். கலப்பையின்மேல் கை வைத்துப் பின் நோக்கிப் பார்க்கிறவன் எவனும் தேவனுடைய அரசுக்குத் தகுதியுள்ளவனல்ல (லூக்.9:62). முடிவுவரை நிலைத்திருப்பீராக (மத்.24:13). ஆதி அன்பில் நிலைத்திருப்பது அவசியம் (வெளி.2:4).

**17. சமாதானமாக வாழ்தல்**

அன்பினால் பிறரைத் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுங்கள் (எபே.4:3). உங்கள் சபை மக்களிடமும், பிற சபை மக்களிடமும், பிற ஊழியரிடமும், மற்றோரிடமும் அன்பாகவும், சமாதானமாகவும் வாழுங்கள். பிறர் உங்களைப் பகைத்தாலும் நீங்கள் பிறரைப் பகைக்கக்கூடாது.

**18. நல்மனச்சாட்சி**

எப்பொழுதும் நல்மனச்சாட்சியுடனிருப்பது மிகவும் அவசியம் (1 தீமோ.1:18). அவ்வாறில்லாதிருந்தால் உங்கள் விசுவாசம் சேதமடையும் (1 தீமோ.1:19). வெட்கமான அந்தரங்க காரியங்களை வெறுத்துத்தள்ளி, தந்திரமாய் நடவாமல்... தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் உங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுங்கள் (2 கொரி.4:2). நீங்கள் உண்மையுள்ளவரென்று காணப்படுவது அவசியம் (1 கொரி.4:2).

**19. மகிழ்ச்சியாயிருத்தல்**

எல்லா நிலையிலும் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் (பிலி.4:4; 1 தெச.5:16). பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலும் தேவனைத் துதித்துப் பாடியதுபோன்று இருப்பது அவசியம்.

**20. பிசாசை எதிர்த்தல்**

தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் (யாக்.4:7).

**21. ஊழியர் தங்களை எப்படி விளங்கப்பண்ண வேண்டும்?**

இதற்கான பதில் 2 கொரி.6:3–12இல் உள்ளது. இதைக் கருத்தாக வாசியுங்கள். "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களை தேவஊழியக்கார ராக விளங்கப்பண்ணுகிறோம். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்த ஆவியிலும்,

மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது, எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது. எங்கள் உள்ளம் உங்களைக் குறித்து நெருக்கமடையவில்லை...” (2 கொரி.6:3–12).

**22. பயனுள்ள ஊழியம்**

நீங்கள் பிரபலமாவது உங்களுக்கே தீமையாகலாம் (லூக்.6:26). எனவே, எத்தனை பேரைக் கர்த்தருக்காகச் சந்திக்கிறேன், என் ஊழியத்தின் ஆவிக்குரிய தரம் என்ன, என் ஊழியத்தால் மக்கள் ஆவிக்குரிய வளர்ச்சி அடைகிறார்களா என்பதில் கவனமாயிருந்து பயனுள்ள ஊழியம் செய்யுங்கள்.

**23. நீங்கள் குறைகூறப்பட்டால்**

பிறர் உங்களைக் குறைகூறினால், உங்களையே ஆராய்ந்து பாருங்கள். உங்களில் குறையிருந்தால் உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். குறையைச் சுட்டிக்காட்டியவருக்கு நன்றி செலுத்துங்கள். தவறாக உங்களைக் குறைகூறினால், குறை கூறுபவரை வெறுக்காதீர்கள். ‘சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்’ (மத்.5:10–12). எவ்வாறாயினும் உங்களைக் குறைகூறுகிறவர்களுக்காக ஜெபியுங்கள்.

**24. நீங்கள் புகழப்பட்டால்**

மனிதனின் புகழ்ச்சியைப் பெரிதாக எண்ணி வீணாகப் பெருமையடையாதீர்கள். உடனடியாகக் கர்த்தருக்கு மகிமை செலுத்துங்கள். ‘கர்த்தருடைய கிருபையினால் இதைச் செய்தேன்’, ‘கர்த்தருடைய கிருபையால் இது கிடைத்தது’ என்பதைப் போன்றவற்றையே கூறுங்கள். முதன்மையான ஆசனம், பொன்னாடை போர்த்துதல், பிறரால் புகழப்படுதல் போன்றவை பெருமைக்குள் விழச்செய்யும் கண்ணிகள் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள் (லூக்.6:26).

**25. முன்னேறுதல்**

உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தொடர்ந்து முன்னேற்றம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். உங்கள் இரட்சிப்பு நிறைவேறவும், ஊழியம் சரியாக இருக்கவும் பிரயாசப்படவேண்டும் அனுதினமும் சிலுவை சுமப்பவராக இருங்கள். பூரணத்தை நோக்கி ஆசையாகத் தொடருங்கள்.

**26. ஊழியத்தில் மேன்மை வந்தால்**

ஊழியத்தில் மேன்மை வரும். பலர் உங்களை மேன்மைப்படுத்த முயற்சிப்பார்கள். மனிதருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுவது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (லூக்.16:15). தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடுங்கள் (யோவா.5:44). அவர் உங்களைப்பார்த்து 'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே...' என்று கூறுவதையே எதிர்பார்த்து வாழுங்கள் (மத்.25:21,23). ஒருவராலொருவர் வரும் மகிமையை வெறுத்துத்தள்ளுங்கள் (யோவா.5:44). உங்களுக்குப் பாராட்டுக் கூட்டங்கள் நடத்த முயற்சிக்காதீர்கள். மற்றவர்கள் அவ்வாறு நடத்த முன்வந்தால் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

**27. அக்கினி ஜுவாலையாயிருத்தல்**

'தமது ஊழியரை அக்கினி ஜுவாலையாகவும் செய்கிறார்' என்று வேதம் கூறுகிறது (சங்.104:4; எபி.1:7). 'அவ்வாறு செயல்படுகிறீர்களா?' என்று உங்களை ஆராய்ந்து பார்த்து எப்பொழுதும் அக்கினி ஜுவாலையாகச் செயல்படுங்கள்.

**'பிரபலமான ஊழியனே, ஏராளமான ஊழியம் செய்தவனே, யாவருக்கும் தலைமைப் போதகனே, பெரிய ஊழிய நிறுவனத்தின் தலைவனே. . .'**

**என்று அல்ல,**

**'நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தாய். . .' என்றுதான் கர்த்தர் பாராட்டுவார் (மத்.25:21).**

**ஜெபம்: கர்த்தாவே, என்னையும் இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு ஊழியரையும் இந்தப் பாராட்டிற்குத் தகுதியுள்ளவர்களாகக் காத்துக் கொள்ளும்.**

# 13. ஊழியரின் கடமைகள் - சபைக்கு, விசுவாசிகளுக்கு

உங்கள் பொறுப்பிலுள்ள சபை, ஊழியம், மக்கள், உடன் ஊழியர் ஆகியோரைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக (கவனமாக) இருக்க வேண்டும் (அப்.20:28).

**1. தாய், தந்தையாயிருத்தல்**

உங்கள் சபையின், மக்களின் ஒவ்வொருவருக்கும் தாயைப்போன்றும் (1 தெச.2:7–8) தகப்பனாகவும் இருங்கள் (1 கொரி.4:15). ஒரு சபையின் போதகரின் அன்பினால் ஈர்க்கப்பட்டு, சபையிலிருந்த ஒவ்வொருவரும் அவரை 'அப்பா' என்று பாசத்துடன் அழைப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காகத் தங்கள் நலன்களைத் தியாகம் செய்து வாழ்வார்கள். தங்களின் தியாகத்தையும் குழந்தைகளுக்காக அனுபவிக்கும் சிரமங்களையும், குழந்தைகளுக்கு மறைத்துவைப்பார்கள். 'பிள்ளைகள் தங்களைவிட எல்லாவிதத்திலும் உயர்வாக இருக்கவேண்டும்' என்று வாஞ்சையுடன் செயல்படுவார்கள். தங்கள் பிள்ளைகளைப்பற்றி மற்றவர்களிடம் தாழ்வாகப் பேசமாட்டார்கள். தவறிழைக்கும் பிள்ளைகளுக்கு சிட்சை கொடுத்துத் திருத்துவார்களேயன்றி அவர்களை வெறுக்க மாட்டார்கள். தங்கள் பிள்ளைகள்மேல் அளவற்ற அன்பு செலுத்துவார்கள். தங்களால் இயன்றவரை தங்கள் பிள்ளைகளுக்கு எல்லாவிதத்திலேயும் உதவி செய்வார்கள். தனது பொறுப்பில் இருக்கும் மக்களை இந்த அளவு நேசிப்பவரே ஆவிக்குரிய தந்தை ஆவார். ஊழியத்தில் குழப்பத்தையும், சிக்கல்களையும் உண்டாக்குகிறவர்களையும் நேசியுங்கள். மன துருக்கத்துடன் ஊழியம் செய்யுங்கள்.

சபையானது ஒரு குடும்பமாகச் செயல்படாததற்கு ஒரு முக்கிய காரணம் அதில் தலைவர்களும் போதகர்களும் இருந்தும் தகப்பன்மார் இல்லை யென்பதாகும் (1 கொரி.4:15).. உங்களுக்குப் புகழையோ, பணத்தையோ எதிர்பாராமல் மக்களின் நலனுக்கும், ஒற்றுமைக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் செயல்படுங்கள்.

**2. முன்மாதிரி**

தேவனுடைய பார்வையில் மட்டுமின்றி, உங்களைக் காண்கிறவர்களும் உங்களை நீதியுள்ள, தேவபக்தியுடைய, விசுவாசமிக்க, அன்புள்ள, பொறுமை

மிகுந்த, சாந்தமான மனிதர் என்று சொல்லும்படி நடக்கவேண்டும் (1 தீமோ.6:11; 2 தீமோ.2:22–24).

கர்த்தரைப் பின்பற்றுகிறவரே கர்த்தருடைய ஊழியர் (யோவா.12:26). பவுல் கர்த்தரைப் பின்பற்றி வாழ்ந்தார். ஆகவே, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று கூறினார் (1 கொரி.11:1). அநேக போதகர்களும் பிரபல கிறிஸ்தவப் பணியாளரும் "எங்களைப் பார்க்காதேயுங்கள், இயேசுவைப் பின்பற்றுங்கள்" என்று கூறுவது சரியன்று. பவுலைப் போன்று "என்னைப் பின்பற்றுகிறவர் களாயிருங்கள்" என்று புத்திமதி சொல்லும் தைரியம் உள்ளவரே சரியான ஊழியர் (1 கொரி.4:16). உங்களால் அவ்வாறு கூறமுடியாவிட்டால் ஆவியானவரின் உதவியுடன் உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். முன் மாதிரியாக வாழ்வதற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் (1 பேது.5:2–3). ஊழியர் வழிதவறினால் மந்தை வழிதப்பிச் செல்லும் அபாயம் உண்டு.

உங்கள் பிரசங்கங்கள் மறக்கப்பட்டாலும் உங்கள் வாழ்க்கை நீடித்த நாட்களாக மக்களின் மனதில் பதிந்திருக்கும். 'தாழ்மையான மனிதர்', 'இயேசுவைப் போன்று இருந்தார்', 'தேவனிடம் நெருங்கிச் சேர வழிநடத்தினார்', 'மிகவும் அன்பாயிருந்தார்' என்றெல்லாம் மக்களின் இதயத்தில் நீங்கள் பதிந்திருப்பது நலம். இதைவிடச் சிறந்தது யாதெனில் 'இந்த மனிதனின் தேவன் எவ்வளவு மேன்மையானவர்' என்று மக்கள் உணரும்படி வாழ்வதேயாகும்.

**3. விசுவாசிகளுக்காக ஜெபித்தல்**

உங்கள் சபை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் தயாரித்து ஒவ்வொருவருக் காகவும் ஒழுங்காக ஜெபியுங்கள் (1 சாமு.12:23; ரோம.1:8–9; 1 கொரி.1:6; எபே.1:15–19; பிலி.1:3–8; கொலோ.1:3–5; 1 தெச.1:2–4; 2 தெச.1:3; பிலே.5). அவர்களை உங்கள் இருதயத்தில் தரித்துக்கொண்டவர்களாக இருக்க வேண்டும் (பிலி.1:7). பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் விசாரித்து, புத்தி சொல்லுங்கள் (1 தெச.5:12). "என்னுடைய சபை உறுப்பினரின் பெயர்ப் பட்டியலை வைத்து ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கிறேன்" என்று ஒரு போதகர் என்னிடம் கூறினார். நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

**4. புதிதாக வருபவர்கள்**

புதிதாக வருகிறவர்களை உற்சாகப்படுத்தி, விசுவாசத்தில் உறுதிப் படுத்துங்கள். புதியதாக வருகிறவர்கள், வாலிபர்கள், இளம் வாலிபர்கள் **(teens)**, ஆகியோரை இரட்சிப்பின் அனுபவத்திற்கு வழி நடத்துங்கள்.

நற்செயல்கள் செய்வதிலும் கவனமாக இருக்குமாறு உங்கள் சபையாரை வலியுறுத்துங்கள். **விசுவாசிகளைக் கிறிஸ்துவின் சீடர்களாக உருவாக்குங்கள்** (மத்.28:19–20).

**5. உபதேசங்களைப் போதியுங்கள்**

இது கிறிஸ்துவின் கட்டளை (மத்.28:20). வசனத்தைப் போதியுங்கள் (2 தீமோ.4:2). உபதேசங்களின் பட்டியல் தயாரியுங்கள். ஒவ்வொன்றாகக் கற்று, ஒவ்வொன்றாக ஒரு சில ஆண்டுகளில் யாவற்றையும் போதியுங்கள். உங்கள் சபையினரின் கேள்விகள், சந்தேகங்கள் ஆகியவற்றைக் கேட்டறிந்து பட்டியலாக எழுதுங்கள். ஒவ்வொன்றாக அவற்றிற்குப் பதிலளியுங்கள். ஒவ்வொரு ஆராதனையிலும் உபதேசத்தைக் கற்றுக்கொடுப்பதற்கென சிறிதுநேரம் ஒதுக்குங்கள். பல கள்ளப் போதகங்கள் பெருகுவதற்கு முக்கிய காரணம் மக்களுக்கு உபதேசங்கள் தெரியாமலிருப்பதாகும் (2 தீமோ.4:1–2). எடுத்துக்காட்டுகள், சிறு கதைகளைப் பயன்படுத்துங்கள். கவனமாகப் பயன்படுத்துங்கள், தேவையானவற்றை முக்கியப்படுத்திப் பேசுங்கள் (கிருபையினால் இரட்சிப்பு, ஆத்தும ஆதாயப்பணி, வெற்றிவாழ்க்கை, நற்செயல்கள் செய்தல், ஆவியானவரால் நடத்தப்படுதல் போன்றவை). வம்சவரலாறு, எவ்வித ஆடையணியவேண்டும் போன்ற முக்கியமற்றவற்றைக் குறித்துப் பேசுவதைத் தவிர்ப்பது நன்று. 'கிறிஸ்துவுக்காக இதைச்செய்' என்று கூறுவதற்கு முன்பாக, கிறிஸ்து அவர்களுக்குச் செய்ததைக் கூறத் தவறாதேயுங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை உயர்த்திப் பேசத் தவறக்கூடாது. உங்கள் செய்தியின் குறிப்புகளை சபையினர் நினைவில் வைத்துள்ளனரா என்று அடுத்த வாரத்தில் கேட்டுப்பாருங்கள். அவர்கள் நினைவில் வைத்திருந்தால் உங்கள் செய்தி பயனுள்ளது என்று அறியலாம். செய்திகள் கொடுக்கப்படும் விதமும் அவற்றின் சாரமற்ற நிலையும் அநேக வாலிபர்கள் சபை ஆராதனைகளைப் புறக்கணிப்பதற்கு முக்கிய காரணங்களாகும். உங்கள் சபையினர் ஒவ்வொரு ஆராதனைக்கும் பேனாவும் குறிப்பேடும் கொண்டுவந்து குறிப்புகள் எழுதும்படி வலியுறுத்துங்கள். கண்டிக்க வேண்டியவற்றைப் பயப்படாமல் கண்டித்து உணர்த்துங்கள் (மத்.3:7–12; 2 தீமோ.3:16–17; 1 தீமோ.4:2).

**6. விசுவாசிகளின் ஆத்தும ஆதாயம்**

ஒவ்வொரு விசுவாசியையும் ஆத்தும ஆதாயம் செய்கிறவராக மாற்றுங்கள். தனி நபர் ஆத்தும ஆதாயத்தின் வழிமுறைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள் (2 தீமோ.2:2; 1 பேது.3:15).

**நற்செய்தியைச் சரியாக அறிவிப்பதற்குச் சபையினருக்குக் கற்றுக் கொடுப்பது போதகரின் முக்கிய கடமையாகும்**

**It is the duty of the pastor to teach the congregation to preach the gospel.**

ஒரு மிஷனரி கிறிஸ்தவரல்லாத இரண்டு கிராமங்களைச் சந்தித்து கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார். பின்னர் அங்கிருந்த கிராம மக்கள் தங்களுக்கு அருகிலிருந்த கிராமங்கனின் மக்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினர். இவ்வாறு உங்கள் மக்கள் செய்யும்படி வழிநடத்த வேண்டும்.

### 7. ஆராதனையில் ஜெபித்தல்

சபை ஆராதனை ஒவ்வொன்றிலும் சபையினரை ஜெபிக்கச் செய்யுங்கள் (1 தெச.5:17). செய்தித்தாள்களிலிருந்து குறைந்தது மூன்று குறிப்புகள் கொடுத்து, குறைந்தது மூன்று பேரை ஜெபிக்கச் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் குறிப்பேட்டில் அவர்கள் எழுதும்படி ஏழு ஜெபக் குறிப்புகள் கொடுத்து அவற்றிற்காக வாரம் முழுவதும் வீடுகளில் ஜெபிக்கும்படி கூறுங்கள். ஒவ்வொரு வீட்டிலும் அனுதின குடும்ப ஜெபம் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கும்படி கேளுங்கள். மற்றவர்களின் ஜெபம் தனக்குத் தேவையென்று பவுல் கூறும்பொழுது (1 தெச.5:25), உங்களுக்கு அது மிகவும் தேவையன்றோ!

**வேதத்திலிருந்து சில ஜெபக்குறிப்புகள்: மத்.5:44; 6:9–13; 9:36–38; யோவா.17:11, 15, 17, 20, 21, 23; 1 தீமோ.2:1–4; சக.10:1; அப்.4:24–30; யாக்.5:13–16; ரோம.10:1; சங்.122:6; கொலோ.4:2–4; 1 யோவா.5:16.**

குறிப்பு இந்த ஜெபக்குறிப்புகளை 22ஆம் அதிகாரத்தில் காண்க. பக்கம் 124

### 8. உங்கள் சாட்சி

உங்கள் ஊழியத்திலும் வாழ்க்கையிலும் நீங்கள் பெற்ற வெற்றிகளைச் சாட்சியாக சபையில் கூறுங்கள். உங்கள் பிரச்சனைகளையும் கூறி ஜெபிக்கும்படி கேளுங்கள். சபையின் மக்கள் ஒரு சிலரிடம் அறிவுரைகள் கேட்பதும் நல்லது.

### 9. ஆவியானவரின் அபிஷேகம்

இரட்சிக்கப்பட்டவர்களைப் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு வழி நடத்துங்கள் (அப்.19:1–6). இதற்கென்று கூட்டங்கள் நடத்தலாம்.

ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாதது ஆதி சபையாரால் ஒரு குறையாகக் கருதப்பட்டது (அப்.8:14–17; 19:1–2). தண்ணீர்த் திருமுழுக்கும் ஆவியினால் அபிஷேகம் பெறுதலும் அவசியம் என்பதை கிறிஸ்து வலியுறுத்திப் பேசியுள்ளார் (யோவா.3:5). அப்.2:38இன்படி ஒவ்வொருவரும் மனந்திரும்பி, திருமுழுக்கு பெற்று, பரிசுத்த ஆவியின் வரத்தை வேதத்தின்படி (அப்.2:4) பெறவேண்டும்.

**அபிஷேகம் இல்லாத கிறிஸ்தவம் சாரமற்ற உப்பு**

**10. ஊழியரை உருவாக்குதல்**

தீமோத்தேயுகளையும் தீத்துகளையும் ஆயத்தமாக்குங்கள் (1 தீமோ.1:1,2; தீத்.1:1,5). தகுந்த நபர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுடன் சேர்ந்து தொடர்ந்து ஜெபித்தும், சேர்ந்து வேதத்தை ஆராய்ந்தும், ஆவிக்குரிய நூல்களை வாசிக்கச் செய்தும், ஊழியத்தில் உற்சாக மூட்டியும், பேசுவதற்கு வாய்ப்பளித்தும், ஆத்தும ஆதாயம் செய்வதற்கான நேர்முகப் பயிற்சியளித்தும், வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் அவர்களை வழி நடத்தியும் ஆயத்தப்படுத்துங்கள் (2 தீமோ.2:2). உங்கள் மகன் அல்லது மகள் ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றிருந்தபோதிலும், குடும்பத்திலும் விசுவாசிகளிடமும் பிற மக்களிடமும் நற்சாட்சி பெற்றிருந்து, நல்மனச் சாட்சியுடையவராகவும் ஆவிக்குரிய முதிர்ச்சியுடையவராகவும், பிறருடன் ஆவிக்குரிய அளவில் பழகும் தன்மை யுடையவராகவும், யாவற்றிற்கும் மேலாக தேவனுடைய அழைப்பைப் பெற்றிருப்பவராகவும் இருந்தால் மட்டுமே அவருக்கு ஊழிய வாய்ப்பளிக்க வேண்டும்.

**11. சாட்சி கூறுதல்**

தங்கள் ஆவிக்குரிய, இவ்வுலக ஆசீர்வாதங்களைக் குறித்து சாட்சி கூறவும், தங்கள் ஜெபக்குறிப்புகளைக் கூறவும் விசுவாசிகள் கூடும்போது வாய்ப்பளியுங்கள். அவ்வாறு கூறும் ஒவ்வொருவருக்காகவும் ஜெபியுங்கள்.

**12. பின்மாற்றமின்மை**

விசுவாசிகளிடத்தில் பின்மாற்றமில்லாதபடி பாருங்கள். பின்மாற்றத்துக் கான அறிகுறி தோன்றினால் உங்களாலான யாவற்றையும் ஜெபத்துடன் செய்து அதை நிறுத்துங்கள். நற்செய்தி அறிவிக்கும் பணியில் ஈடுபடாத யாவரும் பின்மாற்றக்காரர்கள் (லூக்.11:23) என்பதைக் கருத்திற்கொண்டு செயல்படுங்கள். ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒவ்வொரு அங்கத்தினரும் எத்தனை ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார்கள் என்று கேளுங்கள்.

> **மக்கள் குளிர்ந்துபோனாலும்,**
> **ஆவிக்குரிய மந்தநிலையில் இருந்தாலும்**
> **அதற்கு முக்கியகாரணம் நீங்கள்தான்**
> **என்பதைக் கருத்திற்கொண்டு செயல்படுங்கள்.**

**13. பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல்**

பொறுப்புகளை அநேகருக்குப் பகிர்ந்தளியுங்கள். யாவற்றையும் நீங்களே செய்யவேண்டும் என்ற சுய முக்கியத்துவத்தை விட்டுவிடுங்கள். மோசேக்கு எத்திரோ கொடுத்த ஆலோசனை உங்களுக்கும் பொருந்தும் (யாத்.18:13–26). அப்போஸ்தலரும் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தனர். பரிசுத்த ஆவியான வராலும் ஞானத்தாலும் நிரம்பியவர்களும் நற்சாட்சி பெற்றவர்களு மானவர்களுக்கு மட்டுமே பொறுப்புகள் அளிக்கவேண்டும் (அப்.6:2–6).

**14. சமுதாய வாழ்க்கை, பாரபட்சமின்மை**

வெறுப்பு நிலவும் இடங்களில் அன்பைக் காட்டுங்கள். அநீதி நிலவும் இடங்களில் நீதியை நிலைநிறுத்த முயற்சி செய்யுங்கள். சமத்துவமற்ற இடங்களில் சமத்துவமும், மனித நேயமும், யாவரையும் மதிப்பதையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட பாடுபடுங்கள். சாதி, பண வசதி, படிப்பு போன்ற எக்காரணத்தைக் கொண்டும் பாரபட்சம் காட்டாதேயுங்கள் (யாக்.2:1–9).

செல்வந்தர்களில் பலர் கடிந்துகொள்ளப்படவேண்டியவர்களாயிருக் கிறார்கள். அவர்களுக்கு அதிக மதிப்பளிப்பது உலக வழக்கு. கர்த்தருடைய ஊழியத்தில் அவ்வாறு இருக்கலாகாது. அவர்களின் தவறுகளைக் கடிந்துகொண்டு அவர்களைக் கர்த்தரிடத்தில் திருப்புகிறவரே உண்மையான ஊழியர்.

**15. ஊழியத்தை ஆதாயத் தொழிலாக்காதீர்**

இலாப நோக்கத்துடன் கூடிய எல்லா வியாபாரமாக்குதலையும் அறவே நீக்குங்கள். அவ்வாறு செய்யாவிடில் இறுதியில் சவுக்கடிதான் கிடைக்கும் (யோவா.2:15–16). வெளிநாடுகளுக்கும், உள்நாட்டினருக்கும் அறிக்கைகள் (சில சமயங்களில் பொய்யான அறிக்கைகள்) அனுப்பி பணம் சேகரித்து அதில் ஒரு பகுதியைத் தனக்காக ஒதுக்குபவர்கள் ஏராளம். இவர்களைக் கர்த்தர் பாராட்டுவாரோ? 'ஆதாயத்துக்காக அல்ல, கர்த்தரை நேசிப்பதால் அவரைச் சேவிக்கவேண்டும்' என்பதை வலியுறுத்திக் கூறுங்கள்.

இப்பொழுதெல்லாம் ஆண்டொன்றிற்கு இத்தனை கோடி பணம் வருகிறது. என்னுடைய இலக்கு இதைப்போன்று 20 மடங்கான இத்தனை

கோடி என்று கூறும் ஊழிய நிறுவனத்தின் தலைவர்கள் உண்டு. பணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஊழியம் செய்யாதீர்கள். இவ்வாறு செய்பவர்கள் பேரில் கர்த்தர் பிரியமாயிருப்பாரோ (மல்.1:10). தனது ஊழிய நிறுவனத்தின் பணியாளர் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய பணியைக் குறித்து முக்கிய கவனம் செலுத்தாமல், அவரால் நிறுவனத்திற்கு எவ்வளவு பணம் கிடைத்தது என்பதைக் கணக்குப் பார்த்து, குறைவாகக் கொண்டு வந்தவர்களை வேலை நீக்கம் செய்யும் நிறுவனமும் இருக்கிறது. இவ்வாறு இருக்கலாகாது. ஆவிக்குரிய இலக்கை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

**16. நற்செயல்கள்**

நற்செயல்கள் செய்யும்படி கூறுவதோடு அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள் (யாக்.2:15–16). ஊழியங்களுக்குப் பணம் தருவது மட்டுமல்ல அவற்றில் பங்கெடுக்கவும் சபைமக்களை உற்சாகப்படுத்துங்கள்.

**17. நலிவுற்றோர் நலன்**

யாக்.1:27இன்படி திக்கற்றவர்களையும் விதவைகளையும் ஆதரியுங்கள். ஒரு போதகர் சிலருக்கு மாவரைக்கும் இயந்திரம் அளித்து அவர்களின் பிழைப்புக்கு உதவினார். இன்னொருவர் தையல் இயந்திரங்கள் வாங்கிக் கொடுத்து பயிற்சியும் அளித்தார். நீங்கள் ஏதேனும் செய்யலாமே.

**18. நோயுற்றோர் சந்திப்பு**

நோயுற்றோரைச் சந்தித்து ஜெபிப்பதற்குக் கருத்தாக இருங்கள் (யாக்.5:14–18).

**19. சமாதானம் நிலவச் செய்தல்**

விசுவாசிகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அவர்களை இணைக்கும் பாலமாக நீங்கள் செயல்படவேண்டும். அன்பினால் சமாதானமாயிருக்கவும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவும் வழிநடத்துங்கள். உலகிலுள்ள நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் கிறிஸ்துவின் அன்பினால் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள உதவுங்கள் (1 கொரி.6:1–7). சபையில், ஊழிய நிறுவனத்தில் ஒருமனம் இருப்பது மிகவும் தேவையானது. இதற்கான யாவற்றையும் கருத்தாகச் செய்யவேண்டும்.

**20. குற்றத்தில் அகப்பட்டவர்கள்**

குற்றத்தில் அகப்பட்டவர்களைச் சாந்தமுள்ள ஆவியோடு சீர்பொருந்தப் பண்ணுகிறவர்களாயிருங்கள் (கலா.6:1). குழப்பம் விளைவிப்பவர்களை அல்ல, சாத்தானை எதிர்த்துப் போராடுங்கள். உங்களை எதிர்ப்பவர்களைச் சந்தித்து, அன்புடன் பழகி, அவர்கள் கருத்துகளையும் அறிந்துகொள்ளுங்கள்.

**21. உடன் ஊழியர்**

உடன் ஊழியரை மதிக்கவேண்டும். அவர்களின் தேவைக்கேற்றபடி எல்லா உதவிகளும் அளிக்கவேண்டும் (மத்.24:45–51; லூக்.12:42–48).

கர்த்தருடைய உத்தமமான ஊழியரை மதிக்கவேண்டும் (1 தெச.5:12–13). அவர்களை இரட்டிப்பான கனத்திற்குத் தகுதியுடையவர்களாக நடத்த வேண்டும் (1 தீமோ.5:17).

**22. ஆவிக்குரிய வளர்ச்சி**

விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சி அடைகிறார்களா என்று கருத்தாகக் கவனிக்கவேண்டும். குழந்தைகளாயிருக்கும் விசுவாசிகள், சில ஆண்டுகளில், போதிக்கிறவர்களாக மாறும்படி கற்றுக்கொடுத்து அவர்களின் ஆவிக்குரிய தரத்தை உயர்த்தவேண்டும் (எபி.5:12–13).

**23. தேவனுக்குப் பயப்படுதல்**

தேவனுக்குப் பயப்படுதல் என்பதைத் (அச்சமல்ல, மிகுந்த மரியாதையினால் ஏற்படும் பயபக்தி) தெளிவாகக் கற்பித்து, தேவனுக்குப் பயந்து வாழும்படி நடத்தவேண்டும்.

**24. ஜெபவீரர்களை உருவாக்குதல்**

மக்களை ஜெபவீரர்களாக உருவாக்குவது உங்கள் பொறுப்பு. தனி ஜெபம் செய்யக் கற்றுக்கொடுங்கள். ஜெபக் குழுக்கள் அமைத்து ஜெபிக்கச் செய்யுங்கள். பல ஜெபக்குறிப்புகளைக் கொடுத்து தனி ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும் ஆராதனைகளிலும் ஜெபிக்கச் செய்யுங்கள். சகோதரிகளுக்குத் தனி ஜெபக்குழு ஏற்படுத்துங்கள்.

**25. தேவனை நேசித்தல்**

தேவனை முழு இருதயத்தோடும் நேசிக்கும்படி கருத்தாக வழிநடத்த வேண்டும் (மத்.22:38). நம்மிடம் வருபவர்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த வேண்டும். மக்கள் உங்களையோ பிற ஊழியரையோ சார்ந்துகொள்ளாமல் தேவனிடம் நேரடியாகத் தொடர்புகொள்ள வழிநடத்துங்கள்.

**26. தனிப்பட்ட கவனம்**

ஒவ்வொரு நபரையும் குறித்து தனிப்பட்ட கவனமும் கரிசனையுமுள்ளவராக இருக்கவேண்டும் (யோவா.17:12).

**27. கணக்குப் பார்த்தல்**

மூன்று மாதங்களுக்கொருமுறை உங்கள் சபையின் எண்ணிக்கையும், ஆவிக்குரிய தரமும், ஊழியமும் எப்படி இருக்கிறது என்று கவனித்துப்

பாருங்கள். இன்னும் என்ன செய்யலாம் என்று ஜெபத்துடன் திட்டமிட்டு செயல்படுங்கள்.

## 28. கொடுத்தல்

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்ற கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நீங்கள் பின்பற்றுவது அவசியம் அல்லவா (அப்.20:35)! ஊழியத்தை ஆதாயத் தொழிலாகக் கருதாமல், எளிமையாக வாழ்ந்து, அநேகருக்குப் பொருளுதவி செய்த ஒரு ஊழியரை நான் அறிவேன். அவருடைய சபை மிகவும் வேகமாகப் பெருகியது. சபைக்கு முன்மாதிரியாக, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள் (நெகே.8:10). 'தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்' என்பது அப்போஸ்தலரின் கட்டளை (கலா.2:10). எருசலேமிலே பரிசுத்தவான்கள் சிரமப்பட்டபோது அவர்களுக்கென்று பணம் சேகரித்து அவர்களிடம் கொண்டு சேர்த்த பவுலை நினைத்துக்கொள்ளுங்கள் (அப்.24:17; 2 கொரி.8:1–9:15).

## 29. ஆலோசனை கூறுதல்

ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவராய் விழித்திருக்க வேண்டும் (எபி.13:17). சபையிலுள்ள ஒவ்வொருநபரின் ஆத்துமாவின் ஆவிக்குரிய நிலையை ஆராய்ந்து அவர்களை அடிக்கடி சந்தித்து தேவையான ஆலோசனைகளைச் சொல்வதற்கு மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒவ்வொருவரையும் குறித்து கர்த்தரிடத்தில் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதால் இதில் மிகவும் கவனம் தேவை.

## 30. ஆலோசனை கூறுவதில் கவனம்

ஊழியர்கள் தனி நபர்களுக்கு ஆலோசனை கூறும்போது கவனமாயிருக்க வேண்டும். பெண்களுக்கு அனுபவமிக்க ஆவிக்குரிய பெண்களும், ஆண்களுக்கு அனுபவமிக்க ஆவிக்குரிய ஆண்களுமாகிய ஊழியர் ஆலோசனை சொல்வது சிறந்தது. தனியாக இருக்கும் பெண்ணுக்கு/ஆணுக்கு ஆலோசனை கூறுவதின்மூலம் சிக்கலில் மாட்டிக்கொண்ட பலருண்டு. தனியாக இருக்கும் பெண்ணுக்கு ஆலோசனை சொல்ல நேரிடும்போது ஊழியர் தமது மனைவியுடன் சேர்ந்து அல்லது பிற மூப்பருடன் சேர்ந்து ஆலோசனை கூறுவது சிறந்தது. ஆண் ஊழியர் ஒரு பெண்ணையோ, பெண் ஊழியர் ஒரு ஆணையோ தனியாகச் சந்திப்பதைத் தவிர்த்துவிடுங்கள். சரியான ஆலோசனை கூறுவதற்கான கிருபைக்காக ஊக்கமாக ஜெபித்து ஆலோசனை கூறவேண்டும். நீங்களாக ஒரு மணிநேரம் ஆலோசனை கூறுவதைவிட தேவனிடமிருந்து வரும் ஒரு வாக்கியம் மிகுந்த பலனளிக்கும்.

**31. தேவன் ஊழியரை ஏற்படுத்தும் நோக்கங்களை நிறைவேற்றுதல் (எபே.4:11, 12).**

1. யாவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக வேண்டும்.
2. யாவரும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக பூரண மனிதராக வேண்டும்.
3. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தவேண்டும்.
4. நற்செய்திப் பணி நடைபெற வேண்டும்.
5. கிறிஸ்துவின் சரீரமான சபை பக்திவிருத்தியடையவேண்டும்.

இவற்றைச் செய்ய முனைவது ஒவ்வொரு ஊழியரின் கடமையாகும்.

**32. நித்திரையை விட்டு எழுந்திரும்**

வாசிப்பதிலும், புத்திசொல்வதிலும், உபதேசிப்பதிலும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இவற்றையே சிந்தித்துக்கொண்டிருந்து இவற்றில் நிலைத்திருக்கவேண்டும் (1 தீமோ.4:13,15). தேவபக்திக்கேதுவாக முயற்சி செய்வது அவசியம் (1 தீமோ.4:7).

தீங்கநுபவிக்கும்போது முறுமுறுக்காமலும், கோபங்கொள்ளாமலும், பொறுமையாக இருக்கவேண்டும். தீங்கநுபவி என்று வேதம் கூறுகிறது (2 தீமோ.1:8).

மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நீர் தாமே ஆகாதவராகப்போகாதபடி மிகவும் கவனமாக இருக்க வேண்டும் (1 கொரி.9:27). உம்மைக் குறித்தும் உம்முடைய உபதேசத்தைக்குறித்தும் மிகவும் கவனமாயிருப்பீராக (1 தீமோ. 4:16). போதகத்திலும், நடக்கையிலும், நோக்கத்திலும், விசுவாசத்திலும், நீடிய சாந்தத்திலும், அன்பிலும், பொறுமையிலும், துன்பங்களைச் சகிப்பதிலும் முன்மாதிரியாக இருக்கவேண்டும் (2 தீமோ.3:10–11). சண்டையிடுகிற வராயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவரும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவருமாயிருக்கவேண்டும் (2 தீமோ.2:24).

தேவன் எதிர்பார்க்கும் அளவிற்கு நீங்கள் பணிசெய்யாவிட்டால் இப்பொழுதே உங்கள் அசதியையும் நித்திரையையும் விட்டு எழுந்திருங்கள் (எரே.48:10; எபே.5:14).

**யாவற்றிற்கும் மேலாக, புதிய ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்துவதோடு, உங்கள் சபைமக்களையும் விசுவாசிகளையும் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுத்துங்கள்.**

# 14. நிகழ்ச்சிகள்

ஜெபத்துடன் நன்கு திட்டமிட்டு, ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்து நிகழ்ச்சிகளை நடத்துவது நல்லது. ஆறு மாதத்திற்கான பொதுவான திட்டம் தயாரிக்கலாம். விசுவாசத்துடன், விளைவை எதிர்பார்த்து, நிகழ்ச்சிகளை நடத்துங்கள்.

**தேவ பிரசன்னத்தில் ஊழியம்**

கர்த்தருடைய நாமத்தில் மக்கள் கூடிவரும்போது, கர்த்தரின் பிரசன்னம் அங்கு இருக்கிறது (மத்.18:20). அந்தப் பிரசன்னத்தை யாவரும் உணர்ந்து அனுபவிக்கும்படியாக நடத்தப்படுவதே சிறந்த ஆராதனை

நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதோடு மட்டுமின்றி அவற்றின் தரமும் உயர்வாயிருக்கவேண்டும். பாடல்கள், வேதப்பகுதி, செய்தி, பிற நிகழ்ச்சிகள் யாவும் மக்களின் இதயத்தைத் தொடவேண்டும்.

**அநேக நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும்.**
**நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையைவிட**
**ஒவ்வொரு நிகழ்ச்சியின் விளைவே முக்கியம்.**

**1. அ). சிறுவர்கள் ஊழியம்** – ஞாயிறு பள்ளி, விடுமுறை வேதாகமப்பள்ளி ஆகியவற்றை நடத்துவது அவசியம்.

சிறுவர் ஊழியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் இரட்சிப்பின் நிச்சயமும் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் பெற்றவர்களாக இருப்பது மிகவும் அவசியம். மேலும் இவர்கள் தங்களது பொறுப்பிலிருக்கும் சிறுவர்களை இரட்சிப்பின் அனுபவத்திற்குள் நடத்துவதில் கவனமாயிருக்கவேண்டும்.

ஆ). **வாலிபர் ஊழியம்** – வாராந்தரக் கூட்டங்கள், ஒரு நாள் முகாம்கள், வாலிபரைப் பயன்படுத்தி நற்செய்திப்பணி, இசை ஊழியங்கள் போன்றவை தொடர்ந்து கிரமமாக நடத்தப்படவேண்டும். செய்தி கொடுப்பதிலும், வேதப் பகுதிகளை மனப்பாடம் செய்வதிலும், பாடல்களிலும் போட்டிகள் நடத்தலாம். ஒவ்வொரு தலைமுறையினருக்கும் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.

ஆவியானவரின் அபிஷேகம் பெறும்படி வாலிபர்கள் வழிநடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

இ). **பெரியவர்கள்**– ஆத்தும ஆதாயத்துக்கென ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராம ஊழியம், நோயுற்றோர் சந்திப்பு போன்ற ஊழியங்களுக்கு சபையினரை அழைத்துச் சென்று, அவர்களுக்குப் பயிற்சி அளித்து ஊழியம் செய்ய வையுங்கள்.

### 2. வீட்டு ஜெபக்குழுக்கள்

உங்கள் சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு குழுவில் இடம்பெறும் வகையில் வீட்டு ஜெபக்குழுக்களை ஏற்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவை நடத்தவும் ஒரு தலைவரை நியமித்து அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள். ஒவ்வொரு வாரத்திற்கும் வேதபாடக் குறிப்புகள் தயாரித்து ஒவ்வொரு தலைவருக்கும் கொடுத்து, அவர்கள் ஜெபக்குழுவை நடத்துவதற்கு முன்பாக வேதபாடத்தைக் கற்றுக்கொள்வதோடு முப்பது நிமிடங்களாவது ஜெபிக்கவேண்டும் என்று கூறுங்கள். தங்கள் குழுவிலிருக்கும் குடும்பங்களுக்காக, சபைக்காக, நமது நாட்டிற்காக, மற்ற முக்கிய குறிப்புகளுக்காக அவர்கள் வாரந்தோறும் குழுவில் ஜெபிக்க வேண்டும்.

(வாராந்தர ஜெபக்குழுக்களின் வாயிலாக, தென் கொரியாவிலுள்ள பால் யாங்கி சோவின் சபை உலகின் மிகப்பெரிய சபையாக வளர்ந்தது என்பதைக் கருத்தில் கொள்க).

### 3. ஒருநாள் கூட்டங்கள்

உங்கள் சபையின், ஊழியப் பகுதியின் விசுவாசிகள் யாவரும் பங்கேற்கும் வகையில் மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை அல்லது விடுமுறை நாளில் உபவாச ஜெபக் கூடுகை நடத்துங்கள். எந்தவொரு விடுமுறை நாளையும் விட்டுவிடாமல் அதில் நற்செய்திப்பணி, கிராம ஊழியம், கூட்டங்கள், ஒடுக்கக் கூட்டங்கள், ஜெபக்கூடுகை நடத்தி சபையின் மக்கள் யாவரும் பங்கேற்கவும் மற்றவர்களை அழைத்துவரவும் செய்யுங்கள். ஆறு மாத காலத்திற்குத் திட்டமிடுங்கள்.

### 4. புதிய சபை

சபையில்லாத ஒரு ஊரைப் பொறுப்பேற்றுக்கொண்டு இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு சபையை அங்கு நிறுவுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

### 5. உங்கள் சபை பெருகுதல்

அடுத்த இரண்டு ஆண்டுகளில் உங்கள் சபை, உங்கள் ஊழியத்திலுள்ள விசுவாசிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகுவதற்கு ஜெபத்துடன் செயல்படுங்கள். வாராந்தர வீட்டு ஜெபக் குழுக்களின் வாயிலாகவும், உங்கள் தனிப்பட்ட ஆத்தும ஆதாயத்தின் வாயிலாகவும்,

உங்கள் சபையினரின் ஆத்தும ஆதாயத்தின் வாயிலாகவும் இதை உங்களால் செய்ய முடியும். தொழுவத்திலில்லாத ஆடுகளைச் சேர்ப்பது உங்களின், உங்கள் விசுவாசிகளின் கடமை (யோவா.10:16). ஆராதனைகளுக்கு மற்றவர்களை அழைத்துவரும்படி உங்கள் விசுவாசிகளை உற்சாகப்படுத்துங்கள்.

**6. மிஷனரிப்பணியை ஆதரியுங்கள்**

பல ஊழியர் தங்கள் சபையைப்பற்றி மட்டும் கரிசனை கொண்டிருப் பார்கள். உலகெங்கும் அழிந்துபோகும் ஆத்துமாக்களைப்பற்றி அக்கறை யின்றி இருப்பார்கள். அவ்வாறு இருக்கலாகாது.

எனவே, மிஷனரிப்பணியை ஆதரியுங்கள். மிஷனரிப் பணிக்கு நீங்களும் உங்கள் சபையினரும் கொடுத்தால் உங்கள் வருமானம் மிகவும் பெருகும். 'கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பதைப் போதிக்கும் நீங்கள் தசமபாகம், காணிக்கை கொடுக்கிறீர்களா? நல்ல மிஷனரிப் பணிக்குக் கொடுத்தீர்களென்றால் உங்கள் ஊழியம் பெருகும், நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். மதுரையிலுள்ள ஒரு சபை எழுபதிற்கும் அதிகமான மிஷனரிகளை அனுப்பியதுடன் பல கிளை சபைகளை உருவாக்கி நடத்தி வருகின்றனர். சென்னையில் ஒரு சபை முப்பதிற்கும் மேலான மிஷனரிகளைத் தாங்கி வருகின்றனர். தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு சபைப் பிரிவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மிஷனரிகளை அனுப்பியுள்ளனர். நீங்களும் உங்கள் சபையின் வருமானத்தில் பாதிப்பங்கையாவது மிஷனரி பணிக்குச் செலவிடலாமே. ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புவது நமது கடமையல்லவா? (நெகே.8:10)

பல நாடுகளிலிருந்து மிஷனரிகள் வந்து, கடும் உழைப்பினாலும், தங்கள் வேர்வையையும் இரத்தத்தையும் சிந்தினதாலும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ததால்தான் இன்று நீங்கள் ஊழியராயிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து, மிஷனரிகளை அனுப்பவும், தாங்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் கருத்தா யிருங்கள். உலகெங்கும் மக்கள் இரட்சிக்கப்பட்டு சீடர்களாக வாழவேண்டும் என்ற நோக்கம் இல்லாத எவரும் உண்மை ஊழியரல்ல (மத்.28:18-20). நமது தலைமுறையின் உலக மக்களை இரட்சிப்பிற்குள் நடத்துவது நம்மால் மட்டுமே முடியும்.

**7. மிஷனரி செய்திகள்**

மிஷனரிகளையும் ஆத்தும ஆதாயம் செய்பவர்களையும் அழைத்து, உங்கள் சபையில் தங்கள் ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும்படி

செய்யுங்கள். உங்கள் சபையினரை மிஷனரிப் பணித்தளத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சி செய்யுங்கள்.

**8. பலருக்கு வாய்ப்பளித்தல்**

சபை ஆராதனைகளிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் முடிந்தவரை அநேகருக்கு வாய்ப்பளியுங்கள். ஜெபம் நடத்துதல், துதிப்பகுதி நடத்துதல், வேதவாசிப்பு, சங்கீதப் பகுதி, பாடல்கள் நடத்துதல், காணிக்கை சேகரித்தல் போன்ற பொறுப்புகள் தரலாம். இவ்விதமாக, உங்கள் ஊழியத்தில் ஆவிக்குரிய தூண்களை (பாரத்தைத் தாங்குபவர்களை) உருவாக்குங்கள். உங்கள் குடும்பத்தினருக்கு மட்டும் முதலிடம் தராமல் திறமையுள்ள யாவருக்கும் வாய்ப்பளியுங்கள். ஆராதனையில் சாட்சி கூறுவதற்கு நேரம் தாருங்கள். அதில் சாட்சிகளையும், ஜெபக்குறிப்புகளையும் சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள சபையினருக்கு வாய்ப்பளியுங்கள். அவர்கள் கூறிய ஒவ்வொன் றிற்காக ஜெபியுங்கள்.

**9. தேவையிலிருப்போருக்கு**

ஒவ்வொரு ஆராதனையிலும் சுகவீனருக்காகவும், பிரச்சனைகளி லிருப்போருக்காகவும், தேவைகளிலிருப்பவர்களுக்காகவும், முதியோருக் காகவும் சிறப்பாக ஜெபம் ஏறெடுங்கள். உங்கள் சபையிலும், அருகாமையிலும் தேவையிலிருப்போருக்கு இரகசியமாக உதவிசெய்யுங்கள் (மத்.6:1–4; யாக்.2:16).

**10. நூல்கள் அறிமுகம்**

தரமான ஆவிக்குரிய நூல்களை அறிமுகம் செய்யுங்கள். சபை உறுப்பினர் ஒருவரின் மேற்பார்வையில் நூலகம் ஒன்று தொடங்கி, நூல்களை மக்களுக்கு வாசிப்பதற்குத் தரலாம். கிரமமாக வாசித்து பயனடைய சபையினரைப் பயிற்றுவியுங்கள்.

**11. உதவிசெய்தல்**

ஆவிக்குரிய, அறிவு சார்ந்த, உலகப்பொருள் சார்ந்த ஏழ்மை இருக்குமானால், அதைக் களைய முன்வாருங்கள். சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள அறிவுறுத்துங்கள். உங்கள் பகுதியில் இருக்கும் எவரையும் பட்டினியாக இருக்கவிடாதேயுங்கள். மிகுந்த தேவையிலிருப் போருக்கு உதவி செய்ய உங்கள் சபையினரை உற்சாகப்படுத்துங்கள்.

## 12. சமுதாயப் பணி

1. பல இடங்களில், வாரத்தின் 7 நாளில் ஒரு நாள் மட்டும் ஆலய கட்டிடம் பயன்படுத்தப்படுகிறது. ஏழ்மை நிலையிலுள்ள கிறிஸ்தவ, கிறிஸ்தவரல்லாத சிறுவர்களுக்கு மாலை நேரங்களில் இலவசமாகப் பாடம் கற்றுத் தருவதற்கு உங்கள் சபைக் கட்டிடத்தில் ஏற்பாடு செய்யுங்கள். கிறிஸ்தவ ஆசிரியர் களையும் கற்றவர்களையும் இதற்கு உதவும்படி கேளுங்கள். இவ்வாறு செய்தால் உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள வருங்கால சந்ததி உயர்த்தப்படும்.

2. அருகிலுள்ள கிறிஸ்தவ மருத்துவர்களின் உதவியால் மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

3. தையல் வகுப்புகள், சுய உதவிக் குழுக்களின் கூடுகை, அவர்கள் மூலம் நற்பணிகள் போன்றவற்றைச் செய்ய இடமளியுங்கள். ஆலயத்தின் அருகில் வாழ்கிறவர்களின் பிழைப்புக்கான வழி உண்டாக்க முயற்சி செய்யுங்கள்.

4. உங்கள் பகுதியிலுள்ள மிகவும் ஏழ்மையானவர்களுக்கு மாதந்தோறும் உதவி செய்யுங்கள். கர்த்தருடைய பிள்ளைகளில் யாரும் பட்டினியாயிருக்க விடாமல் உதவுங்கள்.

5. கனமழை, தண்ணீர் தட்டுப்பாடு போன்ற சிரமங்களில் உதவி செய்யுங்கள். ஒரிசாவில் எதிர்ப்பாளர்கள் இருந்த ஒரு இடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தபோது, ஒரு மிஷனரி பலருடன் சென்று உணவு சமைத்து வழங்கினார். எதிர்ப்பாளரும் வந்து உணவருந்தி நன்றி கூறினர். ஒரு சூறாவளிக் காற்று வீசியபின்பு வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் சாப்பிடவும் தங்கவும் இடமின்றி இருந்த கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் ஆலய வளாகத்தில் தங்குவதற்கு இடமளித்து, சபையினரிடம் உதவிபெற்று ஆகாரமளித்தார் ஒரு போதகர். அவருக்கும் சபைக்கும் அப்பகுதியில் மிகுந்த மரியாதை உண்டாயிற்று. ஒரு கூட்டம் மக்கள் அவர்களின் அன்பைப் பார்த்து கர்த்தரிடம் வந்தார்கள். தென் தமிழ்நாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை நான் நேரில் கண்டேன்.

# 15. வீடு சந்திப்பு

**குறிப்பு 1:** எந்த நிகழ்ச்சியும் தேவனுடைய அரசைக் கட்டுவதற்குத் தொடர்புடையதாகவும், கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதற்கு ஏதுவாகவும் அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

**குறிப்பு 2:** கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய குறிப்புகளை உங்கள் சபைக் கட்டிடத்தின் உட்பகுதியின் ஒரு இடத்தில் நன்கு தெரியும் வகையில் எழுதி வைக்கலாம்.

வீடுகளைச் சென்று சந்திப்பது மிகவும் அவசியமானது. பணம் சேகரிப்பதற்காக அல்ல, மக்களைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் இது அவசியமானது. ஏழ்மை நிலையிலுள்ள விசுவாசிகளின் வீடுகளைச் சந்தித்து அவர்களுக்கு உதவுவது நல்லது. (சென்னையில் ஒரு போதகர் மாதந்தோறும் ஏழைக் குடும்பங்கள் யாவற்றையும் சந்தித்து உதவி செய்து வந்தார். அவரது ஊழியம் சிறந்து விளங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை). எந்தெந்த வீடுகளைச் சந்திக்கிறீர்கள் என்ற ஒரு பட்டியல் எழுதுங்கள். சில வீடுகளைப் பலமுறை சந்திப்பதும், சில வீடுகளைச் சந்தியாமலிருப்பதும் அதன்மூலம் மாறும்.

சென்னையில் ஒரு சபையின் தலைமைப் போதகர் இருந்தார். அவருடைய சபையில் ஆயிரம் குடும்பத்திற்கு மேலாக அங்கத்தினர்கள் இருந்தனர். ஒவ்வொரு வீட்டினரையும் ஆண்டிற்கு ஒரு முறையேனும் நேரில் சென்று சந்தித்து ஜெபித்தார். மேலும் வீடு சந்திப்பின்போது பணம் பெற்றுக் கொள்ளாமலும், வீட்டினர் தரும் பானம் எதுவும் அருந்தாமலும் அவர்களைச் சந்தித்தார். வீட்டினர் வற்புறுத்தினால் அவர்கள் அளிக்கும் தின்பண்டத்தில் ஒரு சிறிய துண்டைப் பிய்த்து சாப்பிடுவார். சபை மக்கள் ஒவ்வொருவரையும் பற்றி அவரது சபையின் மற்ற போதகர்களுக்குத் தெரியாதபோதிலும் இவர் நன்கு அறிந்திருந்தார்.

இதற்கு மாறாக, பல ஊழியர்கள் நன்கு வசதிபடைத்தவர்களின் வீடுகளைச் சந்தித்து, ஜெபித்து, பணம் பெற்றுக்கொள்வதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பணம் பெற்றுக்கொள்வதைக் குறை கூறுவதற்காக இதை எழுதவில்லை. ஆனால் 'பணத்திற்கென்றே வீடு சந்திப்பது சரிதானா?' என்று சிந்தித்துப்பாருங்கள். "ஐயா, நான்

உங்களுக்காக ஜெபித்தேன். கர்த்தர் உங்களைப் பார்த்து ஜெபிக்கச் சொன்னார்?'' என்று பணக்காரர் வீட்டிற்கு மட்டும் செல்வது சிலரின் வழக்கம். ஒரு போதகர் "ஐயா, அதிகாலையில் உங்களைப் பார்க்கும்படி வந்திருக்கிறேன்" என்று ஒரு செல்வந்தரிடம் கூறினார். அதற்கு அந்த மனிதர் "போதகர் அவர்களே, அதிகாலையில் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல் என்னிடம் வருவது சரியா?" என்று கேட்டார். தனது தேவைகளுக்காக தேவனை நோக்கிப் பார்க்காமல் மனிதரிடம் செல்லும் ஊழியர் எப்படிப்பட்டவர்?

ஒரு செல்வந்தர் தான் சென்று கொண்டிருந்த சபைக்கு மிகுந்த உதவிகளைச் செய்துவந்தார். அவரை மிகவும் உயர்வாக மதித்து வந்தனர். சில பிரச்சனைகளால் அவர் வேறொரு சபைக்குச் செல்ல நேர்ந்தது. அவர் சபைக்குப் பணம் கொடுக்க முற்பட்டபோது அச்சபையின் போதகர் "ஐயா, நீங்கள் பணம் தருவது இருக்கட்டும். உங்கள் ஆத்துமா கர்த்தரிடம் செம்மையாக இருக்கிறதா?" என்று கேட்டு செல்வந்தரின் ஆவிக்குரிய வாழ்க்கையையே குறிக்கோளாக வைத்து அவரை நடத்தினார். இவ்வாறு 'எந்த மனிதரையும் தேவனுடைய அரசிற்கு வழி நடத்தப்படவேண்டிய ஆத்துமாவாகப் பார்க்காமல், ஏழை பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது' மிகவும் தவறாகும் (யாக்.2:1–6).

ஒரு வீட்டினரைச் சந்திக்கச் செல்லும்போது 'என்ன நோக்கத்திற்காக இந்த வீட்டிற்குச் செல்கிறேன்? பணத்திற்காகவா, புகழப்படுவதற்காகவா, கண்களின் இச்சையினாலா அல்லது ஆவிக்குரிய காரணத்திற்காகவா' என்று உங்களையே சோதித்துப்பாருங்கள். நீங்கள் செல்வதால் அந்த வீட்டில் ஆவிக்குரிய நன்மை உண்டாகவேண்டும் என்ற நோக்கத்தோடு செல்லுங்கள். உங்கள் தேவைகளைச் சந்திக்கும்படி மனிதனிடமல்ல, தேவனிடம் கேளுங்கள்.

### வீடு சந்திப்பிற்குச் சில ஆலோசனைகள்

1. உங்கள் சபையினரின் பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்றவை கொண்ட ஒரு பட்டியலைத் தயாரியுங்கள். வீடுகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு மாதம் ஒருமுறை அல்லது சில மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அவர்களைச் சந்தியுங்கள்.

2. ஒரு பெரிய குறிப்பேட்டைப் பயன்படுத்துங்கள். அதில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பக்கம் அல்லது சில பக்கங்கள் இடம் ஒதுக்குங்கள். நீங்கள் அவர்கள் வீட்டைச் சந்திக்கும்போது அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், ஆசீர்வாதங்கள், தேவைகள், ஜெபக்குறிப்புகள் ஆகியவற்றை

எழுதுங்கள். அவற்றிற்காக அவர்கள் வீட்டிலும் பின்னர் உங்கள் தனி ஜெபங்களிலும் நீங்கள் ஜெபிக்கவேண்டும். நீங்கள் சந்தித்த தேதியைக் குறிப்பேட்டில் பதிவு செய்யுங்கள்.

3. வேதத்தை முறையாகத் தியானிப்பதற்கு வீட்டிலிருப்போருக்குக் கற்றுக்கொடுங்கள். புதிய ஏற்பாட்டில் மத்தேயு 1ஆம் அதிகாரத்தில் தொடங்கி ஒவ்வொரு நாளும் ஒரு அதிகாரத்தைத் தியானித்து, குறிப்புகள் எழுதும்படி உற்சாகப்படுத்துங்கள். வேதத்தியானத்திற்கென்று ஒவ்வொருவரும் ஒரு குறிப்பேடு பயன்படுத்தும்படி வற்புறுத்துங்கள்.

எடுத்துக்காட்டாக, அவர்களுடன் சேர்ந்து மத்.1ஆம் அதிகாரத்தைத் தியானித்து சில குறிப்புகளை எழுதச் செய்யுங்கள். யோசேப்பின் குணநலன்களைப் பற்றிய குறிப்புகளை எழுதச் சொல்லலாம். அனுதினமும் ஒரு அதிகாரத்தைத் தியானிக்க மீண்டும் வலியுறுத்துங்கள். புதிய ஏற்பாட்டைத் தொடர்ந்து தியானித்து முடித்ததும் பழைய ஏற்பாட்டைத் தியானிக்கவும், தொடர்ந்து இவ்வாறு மீண்டும் மீண்டும் வேதத்தைத் தியானிக்கவும் செய்யுங்கள். அடுத்த முறை அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது எவ்வாறு தியானித்திருக்கிறார்கள் என்று கவனியுங்கள்.

4. அனுதினமும் குடும்ப ஜெபம் செய்யவேண்டும் என்று வலியுறுத்துவதோடு பாடல், வேதவாசிப்பு, துதி, ஜெபம் ஆகியவை அதில் எவ்வாறு இடம்பெறவேண்டும் என்று கற்றுக்கொடுங்கள். அவர்களை உங்கள் முன்னால் குடும்ப ஜெபம் செய்யவைத்து, பழக்குவியுங்கள்.

5. பிறருக்கு உதவுவதையும் அருகிலுள்ளோரைக் கர்த்தருக்கென்று ஆதாயம் செய்வதையும், ஆவிக்குரிய வளர்ச்சியையும், பிற முக்கியமானவற்றையும் கற்றுத்தரலாம்.

இவ்விதம் நீங்கள் அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து வழிநடத்தவேண்டும்.

**ஆவிக்குரிய நன்மையளிக்கும் ஊழியம் செய்பவர் அவற்றைப் பெறுபவர்களிடமிருந்து சரீரத்திற்குரிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வது வேதத்தின்படி சரியானது (ரோம.15:27; 1 கொரி.9:11; கலா.6:6).**

**எனவே, ஆவிக்குரிய நன்மையளிக்காமல் பணம்பெறுவது கொள்ளையடிப்பது அல்லது கௌரவப் பிச்சையாகும்.**

# 16. எப்படிப் போதிக்க வேண்டும்?

**ஏன் போதிக்கிறீர்கள்?**

**எதையாவது பேசவேண்டும் என்பதற்காகப் பேசாமல், பேசுவதற்கு ஏதோவொரு முக்கியமானது இருக்கிறது என்பதற்காகப் பேசவேண்டும்.**

**தேவ செய்தி (பிரசங்கம்) என்றால் என்ன?**

1. ஜீவிக்கிற வார்த்தை(கிறிஸ்து)யை உயர்த்தும் வண்ணம், எழுதப்பட்ட வார்த்தை(வேதம்)யைப் பயன்படுத்தி பேசப்படும் வார்த்தை பிரசங்கம் எனப்படும்.

2. தேவனால் ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஒரு தேவ மனிதர், மக்களின் தேவைகளைச் சந்திப்பதற்காகவும், மக்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக நிறுத்துவதற்காகவும், மக்களை தேவனுடைய அரசிற்கு ஆயத்தப்படுத்துவதற்காகவும், தேவனுடைய சத்தியத்தை மக்களுக்குத் தெரிவிப்பது பிரசங்கம் எனப்படும்.

**பிரசங்கம் தேவ செய்தியாக இருப்பது அவசியம்.** ஒரு செய்தியளிக்க வேண்டுமென்றால், கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து, கர்த்தர் சொல்லும் தலைப்பையும் கருத்துகளையும் கொண்டு, அவற்றைக் குறித்து வேதம் கூறுவதைத் தியானித்து, ஆவியானவரின் அபிஷேகத்துடன் கூறுவதே தேவ செய்தியாகும். தனிப்பட்ட நபர்களுக்கும் தேவன் உங்கள் வாயிலாகத் தமது செய்தியை அளிக்கக்கூடும்.

வாழ்வியல் விளக்க வேதாகமத்திற்கான விளக்கங்களை நான் எழுதத் தொடங்குமுன்பு அந்த விளக்க வேதாகமம் மிகவும் தாமதப்படுவதற்கான அல்லது வெளிவர முடியாததற்கான சூழ்நிலை உருவாயிற்று. மனக் குழப்பத்துடன் ஒரு சபையின் ஆராதனைக்குச் சென்றிருந்தேன். என்னை அறியாத அச்சபையின் போதகர் செய்தியளிக்கும்போது என்னை நோக்கித் தமது கையை நீட்டி, "உன் ஊழியத்தைக் கர்த்தர் நிறைவேற்றுவார்" என்று கூறினார். இது அந்தப் போதகர் மூலம் கர்த்தர் எனக்குத் தந்த செய்தியாகும். உங்கள் 'பிரசங்கங்கள்' ஒவ்வொன்றும் தேவ செய்தியாக இருக்கும்படி கருத்தாக ஜெபித்து, அதன்பின் பேசுங்கள். மூளை அறிவிலிருந்து மூளை

அறிவிற்கு அல்ல, இதயத்திலிருந்து இதயத்திற்கும் வாழ்க்கையிலிருந்து வாழ்க்கைக்கும் செய்தி பரிமாறப்பட வேண்டும்.

எந்த ஊழியரும் உபதேசத்தைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (1 தீமோ.4:16).

தவறானவற்றைப் பேசாமலிருக்கக் கவனமாயிருப்பதோடு பயனுள்ள எதையும் போதிக்காமல் விடக்கூடாது (அப்.20:26–27). என்ன பேசினோம், எதற்காகப் பேசினோம், எப்படிப் பேசினோம் என்று ஒருநாள் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

**சபையினர் குறிப்புகள் எழுதிக்கொள்ளுதல்**

சபையார் ஒவ்வொருவரும் வேதத்தையும், சிறு கையேட்டையும், பேனாவையும் கொண்டுவந்து குறிப்புகள் எழுதும்படி வலியுறுத்துங்கள்.

## எப்படிப் போதிக்க வேண்டும்?

1. ஒவ்வொரு செய்தியும் ஒரு அம்பின் நுனியைப் போன்று ஒரு குறிப்பிட்ட **நோக்கமுடையதாக இருக்கவேண்டும்.** நுனி தாக்கும் இடத்திற்குள் அம்பு நுழைவதுபோன்று செய்தியின் நோக்கம் கேட்போரின் இருதயத்திற்குள் பாய்ந்து செல்லவேண்டும்.

**'நோக்கமில்லாத பிரசங்கம் சாரமற்ற உப்பு'.**

நோக்கம் வேதத்தின்படி சரியாக இருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டு காலத்திற்குப் பொருத்தமானதாக அமையவேண்டும். சபையினர் பரிசுத்தமடைவதற்கும் தேறினவர்களாவதற்கும் சபையினரின் தேவைகள் சந்திக்கப்படுவதற்கும் பயனுடையதாக இருக்கவேண்டும். தெளிவாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும், பின்பற்ற முடிந்ததாகவும் இருக்கவேண்டும். நோக்கத்தைச் சொன்னவுடன் சபையினருக்கு ஆர்வமுண்டாவதாகவும் அவர்களின் வாழ்க்கையைத் தொடுவதாகவும் அமையவேண்டும்.

ஒரே செய்தியில் அநேக கருத்துகளைத் திணித்தால் மக்களால் சீரணிக்கமுடியாது.

**2. தேவனுடைய வசனத்தின்படி போதிக்கவேண்டும்** (1 பேது.4:11). தேவனுடைய வசனமே ஆவியின் பட்டயம். அதைச் சரியாகப் பயன் படுத்தினால் வெற்றி கிடைக்கும். எந்தவொரு கருத்தைக் கூறினாலும் இரண்டு மூன்று வேதப்பகுதிகளின் அடிப்படையில் கூறவேண்டும்.

உபதேசங்களைப் போதிக்கும்போது வேதம் முழுவதிலும் அதைப்பற்றிக் கூறியுள்ள எல்லா வசனங்களையும் கற்று அவற்றின் அடிப்படையில் போதிக்கவேண்டும். உங்கள் கருத்திற்கேற்றபடி எத்தனை வசனங்கள் இருந்தபோதிலும் அதற்கு எதிராக ஒரு வசனம் இருந்தாலும் உங்கள் கருத்து சரியல்ல. எனவே வேதத்தின் உபதேசங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவு உங்களுக்குத் தேவை.

செய்தியில் **வேத வசனத்தைப் பயன்படுத்துவது** மிகவும் முக்கியமானது. செய்திக்கும் வேத வசனத்திற்கும் பொருத்தமிருக்க வேண்டும். வேத வசனத்தைத் தவறின்றி கூறவேண்டும்.

அளவிற்கு மீறி அநேக வசனங்களைப் பயன்படுத்தி மக்கள் எதையும் கவனிக்காதபடி செய்யக்கூடாது. வேதத்தைத் திறந்து பார்ப்பதற்கு சற்று நேரம் கொடுக்கவேண்டும். பல வேதப்பகுதிகளைக் குறித்துக்கொண்டு வீட்டில் சென்று பார்க்கும்படி கூறலாம்.

கதைகளையோ, பாரம்பரிய நம்பிக்கைகளையோ, பழக்கவழக்கங் களையோ ஆதாரமாகக் கொள்ளாமல் வேதவசனத்தை ஆதாரமாகக் கொண்டு பேசவேண்டும்.

3. **நிதானமாகப் பகுத்துப் போதிக்கவேண்டும்** (2 தீமோ.2:15). எந்த வேதப்பகுதியைப் போதித்தாலும் அதின் வாயிலாகத் தேவன் கூற விரும்புவதைக் கவனித்து, சரியாகப் பகிர்ந்து போதிக்கவேண்டும்.

4. தேவனுக்குரியவற்றை மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளால் பேசாமல், **பரிசுத்த ஆவியானவர் போதிக்கிற வார்த்தைகளால்** பேசி, ஆவிக்குரியவற்றை ஆவிக்குரியவற்றோடு சம்பந்தப்படுத்திப் பேசவேண்டும் (1 கொரி.2:13). பேச்சும் செய்தியும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கவேண்டும் (1 கொரி.2:5). இதற்கு ஆவியானவரின் ஒத்தாசையும் தேவை. பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபித்து, தேவனிடத்திலிருந்து செய்தியைப் பெற்று, அதை சபைமக்களுக்கு அளிக்கவேண்டும்.

5. அநேகரைப்போல தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், **துப்புரவாகவும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும்** கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசவேண்டும் (2 கொரி.2:17). பேசும்பொழுது தேவ பிரசன்னத்தை உணர்ந்தவர்களாகப் பேசவேண்டும். தேவன் என் மூலமாகப் பேசுகிறார் என்ற உணர்வுடன் பேசவேண்டும்.

**6. ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவற்றைப் பேசவேண்டும்** (தீத்.2:1). உபதேசத்தில் தவறு இருக்கக்கூடாது. தெளிவாகவும் குறை கூறுவதற்கு இடமில்லாததாகவும் இருக்கும் ஆரோக்கியமான வசனத்தைப் பேச வேண்டும் (தீத்.2:8). செய்தியைக் **கேட்பவர்கள் பக்திவிருத்தி யடைவதற்கேதுவாகப்** பேசவேண்டும். செய்தியைக் கேட்பவர்கள் 'எவ்வளவு சிறப்பான பேச்சாளர்' என்று சொல்வதைவிட 'எவ்வளவு நல்ல தேவன்' என்று சொல்லும்படி பேசவேண்டும். சிறப்பான பிரசங்கம் செய்வதற்காக அல்ல, சிறப்பான இரட்சகரை உயர்த்துவதற்காகப் பேசுங்கள்.

7. **வசனத்தோடும், வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் நற்செய்தி அறிவிக்கவேண்டும்** (1 தெச.1:5). அவ்வாறு அளிக்கப்படாத செய்தியால் என்ன பயன்? கர்த்தராகிய இயேசு அதிகாரத்தோடு பேசினார் (மத்.7:28,29). அவரை உத்தமமாகப் பின்பற்று கிறவர்கள் இவ்வாறு பேசும்படி எதிர்பார்க்கப்படுவது சரியன்றோ! வயது, கல்வி, வேத அறிவு, அனுபவம், சபைத்தலைமை போன்றவை அல்ல, **தேவன் அளிக்கும் அதிகாரத்தோடு** பேசவேண்டும். கட்டுரைகளைப் போன்ற சொற்பொழிவுகள் அல்ல, மக்களை இயேசுவின் நாமத்தில் கட்டவிழ்க்கும் இடி முழக்கங்களே தேவை.

8. மக்களைப் பிரியப்படுத்துகிறவராகப் போதிக்காமல் **தேவனுக்குப் பிரியமுண்டாகப்** போதிக்கவேண்டும் (1 தெச.2:3–4). நீங்கள் சபையில் செய்தி அளிக்கும்போது உங்கள் வாயிலாக, உங்களைக் கேட்கும் **ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஆவியானவர் பேசவேண்டும்.** இதற்கு ஆவியானவரின் வழி நடத்துதலும் ஊக்கமான ஜெபமும் அவசியம். இவ்வாறு அளிக்கும் செய்தியே தேவன் அளிக்கும் செய்தியாகும். ஒவ்வொரு செய்தியை அளிக்கும் முன்பாகவும் தேவனுடைய காலடியில் நேரம் செல விடாவிட்டால் செய்தி சிறப்பாக அமையாது. பிறர் எழுதிய நூல்களிலிருந்து சொற்பொழிவுகளைத் தயாரிப்பதைவிட தேவனுடைய சமுகத்தில் காத்திருந்து பெறும் செய்தியே தேவையானது. நல்ல சொற்பொழிவு அல்ல, தேவனின் செய்தியை ஆவியானவரின் பெலத்தினால் நீங்கள் பேச வேண்டும். **சொற்பொழிவு அல்ல, தேவ செய்தியளிப்பதே தேவையானது.**

9. "நான் அளிக்கும் செய்தியினால் என்ன பயன்?" என்று சிந்தித்து அவ்விதம் **பயனுண்டாகும்படி பேசவேண்டும்.** ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்போல பயனற்ற, நோக்கமற்ற, மக்களின் வாழ்க்கையைத் தொடாதவற்றைப் பேசி நேரத்தை வீணாக்காதிருங்கள் (1 கொரி.9:26).

**10.** நீங்கள் **போதிக்கிறவற்றைக் கைக்கொள்ளவேண்டும்** (மத்.5:19). வேதத்திலுள்ள பல சத்தியங்களை நேசிக்கவேண்டும். அவற்றை ஆவியானவரின் உதவியோடு நன்கு கற்கவேண்டும். அவற்றை வாழ்க்கையில் அனுபவிக்கவும் பயன்படுத்தவும்வேண்டும். அவற்றை, ஏற்ற நேரத்தில் பொருத்தமான மக்களுக்கு முழு நிச்சயத்துடன் போதிக்கத் தயாராக வேண்டும். ஆவியானவர் ஏவும்போது ஆவியானவரின் பெலத்தினால் அவற்றைப் போதிக்கவேண்டும். நீங்கள் கடைப்பிடிக்காத வற்றைப் போதித்தால் பரலோக அரசிற்குச் சென்றால் அங்கு சிறியவரா யிருப்பீர்கள். ஒரு ஊழியர் சிறியவராயிருந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

**11.** நல்ல நடையில், சிறந்த சொற்களைப் பயன்படுத்தி, சிறப்பான தமிழில் பேசுவதையே நோக்கமாகக் கொள்வது சரியல்ல. சிறந்த தமிழில் பேசுவது தவறல்ல. **மக்கள் புரிந்து கொள்ளும் அளவிற்குப்** பேசவேண்டும்.

**12.** தேவபக்தியின் வேடந்தரித்து ஊழியர் என்று காண்பிக்கும்படியான ஆடை அணிந்து, அதின் பெலனை மறுதலிக்காதீர் **(2 தீமோ.3:5)**. சிறப்பான ஆடை அணிவது தவறல்ல. ஊழியத்தில் ஆவியானவரின் பெலன் செயல் படுவது அதைவிட முக்கியமானது. தேவனுடைய அரசு பேச்சிலல்ல, பெலத்தில் உள்ளது **(1 கொரி.4:20)**. **ஆவியின் பெலத்தினால்** ஆவியின் வரங்களால் நிரம்பி ஊழியம் செய்ய வேண்டும்.

**13.** செய்திக்கு **அமைப்பு** தேவை. தொடக்க ஜெபம், தலைப்பு, நோக்கம், முகவுரை, வேத ஆதாரம், விளக்கங்கள், சில உட் தலைப்புகள் (குறிப்புகள்), எடுத்துக்காட்டுகள், முடிவுரை, முடிவு ஜெபம் என்பது ஒரு பொதுவான அமைப்பு. அவ்வப்போது இதைச் சற்று மாற்றிக்கொள்ளலாம்.

ஒரே விதமான, ஒரே அமைப்பையுடைய பிரசங்கத்தையே ஒவ்வொரு முறையும் பேசுவது நல்லதல்ல. பல வகையானவை **(variety)** தேவை. நற்செய்தி, தியானம், உபதேசம், வேதப்பகுதி ஆராய்ச்சி, கண்டித்து உணர்த்துதல், சீர்திருத்துதல், நீதியைப் படிப்பித்தல் போன்ற பலவகையான செய்திகள் அளிக்கவேண்டும்.

முகவுரையும் தொடக்க ஜெபமும் சுருக்கமாக இருக்கவேண்டும்.

பிரசங்கத்தின் முடிவு மிகவும் முக்கியமானது. குறிப்பான, புரிந்து கொள்ளக்கூடிய, கடைப்பிடிக்கக்கூடிய, வேதத்திற்குரிய தீர்மானம் எடுக்கும்படி முடிப்பது சிறந்தது. செய்தியின் முக்கியமான கருத்தை வலியுறுத்துவது அவசியம்.

செய்தியின் இறுதியில் ஜெபிப்போம் என்று கூறிவிட்டு அதன்பின் நீண்டநேரம் பேசக்கூடாது. சுருக்கமாக, தீர்மானம் எடுக்கும்படி வலியுறுத்தி அதன்பின் ஜெபிக்கவேண்டும். ஜெபம் மிகவும் நீளமாக இல்லாமல் சுருக்கமாக இருக்கவேண்டும்.

14. உள்ளத்தில் உணர்ந்து பேசவேண்டும்.

**மனதுருக்கம் இருப்பதைப்போன்று நடிக்கக்கூடாது.**

பிரபலமான ஊழியரைப்போன்று நடிப்பது சரியன்று. அவரது குரலைப்போல, பேச்சைப்போல போலியாகப்பேசுவது நல்லதல்ல. உங்களுடைய பாணியில் பேசுங்கள்.

15. பலருடைய செய்திகள், நூல்கள் போன்றவற்றிலிருந்து நீங்கள் கேட்ட கருத்துகள் உங்கள் செய்தியில் இடம்பெறலாம். ஆனால் அவற்றை நன்கு சிந்தித்து, சீரணித்து, சீரமைத்து, உங்கள் பாணியில் பேசவேண்டும். இன்னொருவருடைய செய்தியை அப்படியே **நகல் (Copy) எடுத்ததுபோன்று பேசக் கூடாது.**

**16. தொடர் செய்திகள்** அளிக்கலாம். அதாவது ஒரு தலைப்பின் கீழ் தொடர்ந்து பல நாட்கள் பேசலாம். அவ்வாறு பேசும்போது ஒவ்வொரு செய்தியும் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும். மேலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவும், தலைப்பைச் சார்ந் திருப்பதாகவும் இருக்கவேண்டும். இறுதியில் அத்தலைப்பைப் பற்றிய முழு சத்தியங்களையும் அந்தத் தொடரில் கூறி முடித்தல் சிறந்தது. ஒவ்வொரு தடவையும் அதற்கு முந்தியவற்றை மிகவும் சுருக்கமாகக் கூறலாம்.

17. மக்களுக்கு ஏற்கெனவே **நன்கு தெரிந்தவற்றைப் பேசுவது தேவையற்றது.** நீங்கள் கர்த்தருக்குள் பெலமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று ஒருவர் தமது செய்தியின் நோக்கத்தைக் கூறினார். இது யாவருக்கும் தெரிந்ததுதான். இதற்கு மாறாக, 'கர்த்தருக்குள் பெலமுள்ளவர்கள்' என்றால் என்ன பொருள், எவ்வாறு அப்படி நாம் இருக்கலாம், அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன, அதனால் வரும் நன்மைகள் எவை என்பவற்றைப் பேசியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

ஆவியானவரின் நடத்துதலினால் பேசவேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும். எவ்வளவு நேரம் என்பது செய்தியின் தரத்தைப் பொறுத்தது.

**18. உபதேசமும் வாழ்க்கைப் பயன்பாடும்** ஒவ்வொரு செய்தியிலும் இருப்பது அவசியம்.

19. கோபத்துடனும் வெறுப்புடனும் அல்ல, **அன்புடன்** செய்தியை அளிக்கவேண்டும்.

**20. எடுத்துக்காட்டுகள், விளக்கங்கள்** போன்றவற்றைக் கவனமாகப் பயன்படுத்தலாம். பொருத்தமானவற்றையே பயன்படுத்தவேண்டும். வேதத்திலுள்ள எடுத்துக்காட்டுகளை பயன்படுத்துதல் நல்லது.

21. **நகைச்சுவை** நல்லதுதான். ஆனால் அளவிற்கதிகமாகப் பயன்படுத்தி ஆவிக்குரிய சூழ்நிலையைப் பாழாக்கக்கூடாது. ஏற்றநேரத்தில் பொருத்தமாகப் பயன்படுத்தலாம். ஒரு கோமாளிபோன்று நடிப்பது தேவையற்றது.

22. வாலிபர், வயோதிபர், திருமணமாகாதவர், புதிதாகத் திருமண மானவர்கள், வாழ்க்கைத் துணையை இழந்தவர் போன்ற **யாவரையும் கருத்திற்கொண்டு** பேசவேண்டும்.

23. **மக்களைப் பார்த்து** பேசவேண்டும். பின் சுவரையோ, கூரையையோ பார்த்துப் பேசக்கூடாது. அடிக்கடி ஒரு குறிப்பிட்ட நபரை அல்லது ஒரு சிலரை மட்டும் பார்த்துப் பேசுவது நல்லதல்ல.

24. தேவைப்பட்டால் மட்டுமே **எபிரேய, கிரேக்க சொற்களைக்** கூறி விளக்கம் அளிக்கலாம்.

25. உங்களுக்குப் பிடிக்காத நபரைத் **தாக்குவதற்கு** செய்தியைப் பயன்படுத்தலாகாது.

26. பேசுகிறவர் **தம்மைப் பற்றிப் பெருமையாகப்** பேசுதல் கூடாது. சாட்சி கூறவேண்டியதானால் கர்த்தரின் மகிமைக்காகவும் கேட்போருக்குப் பயனளிப்பதற்காகவும் கூறவேண்டும்.

27. நம்மிடம் ஜெபிக்குமாறு கேட்டுக்கொண்டவர்களின் **இரகசியங்களை** வெளியிடக்கூடாது.

28. **பாவத்தைக் கண்டித்து உணர்த்தி** மனந்திரும்பச் செய்வது அவசியம். ஆனால் யாரையேனும் “நரகத்திற்குத்தான் செல்வார்” என்று நியாயந்தீர்க்காதிருங்கள் (ரோம.14:13).

# 17. எவற்றைப் போதிக்கலாம்?

**1.** திருமுழுக்கு யோவானும் இயேசுவும் கொடுத்த முதல் செய்தி **'மனந்திரும்புங்கள் பரலோக அரசு சமீபமாயிருக்கிறது'** என்பதே (மத்.3:2; 4:17). எனவே இச்செய்தி அடிக்கடி பேசப்படவேண்டும். சுவிசேஷத்தைப் (நற்செய்தியைப்) பற்றி அல்ல, சுவிசேஷத்தைப் பேசுங்கள்.

**2.** 'மறுபடியும் பிறவாத எவனும் தேவனுடைய அரசைக் காணமாட்டான்' என்று கர்த்தர் மிகவும் வலியுறுத்தியுள்ளார் (யோவா.3:3). எனவே, சபைமக்கள் ஒவ்வொருவரையும் **மறுபடியும் பிறக்கும் அனுபவத்திற்குள்** நடத்துவதும் அதைக் குறித்துப் பேசுவதும் உங்கள் தலையாய கடமை. இதைச் சரிவர செய்வதற்கு "வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?" என்ற நூலின் முகவுரையிலிருந்து ஆறாவது அதிகாரம் வரை படித்துப் பயன்படுத்துங்கள்.

**3.** மேலும், 'தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறவாத எவனும் தேவனுடைய அரசிற்குள் பிரவேசிக்கமாட்டான்' என்பதையும் கர்த்தர் மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளபடியால், **தண்ணீர் திருமுழுக்கு பெறுவதற்கும், ஆவியானவரின் திருமுழுக்கு பெறுவதற்கும் வழிநடத்துங்கள்** (யோவா.3:5). இவற்றைச் செய்வதற்குத் தவறினால் கர்த்தருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்.

**4. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பிரசங்கியுங்கள்** (1கொரி.2:2). உங்களைக் குறித்து மேன்மை பாராட்டாமலிருக்கக் கவனமாயிருங்கள் (2 கொரி.4:5). இயேசுவே கிறிஸ்து என்பதை விளக்கமாகப் போதியுங்கள் (அப்.5:42). அவரைச் சந்திப்பதற்கே மக்கள் ஆலயத்திற்கும் கூட்டங்களுக்கும் வருகின்றனர். உங்கள் செய்தியின்மூலம் மக்கள் அவரைச் சந்திப்பதே உங்கள் நோக்கமாயிருக்கவேண்டும்.

**5.** விசுவாசத்தைக் குறித்துப் போதிப்பது மிகவும் அவசியம். **விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கேதுவானவற்றைப்** பேசவேண்டும் (1 தீமோ.1:3). பெயரளவான விசுவாசத்தோடில்லாமல் விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கவும் (தீத்.1:14), மகா பரிசுத்தமான விசுவாசம் சோதிக்கப்படும்போது நிலைநிற்கவும் (1 பேது.1:7), மகா பரிசுத்த விசுவாசத்தில் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் (யூதா 20) போதிப்பது அவசியம். கிரியையில்லாத விசுவாசம்

செத்தது (யாக்.2:14–26) என்பதால், விசுவாசத்தைச் செயலில் காட்டுமாறு போதிக்கவேண்டும்.

6. விசுவாசிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் பலர் நல்மனச் சாட்சியுடையவர்களாயிருப்பதற்குத் தவறுகின்ற காலம் இது. **சுத்தமான இருதயமுள்ளவர்களாயிருக்கவும்,** மாயமற்ற (வெளித்தோற்றம் மட்டுமின்றி முழு உள்ளத்தோடும்) விசுவாசமுள்ளவர்களாயிருக்கவும், இவற்றின் வாயிலாகப் பிறர்மீது அன்பு செலுத்தவும் போதிப்பது அவசியம் (1 தீமோ.1:5). **மாய்மாலத்தைக் கண்டித்து உணர்த்தவேண்டும்.**

7. **நற்செயல்கள் செய்யும்படி போதிப்பது** மிகவும் அவசியம் (கலா.6:7–10; எபே.2:10; தீத்.3:1,8). நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் தொடர்ந்து செய்யும்படி உற்சாகப்படுத்தவேண்டும் (2 தெச.3:13). யாவருக்கும் மன்னிக்கும்படி போதிக்கவேண்டும்.

8. **பாடுகளைச் சகிக்கும்படி** போதிக்கவேண்டும் (2 தீமோ.2:11–14). ஏனெனில், நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய அரசில் பிரவேசிக்கவேண்டும் (அப்.14:22) என்றும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ.3:12) என்றும் வேதம் கூறுகிறது. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி.1:29), கிறிஸ்துவுடன் பாடுபட்டால் அவருடன் மகிமைப்படுவோம் (ரோம.8:17), உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் (1 தெச.3:3) என்பவற்றைப் போதிக்க வேண்டும்.

9. **அவபக்தியையும் இவ்வுலக இச்சைகளையும் வெறுக்கும்படியும், தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் வாழும்படியும், கர்த்தராகிய இயேசுவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும்படியும் போதிக்கவேண்டும்** (தீத்.2:11–15). பூமியிலுள்ளவற்றை அல்ல, மேலானவற்றை நாடும்படி போதிப்பது அவசியம் (கொலோ.3:1–3).

10. அரசிற்கு அடங்கியிருக்கவும், நற்செயல்கள் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவரையும் அவதூறாய்ப் பேசாமலிருக்கவும், சண்டை பண்ணாமலிருக்கவும் பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனிதருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் நினைப்பூட்டவேண்டும் (தீத்.3:1–2). **கனிதரும் வாழ்க்கையின்** அவசியத்தைக் குறித்துப் பேசவேண்டும் (யோவா.15:16).

**11. ஊக்கமாக ஜெபிக்கும்படி** கூறவேண்டும் **(1 தீமோ.2:1–4).** இயேசு ஒருவரே மத்தியஸ்தர் என்பதால் **(1 தீமோ.2:5–6)** அவரது பெயரை மட்டும் பயன்படுத்தி பிதாவை நோக்கி ஜெபிக்கக் கவனமாயிருக்கும்படி போதிக்க வேண்டும் (யோவா.16:23,24).

**12.** இயேசுவின் மூலமாகப் பரிசுத்த ஆவியினாலே பிதாவிடம் சேர்ந்து (எபே.2:18), **ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவும்** (யோவா.4:24), **ஆவியினாலே ஜெபிக்கவும்** போதிக்கவேண்டும் (எபே.6:18; யூதா 20).

**13.** தங்களிலுள்ள நம்பிக்கையைக் குறித்து **மற்றவர்களுக்குக் கூறுவதற்கு** விசுவாசிகளுக்குக் **கற்றுக்கொடுக்கவேண்டும்** (1 பேது.3:15).

**14.** இவ்வுலகத்தில் செல்வம் உடையவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர் களாயிருக்கக் கூடாது என்றும், நிலையற்ற **செல்வத்தின் மீது நம்பிக்கை வைக்காமல்** நமக்குத் தாராளமாகத் தருகிற தேவன் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும், நன்மை செய்யவேண்டும் என்றும், நற்செயல்கள் நிறைந்தவர்களாயிருக்கவேண்டும் என்றும், **தாராளமாய்க் கொடுக்கிறவர் களாயிருக்கவேண்டும்** என்றும், மற்றவர்களுடன் தங்கள் பொருட்களைப் பகிர்ந்துகொள்ளத் தயாராயிருக்கவேண்டும் என்றும், பரலோகத்தில் செல்வத்தைச் சேர்த்து வைக்கவேண்டும் என்றும், இதன் வாயிலாக நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியும் போதிக்கவேண்டும் **(1 தீமோ.6:17–19).**

**15.** பொருளாசை நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம். இயேசுவைப் பின் பற்றுகிறவர்களுக்கு வளமான வாழ்வு (செல்வப்பெருக்கு) உண்டாகும் என்று போதிக்கும் அநேகர் இக்காலத்தில் இருக்கின்றனர். இப்போதகத்தைக் கேட்பதினால் பலர் தங்களுக்கு வீடு, வாகனம், நிலங்கள் போன்ற இவ்வுலகத் திற்கானவற்றை நாடும்படி தூண்டப்படுகிறார்கள்.

'கர்த்தருடைய பிள்ளைகள் ஏழ்மையில் இருக்கவேண்டியது இல்லை' என்று இவர்கள் தவறாகப் போதிக்கின்றனர். கர்த்தர் நமது அன்றாடகத் தேவைகளைச் சந்திப்பது என்பது உண்மை. மிகப் பெரிய வீடு, கார், வங்கியில் பெரும் தொகைபோன்ற உலகத்தின் செல்வத்தை அளிப்பேன் என்று கர்த்தர் உரைக்கவில்லை. மேலும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஏழ்மை இருக்காது என்று கூறுவது பொய். ஏனெனில் மக்கெதோனியாவிலிருந்த சபை மக்கள் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்ததை 2 கொரி.8:1–4ல் காண்கிறோம். மேலும் எருசலேமிலிருந்த சபை மக்களுக்கு ஏழ்மை நிலை இருந்ததால் பவுல் அவர்களுக்காகத் தர்மசகாயமாகப் பணம் சேகரித்து, எருசலேமிலுள்ள

பரிசுத்தவான்களுக்குள்ளே இருந்த தரித்திரருக்குக் கொண்டுசென்றதை ரோம.15:25–26; 1 கொரி.16:1–3; 2 கொரி.9:1, 12–13 போன்ற பகுதிகளில் காணலாம்.

வேதமோ '**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்**' என்று அறிவுறுத்துகிறது (கொலோ.3:1,2). 'உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை' (யாக்.4:4) என்பதால் வளமான வாழ்வைப் பற்றிப் பிரசங்கிப்பது மக்களைப் பரலோக சிந்தையிலிருந்து திசை திருப்பும் முயற்சியாகும். நீங்களோ, '**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது**' (1 தீமோ.6:10) என்பதைத் தெளிவாக உறுதியுடன் போதியுங்கள். (1 தீமோ.6:6–10) பகுதியை அடிக்கடி சபையில் நினைவு படுத்துங்கள்.

**வளமான வாழ்வு (Prosperity gospel) செய்தியாளர்கள் மக்களை இவ்வுலகப் பொருள் மீது ஆசை வைக்கும்படி தூண்டுகிறார்கள். உலகத்தின் மீது ஆசை வைப்பது நரகத்திற்கு வழி நடத்தும்.**

'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் தாரும்' என்று ஜெபிக்குமாறுதான் கர்த்தர் கற்றுக்கொடுத்தார் (லூக்.11:3).

16. பல கிறிஸ்தவர்களுக்கு வேதத்தின் அடிப்படை உபதேசங்கள் தெரியாது. செத்த கிரியைகளுக்கு நீங்கலாக (பாவத்தை விட்டு) மனந் திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், (இரட்சிப்பு, தண்ணீர்த் திருமுழுக்கு, ஆவியானவருக்குள் திருமுழுக்கு, ஆகியவற்றிற்கான) முழுக்குகளுக்கடுத்த உபதேசம், கைகளை வைத்தல், மரித்தோரின் உயிர்த் தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு ஆகிய **மூல உபதேசங்கள்** (எபி.6:1–2) கிரமமாகப் போதிக்கப்படவேண்டும். மேலும் நாம் விசுவாசிக்கவேண்டிய கருத்துகள் யாவற்றையும் போதிக்கவேண்டும். கர்த்தர் கற்பித்த யாவற்றையும் போதிப்பது உங்கள் கடமை (மத்.28:19).

17. **விசுவாசத்தினாலாகும் நீதியைக்** குறித்து அடிக்கடி பேசுங்கள் (ரோம.1:17; 3:22–28, 30; 4:5, 23–24; 5:1; 9:30–31; 10:3–5; பிலி.3:9). விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற உண்மை மிகவும் கருத்தாகப் போதிக்கப்படவேண்டும் (ஆப.2:4; ரோம.1:17).

18. **1 தெச.5:11–25ஐ வலியுறுத்திப் பேசுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை சபையில் வாசிக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளையை 1 தெச.5:27 கூறுகிறது. ஆண்டிற்கு ஒரு முறையேனும் இதைச் செய்யுங்கள். நீங்கள்

1 தெசலோனிக்கேயர் நிருபம் முழுவதையும் கருத்தாகத் தியானித்து சபை மக்களுக்குப் போதியுங்கள்.

**19. கர்த்தரின் வருகையைக்** குறித்தும் அதற்கு **ஆயத்தப்படுவதைக்** குறித்தும் அடிக்கடி பேசுங்கள்.

**20. ஆவியானவருக்கு எதிரான பாவங்களுக்கு** இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு இல்லையென்பதால், இதைக் குறித்து சபையாரை எச்சரித்துப் பேசுதல் மிகவும் தேவையானது (மத்.12:31–32; மாற்.3:28–29).

**21. ஆவியின் வரங்கள், ஆவியின் கனி** போன்றவற்றையும் விளக்க வேண்டும். இவற்றைத் தங்கள் வாழ்வில் பெற்றிருக்க வழிநடத்தவேண்டும்

**22. தேவனுடைய பண்புகளான** அன்பு, பரிசுத்தம், கிருபை, ஞானம் போன்றவற்றையும் அவரது **மகத்தான செயல்களையும்** குறித்து பேசலாம். தேவனை நேசிக்கவும், அவரைத் தேடவும் வழிநடத்தலாம். இயேசுவைப் போன்று வாழ்வதற்குக் கற்றுக்கொடுக்கலாம்.

23. கர்த்தருடைய மக்களை **ஆற்றித் தேற்றுவதற்காகவும்** போதிக்க வேண்டும் (ஏசா.40:1).

**24. கேட்கும் மக்களின் தேவைக்கேற்ப, தரத்திற்கேற்ப** பேசவேண்டும். இரட்சிக்கப்படாதவர்களிடம் சீடத்துவத்தைப் பற்றியும் இரட்சிக்கப் பட்டவர்களிடம் மனந்திரும்புதல் பற்றியும் பேசுவது பயனளிக்குமா?

25. **அன்பைப்**பற்றி பல ஆயிரம் பக்கங்கள் கொண்ட நூல்கள் எழுதினாலும் அதை எழுதி முடியாது.

உண்மையான அன்பு நம்மிடத்தில் இருப்பதாக. தேவனிடத்திலும் பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும் என்பதே பிரதான கற்பனைகள் (மத்.22:37–40). அன்புகூருகிறேன் என்று சொல்வது சிறந்தது அல்ல. செயலில் காட்டாவிட்டால் அந்த அன்பு பயனற்றது. செயலினால் அன்பு செலுத்தும்படி கற்றுக்கொடுக்கவேண்டும். 'கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே' என்பதை வலியுறுத்திப் பேசவேண்டும் (1 தீமோ.1:5).

**மாய்மாலமான அன்பை** அநேக இடங்களில் காண்கிறோம். தனது குரலை மாற்றி மிகவும் நெகிழ்ந்த குரலில் 'அண்ணன்' என்று அழைக்கும் நயவஞ்சகர்கள் உண்டு. அவ்வாறு இருக்கலாகாது என்று போதியுங்கள் (2 கொரி.6:6).

மேலே கூறப்பட்டுள்ளவற்றைப் போன்ற **ஆரோக்கியமான எல்லா உபதேசங்களையும் கற்றுக்கொடுக்கவேண்டும். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நீங்கள் மறைத்துவைக்காமல், எல்லா வற்றையும் உங்கள் சபை மக்களுக்கு அறிவித்தீர்களானால் நீங்கள் அவர்களின் இரத்தப்பழிக்கு நீங்கி சுத்தமாயிருக்கிறீர்கள் (அப்.20:26–27). அவ்வாறு செய்யாவிடில்?...**

**மனந்திரும்பவும், பரிசுத்தமாக வாழவும், ஊழியம் செய்யவும், தேவனை அறிந்துகொள்ளவும் வழிநடத்தாமல் மக்கள் பொழுது போக்குவதற்காகவோ, சற்று நேரம் சிரிப்பதற்காகவோ, கதை கேட்கவோ மட்டும் பேசுவது வீண். கிறிஸ்துவைப் பேசாத செய்தி பயனற்றது.**

**குறிப்பு:** உபதேசங்களைக் கற்றுக்கொள்வதற்கு 'வாழ்வியல் விளக்க வேதாகமம்' என்ற வேதாகமத்தில் உள்ள விளக்கக் கட்டுரைகளைக் கருத்தாகப் படியுங்கள். இவ்வேதாகமம் எல்லா கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

# 18. போதிப்பதில் தவிர்க்க வேண்டியவை

**1. வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது** (1 தீமோ.1:3). வேதத்தில் கூறப்பட்டுள்ள அற்புதங்களைச் சந்தேகிக்கும்படியாகச் சிலர் போதிக்கின்றனர். இக்காலத்தில் அற்புதங்கள் கிடையாது என்றும் கூறுகின்றனர். அற்புதங்களை நம்பாத யாராயினும் அவர் தேவனை நோக்கி வேண்டுதல்செய்வது (ஜெபிப்பது) மாய்மாலமாகும். அற்புதத்தை நம்பாதவனின் ஜெபமும் அவன் கூறும் ஆசீர்வாதமும் பொருளற்றவை. இப்படிப்பட்டவர்களை ஜெபிக்கவோ, ஆராதனை நடத்தவோ, ஆசீர்வாதம் கூறவோ அனுமதிப்பது சரியா?

யோனா தீர்க்கதரிசி மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்ததை ஏற்றுக்கொள்ளாத போதகர்கள், 'வேதாகம வல்லுநர்கள்', வேதத்தை விளக்கம் செய்பவர்கள், வேதாகமக் கல்லூரி ஆசிரியர்கள், பிற 'ஊழியர்கள்' பலர் உண்டு. யோனாவைப் பற்றி இயேசு கூறியுள்ளதை (மத்.12:40) இவர்கள் மறுதலிப்பதால், 'இயேசு கூறியது பொய்' என்று கூறுகிறார்கள். இவ்வாறு கூறுகிறவர்கள் அந்திக் கிறிஸ்துவின் ஆவியின் கையாட்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லையா?

வேதத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களை மறுத்துப் பேசும் பல கிறிஸ்தவ தலைவர்கள், வேத போதகர்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, தானியேல் தீர்க்கதரிசி எழுதிய தீர்க்கதரிசனங்களில் பல அவர் கூறியதற்கு 400 ஆண்டுகளுக்குள் நிறைவேறின. இவர் கிறிஸ்துவுக்கு முன் ஏறத்தாழ 630 – 520 (கி.மு.) ஆண்டுகளில் வாழ்ந்தவர். இவர் நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்டது கி.மு.606ஆம் ஆண்டு. தானியேலின் நூல் கி.மு.164இல் எழுதப்பட்டது என்று போதிக்கும் 'வேதாகம வல்லுநர்களும்' வேதாகமக் கல்லூரிகளும் உலகெங்கும் பெருகியுள்ளன. அதாவது தானியேல் தீர்க்கதரிசியின் நூல் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டது என்பதை இவர்கள் மறுக்கிறார்கள். 'தானியேலின் பெயரில் யாரோ ஒருவர் தானியேலின் காலத்திற்கு சுமார் 350 ஆண்டு கழித்து வரலாறாக எழுதியுள்ளார்' என்றும் இவர்கள் கூறுகின்றனர். தானியேல் எழுதிய தீர்க்கதரிசனங்களில் பல கி.மு.164இற்குள் நிறைவேறியபடியால் இவ்விதம் கூறுகின்றனர். அதாவது, தானியேலின் புத்தகம் தீர்க்கதரிசனம்போன்று எழுதப்பட்ட ஏமாற்றுதல் என்று மக்களைக் குழப்புகிறார்கள். 'ஆவியானவரின் ஏவுதலால் ஒரு

மனிதன் தீர்க்கதரிசனம் உரைக்கமுடியும்' என்பதை மக்கள் நம்பக்கூடாது என்று சாத்தான் இச்சதித்திட்டத்தை இவர்கள் மூலம் செய்துள்ளான். இவர்கள் கூறுவது முட்டாள்த்தனமானது. ஏனெனில் தானியேலின் நூல் கி.மு.285இல் கிரேக்க மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டது. அதாவது தானியேல் நூல் எழுதப்பட்டது என்று இவர்கள் கூறும் ஆண்டிற்கு 120 ஆண்டுகளுக்கு முன்பே அது கிரேக்க மொழியாக்கம் செய்யப்பட்டது. 'ஒரு நூல் எழுதுவதற்கு 120 ஆண்டுகளுக்கு முன்பே அது மொழிபெயர்க்கப் பட்டது' என்பது முட்டாள்த்தனமானது அல்லவா! எனவே, தானியேல் நூல் கி.பி.164இல் எழுதப்பட்டது என்று கூறுகிறவர்கள் சாத்தானின் கையாட்கள், முட்டாள்கள், வேதப்புரட்டர்கள், துரோகிகள்.

எருசலேமில் உள்ள பெதஸ்தா குளத்தில் பல நோயாளிகள், எப்பொழுது குளத்துநீர் தேவதூதனால் கலக்கப்படும் என்று காத்திருந்தனர் என்பதும் அவ்வாறு கலக்கப்படும்போது முதலாவது அதில் இறங்குகிறவன் என்ன நோயினால் பீடிக்கப்பட்டிருந்தாலும் முற்றிலும் குணமடைவான் என்பதும் வேதம் கூறும் உண்மை (யோவா.5:2–4). இதைக் குறித்துப் பேசும்போது அந்தக் குளத்தின் தண்ணீரின் கீழ் இருந்த மண்ணில் வேதியியல் பொருள் **(Chemical)** இருந்தது என்று விளக்கம் அளிக்கின்றனர். அற்புதத்தை நம்பாதபடியால் இப்படிக் கூறுகின்றனர். அற்புதத்தை நம்பாத எந்த 'ஊழியனும்' ஜெபம்பண்ணுவது மாய்மாலம்.

அ) இவ்வாறு யாவரும் குணமாகும் வேதியியல் பொருள் உண்டா? அப்பொருள் எங்குள்ளது? அது பெதஸ்தா குளத்தில் இருந்தால் அதைத் தோண்டி எடுத்து, ஆராய்ச்சி செய்து, உலக மக்கள் அனைவரையும் குணமாக்கலாமே?

ஆ) இதைக் கலக்கினால் முதலில் தண்ணீரில் இறங்கும் மனிதன் மட்டும் குணமடைந்தது ஏன்? அவருக்குப் பின்னால் உடனடியாக இறங்கியவர்களும் குணமாகவேண்டுமல்லவா?

இ) ஒவ்வொரு நோயாளியும் ஒரு கம்பைக் கொண்டு நீரைக் கலக்கி உள்ளே இறங்கலாமே? ஏன் தேவதூதன் வரும்வரை காத்திருக்க வேண்டும்?

என்பவற்றை இவர்கள் சிந்திக்கவில்லையோ? அற்புதங்களை நம்பாதவர்கள் தேவனின் வல்லமையையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட அவரது ஆற்றலையும் மறுதலிக்கின்றனர். தேவ பக்தியின் வேடத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிற இவர்களை விட்டு விலகவேண்டும் என்று வேதம் கட்டளையிடுகிறது (2 தீமோ.3:5). தேவனுடைய ஆற்றலைச்

சந்தேகிக்கச் செய்யும், சாத்தானின் கையாட்களாகிய இவர்கள் போதகர்களாக இருந்தால் சபை ஆவிக்குரிய முன்னேற்றம் அடையுமா?

பஸ்காவை எங்கே ஆசரிக்க வேண்டும் என்று பேதுருவும் யோவானும் கேட்டபோது "நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனிதன் உங்களுக்கு எதிர்ப்படுவான், நீங்கள் அவனுக்குப் பின்சென்று அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும் போய், அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீடரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள். அவன் கம்பள முதலானவைகள் விரித்திருக்கிற பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான். அங்கே ஆயத்தம் பண்ணுங்கள்" என்று கர்த்தர் சொல்லி அனுப்பினார். அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள் (லூக்.22:8–13). இதைக் குறித்து விளக்கம் அளிக்கும் சிலர், இயேசு ஏற்கனவே யாவற்றையும் ஏற்பாடு செய்திருந்தார் என்று கூறுகின்றனர். எருசலேமில் தண்ணீர் சுமக்கும் பலர் இருந்தனர். எனவே சீடர்கள் ஏதேனும் ஒரு தண்ணீர்க்குடம் சுமப்பவனைப் பின்சென்றிருக்க முடியும். சீடர்கள் செல்லும் நேரத்தில் சரியான அந்த நபர் (தண்ணீர்க்குடம் சுமப்பவர்) வருவார் என்பதை இயேசு முன்னறிந்து கூறுவதை இவர்கள் மறுக்கின்றனர். இயேசுவின் தெய்வீகத்தை மக்கள் சந்தேகப்படும் விதத்தில் பேசுவது யார்? போதகரின் உடையில் இருந்து சபையின் போதகப்பீடத்தில் நிற்கும் இத்தகைய மக்களைப் பார்த்தால் 'சாத்தான் வேதம் ஓதுகிறது' என்று கண்டுகொள்ளலாம். இவ்விதமான பல கள்ளப்போதகங்கள் உண்டு. கவனமாகப் பேசுங்கள்.

வஞ்சக ஆவியின் தந்திரம் என்னவெனில் 'தான் கையாளும் மனிதன் மூலமாகப் பேசும்பொழுது அநேக உண்மைகளுடன் ஒரு சில பொய்களைக் கலந்து மக்களை விசுவாசத்திலிருந்து வழி விலகச் செய்வதாகும்'. பல பிரபலமான ஆன்மிகப் பேச்சாளர்களிலும் சிலர் இவ்விதமாக வஞ்சக ஆவியினால் நடத்தப்படுகிறார்கள். கவனமாக இருக்கவேண்டும். வேதத்தைக் கலப்படமாகப் பேசுகிறவர்களுக்குத் (2 கொரி.2:17) தண்டனை காத்திருக்கிறது (மல்.2:1–9).

**2. வேதத்திலுள்ள ஒரு வசனத்தை அல்லது ஒரு எடுத்துக்காட்டைக் கொண்டு ஒரு உபதேசத்தைக்** கூறுவது சரியன்று. மேலும், நாம் கூறும் கருத்திற்கு ஏற்ற பல வசனங்கள் இருந்தபோதிலும் ஒரே ஒரு வசனம் அதற்கு

எதிராக இருந்தாலும் நாம் கூறும் உபதேசம் சரியல்ல. எனவே வேதத்திலுள்ள எந்த வசனத்திற்கும் மாறாக இல்லாமல் வேதத்தின் வசனங்களின் அடிப்படையில் கூறப்படும் உபதேசமே ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

**3. ஆவிக்குரியதாகத் தோன்றும் யாவும் வேதத்தின்படி சரியாக இருக்க வேண்டியதில்லை.** ஆனால் வேதத்தின்படி இருக்கும் யாவும் ஆவிக்குரியவையே. எனவே, ஆவிக்குரியதாகத் தோன்றும் வேதத்திற்குப் புறம்பானவற்றை (பரிசுத்த சிரிப்பு, வாந்திபண்ணுதல் போன்றவற்றை) ஏற்றுக்கொள்ளவும் போதிக்கவும் கூடாது.

**4. தர்க்கங்களுக்கேதுவான கட்டுக்கதைகளைப் போதிக்கக்கூடாது** (1 தீமோ1:3; 4:7; தீத்.1:13). தரமான கருத்துகளை, சரியாக விளக்கக்கூடிய எடுத்துக்காட்டுகளை, வேதத்தின் அடிப்படையில், வேதவசனங்களைப் பயன்படுத்திப் போதிக்கவேண்டும்.

**5. வம்ச வரலாறுகளுக்கு முக்கியத்துவம் தருவது தேவையற்றது** (1 தீமோ.1:3).

**6. வாக்குவாதங்களை விட்டு விலகவேண்டும்** (2 தீமோ.2:14). ஆனால் வாஞ்சையாகக் கேட்பவர்களின் நியாயமான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கவேண்டும்.

7. டார்வினின் பரிணாமக் கொள்கை (படிமுறை வளர்ச்சிக் கொள்கை) போன்ற **தவறான அறிவியலை விட்டு விலகுவீராக** (1 தீமோ.6:20). டார்வினின் கொள்கை தவறானது என்று புரிந்து கொள்வதற்கு 'வாழ்வியல் விளக்க வேதாகமத்தில்' எழுதப்பட்டுள்ள கட்டுரை காண்க. பக்கம் 1879–1888.

**8. 'தீர்க்கதரிசனங்கள் ஒழிந்துபோயின, அந்நியபாஷைகள் ஓய்ந்து போயின, இக்காலத்தில் அவை கிடையாது' என்று போதிப்பது தவறு.** இதற்கான விளக்கத்தை அடுத்த அதிகாரத்தில் காண்க.

9. இரட்சிப்பும் ஆவியானவரின் அபிஷேகமும் ஒன்றுதான் என்று பேசுபவரும், திருமுழுக்கும் (ஞானஸ்நானமும்) ஆவியானவரின் அபிஷேகமும் ஒன்றுதான் என்று பேசுபவரும் இருக்கின்றனர். அப்.8:12–17 பகுதியைத் தியானித்துப் பாருங்கள். சமாரியர் விசுவாசித்தனர் (வ.12), திருமுழுக்குப் பெற்றனர் (வ.12). ஆனால் எருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட பேதுருவும் யோவானும் இவர்களைப் பார்த்தபொழுது இவர்கள் திருமுழுக்கு

(ஞானஸ்நானம்) பெற்றிருந்தபோதிலும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வில்லையென்று கண்டார்கள் (வ.15). இவர்கள் விசுவாசித்தபோது அல்ல, திருமுழுக்கு பெற்றபோது அல்ல, பேதுருவும் யோவானும் கைகளை வைத்தபோதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் (வ.17).

இவ்வாறே எபேசு சபையின் மக்கள் விசுவாசித்தபோது அல்ல, திருமுழுக்கு பெற்றபோது அல்ல, பவுல் அவர்கள் மீது கைகளை வைத்த போதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் (அப்.19:1–6).

**இரட்சிப்பும் ஆவியானவரின் அபிஷேகமும் ஒன்றுதான் என்பது தவறு என்பதற்கும் திருமுழுக்குபெறுவதும் அபிஷேகம் பெறுவதும் ஒன்றுதான் என்பது தவறு** என்பதற்கும் இந்த வேதப்பகுதிகள் ஆதாரங்கள் ஆகும்.

10. **திருமணம் செய்துகொள்ளக்கூடாது** என்றோ, சில உணவுப் பொருட்களை உண்ணக்கூடாது என்றோ **போதிக்கக்கூடாது** (1 தீமோ.4:2–6).

11. **உங்களைப் பற்றியே பேசுவது சரியன்று** (2 கொரி.4:5). சில வேளைகளில் தாழ்மையுடன் சாட்சி கூறலாம். உங்களை நீங்களே புகழவோ, மற்றவர்கள் உங்களைப் புகழவோ அனுமதிக்கக்கூடாது.

12. **மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி பேசுவது தவறு.** கர்த்தருடைய பிள்ளைகள் நியாயப்பிரமாணத்திற்குட்பட்டவர்களல்ல, கிருபைக்குட்பட்டவர்கள் (ரோம.6:14). நியாயப்பிரமாணத்தின் கிரியைக் காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள் (கலா.3:10), கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்திருக்கிறார்கள் (கலா.5:4). மோசேயின் பிரமாணத்தில் உள்ளவற்றில் பல பகுதிகள் புதிய ஏற்பாட்டில் மீண்டும் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் கைக்கொள்ளவேண்டும். இதைக்குறித்து நீங்கள் தியானிப்பதற்கான வேத வசனங்கள்: ரோம.3:19–22, 28; 4:14–15; 6:14–15; 7:6; 9:30–32; 2 கொரி.3:6–9,11,13; கலா.2:16–17,19,21; 3:10–11,13,23–26; 5:4,8,10; 5:4,8,10; எபே.2:15; கொலோ.2:14–16; எபி.7:12,18,19; 8:7,13; 10:1,8–9.

13. கிறிஸ்துவையும் பரலோகத்தையும் பற்றிப் போதிப்பதைவிட **உலகப்பொருட்களையும், பணத்தையும், வளமான வாழ்க்கையையும் பேசி,** மக்களின் மனதை இவ்வுல வாழ்க்கையை நோக்கித் திருப்புகிற அநேகர் இருக்கின்றனர். "தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு பின்பற்றவேண்டும்" என்ற கர்த்தர் கூறுகிறார் (லூக்.9:23; 14:27). இவர்களோ "வளமாக வாழவேண்டும" என்று கூறுகின்றனர். பூமியிலுள்ள

வற்றையல்ல, மேலானவற்றையே நாடுங்கள் என்றே போதிக்கவேண்டும் (கொலோ.3:1–2). உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவா.16:33).

**14. சடங்காச்சாரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, பாரம்பரியத்தினால் தேவனுடைய சத்தியத்தை அவமாக்குதல் தவறு** (மாற்.7:7). பல சபைப்பிரிவுகளில் கர்த்தருடைய பந்தியையும் சடங்காசாரமாகக் கைக்கொள்கிறார்கள். தகுதியின்றி அதில் பங்குபெறக்கூடாது என்ற வேதத்தின் எச்சரிப்பை (1 கொரி.11:27–32) ஒவ்வொரு தடவையும் கூறுங்கள்.

15. தாங்களாக, தங்களின் நிலைமைக்கேற்றபடி ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காக, அக்கருத்திற்கு எதிராக இருக்கும் **வசனங்களை ஒதுக்கிவிட்டு, தங்களின் கருத்தைக் கூறுவது தவறு.**

எடுத்துக்காட்டாக, அப்.2:6–11ஐ விளக்கம்செய்ய எடுத்துக்கொண்டு, அந்நியமொழிகளில் பேசினால் யாவருக்கும் புரியவேண்டும் என்று கூறி, அவ்வாறு புரியாவிட்டால் 'அது ஆவியானவரால் அருளப்பட்டது அல்ல' என்று கூறுகிற பலர் உண்டு.

அப்.2:6–11இல் கூறப்பட்ட நிகழ்ச்சி நடந்தபோது, 'உலகின் பல மொழிகளைச் சேர்ந்தவர்கள் அங்கு இருந்ததால் அவர்களுக்குப் புரிந்தது' என்பதை இவர்கள் கூறுவதில்லை.

1 கொரி.14:2இன்படி, அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசுகிறான், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறான் என்பதையும், 1 கொரி.14:14இன்படி, 'நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் கருத்து பயனற்றதாயிருக்கும் (நான் பேசும் அந்நிய பாஷை எனக்குப் புரியாது)' என்பதையும் இவர்கள் பேசாமல் இருட்டடிப்பு செய்கின்றனர்.

ஆவியானவரைப் பற்றியும் அவரது செயல்களைப் பற்றியும் அனுபவமில்லாதோர் அதைப் பற்றிப் பேசாமல் வாயை மூடிக்கொள்வது சிறந்தது (மத்.12:32).

# 19. போதகத்தில் தவறான முறைகள்

1. வேதத்திலுள்ள **தெளிவான சொற்களுக்குச் செயற்கையாகப் பொருள் கற்பித்தல்** ஒருவகை கள்ளப்போதகமாகும். வேதத்தில் உள்ள சொற்களுக்கு அது மற்ற நூல்களில் இருந்தால் என்ன பொருள் உண்டோ அந்தப் பொருளையே கொள்ளவேண்டும். இது பொதுவான விதி. நேரடியான பொருள் இன்றி உருவகங்களாக இருந்தால் அவற்றிற்கான விளக்கங்களை வேதத்தின் மற்றப் பகுதிகளுக்கேற்ப எடுத்துக்கொள்ளவேண்டும்.

2. **வேதத்தில் கூறப்பட்டுள்ள கருத்தை கூடியிருப்பவருக்கென்று தவறாகப் பொருத்திக்** கூறுதல் தவறான போதகமாகும். எசே.4:9 என்ற வேதப் பகுதியை விளக்கிய ஒருவர் "நாம் தியானித்த பகுதியில் ஆறு தானியங்கள் கூறப்பட்டுள்ளன. இன்று ஆறுபேர் கூடி இருக்கிறோம். எனவே இந்தத் தானிய வகைகள் நம் ஆறு பேரையும் குறிக்கின்றன," என்றார். இதைப் போன்ற விளக்கங்களை 'ஆவியானவர் கொடுத்தவை' என்று ஏற்றுக் கொள்ளும் அப்பாவி மக்களும் உண்டு. கூடியிருப்போரின் நிலைக்கேற்ப இவ்விதம் வேதத்தைத் தவறாகப் போதிப்பவர் அநேகர்.

3. **தனிப்பட்ட மனிதனின் காரியங்களைப் பொதுவாக்கிக் கூறுவது தவறான போதகங்களில் ஒரு வகையாகும்.** எடுத்துக்காட்டாக "லேவி கோத்திரத்தானாகிய கோராகு பாவம் செய்ததற்குக் காரணம் அவன் ரூபன் கோத்திரத்தானாகிய தாத்தான் அபிராமோடு தொடர்பு கொண்டதுதான்; ஏனெனில் இவர்களின் முற்பிதாவாகிய ரூபன் பாவம் செய்தவன்," என்று ஒருவர் கூறினார். இதில் உள்ள தவறு என்ன என்று கண்டுபிடிப்பது சற்று சிரமமானது. ரூபன் பாவம் செய்ததற்காக அவனுடைய கோத்திரத்தைத் தேவன் அழிக்கவில்லை. ரூபன் கோத்திரத்தாருடன் சேரக்கூடாது என்று யாருக்கும் தேவன் கட்டளை கொடுக்கவில்லை. ரூபன் கோத்திரத்தைத் தேவன் புறக்கணியாமல் பரலோகத்தில் அவர்களுக்கும் இடமளிப்பதை வெளி7:5இலிருந்து புரிந்துகொள்கிறோம். தனிப்பட்ட மனிதனாகிய ரூபனின் பாவத்தைக்கொண்டு அந்தக் கோத்திரமே பாவத்திற்குள்ளாகக் கிடக்கிறது என்ற பொருளுடன் பேசுவது தவறாகும். (கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களின் செயலை எண்.16ஆம் அதிகாரத்தில் காணலாம்).

4. **பொதுவான நிகழ்ச்சியைத் தனிப்பட்டவர்களுக்குப் பொருத்திக் கூறுவது** தவறாகும். இக்காலத்தில் பல சபைப் பிரிவுகள் இருப்பதை நாம்

அறிவோம். தவறான சில போதகங்களைப் பின்பற்றும் சபைப் பிரிவிலுள்ள ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படாதவர்கள் என்று கூறுதல் தவறாகும். தேவனுடைய கிருபையால் இக்காலத்தில் எல்லாச் சபைப்பிரிவினரிடையும் ஆவியானவர் செயல்பட்டு வருகிறார். நான் ஒருவன் மாத்திரம் மீந்திருக்கிறேன் என்று ஆண்டவரிடம் எலியா கூறியதற்கு, ஆண்டவர் "இஸ்ரவேலிலே பாகாலைப் பின்பற்றாத ஏழாயிரம்பேர் இருக்கிறார்கள்" என்று பதிலளித்தார் (1 இரா19:14,18). உலகிலுள்ள எல்லாச் சபைகளிலுள்ள மக்களும் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படும்படி வேண்டிக்கொள்ளுங்கள். எல்லாச் சபைகளிலும் ஆண்டவரின் பிள்ளைகள் உண்டு.

5. ஆண்டவர் சொல்லும் ஒரு காரியத்தை அதற்கு **ஒவ்வாத மற்றொன்றோடு பொருத்துதல்** தவறாகும். திருமணமானவன் அதன் பின்னர் ஓராண்டு காலம் போர் செய்யச் செல்லவேண்டாம் என்று தேவன் கூறியிருக்கிறார் (உபா.24:5). அவன் போரில் மரணமடைய நேரிட்டால் அவனுடைய இளம் மனைவி பரிதாப நிலையை அடைவதைத் தவிர்ப்பதற்காக தேவன் இவ்வாறு கூறியுள்ளார் என்று கருதலாம். இதை விளக்கம் செய்யும் தற்காலப் போதகர் ஒருலர், போரை ஊழியத்திற்கு ஒப்பிட்டு "திருமணம் ஆகி ஓராண்டு காலம் எந்த ஊழியத்திலும் ஈடுபடக்கூடாது" என்று கூறினார். இவ்வாறு கூறுதல் தவறு.

6. **உங்களுக்கு அடுத்ததல்ல என்று தேவன் கூறியிருக்கும் காரியத்தைக் குறித்துப் பேசுதல்** தவறாகும்.

எடுத்துக்காட்டு: இரண்டாம் வருகைக்குக் காலம் கூறுவதற்கு முற்படுபவர்கள் இக்காலத்தில் உண்டு. கி.பி.2000இல் இது நடக்கும் என்று கூறினார்கள். இதற்கு ஆதாரமாக ஆயிரம் ஆண்டுகள் கர்த்தருக்கு ஒரு நாள் போன்றது என்பதால் வரவிருக்கும் ஆயிரம் ஆண்டு அரசாட்சி ஏழாம் நாள் (ஒய்வு நாள்) என்றும், அதற்கு முந்திய மனிதனின் காலம் ஆறு நாட்களாகிய ஆறாயிரம் ஆண்டுகள் என்றும், அக்காலம் கி.பி.2000இல் முடிவடைகிறது என்றும் கூறினார்கள். இது தவறான போதகமாகும். மனிதனைத் தேவன் உருவாக்கியதினின்று கி.பி.2000வரை ஏற்கெனவே 6100 ஆண்டுகட்கு மேலாக ஆகிவிட்டது. கர்த்தர் சீக்கிரம் வருகிறார் என்பதற்கு அநேக அடையாளங்கள் உண்டு. அவை நிறைவேறி வருகின்றன. அவ்வடையாளங்களைக் குறித்துப் பேசலாமேயன்றி காலங்களைக் கணிப்பது ஆண்டவரின் கட்டளையை மீறுவதாகும்.

**7. விளைவிலிருந்து காரணத்தைக் கற்பிக்க முயற்சிப்பது** தவறாகும். **(Arguing from effect to cause is not correct.)**

எடுத்துக்காட்டு: கோபுரம் இடிந்து விழுந்து செத்த 18 பேர்தான் கொடிய பாவிகள் என்று கருதப்பட்டனர். இதைக் கர்த்தர் மறுத்தார். எல்லாரும் பாவிகள் என்பதையும் மனம் திரும்பாவிடில் அவர்களுக்கும் தண்டனைகள் உண்டு என்பதையும் கர்த்தர் கூறினார் (லூக்.13:1–5). யோபு வியாதிப்பட்ட போது அவனுடைய வியாதியின் காரணம் அவனுடைய கொடிய பாவங்களே என்று அவனுடைய நண்பர்கள் கூறியதும் இவ்வித தவறான கருத்தாகும்.

**8. நமக்கு வெளிப்படுத்தப்படாத பகுதிகளைப் பற்றிப் பேசுதல்** தவறாகும்.

எடுத்துக்காட்டு: ஆவியுலகத்தைப் பற்றிப் பேசுபவர் பலர் உண்டு. ஆவிகளைப் பற்றி நாம் எவற்றையெல்லாம் அறியவேண்டும் என்றும், எவற்றை யெல்லாம் அறிவது நல்லது என்றும் தேவன் கருதினாரோ அவற்றை யெல்லாம் வேதத்தில் தந்துள்ளார். வேதத்தில் எழுதப்பட்டுள்ளவற்றைத் தவிர மூடநம்பிக்கைகளின் வழியாக வந்த பாரம்பரியங்களையும் பயங்களையும் போதிப்பவர்கள் உண்டு. பொய் சொல்லும் வஞ்சக ஆவிகள் கூறுவதை நம்பி ஏமாந்து அவற்றைக் கூறுவோரும் உண்டு. குறிப்பாக, தற்கொலை செய்பவர்களின் ஆவிகளும், விபத்துகளில் அகால மரணமடைபவர்களின் ஆவிகளும் அசுத்த ஆவிகளாக உலகில் சுற்றித் திரிகின்றன என்று கருதுவதும் கூறுவதும் வேதத்திற்குப் புறம்பானது. மனிதர்களின் ஆவிகள் அசுத்த ஆவிகளாக மாற முடியவே முடியாது. சில அசுத்த ஆவிகள் தங்களை இறந்துபோன மனிதரின் ஆவிகள் என்று கூறிக்கொண்டு அதை நிறுவுவதற் காகப் பல ஆதாரங்களைத் தருகின்றன. இது வஞ்சகமான நடிப்பாகும். பொய்களைச் சொல்லி ஏமாற்றும் பிசாசுகளின் கதைகளை நம்பாதீர்.

பிசாசுகளைத் துரத்துவதற்காகப் பிசாசு பிடித்தவர்களின் மேல் கைகளை வைக்கும் விசுவாசிகளை அவை தாக்கும் என்ற பயமும் வேதத்திற்குப் புறம்பானது. பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படியும் என்பதே உண்மை (மாற்.16:17; லூக்.10:19). அவிசுவாசிகளையே பிசாசு தாக்கும் (அப்.19:11–17).

**9. தேவனைப் பரிசோதிக்கத் தூண்டிப் பேசுதல்** ஒரு பாவமாகும்

பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியை அனுபவிக்காத ஒரு போதகர் மாற்கு16:17 ஐக்குறிப்பிட்டு "நவமான பாஷைகளில் பேசுபவர்கள் விஷத்தைக் குடித்துக்காட்டுவார்களா?" என்றார். இதைப் போன்று, தேவாலயத்தின்

உச்சியிலிருந்து குதிக்கும்படி கர்த்தரைக் கேட்டது வேதத்தில் எழுதப்பட்டுள்ளது (மத்.4:5–7). இவ்வாறு கேட்டது யார்? சாத்தான் இவ்விதம் கேட்டான். எனவே அப்போதகர் சாத்தானைப்போன்று பேசினார். தேவனைப் பரிசோதிக்கும்படி மக்களைத் தூண்டிவிடும் கருத்துகள் தேவனிடத்திலிருந்து வந்தவை அல்ல என்பதை நன்கு கவனிக்க வேண்டும்.

10. வசனங்களினின்று உபதேசத்தைக் கண்டுபிடிக்காமல் தங்கள் **கற்பனையில் தோன்றும் ஒன்றை மனதிற்கொண்டு அதற்கேற்ப வசனங்களை எடுத்துக்கூறுவது** தவறான போதகமாகும். தங்கள் கருத்துக்கு எதிராக இருக்கக்கூடிய வசனங்களையும் ஆராயவேண்டும். ஒரு உபதேசத்தை நிறுவவேண்டுமானால் அதற்கு எதிராக ஒரு வசனம்கூட இருக்கக்கூடாது. அவ்வாறு ஏதேனும் வசனம் இருப்பதாகத் தோன்றினால் அவ்வசனத்தை ஆராய்ந்து அதன் விளக்கத்தைக் கவனித்து உபதேசத்தைக் கண்டுபிடிக்கவேண்டும்.

கர்த்தரின் முப்பதாம் வயதுவரை நடந்ததாகக் கூறப்படும் அநேக சம்பவங்களை அநேகர் எழுதியுள்ளனர். கர்த்தர் 12ஆம் வயதில் தேவாலயத்தில் பேசியவை என்ன என்று வேதத்தில் கூறப்படவில்லை. கர்த்தர் என்ன பேசினார் என்று இக்காலத்து மனிதர் ஒருவர் தனக்குத் தேவ ஆவியானவர் கூறியதாக எழுதியுள்ளார். அதில் கர்த்தர் சிறு வயது முதல் அற்புதங்களைச் செய்ததாக எழுதியுள்ளார். இது வேதத்திற்கு முற்றிலும் புறம்பானது. கர்த்தராகிய இயேசு செய்த முதல் அற்புதம் கானாவூரில் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியதுதான் (யோவா.2:11). இதற்கு முன் அற்புதம் செய்த தாகக் கூறுவது இந்த வேதவசனத்திற்கு எதிரானது. எனவே அது தவறாகும்.

**11. அனுமானங்களைக் கொண்டு உபதேசத்தை நிறுவ முயலுதலும்** தவறாகும். வேதத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாததைப் போதித்தல் சரியல்ல. எடுத்துக்காட்டாக, அப்16:33இலிருந்து 'குழந்தைகளின் திருமுழுக்கை' நிறுவ முயன்றார் ஒருவர். "சிறைச்சாலை அதிகாரியின் குடும்பத்தார் அனைவரும் திருமுழுக்கு பெற்றனர் என்பதினால் அவன் குடும்பத்திலுள்ள குழந்தைகளும் திருமுழுக்கு பெற்றிருக்கவேண்டும்; எனவே குழந்தைகளுக்குத் திருமுழுக்கு தருவது வேதத்தின்படி சரியானது" என்று அவர் கூறினார். அச்சமயத்தில் சிறைச்சாலை அதிகாரியின் குடும்பத்தில் சிறு குழந்தைகள் இல்லாதிருந்திருக்கலாம் என்பதை இவ்வாறு கூறியவர் நினைத்துப் பார்க்கவில்லை போலும். சிறைச்சாலை அதிகாரியின் பிள்ளைகள் யாவரும் வாலிப வயதினராக இருந்திருக்கக்கூடும் அல்லவா? இவ்விதம் வேதத்தை விளக்குவது சரியல்ல. இதைப்போன்று கொர்நேலியுவின்

வீட்டிலும் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களுக்கே திருமுழுக்கு அளிக்கப் பட்டது, குழந்தைகளுக்கு அல்ல (அப்.10:47–48).

**12. மனிதருடைய பாரம்பரியங்களைக் கட்டளைகளாகப் போதித்தல்** தவறாகும். இவற்றைக் கர்த்தர் மிகவும் கண்டிக்கிறார் என்பதை மத்.15:1–11இலிருந்து காண்கிறோம். வேதத்தின் அடிப்படையில் நல்ல பாரம் பரியங்களைப் பின்பற்றுவது தவறல்ல, ஆனால் பாரம்பரியங்களால் வேதவசனங்களை அவமாக்குதல் கூடாது. பாரம்பரியத்தை வேத வசனங்களுக்குப் பதிலாகவோ அதிகமாகவோ ஏற்றுக்கொள்ளக்கூடாது.

**13. மனிதருடைய விருப்பத்திற்கேற்றவாறு போதித்தல்** தவறாகும் (2 தீமோ.4:3,4). எவ்வாறு போதிக்கவேண்டும்? சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும். எல்லா சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டும் (1 தீமோ.4:2). மக்களுக்குப் பிடிக்காது என்பதற்காகச் சத்தியத்தைப் போதிக்காமல் இருந்துவிடக் கூடாது. நாம் சரியாகப் போதித்தால் சிலருக்குப் பிடிக்காது என்பதுதான் உண்மை. எதிர்ப்புகளுக்குப் பயப்படாது, சாந்தமாகக் கண்டித்து, புத்தி சொல்வது நமது கடமை (சங்.94:13; 1 தெச.2:4) .

**14. எடுத்துக்காட்டுகளினின்று மட்டும் உபதேசத்தை நிறுவுதல்** தவறான முறையாகும். உபதேசங்களுக்கு விளக்கம் தருவதற்காக எடுத்துக் காட்டுகளைப் பயன்படுத்தவேண்டும். கூடிய மட்டும் வேதத்தில் உள்ள எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துதல் நல்லது. உண்மை நிகழ்ச்சிகளையும் எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுத்தலாம்.

**15.** வேதத்தில் கூறப்பட்டுள்ள உவமைகளை அவை **கூறப்பட்டுள்ள நோக்கத்தை விளக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும்.** நாமாகவும் உவமைகளை உருவாக்கிக் கூறலாம். ஆனால் அவை வேத வசனத்திற்கு ஒத்ததாக அமையவேண்டும்.

**16. மாதிரிகளைக் (types) குறித்துப் பேசும்போது** அம்மாதிரிகள் எந்த அளவிற்குப் பொருந்துகிறதோ அந்த அளவிற்குமேல் பொருத்துவது தவறு.

**17. கற்பனைக் கதைகளை உபதேசங்களாகப் போதித்தல்** தவறாகும். இயேசு கிறிஸ்துவைப் பற்றி சரித்திரம் எழுத அநேகர் முற்பட்டதால் அச்சரித்திரத்தை ஆதி முதல் திட்டமாய் விசாரித்தறிந்த லூக்கா, நற்செய்தி நூலை எழுதினார் என்பதை நாம் லூக்.1:1–3இல் காண்கிறோம்.

சரித்திரம் என்ற பெயரில் கட்டுக்கதைகளையும் சேர்த்து எழுதுவது எக்காலத்திலும் உள்ள தவறாகும். இவ்வாறு எழுதிய கட்டுக்கதைகளில் இயேசு சிறுவயதில் மண்ணினால் குருவிகளைச் செய்து அவற்றிற்கு உயிர் கொடுத்ததாகக் கூறுவதும் இன்னும் பல அற்புதங்களைப் பற்றிக் கூறுவதும் தவறாகும். ஏனெனில் இயேசு செய்த முதலாம் அற்புதம் கானாவூர் திருமணத்தின்போது தண்ணீரைத் திராட்சரசமாக்கினதுதான்.

'இயேசுவின் தாயாகிய மரியாள் மரிக்கவில்லை. ஆனால் ஏனோக்கு, எலியாவைப் போன்று உயிருடன் வானத்துக்குத் எடுத்துக்கொள்ளப்பட்டார்' என்ற கதை இக்காலத்துக் கற்பனையாகும். இவ்விதமான பல கதைகள் உண்டு. இவற்றை நம்பாதீர் (1 தீமோ.4:7).

**18. புதிய வெளிப்பாடுகள் என்ற பெயரில் பல கருத்துகளைக் கூறுவது** தவறாகும். வெளிப்படுத்தின விசேஷம் 22ஆம் அதிகாரம் 21 ஆம் வசனத்தோடு வேதாகமம் முடிவடைந்துவிட்டது. அதற்குப் பின்னர் புதிய வெளிப்பாடுகள் **(revelations)** கிடையாது. அவ்விதம் கூறுதல் தவறு. இவ்விதமான 'வெளிப்பாடுகள்' என்று கூறப்படுபவற்றை நம்பி அநேகர் மோசம்போகிறார்கள்.

19. வேதத்தில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களை விளக்க முற்படும் அநேகர் அவ்வாறு விளக்கும் காலத்தில் உள்ள **உலக அரசியல் நிலைக்கேற்ப விளக்குகிறார்கள்.** இது தவறாகும்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் 13ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மிருகத்தை அடையாளம் கண்டுபிடிக்க முயன்று பலர் தவறான கருத்துகளைக் கூறியது சரித்திரத்தில் உள்ளது. ஹிட்லரின் பெயரையும் அவருடைய முன்னோர்களின் பெயர்களையும் சேர்த்து 666 என்று எண் சாஸ்திரம் **(numerology)** மூலம் கொண்டு வந்து, எனவே அவர்தான் மிருகம் என்று இரண்டாம் உலகப்போரின் காலத்தில் அநேகர் கூறினார்கள். அது பொய்யாகிவிட்டது. போப்பின் தலையில் வைக்கும் கிரீடங்களில் ஒன்றின் மீது உள்ள எழுத்துகளுக்கு எண்களைத் கொடுத்து அவற்றைக் கூட்டி 666 என்று கூறுவாரும் உண்டு. மாகோகு என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளதை மாஸ்கோ என்று கூறித் திரிந்த பலரும் உண்டு.

தாங்கள் புதியதாகக் கூறவேண்டும் என்பதும், எதிர்காலத்தைக் குறித்துப் பேசினால் அதை மக்கள் விரும்புகிறார்கள் என்பதும், இவர்கள் இவ்வாறு கூறுவதற்கு முக்கிய காரணங்கள் ஆகும். போதிப்பதற்கு வேறு ஏற்ற கருத்துகள் இல்லையா? இவ்வாறு ஏன் போதிக்கவேண்டும்?

யார் அந்திக்கிறிஸ்து என்பது இப்போது முக்கியமல்ல, இரட்சிப்பு, பரிசுத்தம், கர்த்தருக்குக் கீழ்ப்படிதல், ஆவியில் நிரம்பியிருத்தல், ஆத்தும ஆதாயம் செய்தல் போன்ற முக்கியமான கருத்துகளையே பேசுதல் நல்லது.

**20. மிகைப்படுத்திக் கூறுவது** தவறாகும். எடுத்துக்காட்டாக ஆவியின் கனியில் கூறப்பட்டுள்ள சமாதானம் என்பதைப் பற்றிப்பேசும்போது ஆவியின் கனி ஒன்பதும் சமாதானத்தில் அடங்கியுள்ளது என்று கூறுவது மிகைப்படுத்துதல் ஆகும். கற்பனைக் கதைகளையும் கவிதைகளையும் சாதாரண மக்களுக்காக எழுதுவோர் இவ்விதம் எழுதுவது உண்டு. ஆவிக்குரிய ஊழியம் செய்வோர் இவ்வாறு செய்யலாகாது.

**21. தவறான தகவல்களைத் தருவது** தவறு. யாக்கோபு தமது தாய் தந்தையை விட்டு லாபானின் ஊருக்குச் சென்றபோது அவருக்கு சுமார் 20 வயது இருக்கும் என்று ஒருவர் எழுதினார். வேதத்தின்படி யாக்கோபிற்கு அப்போது 40 வயதிற்கு அதிகம் என்பது இவருக்குத் தெரியவில்லை. சரியாக ஆராயாமல் பேசுவதும் எழுதுவதும் தவறு.

**22. சபையின் (சபைத் தலைவரின்) போதகத் தவறின்மை என்ற கொள்கை** தவறாகும். **(Infallibility of church leader is not correct)**. புதிய ஏற்பாட்டின் காலத்தின் ஆரம்பத்திலேயே அநேக தவறான போதகங்கள் ஆரம்பித்துவிட்டதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (கலா.1:7; 1 யோவா.4:1). ஆவியால் நடத்தப்பட்ட தலைவர்களுக்குப் பின்னர், ஆவியின் அனுபவமில்லாத அநேகர் சபைகளின் மூப்பர்களானார்கள். ஆவியினால் நடத்தப்படாத மனிதர்களால் சபை நிர்வகிக்கப்படும் நிலை உண்டாயிற்று. சபை ஓர் அமைப்பாக மாறியது. இதற்குப் பின் வந்த தீர்மானங்களில் பல சரியல்ல.

எடுத்துக்காட்டு: கலிலியோ என்ற அறிவியல் மேதையின் கண்டு பிடிப்புகளைத் தவறு என்று கூறி அவரைத் தண்டித்தார் அக்கால போப். அவ்வாறு கொடுத்த தீர்ப்பை, கலிலியோ மரித்து பல நூற்றாண்டுகட்குப் பின், இன்னொரு போப் இக்காலத்தில் திருத்தியுள்ளார். இந்நிகழ்ச்சியை நன்கு கவனித்தால், போதகத்தவறின்மை என்ற உபதேசம் முற்றிலும் தவறானது என்பது நன்கு விளங்குகின்றது.

இவ்வாறே ஜோன் ஆஃப் ஆர்க் என்ற பெண்ணை தேவநிந்தனை செய்தவராகத் தீர்ப்பு செய்த ஒரு சபைப்பிரிவு அவரைக் கொன்றபின் அவரைப் புகழ்ந்து உயர்த்தியது. போதகத்தவறின்மை எங்கே? **(Where is infallibility?)**

23. பிரசங்கம் விருவிருப்பாயிருப்பதற்காக யாரையேனும் குறை சொல்லி, தாக்கிப் பேசுதல் கூடாது.

| கள்ளப் போதகர் |
|---|
| எந்தவொரு ஊழியரும் முற்றிலும் வேதத்திற்கு எதிராகப் பேசிக் கொண்டிருந்தால் மக்கள் ஏமாறமாட்டார்கள். சரியான கருத்துகளுடன் தவறான தங்கள் சொந்தக் கருத்துகளையும், அனுபவத்தில் கண்ட அரைகுறையான உண்மைகளையும், தாங்கள் வாசித்த யாரோ ஒருவரின் தவறான கருத்துகளையும் கலப்படம் செய்வது கள்ளப் போதகரின் செயலாகும்.<br>சிலர் தெரிந்தும், பலர் தெரியாமலும், ஒரு சிலர் வஞ்சக ஆவியால் ஏவப்பட்டும் அவ்வாறு செய்கின்றனர்.<br>ஒரு ஊழியரின் வாழ்க்கையில் நற்கனி இல்லையெனில் அவர் ஒரு கள்ளப்போதகர் (மத்.7:15–20). |

# 20. இக்காலத்தில் அற்புதங்கள் நடைபெறுவதில்லையோ?

**கால் ஊனமுற்றவர் உவமை**

மலைச் சரிவான ஒரு பாதையில், கால் ஊனமுற்ற ஒருவர், தனது இரு புயங்களிலும் ஊன்றுகோல்களை வைத்துக்கொண்டவராக மிகவும் சிரமத்துடன் மெதுவாகச் சென்றுகொண்டிருந்தார். பாதை சீராக இல்லாததுடன் சற்று தவறினாலும் பயங்கரமான பள்ளத்தாக்கில் விழுந்து மரணமடையும் அபாயம் நிறைந்ததாக இருந்தது. அப்பொழுது அங்கு வந்த ஒரு மனிதன் அவருடைய இரு ஊன்றுகோல்களையும் அவரிடமிருந்து பறித்து, பள்ளத்தாக்கில் எறிந்துவிட்டான். அப்படிச் செய்தவனை. 'அயோக்கியன், போக்கிரி, கொடியவன், படுபாவி, அக்கிரமக்காரன், மிருகம், மனித உணர்ச்சி இல்லாதவன், பொல்லாதவன்....' என்று பலர் கூறுவார்கள் அல்லவா?

இவன் செய்த கொடுஞ்செயலை ஊனமுற்றவரின் இனத்தார் அறிந்தால் இவனை என்ன செய்வார்கள்? அவர்களிடம் இவன் மாட்டிக்கொண்டால் என்ன நடக்கும்?

கடுமையான நோய், மரணப்படுக்கை, பலமான எதிரிகளின் கொடுமைகள், குடும்பத்தில் மரணம், குடும்பத்தில் பிளவு, பிசாசின் போராட்டங்கள், வறுமை போன்ற வாழ்க்கையின் பல போராட்டங்களின்போது, ஒரே ஒரு ஊன்று கோலாக இருப்பது தேவனுடைய வார்த்தையே. எப்படியும் தேவன் என்னைக் கைவிடமாட்டார் (சங்.27:10; எபி.13:5), எனக்கு ஓர் அற்புதம் செய்வார் (ரோம.8:32), இயேசுவின் தழும்புகளால் குணமானேன் (1 பேது. 2:24) என்றெல்லாம் வேத வசனத்தைமட்டும் சார்ந்து நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பலர் இருக்கிறோம். தேவன் இப்பொழுது அற்புதம் செய்வதில்லை என்று கூறி தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்கும்படி பேசுகிறவர்களும் பலவித தவறான போதகங்களைக் கூறுகிறவர்களும் கால் ஊனமுற்றவரின் ஊன்றுகோலைப் பிடுங்கி எறிந்தவருக்குச் சமமாக 'தேவன் மீதும் அவர் செய்யும் அற்புதங்கள் மீதும் நம்பிக்கையாயிருத்தல்' என்ற ஊன்றுகோல்களைப் பிடுங்கி எறிகின்றனர். இப்படிப்பட்டோரை ஊழியர் என்று அழைப்பதா அல்லது மேலே கூறியுள்ள ஏதேனும் ஒன்றைக் கூறி அழைப்பதா என்று நீங்களே தீர்மானியுங்கள். மனந்திரும்பாவிடில் இவர்களின் இறுதி முடிவு எவ்வாறிருக்கும் என்று சிந்தியுங்கள்.

**சாட்சி:** நான் பல ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு மருத்துவரால் 'ஒன்றும் செய்ய முடியவில்லை' என்று கைவிடப்பட்ட நிலையில் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டபின், மரணப்படுக்கையில் இருக்கும்போது ஒரு சகோதரன் சங்.91ஐ வாசித்து என்னை உற்சாகப் படுத்தினார். வச.16இல் "நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்" என்ற வசனத்தை முற்றிலும் நம்பி தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி 'நான் திருப்தியாகும்வரை நான் உயிருடன் இருப்பேன்' என்று விசுவாசித்து, சில சகோதரர்களோடு சேர்ந்து ஜெபித்து மரணப்படுக்கையினின்று நான் மீண்டேன். இயேசு என்னைச் சுகமாக்கினார். அச்சமயத்தில் யாரேனும், தேவன் இக்காலத்தில் அற்புதம் செய்வதில்லை என்று கூறி என் விசுவாசத்தைச் சீர்குலைத்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

> **அற்புதங்கள் இல்லை என்று கூறுவோர்**
> **'இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்**
> **மாறாதவராயிருக்கிறார்'**
> **என்று வேதம் எபி.13:8இல் கூறுவதை மறுதலிக்கின்றனர்.**
> **இவர்கள் அவிசுவாசிகளும்**
> **வேதப்புரட்டர்களுமாக இருக்கின்றனர்.**

பலர் அற்புதங்களைப் பெற்றுக்கொள்வதை நான் நேரில் கண்டிருக்கிறேன். இயேசுவின் நாமம் 'அதிசயமானவர்' என்று வேதம் கூறுகிறது (ஏசா.9:6). அவரின் பிறப்பு, செயல்கள், உயிர்த்தெழுதல் யாவும் அற்புதம். அவரா அற்புதம் செய்யாமல் இருப்பார்?

**மாய்மாலம்**

வேதத்தை முற்றிலும் நம்பாத எவராயினும் வேதத்தைத் திறந்து வசனத்தை வாசித்து விளக்கம் கூறுவது மாய்மாலம் ஆகும். தாங்கள் முற்றிலும் நம்பாத வேதத்தை ஏன் கையில் எடுக்கிறார்கள்? ஏன் இவர்கள் வேத வசனத்தைப் பயன்படுத்திப் பேசவேண்டும்? இந்த 'ஊழியத்திற்கு' இவர்கள் ஏன் வந்துள்ளனர்? ஏன் இன்னும் 'ஊழியத்தில்', தொடர்ந்து இருக்கின்றனர்? கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன், இரத்தம் சிந்தாதபடிக்குத் (ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாமல்) தன் பட்டயத்தை (வேதவசனத்தை) அடக்கிக்கொள்கிறவன் சபிக்கப்பட்டவன் (எரே.48:10) என்பதால் மிகவும் கவனமாக தேவன் விரும்பும் விதத்தில் ஊழியம் செய்யவேண்டும்.

**தீர்க்கதரிசனங்கள் ஒழிந்துபோயிற்றோ? அந்நிய பாஷைகள் ஒய்ந்து போயிற்றோ?**

**1 கொரி.13:8–12 பகுதியைக் காண்போம்**

*8. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோகும், அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோகும்.*

*9 நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.*

*10 நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்.*

*11 நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன்.*

*12 இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.*

என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

தீர்க்கதரிசனங்களும் அந்நியமொழிகள் பேசுவதும் ஒழிந்துபோகும், ஒய்ந்துபோகும் எனபதை வேதம் கூறுகிறது. இதில் எந்த சந்தேகமுமில்லை. எப்பொழுது இது நடக்கும் என்பதுதான் கேள்வி. நிறைவானது **(That which is perfect)** வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் (வச.10) என்பதால், குறைவற்றதான (சங்.19:7) வேதம் வந்துவிட்டதால் தீர்க்கதரிசனங்களும் அந்நியமொழி பேசுவதும் இப்பொழுது கிடையாது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், நிறைவானதை **(That which is perfect)** நாம் இன்னும் அடைய வில்லை என்பது தெளிவு. ஏனெனில் நான் முற்றும் தேறினவனானேன் **(perfect)** என்று தன்னைக் குறித்து பவுல் எண்ணாதிருக்கும்போது (பிலி.3:12) நாம் நிறைவானதைப் பெற்றுவிட்டோம் என்று கூறுவது எப்படி? மேலும் இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாகப் பார்க்கிறோம் அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம் என்று எழுதப்பட்டுள்ளது. முகமுகமாய்ப் (கிறிஸ்துவைப்) பார்க்கும் காலம் இன்னும் வரவில்லையே!

'நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வேன்' என்று எழுதப் பட்டிருக்கிறபடி இன்னும் நம்மைப் பூரணமாக நாம் அறிந்துகொள்ள வில்லையே! எனவே தீர்க்கதரிசனங்களும் அந்நிய பாஷைகளும் அற்புதங்களும் இன்னும் ஒழிந்துபோகவில்லை. ஒரு நாள் கர்த்தரை முகமுகமாகச் சந்திப்போம். அப்பொழுது தீர்க்கதரிசனங்களும் அந்நிய மொழிகளும் தேவைப்படாது. ஏனெனில் கர்த்தரை முகமுகமாய்ச் சந்தித்து அவரோடு யாவற்றையும் நேரில் தெரிந்துகொள்ளலாம். அதுவரை தீர்க்கதரிசனங்கள் உண்டு, அந்நியமொழிகள் பேசுவதும் நிச்சயம் உண்டு என்பது நிச்சயம்.

## தேவனைப் பெண்ணாகக் கூறும் வேதப்புரட்டு

### தற்கால நாகரிகமான ஆசீர்வாதம்

பெண்ணுரிமை உலகெங்கும் பேசப்படும் இக்காலத்திற்கேற்ப 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக' என்று கூறும் ஆசீர்வாதத்தில் (2 கொரி.13:14), 'தேவனுடைய அன்பும்' என்பதற்குப் பதிலாக 'தாயும் தந்தையுமாகிய கடவுளின் அன்பும்' என்று கூறுவதற்குச் சில 'ஊழியர்' துணிந்துள்ளனர். வேதத்தைத் திரித்துக் கூறும் இவர்களின் செயல் சரிதானா? கர்த்தருடைய வசனத்தை மாற்றிக் கூறுவது கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? கர்த்தருடைய வசனத்துடன் எதையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (உபா.4:2; 12:32). வேதத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு எழுத்தின் உறுப்பும் மிகவும் கவனமாக தேவனால் கண்காணிக்கப்படுகிறது (சங்.119:89; மத்.5:18; 24:35; யோவா.10:35). கர்த்தருடைய வசனத்திலிருந்து எதையும் குறைத்தாலோ, அதனுடன் எதையும் கூட்டினாலோ தண்டனை உண்டு என்று வேதம் எச்சரிக்கிறது (வெளி.22:18,19). எனவே மிகவும் கவனமாகவும் பயத்துடனும் கர்த்தரைச் சேவிக்கவேண்டும் (சங்.2:11).

**ஆசீர்வாதம் கூறும்போது "தேவனுடைய அன்பும்" என்பதற்குப் பதிலாக "தந்தையும் தாயுமாகிய கடவுளின் அன்பும்" என்று கூறுவது வேதப்புரட்டு.**

**'அம்மா என்று கூப்பிடவா?' என்று பாடுவது வேதத்திற்கு எதிரானது.**

## 21. மந்தையின் மேய்ப்பர்

ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் கீழ் (எபி.13:20) உங்கள் ஆடுகளை (சபை மக்களை) மேய்க்கும் மாபெரும் பொறுப்பு உங்களுக்கு அருளப்பட்டுள்ளது.

மற்றவர்கள் உங்களைக் கட்டாயப்படுத்துவதனால் அல்ல, 'நமது கடமையாக இருக்கிறதே' என்பதினாலும் அல்ல, மனப்பூர்வமாக உங்கள் மக்களைக் கண்ணும் கருத்துமாக மேய்க்கவேண்டும் (1 பேது.5:2). அவலட்சணமான ஆதாயத்திற்காக ஊழியம் செய்யலாகாது. உற்சாக மனதோடு உழைக்கவேண்டும். இறுமாப்பாக ஆளுகிறவர்களாக ஊழியம் செய்யக்கூடாது. அன்பு தாழ்மை, பொறுமை, சாந்தம், விசுவாசம், நல்மனச்சாட்சி, நற்செயல்கள் போன்றவற்றில் சபைக்கு மாதிரியாக நடக்க வேண்டும் (1 பேது.5:2–3).

**சரியான மேய்ப்பர்** (யோவா.10:1–16)

யோவா.10:1–6இலிருந்து மேய்ப்பரின் குணங்களைக் காண்போம். நானே வாசல் என்று கிறிஸ்து கூறியுள்ளார் (யோவா.10:7,9). வாசலாகிய கிறிஸ்துவின் வழியாக உள்ளே வருபவரே சரியான மேய்ப்பர். வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றும் கர்த்தர் கூறியுள்ளார் (யோவா.10:1–2). அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட அடிப்படையில் மேய்ப்பராகிறவரே சரியான மேய்ப்பர்.

சரியான மேய்ப்பர் நடத்தும்போது சபை மக்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள். சபை மக்கள் ஒவ்வொருவரின் பெயரும் அவருக்குத் தெரியும். அவர் சபையினர் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்தித்து (பேர் சொல்லிக் கூப்பிட்டு) அவர்களின் நிலைமைக்கேற்ப வழிநடத்துவார் (யோவா.10:3). முன்மாதிரியாக வாழ்வதின் வாயிலாக (முன்பாக நடந்து) வழி நடத்துபவரே சரியான மேய்ப்பர் (யோவா.10:4).

சபை மக்கள் ஒவ்வொருவரும் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கவும், முழுமையாக வாழவும் வழிநடத்துபவரே சரியான மேய்ப்பர். சபை மக்களுக்காக தனது நேரத்தையும் முயற்சியையும் உயிரையும் தருவதற்கு ஆயத்தமா யிருப்பவரே சரியான மேய்ப்பர் (யோவா.10:10,11,15). சபை மக்களை அறிந்திருப்பது மட்டுமல்ல அவர்களால் அறியப்பட்டவரே சரியான மேய்ப்பர்

(யோவா.10:15). கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இல்லாமல், பாவத்தில் இருக்கும் மக்களையும் பின்மாற்றமாகப் போய்விட்டவர்களையும் தேடிக் கண்டிபிடித்து, மீண்டும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்ப்பதற்கு முயற்சி எடுப்பவரே சரியான மேய்ப்பர் (யோவா.10:16; லூக்.15:4–6). இவற்றை நீங்கள் செய்கிறீர்களா?

**சரியான மேய்ப்பர்** (சங்.23)

சங்.23இலிருந்து தேவனுக்கேற்ற மேய்ப்பரின் செயல்களைக் காண்போம். உங்கள் பொறுப்பிலுள்ள ஆடுகள் (விசுவாசிகள்) ஒவ்வொன்றும் உங்களை 'என் மேய்ப்பர்' என்று பாசத்துடனும் உரிமையுடனும் கூறுமானால் நீங்கள் சரியான மேய்ப்பர். விசுவாசிகள் சரீர, ஆத்தும, உலகப்பிரகாரமான காரியங்களில் தாழ்ச்சியடையாமல் நடத்தவேண்டும் (வ.1). தேவையான உபதேசங்களையும் உதவிகளையும் தந்து போதிக்கவேண்டும் (வ.2). இளைப்பாறுதலும் சமாதானமும் தரும் ஆறுதலான போதகங்களைத் தியானித்து அவ்வப்பொழுது அளித்து ஆற்றித்தேற்றவேண்டும் (வ.3; ஏசா.40:1). விசுவாசத்தினால் வரும் நீதி, நல்மனச்சாட்சி, நற்செயல்கள் செய்தல் போன்ற நீதியின் பாதையில் மக்களை நடத்தவேண்டும் (வ.3).

கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வதற்குப் பழக்குவிக்க வேண்டும். என்ன போராட்டம் வந்தாலும் கர்த்தருடைய பிரசன்னத்தால் வரும் தைரியத்தை உடையவர்களாயிருப்பதற்குப் போதிக்கவேண்டும் (வ.4).

கர்த்தருடைய பிள்ளைகளுக்குரிய ஆவிக்குரிய, இம்மைக்குரிய ஆசீர்வாதங்களைக் குறித்த வேத வாக்குறுதிகளைப் போதித்து அவற்றால் நிரம்பி வாழ்வதற்குப் பழக்குவிக்கவேண்டும். நோயுற்ற, நலிவுற்ற, மனம் தளர்ந்தவர்களைச் சந்தித்து, ஆலோசனை கூறி, ஜெபித்து (எண்ணெய் பூசி) குணமாக்கவேண்டும். மேலும், சபை மக்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் நிரம்பி வழியும்படியும், அதின் மூலம் ஆவியின் வரங்கள் பெறவும், ஆவியின் கனி காணப்படவும் வழி நடத்தவேண்டும் (வ.5).

நன்மையும் கிருபையும் தங்கள் ஒவ்வொருவரையும் தொடர்கிறது என்ற விசுவாசத்துடன் வாழ்வதற்குக் கற்றுக்கொடுப்பதோடு, நித்திய வீட்டிற்கு சபை மக்கள் ஒவ்வொருவரையும் ஆயத்தப்படுத்தவேண்டும் (வ.6). நீங்கள் இவ்வாறு செய்கிறீர்களா?

**ஆட்டைத் தேடும் மேய்ப்பர் (லூக்.15:3–7)**

ஒரே ஒரு ஆடு காணாமற் போயிருந்தாலும் அதையும் கருத்தாகத் தேடி, கண்டு பிடித்து, மீண்டும் மந்தையில் சேர்ப்பவரே கரிசனையுள்ள மேய்ப்பர்.

**எல்லா ஆடுகள் மேலும் கரிசனையுள்ள மேய்ப்பர்**

மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போன்று தொய்ந்துபோனவர்களும், சிதறப்பட்டவர்களுமாயிருக்கிற மக்களுக்காக மனதுருகுகிறதும் (மத்.9:36), மந்தையில் இல்லாத ஆடுகளைச் சேர்க்கக் கவனமாக இருப்பதும் (யோவா.10:16) ஒரு சரியான மேய்ப்பனின் பண்புகள்.

**சரியாக இல்லாத மேய்ப்பர்** (எசே.34:2–10)

பல மேய்ப்பர்கள் மந்தையைச் சரியாகக் கவனிப்பதைவிட, தங்களுக்கு வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். 'மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ!' மந்தையை நன்கு மேய்க்கும் மேய்ப்பர், மந்தையின் பாலைச் சாப்பிடலாம். ஆனால், ஆடுகளை அடித்து உண்பதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை (வ.3).

விசுவாசத்திலும் வாழ்க்கையிலும் தவறான போதகத்தினாலும் பலவீனமானவற்றைப் பலப்படுத்தாமலும், சுகவீனமாயிருப்பவர்களைச் (நசல் கொண்டவைகளை) சந்தித்து எண்ணெய் பூசி, ஜெபித்து, குணமாக்காமலும் (யாக்.5:14–15), வாழ்க்கையின் போராட்டங்களிலும் சோதனைகளிலும் சிக்குண்டு விசுவாசத்தை இழக்கும் நிலையிலிருப்போரைக் (எலும்பு முறிந்தவைகளைக்) காயங்கட்டாமலும், சில மனவருத்தங்களால் துரத் துண்டவர்களைத் தேடிச்சென்று திரும்பக் கொண்டுவராமலும், பல நாட்களாக சபைக்கு வராதவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மேய்க்காமலும் இருப்பவரே சரியாக இல்லாத மேய்ப்பர் (வ.4). இத்தகைய மேய்ப்பர்களுக்கு விரோதமாகக் கர்த்தர் செயல்படுவார் (வ.10). கர்த்தர் உங்களுக்கு விரோதமாக வருவது எவ்வளவு பயங்கரமானது! இவ்வாறு நடக்காம லிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

**சரியான மேய்ப்பருக்கு வாடாத ஜீவகிரீடம்**

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து

1) கட்டாயமாய் அல்ல மனப்பூர்வமாய்

2) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாகமனதோடும்

3) சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்.

அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத ஜீவகிரீடத்தைப் பெறுவீர்கள் (1 பேது.5:2–4). **செய்வீர்களா?**

# 22. ஆராதனை

அநேக சபைகளில் சில நூற்றாண்டுகளுக்குமுன் தயாரிக்கப்பட்ட ஆராதனை முறைகளைப் பின்பற்றுகின்றனர். இவற்றில் நல்ல ஜெபங்களும், துதிகளும் இருந்தபோதிலும் யாவற்றையும் சடங்காசாரமாக மாற்றியதால், உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்து தொழுதுகொள்வது குறைந்துவிட்டது. இதை உணர்ந்த சில பாரம்பரிய சபைகள் வரவேற்கத்தக்க சில மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன. எடுத்துக்காட்டாக, தென்னிந்திய திருச்சபையின் நெல்லை பேராயத்தில் ஞாயிறு ஆராதனைகளை நடத்தும்போது மாதத்தின் இரண்டு வாரங்களில் ஆராதனை புத்தகத்தின்படி நடத்தாமல், சபையினர் விரும்பும் வகையில் சுதந்திரமாக நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பல சபைகளின் ஆராதனைகளில் சற்றுநேரம் பாடல்கள் பாடுவதுடன் யாவரும் சேர்ந்து தங்கள் சொந்த வார்த்தைகளால் உள்ளத்தில் உணர்ந்து துதிக்கின்றனர். துதித்து ஜெபிக்கும்படி சிலர் கேட்டுக்கொள்ளப்படுவதும் உண்டு. ஆவியில் நிரம்பி ஜெபிக்கவும் துதிக்கவும் உற்சாகப்படுத்தப் படுகின்றனர். இவ்வாறு செய்வது நல்லது.

### ஜெபிக்கும் பகுதி

சென்னையில் ஒரு சபையின் போதகர் மக்கள் யாவரும் பார்க்கும் இடத்தில் கரும்பலகையில் அந்த வாரத்திற்கான உலகம், நாடு, சபை, சபை மக்கள் போன்ற தலைப்புகளில் ஜெபக்குறிப்புகளை எழுதிவைத்திருந்தார். சபை ஆராதனையில் சிலரை அக்குறிப்புகளுக்காக ஜெபிக்கச் செய்தார். அந்த வாரம் முழுவதும் அந்த ஜெபக்குறிப்புகளுக்காக ஒவ்வொருவரும் தனி ஜெபத்தில் வேண்டுதல் செய்யவேண்டும் என்று வழிநடத்தினார். இவ்வாறு நீங்களும் செய்யலாமே.

### ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுதல்

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார் (யோவா.4:24). இதில் கட்டாயமாக **(must)** ஆவியோடும் உண்மையோடும்தான் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு செய்யாத தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுமா என்று சிந்தியுங்கள்.

'ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படமாட்டான்' அல்லவா (2 தீமோ.2:5)?. தேவனை, தேவன் விரும்பும்

வண்ணமே தொழுதுகொள்ளவேண்டும். 12ஆம் வகுப்பு கணிதத்தேர்வில் ஒரு மாணவர் தான் ஐந்தாவது வகுப்பில் படித்த கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவற்றை மட்டும் எழுதிவைத்தாரென்றால் விடைத்தாள் திருத்து கிறவர்கள் மதிப்பெண் அளிப்பார்களா? அவ்வாறே தேவன் எதிர்பார்க்கும் வகையில் தொழுதுகொள்வதையல்லவா அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்.

ஆவியோடு தொழுதுகொள்வது என்றால் பொருள் என்ன? 1 கொரி.14:2 இல் 'அந்நிய மொழியில் (அந்நிய பாஷையில்) பேசுகிறவன் ஆவியினால் இரகசியங்களைப் பேசுகிறான்' என்று எழுதப்பட்டுள்ளது 1 கொரி.14:14இல் 'நான் அந்நிய மொழியில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணும் என்று எழுதப்பட்டுள்ளது . ஆவியினாலே பேசுவது ஆவியினாலே விண்ணப்பம்பண்ணுவது என்பதற்கு வேறு விளக்கம் வேதாகமத்தில் இல்லை (இருந்தால் எனக்கு எழுதுங்கள்). இந்த உண்மையை நீங்கள் ஏன் திறந்த மனதுடன் ஒப்புக்கொள்ளக்கூடாது? செய்யவேண்டியது என்ன என்பதை 1 கொரி.14:14–15இல் காண்கிறோம். 'நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்'. அதாவது சற்று நேரம் ஆவியானவரின் ஏவுதலால் அந்நியமொழிகளில் விண்ணப்பம்பண்ண வேண்டும். சற்று நேரம் உள்ளத்தில் உணர்ந்து கருத்துடன் விண்ணப்பம் பண்ணவேண்டும். இவ்வாறே, ஆவியானவரின் ஏவுதலால் சற்றுநேரம் அந்நிய மொழிகளில் தொழுதுகொள்வதோடு, சற்று நேரம் கருத்துடன் (உண்மையாக உணர்ந்தும்) தொழுதுகொள்ளவேண்டும். இதுதான் வேதம் தரும் விளக்கம்.

இது கடினமானதல்ல. மறுபடியும் பிறந்த அனுபவமுள்ள யாராயினும் ஆவலுடன் கேட்டால் உடனடியாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை தேவனிடமிருந்து (லூக்.11:11–13) கர்த்தராகிய இயேசுவின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம் (மத்.3:11). விசுவாசத்துடன் பெற்றுக்கொண்டு, ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள். உங்கள் சபையினரையும் இந்த அனுபவத்திற்குள் வழிநடத்துங்கள்.

அபிஷேகம் பெறாதவர்களைக் குறைகூறாமல், அவர்கள் பெற்றுக் கொள்ளும்படி உற்சாகப்படுத்துங்கள். அந்நிய மொழிகளைப் பேசுவதை முக்கியப்படுத்துவதின் மூலம் உள்ளத்தில் உணர்ந்து ஜெபிப்பதை நிறுத்தக் கூடாது. ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

ஆராதனைக்கு வரும் சிலர் சமூக வழக்கமாக வருகின்றனர். இப்படிப்பட்டோர் உள்ளத்தில் உணர்ந்து துதிப்பதோ, உள்ளத்தில் உணர்ந்து ஜெபிப்பதோ இல்லை. கடமைக்காக, பாரம்பரியத்தின்படி ஆலயத்திற்கு வரும் இவர்கள் தொழுதுகொள்வதாகவே கருத முடியாது. பலர் ஆலயத்திற்கு வந்து

உள்ளத்தில் உணர்ந்து தேவனைப் போற்றவும், அவருக்கு நன்றி செலுத்தவும், அவரிடம் வேண்டுதல் செய்யவும் கருத்தாயிருக்கின்றனர். ஆனால் இதுவும் போதாது என்று கர்த்தர் கூறுகிறார். நாம் ஆவியோடும் உண்மையோடும் தம்மைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

**இசை**

இசைக் கருவிகளைப் பயன்படுத்தி ஆராதனை செய்வதைச் சில சபைகள் ஏற்றுக்கொள்வதில்லை. பழைய ஏற்பாட்டில் மட்டுமின்றி பரலோகத்திலும் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (1 நாளா.25:1; 2 நாளா.7:6; சங்.150:3–5; வெளி.5:8). அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று வேதத்தின் எந்தப் பகுதியிலும் எழுதப்படவில்லை. எனவே இசைக் கருவிகளை ஆலய ஆராதனைகளில் பயன்படுத்துவது தவறு அல்ல என்றே தோன்றுகிறது.

ஆனால், பாடல்களின் கருத்திற்கும், ஆவியோடும் கருத்தோடும் பாடுவதற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். இசைக்கும், இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கும் தேவைக்கு அதிகமான அளவு முக்கியத்துவம் அளிக்கும் சபைகள் உண்டு. அவ்வாறு செயல்படுவது முறையன்று. ஆராதிப்பதற்கு இசை உதவவேண்டும். ஆராதனைக்காகவே இசை. இசைக்காக ஆராதனை என்பது தவறு. இசைக்கருவி எதுவுமின்றி ஆவியோடும் உண்மையோடும் சிறப்பாகத் தொழுதுகொள்ள முடியும். இசை கவர்ச்சியாகவும் கண்ணியாகவும் மாறிவிடக்கூடாது. இசைக்கருவி வாசிப்பவர்களும், பாடகர்களும் மேடையில் இருப்பதால் பெருமையடையவும் இச்சைகளில் விழவும் வாய்ப்புண்டு.

மக்களை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வழிநடத்துவதே பாடகர் குழுவின் தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். அவர்களைக் காண்பவர்கள் தேவ பிரசன்னத்தை உணரும் வகையில் அவர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

இசைக்கருவிகளை இயக்குபவர்களும் பாடகர்களும் ஆவிக்குரிய ஆராதனை செய்வதில் எடுத்துக்காட்டுகளாகத் திகழவேண்டும்.

**ஆவியோடும் உண்மையோடும் இல்லாமல்,**
**சடங்காசாரமாகவும் கடமைக்காகவும் நடத்தப்படும் ஆராதனை**
**சாரமற்ற உப்பு.**

**வேதத்திலிருந்து சில ஜெபக்குறிப்புகள்**

மத்.5:44 நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும் நம்மைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும். நமக்கு எதிராகவும் நமது இடத்திலும் நாட்டிலும் உலகெங்கும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் செயல்படும் நபர்கள், குழுக்கள், பல நாடுகளின் தலைவர்கள் யாவரும் மனம் மாறும்படியும், அவர்களின் சதித்திட்டங்கள் அவமாய்ப் போகும்படியும், அவர்களின் பின்னால் செயல்படும் அந்தகார சக்திகள் மடங்கடிக்கப்படவும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

மத்.6:9–13 கர்த்தருடைய ஜெபம் என்று அழைக்கப்படும் இந்த ஜெபத்தை நன்கு உணர்ந்து ஜெபிக்கவேண்டும்.

மத்.9:36–38 ஆத்தும ஆதாயம் செய்யும் நற்செய்திப் பணியாளர் அநேகரை தேவன் உலகின் ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் அனுப்பி நற்செய்தி அறிவிக்கப்படும்படி ஜெபிக்கவேண்டும். நற்செய்தி நிறுவனங்களின் பத்திரிக்கைகளில் உள்ள ஜெபக் குறிப்பு களுக்காகவும் ஜெபிக்கலாம்.

யோவா.17:11, 20–21 உலகெங்குமுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் ஒன்றாயிருக்குமாறு வேண்டிக்கொள்வோமாக.

யோவா.17:17 தேவனுடைய சத்தியத்தால் கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தமாகும்படி ஜெபிக்கவேண்டும்.

1 தீமோ.2:1,4 எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங் களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சியிலும் வரும் செய்திகளுக்காகவும் பல நாடுகளுக்காகவும் எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்படும்படியும் ஜெபிக்கவேண்டும்.

1 தீமோ.2:2 நமது நாட்டிலும் உலகெங்கும் ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் தலைவர்கள், பிரதம அமைச்சர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், காவலர்கள், நீதிபதிகள், வழக்குரைஞர்கள், படைத்தலைவர்கள், பிற அலுவலர்களுக்காக ஜெபிக்கவேண்டும். நாம் வாழும் பகுதியின் அமைதிக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

சக.10:1; லூக்.12:49; யோவே.2:28; அப்.2:17இன்படி மாம்சமான யாவர் மேலும்

ஆவியானவர், இந்தக் கடைசி நாட்களில், பின்மாரியாக ஊற்றப்படும்படி ஊக்கமாக வேண்டிக்கொள்வோமாக.

அப்.4:24–30 வேதத்தில் எழுதப்பட்ட சபையின் முதலாவது ஜெபமாகிய "கர்த்தாவே உமது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும்" என்பதை ஏறெடுக்கலாம்.

யாக்.5:13–16 நோயுற்றோருக்காக ஜெபிப்பது நமது கடமை.

ரோம.10:1 இஸ்ரவேலரின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கவேண்டும். மேலும் இஸ்ரவேலனாகிய பவுல் இஸ்ரவேலருக்காக ஜெபித்தது போன்று நமது நாட்டு மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கவேண்டும்.

சங்.122:6 எருசலேம் என்ற நகரம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதாகும். இதற்கு எதிராக அநேக மக்கள் சதித்திட்டங்களை உருவாக்கிவருகின்றனர். எருசலேமின் சமாதானத்துக்காக நாம் ஜெபிப்பது அவசியம். இது தேவனுக்குப் பிரியமானது மட்டுமல்ல, எருசலேமை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்கள் என்ற ஆசீர்வாதம் ஜெபிப்பவர்களுக்குச் சொந்தமாகிறது.

கொலோ.4:2–4 கர்த்தருடைய ஊழியர் சரியாகப் போதிக்கவும், உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கப்படும்படி (முஸ்லீம் நாடுகள், புத்தமத நாடுகள், கம்யூனிஸ்ட் நாடுகள் போன்ற) எல்லா நாடுகளிலும் திறந்தவாசல் இருக்கும்படி ஜெபிக்கவேண்டும்.

1 தெச.5:25 கர்த்தருடைய ஊழியர்களுக்காக ஜெபிப்பது நமது கடமை. நம்முடைய சபையின் போதகர்களுக்காக மட்டுமின்றி நமக்குத் தெரிந்த (நற்செய்திப் பணியாளர்கள், தொலைக்காட்சி ஊழியர், சிறுவர் ஊழியம், எழுத்தாளர்கள், நிறுவனங்கள் போன்ற) எல்லா ஊழியருக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

1 யோவா.5:16 மரணத்துக்கல்லாத பாவத்தைச் செய்த சகோதரருக்காக வேண்டிக்கொள்ளவேண்டும்.

**இந்தக் குறிப்புகளுக்காக உங்கள் தனி ஜெபத்திலும் சபையிலும் ஜெபியுங்கள்**

# 23. உத்தம ஊழியரை எதிர்ப்போரின் நிலை

எரேமியாவை எதிர்த்து, எரேமியாவின் தீர்க்கதரிசனத்திற்கு எதிராகப் பேசிய அனனியா என்பவருக்கு சில மாதங்களில் மரணமடையும் தண்டனையை தேவன் அளித்தார் (எரே.28:15–17). எரேமியா தீர்க்கதரிசிக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தாதற்காகவும் சிதேக்கியா அரசர் தண்டிக்கப்பட்டார் (2 நாளா.36:12) என்பதை நாம் காண்கிறோம்.

தீர்க்கதரிசியான ஆமோசைத் தடைசெய்த அமத்சியா என்பவனுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள்: 1) அவன் மனைவி நகரத்தில் வேசியானாள். 2) அவனது மகன்களும் மகள்களும் வாளால் வெட்டப்பட்டு, கொலைசெய்யப் பட்டனர். 3) அவனுடைய வயல் பிறரால் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது. 4) அவன் அசுத்தமான தேசத்திலே செத்துப்போனான் (ஆமோ.7:12–17 ).

இந்நூலின் ஆசிரியரான எனது தந்தை **Rev. Y.G.** தேவதாசன் (1903–1976) பல ஆண்டுகள் தென்னிந்திய திருச்சபையின் திருநெல்வேலி பேராயத்தின் (தற்சமயம் திருநெல்வேலி, தூத்துக்குடி பேராயங்கள்) பல இடங்களில் உத்தமமாகப் பணியாற்றினார்கள். அவர்களின் வாழ்க்கையில் தேவன் பல அற்புதங்களைச் செய்தார். ஒரு தடவை சாந்த குணமுள்ள அவர்களைக் கத்தியால் குத்துவதற்கென முரடனான ஒரு வாலிபன் எங்கள் வீட்டிற்கு வந்தான். என் தந்தை படிகளில் இறங்கி, அவனிடம் சென்று, "என்னையா குத்துவதற்கு வருகிறாய்? குத்து," என்று சாந்தமாகக் கூறினார்கள். அவனால் குத்துவதற்கு முடியவில்லை. வெளியே இருந்து சிலர் வந்து அவனைத் தூரப் போகச் செய்தனர். சற்று நேரத்தில் என் தந்தை ஆலயத்திற்குச் சென்று தனியாக ஜெபித்தார்கள். "ஆண்டவரே, உம்முடைய ஊழியத்திற்கென்று நீர் அழைத்தபடியால் என் சொந்த ஊரை விட்டு இங்கு வந்திருக்கிறேன். இங்கு எனக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. நீர் ஒருவரே எனக்குப் பாதுகாப்பு. என்னைப் பாதுகாத்துக்கொள்ளும்," என்று அவர்கள் கூறிக்கொண்டிருக்கும்போதே, "நானே பதில்செய்வேன்" என்ற பெரிய சத்தம் ஆலயத்தில் தொனித்தது. "ஆண்டவரே அந்த வாலிபனுக்கு இரங்கும்" என்று என் தந்தை ஜெபித்தார்கள். ஒரு சில வாரங்களுக்குள்ளாக அந்த வாலிபன் திடீரென்று சுகவீனமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். எனது தந்தை மருத்துவமனைக்குச் சென்று அவனைச் சந்தித்து

ஜெபித்தார்கள். ஆயினும் சில நாட்களுக்குப்பின் தன் வாலிப வயதில் அவன் மரணமடைந்தான்.

இன்னொரு தடவை, எங்கள் வீட்டின் மீது இரவில் கல்லெறியவேண்டும் என்று திட்டம் தீட்டியவர்கள் கல்லெறிவதற்கு முயன்ற சமயம், வழியிற்சென்ற ஒருவரிடம் தகராறில் ஈடுபட்டு சண்டையிட்டதில் ஒருவரின் கை முறிந்து போயிற்று. காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டபோது பிணையம் (ஜாமீனில்) எடுப்பதற்கு என் தந்தையையே அழைத்தனுப்பியதால் என் தந்தை தனது வீட்டைக் கல்லெறிய முயன்ற அவர்களைப் பிணை உறுதி அளித்து விடுவித்தார்கள்.

இதைப்போன்ற அநேக நிகழ்வுகள் அநேக உத்தம ஊழியரின் வாழ்க்கையில் நடந்துள்ளன. உண்மை ஊழியருக்குத் தீங்கிழைப்போர் மனந்திரும்பாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை உண்டு என்பது நிச்சயம்.

# 24. தொலைக்காட்சி, பத்திரிக்கை, வேதாகம ஊழியங்கள்

மிகவும் கருத்தாகவும், தியாகமாகவும், சிறப்பாகவும் பலர் தொலைக் காட்சிகளிலும் வானொலிகளிலும் நற்செய்திப்பணி செய்கின்றனர்.

**தொலைக்காட்சி, வானொலி ஊழியங்கள்**

முற்றிலும் கிறிஸ்தவ நிறுவனங்களால் நடத்தப்படும் தொலைக்காட்சி தடங்களும் **(channels)** அலைவரிசைகளும் உண்டு. இவற்றில் கிறிஸ்தவர்களுக்கேற்ற செய்திகளும், பாடல்களும், ஆராதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் பொதுவான பல அலைவரிசைகளில் கிறிஸ்தவரல்லாதோர் பார்க்கும், கேட்கும் நிகழ்ச்சிகள் உண்டு. இவற்றில் செய்தியளிக்கும் சிலர் கிறிஸ்தவருக்கேற்ற செய்தியையே அளிக்கின்றனர். 'கிறிஸ்தவரல்லாதோருக்கு இது புரியாததாக இருக்குமே' என்று இவர்கள் அக்கறை கொள்வதில்லை. கவனமாகப் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு தடவையும் நீங்கள் அளிக்கும் செய்தி அதைப் பார்க்கும், கேட்கும் பலருக்குப் பயனுள்ளதாக அளிப்பது உங்கள் கடமை.

கர்த்தருடைய செய்தியைக் கூறுவதற்கு முற்படுவதே உங்கள் பிரதான நோக்கமாக இருக்கவேண்டும். ஜெபத்துடனும், ஆவியானவரின் அபிஷேகத்துடனும், தேவனிடம் செய்தியைப் பெற்று, அதைப் பேசுவதற்குக் கவனமாயிருங்கள். உங்களைப் பற்றியும், உங்கள் குடும்பத்தினரைப்பற்றியும், உங்கள் ஊழிய நிறுவனத்தைப்பற்றியும் பேசுவதை மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவை தொலைக்காட்சியில் தோன்றும்போதும் 'தான் 40 நாட்கள் உபவாசம்' செய்ததைப் பலமுறை கூறிய ஒருவர் இருந்தார். இதனால் என்ன பயன்?

தொலைக்காட்சிகளில் தங்கள் மனைவிக்கு, பிள்ளைகளுக்கு, குடும்பத்தாருக்கு வாய்ப்பளிப்பதை ஒரு நாகரிகமாகக் கொண்டுள்ள பலருண்டு. அவர்கள் தகுதியுள்ளவர்களாகவும் கர்த்தரால் அழைக்கப் பட்டவர்களாகவும் இருந்தால் இவ்விதம் செய்வது தவறல்ல. இல்லாவிடில் ஊழியத்தின் தரத்தை இவர்கள் குறைக்கின்றனர். மேலும் தங்கள் பிள்ளைகளின் பாடல்களையும் நடனங்களையும் மக்களுக்குக் காண்பிக்கும் சாதனமாக வானொலியையும் தொலைக்காட்சியையும் பயன்படுத்துவோரும் உண்டு. ஆவிக்குரிய ஊழியத்தை மிகவும் விழிப்புடன், கர்த்தரின் பார்வைக்குச் சரியானபடி மட்டுமே செய்வதற்குக் கவனமாயிருக்கவேண்டும்.

**பத்திரிக்கை ஊழியங்கள்**

பத்திரிக்கை வெளியிடும்போது உங்கள் படங்களுக்கு முக்கியத்துவம் தராதீர்கள். மனிதர் உங்கள் படங்களையும் உங்கள் குடும்பத்தினரின் படங்களையும் காண்பதால் உங்களுக்கு லாபம் என்ன? தேவன் உங்களை அங்கிகரிப்பதே சிறந்தது. மக்களிடம் புகழைத் தேடாதீர்.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கை வாயிலாகப் பல காரணங்களைக் காட்டி, பல திட்டங்களைக் கூறி, பலவிதங்களில் பணம் கேட்பது கர்த்தரின் பார்வையில் எப்படியிருக்கும் என்று சிந்தித்துப்பார்த்து ஊழியம் செய்யுங்கள். அவற்றைப் பார்க்கும் பல்வேறு மக்கள் உங்களைக் கௌரவ பிச்சைக்காரர் என்று கருதுவார்களே. உங்கள் ஊழியத்தைப் பொருளுதவியினால் தாங்கும்படி கேட்பது தவறல்ல. ஆனால் அடிக்கடி அவ்வாறு கூறுவதும் அதற்காகப் பல பெயர்களில் பணம் சேகரிக்கும் திட்டங்களைக் கூறுவதும் ஆண்டவருடைய பார்வையில் சரியாக இருக்குமோ?

தனது ஊழியத்திற்குப் பெரும் மாளிகை கட்டவேண்டும் என்று திட்டமிட்டு, பெருந்தொகையை வங்கியில் கடனாக வாங்கி, மக்களின் காணிக்கைப் பணத்தில் ஒரு பகுதியை வட்டியாகச் செலுத்துவது கர்த்தரின் பார்வையில் சரியானதா, அருவருப்பானதா என்று சிந்தித்துப்பாருங்கள். கர்த்தர்தான் இவ்வாறு செய்யச் சொன்னார் என்று கர்த்தரின்மீது பழிபோடும் ஊழியரும் உண்டு. கர்த்தர் சொன்னால் கர்த்தர் கொடுப்பார். கர்த்தர் கொடுக்கும்வரை காத்திருக்காமல் பொறுமையின்றி வட்டிக்குக் கடன் வாங்குவதைக் கர்த்தருடைய நடத்துதல் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா? மக்கள் தங்களின் ஏழ்மையிலும் கர்த்தருக்கென்று உங்கள் ஊழியத்தைப் பணம் கொடுத்துத் தாங்குகிறார்கள் என்பதை ஒருபோதும் மறந்துபோகாதீர். காணிக்கைப் பணத்திற்கு நீங்கள் கணக்கு வைக்கா விட்டாலும் கர்த்தர் கணக்கு வைத்திருக்கிறார், கணக்குக் கேட்பார். பணம் கேட்காமல் இத்தகைய ஊழியங்கள் செய்வோர் உண்டு. தேவன் அவர்களின் குடும்ப, ஊழிய தேவைகளைச் சந்தித்து வருகிறார். தேவனிடம் கேட்காமல் மனிதரிடம் பணம் கேட்பது தரக்குறைவு. மனிதரிடம் கெஞ்சிக் கேட்டுதான் ஊழியம் செய்யவேண்டுமெனில் அது கர்த்தருடைய ஊழியம் என்று கூறப்படுமோ? மக்களின் மனதில் கர்த்தர் பேசி அவர்களாக ஊழியத்தைத் தாங்குவதற்கு முன்வராவிட்டால் உங்கள் ஊழியத்தை நிறுத்திவிடுவது நல்லது. கர்த்தர் அழைத்தார் என்றால், அவர் தேவைகளைச் சந்திப்பார். உங்களுக்கு இதற்கேற்ற விசுவாசம் இல்லையோ? மனிதரிடம் பணத்திற்காகச் கெஞ்சுவதை நிறுத்தினால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

### வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியம்

பல மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பதை நாம் அறிவோம். எழுத்துகள் இல்லாத மொழிகளைப் பேசுகிறவர்களுக்கு அவர்களின் தாய்மொழியில் வேதாகமத்தைக் கொடுக்கவேண்டும் என்று தியாகமாக, கடினமாக உழைப்பவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம். அவ்வாறு மொழிமாற்றம் செய்பவர்கள் மிகவும் கவனமாக அவற்றைச் செய்யவேண்டும்.

சில வேதாகமங்களில் (தமிழிலும்) புதிய ஏற்பாட்டில் சில வசனங்களை நீக்கியுள்ளனர். நன்கு கவனிக்க, சரியான மொழிபெயர்ப்புகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். சமீப காலத்தில் வெளிவந்த ஒரு தமிழாக்கத்தில் ஆதி.1:2இல் 'ஆவியானவர்.. அசைவாடிக் கொண்டிருந்தார்' என்பதை 'ஆவி... அசைவாடிக் கொண்டிருந்தது' என்று எழுதியுள்ளனர். ஆதி.3:15இல் 'அவர் உன் தலையை நசுக்குவார்' என்பது மூலமொழியின்படி சரியாக உள்ளது. இதை, 'பெண்ணின் வித்து உன் தலையை நசுக்குவார்' என்று தாங்களாக மாற்றி எழுதியுள்ளனர். இவ்வாறு செய்வது கர்த்தரின் பார்வையில் தவறு (வெளி.22:18–19).

### குறிக்கோளுக்கேற்ற ஊழியம்

கைப்பிரதிகள், நூல்கள், பத்திரிகைகள், ஒலிநாடா, **DVD** போன்ற எந்த ஊழியம் செய்தாலும் தெளிவான நோக்கத்துடன், யாருக்கென்று எழுதுகிறோம், யாருக்கென்று தயாரிக்கிறோம் என்று கவனித்து, பயனுள்ளதாக எழுதவேண்டும். இதை வாசிப்பவர்களுக்கு இதனால் என்ன பயன் என்று கவனித்து எழுதாவிட்டால் ஆவிக்குரிய பலன் குறைவாகவே இருக்கும். ஆவியானவரின் ஏவுதல் இல்லாமல் எழுதும் எதுவும் வீண்.

## 25. ஆரஞ்சு நகரத்தின் கதை, இரத்தப்பழி

டாக்டர் ஜாண் ஒய்ட் என்பவர் எழுதிய ஒரு கைப்பிரதியைத் தழுவி எழுதப்பட்ட சிறு உவமையைக் காண்போம்.

லயணல் என்ற ஒருவர் ஆரஞ்சு நகரம் **(Orange Town)** என்ற இடத்தில் வசித்த எட்வின் என்ற நண்பரின் வீட்டில் ஒரு வாரம் தங்குவதற்காகச் சென்றார். ஆரஞ்சு நகரத்திற்கு பல கி.மீ.தொலைவிலிருந்தே தான் சென்று கொண்டிருந்த சாலையின் இருபுறமும் எங்கு பார்த்தாலும் ஆரஞ்சு மரங்களும் அதில் பழுத்துத் தொங்கும் ஆரஞ்சுப் பழங்களையும் கண்டார். ஆரஞ்சு நகரத்தின் மக்கள் இப்பழங்களைப் பறிப்பதற்கு மிகவும் கடினமாக உழைத்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதினார்.

அந்த நகரத்திற்குள் சென்றதும் அந்நகர மக்கள் யாவரும் நகருக்கு வெளியே செல்லாமல் நகருக்குள்ளேயே இருப்பதைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார். இன்றைக்கு விடுமுறை நாளாக இருக்கும் என்று எண்ணினார். தனது நண்பருடைய வீட்டை அடைந்ததும் அவரிடம் கேட்டபோது விடுமுறை இல்லை என்று அறிந்து மேலும் ஆச்சரியப்பட்டார். மறுநாள் காலையில் நண்பரைப் பார்த்து, "வாருங்கள் ஆரஞ்சுகளைப் பறிக்கப் போகலாம்" என்று லயணல் கேட்டபோது ஏழு நாட்களுக்கு ஒரு நாள்தான் ஆரஞ்சுகளைப் பற்றிச் சிந்திப்போம் என்று எட்வின் கூறினார்.

ஆரஞ்சைப் பற்றிச் சிந்திக்கும் நாள் வந்தது. நகரத்தின் மக்களில் பலர் சிறப்பான ஆடைகளை அணிந்துகொண்டு நகரத்தைவிட்டு வெளியே சென்றனர். அவர்களில் சிலர் கைகளில் ஒன்று அல்லது இரண்டு புத்தகங்களை வைத்திருந்தனர். ஏன் யாருமே ஆரஞ்சுகளைப் பறிப்பதற்கு கொக்கிகளுள்ள களைகளையோ, அவற்றைக் கொண்டுவருவதற்கு பெரிய பைகளையோ கொண்டு வரவில்லை என்று ஆச்சரியப்பட்டு தனது நண்பரிடம் கேட்டார். அதற்கு எட்வின் "அவை தேவையில்லை" என்றார். ஆயினும் லயணல் ஒரு பெரிய சாக்குப்பையை எடுத்துக்கொண்டு எட்வினின் குடும்பத்தாருடன் சென்றார்.

நகரத்திற்கு வெளியே சென்ற மக்கள் ஆங்காங்கே தனித்தனியான குழுக்களாக ஒவ்வொரு குழுவும் ஒரு ஆரஞ்சு மரத்தின்கீழ் கூடியிருந்தனர். எட்வினின் குடும்பத்தினர் ஒரு ஆரஞ்சு மரத்தினடியில் ஒரு குழுவினரோடு

சேர்ந்துகொண்டனர். லயணலும் அவர்களோடு அமர்ந்தார். லயணலின் தலைக்கு மேலாக ஒரு ஆரஞ்சுப்பழம் தொங்கிக்கொண்டிருந்தது. அதைப் பறிக்க லயணல் முயன்றபோது எட்வின் தடுத்து, "இந்த இடத்தில் ஒழுங்காக இருக்கவேண்டும். எனவே உட்காருங்கள்" என்று கூறினார். சற்று நேரத்தில் ஒருவர் பாடல்கள் நடத்த ஆரம்பித்தார். இசைக்கருவிகள் முழங்கத் தொடங்கின. பாடகர் குழுவினர் பாடத் தொடங்கினர். கூடியிருந்த யாவரும் எழும்பி நின்று

"ஆரஞ்சுப் பழம் அழகானது
ஆரஞ்சுப் பழம் வாசனையானது
ஆரஞ்சுப் பழம் உருண்டையானது
ஆரஞ்சுப் பழம் சுவையானது"

என்று உற்சாகமாகப் பாடினர். ஆரஞ்சுப் பழத்தைப்பற்றி இவ்வளவு இனிமையாகப் பாடுகிறார்கள். ஆனால் அதை யாரும் பறித்து உண்ணவில்லையே என்று லயணல் வேதனைப்பட்டார். மீண்டும் தனது தலைக்குமேல் இருந்த பழத்தைப் பறிக்க முயன்றபோது எட்வின் அவரைத் தடுத்தார். யாவரும் உட்கார்ந்தபோது வெண்மையான ஆடை அணிந்த ஒருவர் முன்பாக நின்று ஆரஞ்சு பழத்தின் பல நன்மைகளைப் பற்றிப் பேசினார். அவர் பேசி முடித்ததும் யாவரும் மீண்டும் ஒரு பாடலைப் பாடியபோது ஒரு சிலர் யாவரிடமும் பணம் சேகரித்தனர். ஆரஞ்சுகளின் சொந்தக்காரரான மாபெரும் நபரை மனதிற்கொண்டு வேண்டுதல் செய்தனர். அதன்பின் யாவரும் கலைந்து சென்றனர். தங்கள் தலைகளுக்குமேல் இருந்த பழங்களையும் எல்லா மரங்களிலும் பழுத்துத் தொங்கும் ஆரஞ்சுகளையும் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினார்கள். லயணல் எட்வினைப் பார்த்து "நான் சில ஆரஞ்சுகளைப் பறிக்கப் போகிறேன்" என்றபோது அவ்வாறு செய்யக்கூடாது என்று கூறி எட்வின் லயணலைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

சில நாட்களுக்குப்பின் எட்வினிடம் விடைபெற்றுக்கொண்டு ஆரஞ்சு நகரத்திலிருந்து லயணல் தனது ஊருக்குத் திரும்பினார். மீண்டும் சாலையின் இருபுறமும் பல்லாயிரக்கணக்கான ஆரஞ்சு மரங்களைக் கண்டார். ஆனால் அவற்றிலிருந்த பழங்கள் கீழே விழுந்து அழுகிப்போயிருந்தன.

கிறிஸ்தவர்கள் இவ்வாறுதான் வாழ்கின்றனர். அவர்களைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான ஆத்துமாக்கள் கர்த்தரிடம் சேர்க்கப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களோ அதைப்பற்றிக்

கவனமின்றி வாரம் ஒருமுறை தங்கள் சபைப்பிரிவின் 'ஆராதனை'க்குச் சென்று, பாடல்கள் பாடி, செய்திகள் கேட்டு, காணிக்கை கொடுத்து, ஒரு ஆத்துமாவைக்கூட இரட்சிப்பிற்கு வழிநடத்தாமல் தங்கள் வீடுகளுக்குத் திரும்புகின்றனர். ஆத்துமாக்கள் பாவத்தில் திளைத்திருந்து, இரட்சகரான இயேசுவண்டை கொண்டுவரப்படாமல் நரகத்திற்குள் செல்கின்றன.

"விளைந்த பலனை அறுப்பாரில்லை
விளைவின் நற்பலன் வாடிடுதே
அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அந்தோ மனிதர் அழிகின்றாரே"

என்று கர்த்தர் அங்கலாய்ப்பது அவர்களின் (உங்களின்) செவிகளில் கேட்கவில்லையா? (மத்.9:36–38).

**ஆத்தும அறுவடை செய்யாத சபை செத்த சபை.**
**ஆத்தும ஆதாயம் செய்யாத விசுவாசி செத்த விசுவாசி.**
**ஆத்தும ஆதாயம் செய்யாத போதகர் எப்படிப்பட்ட போதகர்?**

ஆதித்திருச்சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக்கொண்டுவந்தார் (அப்.2:47). இப்பொழுது இவ்வாறு ஏன் நடைபெறவில்லையென்று சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்தவர்களின் வாழ்க்கை சரியில்லாததும் கிறிஸ்தவர்கள் இரட்சிப்பைப் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், நற்செய்தியைச் (சுவிசேஷத்தை) சரியாக அறிவிக்கத் தவறியதும் ஆகும். உங்கள் பொறுப்பிலுள்ள சபையின் மக்களை ஆத்தும ஆதாயப் பணி செய்ய வைப்பீர்களா?

**இரத்தப்பழி**

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் குடியிருந்த வீட்டினருகில் சுகவீனமாயிருந்த வயதான ஒருவரைச் சந்தித்தேன். அவரிடம் பேசும்பொழுது அவர் "ஐயா, பாவபாரம் என்னை அழுத்துகிறது" என்று வேதனையுடன் கூறினார். அவரிடம் சற்று நேரம் செலவிட்டு, மறுபடியும் பிறத்தலையும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் அவர் ஏற்றுக்கொள்ளும்படி பேசி, இரட்சிப்பிற்குள் வழிநடத்தி, ஜெபித்து வந்தேன். சில நாட்களுக்குள்ளாக அவர் மரணத் தருவாயில் இருந்தார். மீண்டும் ஒரு சிலருடன் அவரைச் சந்தித்தேன். "ஐயா, நீங்கள் என்ன நிலையில் இருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டபோது அவர், "நான் தேவனுடைய பிள்ளை" என்று உறுதியாகக் கூறினார். அவர் கடைசியாகப் பேசியது இதுதான். சில நிமிடங்களுக்குள்ளாக மரணமடைந்து

கர்த்தரிடம் சென்றடைந்தார். இவ்வாறு ஒரு ஆத்துமாவைக் கர்த்தரிடத்தில் ஒப்படைப்பதற்குக் கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார்.

இந்த மனிதர் இவ்விதம் கர்த்தரைக் கண்டடைந்திருக்காவிட்டால் 70 ஆண்டுகளாக இவர் கிறிஸ்தவராக இருந்து என்ன பயன்? 70 ஆண்டுகளாக இவரது சபையின் போதகராக இருந்த பல போதகரில் ஒருவரேனும் பாவ மன்னிப்பாகிய, மறுபடியும் பிறப்பதாகிய அடிப்படை அனுபவங்களுக்கு இவரை வழிநடத்தவில்லையே, இவர்கள் செய்த ஊழியம் என்ன? கடைசி நேர வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவ்வித வாய்ப்பில்லாமல் நரகம் செல்லும் ஆத்துமா ஒவ்வொன்றிற்கும் அச்சபையின் போதகர் ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் அல்லவா?

**சபை ஊழியரின் பணிக்கான ஆடைகள் அணிந்திருந்தாலும்**
**ஆத்தும இரட்சிப்பிற்கு வழிநடத்தாதவர்**
**சாத்தானின் ஊழியரே தவிர,**
**தேவனுடைய ஊழியர் அல்ல.**
**ஏனென்றால் அவர் தமது பணியைச் சரியாகச் செய்யாததால்**
**பலரை நரகத்திற்கு அனுப்புகின்றார்.**

**காவற்காரன்**

கர்த்தர் தமது பிள்ளைகளை, சிறப்பாக தமது ஊழியரை அவர்கள் வாழும் பகுதிக்குப் பொறுப்பாளராக, காவற்காரராக வைத்துள்ளார். விழிப்புட னிருந்து எதிரிகள் வரும்பொழுது மக்களை எச்சரிப்பது காவற்காரரின் கடமை. தனது கடமையில் தவறுகிற காவற்காரன் தண்டனையடைவான். நமது குடும்பத்தினருக்கு, நமது தெரு மக்களுக்கு, நமது சபை மக்களுக்கு, நமது ஊருக்கு, நமது மாவட்டத்திற்கு, நமது மாநிலத்திற்கு, நமது நாட்டிற்கு, நாம் ஆவிக்குரிய காவற்காரராக கர்த்தரால் நியமிக்கப்பட்டுள்ளோம். வரப்போகிற அழிவைக் குறித்தும் மக்கள் நரகத்திற்குச் செல்லாதபடியும் எச்சரிப்பது நமது கடமை. இதைச் செய்யாவிட்டால் இவர்களின் இரத்தப்பழி ஊழியர்மீதும் சபைமக்கள் மீதும் சுமரும் (எசே.3:17–19; 33:1–9). மேலும், நீதிமானாகிய சபை உறுப்பினர் கர்த்தரைவிட்டு விலகும்போது அவரைச் சந்தித்து, எச்சரித்து, புத்திசொல்வது ஊழியரின் பொறுப்பு. இதைச் செய்யாவிடில் அந்த மனிதனின் இரத்தப்பழி ஊழியர்மீது இருக்கும் (எசே.3:20–21).

**சிதறுண்ட ஆட்டைத் தேடிய ஊழியர்**

தமிழ்நாட்டில் மரியான் உபதேசியர் என்ற ஊழியர் பல ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சபைப்பொறுப்பில் இருந்தார். இவருடைய சபையின் ஒரு விசுவாசி ஏதோவொரு காரணத்தால் இவரிடம் கோபங்கொண்டு 'சபைக்கு வரமாட்டேன்' என்று கூறிச் சென்றுவிட்டார். மரியான் உபதேசியாருக்கு மிகுந்த மனவருத்தம் உண்டாயிற்று. 'அடுத்த நாளில் கர்த்தரின் பந்திக்கு அந்த விசுவாசி வரமாட்டாரே!' என்ற வேதனையில் அவருக்குத் தூக்கம் வரவில்லை. இரவோடிரவாக

'கர்த்தரின் பந்தியில் வா – சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா.
கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப்பூரணமாய் எண்ணி
– கர்த்தரின் பந்தியில் வா

..............................

.... சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அந்நியனாகாதே'

என்று ஒரு பாடலை இயற்றினார். அதிகாலையில் பொழுதுவிடியுமுன்பே அந்த விசுவாசியின் வீட்டின் முன்பு நின்று கண்ணீர் மல்க இந்தப் பாடலைப் பாடினார். வீட்டிற்குள்ளிருந்த விசுவாசியின் உள்ளம் உடைந்தது. கதவைத் திறந்து ஓடிவந்து உபதேசியாரின் காலில் விழுந்தார். உபதேசியார் விசுவாசியைக் கட்டித் தழுவினார். இவ்விதம் ஆடுகளைத் தேடுபவரே உத்தம ஊழியர். 'கிறிஸ்தவ கீர்த்தனைகள்' நூலில் இப்பாடல் உள்ளது.

**'இழந்துபோனவர்களைத் தேடாத எந்த சபையும் தன்னைத் தானே இழந்துபோயிருக்கிறது'.**

**சபை பெருகாவிட்டால்!**

சபையினருக்குக் குழந்தைகள் பிறப்பதாலோ, வெளியூரிலிருந்த ஒருவர் இடமாற்றத்தினால் சபையில் சேருவதாலோ சபை பெருகுவது உண்மையான வளர்ச்சியல்ல. மனந்திரும்புகிறவர்கள் சபையில் சேருவதால் சபை பெருகுவதே உண்மையான வளர்ச்சி. இவ்வாறு வளர்ச்சி பெறும் சபைகள் இன்றும் இருக்கின்றன. உங்கள் சபை இப்படி இருக்கிறதா?

தனது எஜமான் தன்னிடம் கொடுத்த தாலந்தைப் (புதைத்து வைத்து) பத்திரமாகப் பாதுகாத்து, அவரிடம் பத்திரமாகக் கொடுத்த ஊழியரை

எஜமான் பாராட்டவில்லை, பயங்கரமான தண்டனை கொடுத்தார் (மத்.25:24–30). அவ்வாறே, உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சபையானது ஆவிக்குரிய நிலையிலும் எண்ணிக்கையிலும் தொடர்ந்து வளர்ச்சியடையா விட்டால் ஆண்டவர் உங்களைப் பாராட்டுவாரா அல்லது தண்டனை தருவாரா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

**சபையின், கிறிஸ்தவ நிறுவனத்தின்**
**எந்தவொரு சிறுசெயலும்**
**நித்தியத்தைப் பற்றியும்,**
**மக்களைத் தேவனிடம் திருப்புவதைப் பற்றியும்**
**தொடர்புடையதாக இருக்கவேண்டும்.**

# 26. பல கிறிஸ்தவர்களின் நிலை

கிறிஸ்தவ மதத்தில் பக்கவழியாய் நுழைந்த (யூதா4) கள்ளப் போதகரும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் உண்டு. இவர்களை ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய்கள் என்று கர்த்தர் குறிப்பிட்டுள்ளார் (மத்.7:15). இவர்களைக் குறித்து இவ்வதிகாரம் எழுதப்படவில்லை. உண்மையோடு கர்த்தரைப் பின்பற்ற வாஞ்சையுள்ளபோதிலும் அடிப்படையான அனுபவமில்லாத கிறிஸ்தவர்கள் அநேகர் உண்டு. அவர்களின் நிலைமையையும் அவர்களுக்கு நற்செய்தி கூறுவதையும் குறித்து காணப்போகிறோம்.

**1). ஒழுக்கமாயிருப்போர்**

இவர்கள் நல்லொழுக்கமும் உயர்ந்த பண்பாடும் கொண்டவர்களாக அமைவார்கள். இதன் மூலம் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் உள்ளவர்களாக இருப்பார்கள். நற்கிரியைகளின் மூலம் இரட்சிப்பு என்ற எண்ணம் இவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் குடியிருக்கும். பாவம் என்பது வெளியான கிரியைகளினால் தெரிவது மட்டுமே என்று ஓரளவு எண்ணியிருப்பார்கள். எனவே 'தான் ஒரு பாவி' என்ற எண்ணமும் 'தனக்கு இரட்சிப்பு தேவை' என்ற எண்ணமும் இவர்களுக்கு இருக்காது. இவர்களில் ஒரு சிலர் தாங்கள் பாவிகள் என்று ஒத்துக்கொண்ட போதிலும் அதின் பயங்கரத்தை உணராமல் இருப்பார்கள். இவர்களுக்கு ரோம.3:10–12; 2:16; 14:10; 2 கொரி.5:10; எரே.17:10; மத்.5:22,28 போன்ற வசனங்களைப் பயன்படுத்தலாம். இந்த வசனங்களின் கருத்துகளைத் தியானியுங்கள். சுயநீதியைப் பெரிதாக எண்ணும் பண்பு இவர்களுக்கு உண்டு (சுயநீதி என்றால் நற்கிரியைகளினாலும் நியாயமாக நடப்பதாலும் கிடைக்கும் நீதி). இந்த எண்ணம் உள்ளவர்களுக்கு ஏசா.64:6; ரோம.3:21–24;10:3–5 போன்ற வசனங்களினின்று பேசலாம்.

**2). சடங்காசாரங்களை நிறைவேற்றுவோர்**

சபைக்கு உண்மையாயிருத்தல், சடங்காசாரங்களை நிறைவேற்றுதல் என்பவற்றை இரட்சிப்பாகக் கருதுதல் ஒரு சிலரின் கருத்தாகும். கிறிஸ்துவோடு தனிப்பட்ட அனுபவம் உடையவராயிருப்பது இவர்களுக்குத் தெரியாது. தங்கள் சடங்காசாரங்களினிமித்தம் நிச்சயம் பரலோகத்திற்குச் சென்றுவிடலாம் என்கிற தவறான நம்பிக்கை இவர்களுக்கு உண்டு.

நிக்கோதேமுவிற்குக் கர்த்தர் சொன்ன யோவா.3:3,5 வசனங்களை இவர்களுக்குப் பயன்படுத்தலாம்.

**a) ஞானஸ்நானம் பெறுவதை நம்புதல்**

சிறு குழந்தையாகவோ அல்லது வளர்ந்த பின்போ பெறும் ஞானஸ்நானம் தான் மறுபடியும் பிறத்தல் என்று எண்ணும் அநேக கிறிஸ்தவர்கள் உண்டு. இப்படிப்பட்டவர்களுக்கு விசுவாசியாவது என்பது வேறு, ஞானஸ்நானம் என்பது வேறு என்பதை விளக்க வேண்டும் (மாற்.16:16; அப்.8:12; 19:1–6; மத்.28;19). ஞானஸ்நானம் மிகவும் அவசியம் தான். ஆனால் ஞானஸ்நானம் வேறு, இரட்சிப்பு வேறு, பரிசுத்த ஆவியைப் பெறுதல் வேறு (அப்.8:12,15,17).

**b). திருவிருந்தை நம்புதல்**

திருவிருந்து என்பது கர்த்தருடைய பந்தி என்றும் அழைக்கப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கே கர்த்தருடைய பந்தியில் சேருவதற்குத் தகுதியுண்டு. தகுதியில்லாதவர்கள் அதில் பங்கு பெற்றால் என்ன நேரிடும் என்பதை 1 கொரி.11:27–30இலிருந்து காணலாம். திருவிருந்து இரட்சிப்பு அல்ல. இரட்சிக்கப்பட்டவர்கள் திருவிருந்தில் பங்கேற்க வேண்டும் என்பதே சரியானது.

**3). ஆவிக்குரிய அனுபவமில்லாதோர்**

அநேக ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்திருந்தபோதிலும் பாவ மன்னிப்பின் நிச்சயம், கர்த்தரோடு ஐக்கியம், உள்ளத்தில் சமாதானம், இரட்சிப்பின் மகிழ்ச்சி, மரண பயமின்மை, வாழ்க்கை மாற்றம், உள்ளத்தின் எண்ணங்களிலும் நோக்கங்களிலும் மாற்றம் போன்றவற்றை இவர்கள் அனுபவித்திருக்கமாட்டார்கள். இவர்களுக்கு நமது வாழ்க்கையின் இந்த அனுபவங்களைச் சாட்சியாகத் தெளிவாகக் கூறவேண்டும். உண்மையான சாட்சிகள் இவர்களைக் கிறிஸ்துவின் பக்கம் ஈர்க்கும்.

**4). வேதத்தை ஒத்துக்கொள்வோர்**

வேதத்தின் வசனங்களை முழுவதுமாக இவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். எனவே இரட்சிப்பிற்கேற்ற வேத வசனங்களை இவர்களுக்கு அறிவித்து மறுபடியும் பிறத்தல் என்பதைச் சரியாகப் போதித்தால் இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இவர்களில் சிலர் தங்களுக்கு இருக்கும் வேத அறிவின்படி வாதிடுவார்கள். வாக்குவாதம் இல்லாதபடி, சாந்தமாக, தேவையான பதில்களை மட்டும் கூறவேண்டும்.

**5). அற்புதங்களை ஒத்துக்கொள்வோர்**

அற்புதங்கள் நடைபெறுவதை ஏற்றுக்கொள்வார்கள். கர்த்தரின் நாமத்தில் அற்புதங்களை நடப்பிக்கிறவர்களை மதித்து அவர்களின் ஊழியங்களுக்கு உதவி செய்வார்கள் (யோவா.3:1,2). எனவே ஆவியின் வரங்களுக்காக ஊக்கமாக ஜெபித்து, வரங்களோடு ஊழியம் செய்ய வேண்டும்.

**6). தங்கள் சபைப்பிரிவை மட்டும் கருதுவோர்**

சபையென்பது கிறிஸ்துவின் சரீரம் (எபே.1:23; 4;12; கொலோ.1:18,24) என்பதால் அது உலகிலுள்ள எல்லா விசுவாசிகளையும் உள்ளடக்கியதாகும். இதில் பாரபட்சம் காட்டுதல் கூடாது. தங்களது சபைப்பிரிவின் கோட் பாடுகளையும் பாரம்பரியங்களையும் நம்பி ஏமாந்துபோகும் பலர் உண்டு. அவர்களுக்கும் சபையென்பதின் பொருளைத் தெளிவாக உணர்த்தவேண்டும்.

**7). கற்றுக்கொள்ளும் ஆர்வமுள்ளோர்**

தங்களுக்குத் தெரியாதவற்றைக் கேட்கும்போது அவற்றைக் கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டும் நற்குணம் இவர்கட்கு உண்டு. நற்சாட்சிகளின் அனுபவங்களைக் கேட்கும்போது தாங்களும் இவ்வனுபவங்களை அடைய விரும்புவார்கள்.

**8). மற்றவர்களுடன் தங்களை ஒப்பிடுவோர்**

பிறருடன் தங்களை ஒப்பிட்டு, தாங்கள் அவர்களைவிட நல்லவர்கள் என்று தங்களைத் தேற்றிக்கொள்வார்கள். மேலும், தாங்கள் அவ்வாறு இருப்பதின் மூலம் பரலோகத்திற்குத் தாங்கள் தகுதியுள்ளவர்கள் என்ற எண்ணம் இவர்களின் உள்ளத்தில் அடித்தளத்தில் இருக்கும் (லூக்.18:10–14இல் பரிசேயன் தன்னை ஆயக்காரனோடு ஒப்பிடுவதைப் பார்க்கிறோம்). நாம் நம்மை, கிறிஸ்துவுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்ற உண்மையை இவர்கள் உணரச் செய்யவேண்டும். கிறிஸ்துவோடு ஒப்பிடும்போது நாம் யாவரும் பாவிகள் என்பதை யாரும் மறுக்கமுடியாது (ரோம.3:21–24). கிறிஸ்துவின் வாழ்க்கையே நம்மை அளக்கும் அளவுகோல் என்பதை உணர்ந்தால் நமது குறைகளையும், பலவீனங்களையும், பரிசுத்தக் குறைவையும் புரிந்துகொள்ளமுடியும், இவ்வாறு புரிந்துகொண்டவுடன் இரக்கத்திற்காகக் கெஞ்சினால் கர்த்தர் கிருபையாக மன்னிப்பார்.

### 9). கிருபையைக் குறித்த தெளிவு இல்லாதோர்

பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறும்போது ஒரு மனிதன் தேவனுடைய கிருபையை ஓரளவு உணருகிறான். இவ்விதம் தேவனுடைய கிருபை தங்களை முற்றிலும் பாவமறக் கழுவுகிறது (1 யோவா.1:7; வெளி.1:6) என்பதை அனுபவிக்காததால் மூளையளவில் தெரிந்திருந்தாலும் அதின் ஆழத்தை அறிந்திருக்கமாட்டார்கள். தேன் இனிக்கிறது என்று புத்தகங்கள் வாயிலாகவும் மற்றவர்கள் கூறுவதினின்றும் எவ்வளவுதான் தெரிந்து கொண்டாலும் ருசித்துப் பார்த்தால்தான் தெரியும் அல்லவா! எனவே, இரட்சிப்பின் மகிழ்ச்சியை இவர்களுக்குச் சொல்வது நல்லது. மேலும், இரட்சிக்கப்படும்போது நாம் மரண பயத்தினின்று விடுதலையாகிறோம் அல்லவா (எபி.2:15)?. அதை விளக்கும் போது இரட்சிப்பின் முக்கியத்துவத்தை மேலும் அறிந்துகொள்கிறார்கள்.

### 10). பரிசுத்த ஆவியானவரின் சாட்சியை அறியாதவர்கள்

ஒருவன் தான் பரலோகம் செல்வேன் என்று தன்னுடைய நற்கிரியைகள் மூலமாக நம்புவதற்கும், பரிசுத்த ஆவியானவர் அவன் உள்ளத்தில் சாட்சி கொடுப்பதற்கும் (ரோம.8:16) அநேக வேறுபாடுகள் உண்டு. உள்ளத்தின் ஆழத்தில் பரிசுத்த ஆவியானவரின் இவ்வித சாட்சி இல்லாதவன் மறுபடியும் பிறந்தவன் அல்ல. எனவே இவ்வித சாட்சியைக் குறித்துப் பேசலாம்.

### 11). கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய தெளிவு இல்லாதோர்

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் காரணத்தைப் புரிந்து கொள்வது அவசியம். மனிதன் தன் சொந்தக் கிரியைகளினால் பரலோகம் செல்லலாம் என்றால் இயேசு மரித்தது வீண் (கலா.2:21). இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படாதவனுக்குப் பரலோகத்தில் பங்கில்லை (யோவா.13:8). இயேசுவின் இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாகியிருக்கிறது (ஏசா.53:5; எபே.1:7; கொலோ.1:14). எனவே கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் குறித்து இவர்களிடம் தெளிவாகக் கூற வேண்டும்.

### 12). விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பைப் பெறமுடியும் என்று அறியாதோர்

இரட்சிக்கப்படுவதற்கு மனிதன் செய்யவேண்டியது விசுவாசித்தல் என்பதை அப்.16:31 தெளிவுபடுத்துகிறது, மேலும் யோவா.1:12; 3:16; 3:18; அப்.13:39; 15:9; ரோம.1:16; 3:22,28; எபே.2:8 போன்ற பல வசனங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

# 27. சபை வளர்ச்சி

சபை வளர்ச்சியில் எண்ணிக்கையில் வளர்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சி என்று இரு வேறு பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**எண்ணிக்கையில் வளர்ச்சி**

இதில் மூன்று வகை உண்டு.

1) உயிரியல் வளர்ச்சி **(Biological growth)**

2) இடமாற்றத்தால் வளர்ச்சி **(Growth due to migration)**

3) மனமாற்றத்தால் வளர்ச்சி **(Growth due to conversion)**

ஏற்கெனவே சபையில் இருப்பவர்களுக்குக் குழந்தைகள் பிறப்பதால் சபையினரின் எண்ணிக்கை கூடுவது உயிரியல் வளர்ச்சியாகும்.

வேலையின் காரணமாகவும் பல்வேறு காரணங்களுக்காகவும் ஒரு ஊரின் சபையில் இருந்த ஒருவர் அல்லது ஒரு குடும்பம் புதிய ஊருக்கு வந்து அங்குள்ள சபையில் சேருவதால் அச்சபையின் எண்ணிக்கை அதிகரிப்பது இடமாற்றத்தால் நடைபெறும் வளர்ச்சியாகும்.

மனமாற்றம் அடைவதால் புதிதாகச் சபையில் மக்கள் சேருவது மனமாற்றத்தால் நடைபெறும் வளர்ச்சியாகும் (அப்.2:47).

மனமாற்றத்தால் புதியவர்கள் சபையில் சேர்வதுதான் சபையின் உண்மையான எண்ணிக்கை வளர்ச்சி. **(Growth of a church by conversion is the true numerical growth of a church).**

**ஆவிக்குரிய வளர்ச்சி**

சபை மக்கள் பரிசுத்தத்திலும், கர்த்தருக்குக் கொடுப்பதிலும், ஆவியின் கனியிலும் (குறிப்பாக அன்பிலும், விசுவாசத்திலும்), ஆத்தும ஆதாயம் செய்வதிலும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாவதிலும் (கொலோ. 1:28), பூரணத்தை நோக்கிக் கடந்துபோவதிலும் (எபி.6:1–3), கர்த்தருடைய வருகையை எதிர்பார்ப்பதிலும் (பிலி.3:20; 1 தெச.1:10), நீதியின் வசனத்தில் பழக்கமுள்ளவர்களாவதிலும் (எபி.5:13), நன்மை தீமையின்னதென்று பகுத்தறியத்தக்க முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய

பூரணவயதுள்ளவர்களாவதிலும் (எபி.5:14) முன்னேறுவது சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி என்று கூறலாம்.

**எந்தவொரு சபையும் எண்ணிக்கையிலும் ஆவிக்குரியவற்றிலும் ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சியடையவேண்டும். அவ்வாறு வளராத சபை செத்த சபை.**

**எந்தவொரு ஊழியத்தில் இவ்வித வளர்ச்சியில்லையோ அதின் தலைவர், ஊழியர் அதற்குப் பொறுப்பு ஆவார்.**

**எடுத்துக்காட்டு**

ஏறத்தாழ 50 ஆண்டுகளான ஒரு சபை சென்னையில் இருக்கிறது. பழைய அதின் கட்டிடத்திற்குள் பல ஆண்டுகளாக ஏறத்தாழ அதே எண்ணிக்கையுள்ள சில குடும்பத்தினர் வந்து ஆராதனையில் பங்கேற்கின்றனர். 50 ஆண்டுகளான சபைக்கு அநேக போதகர்கள் வந்தனர். காணிக்கை அதிகரித்தது. ஆனால் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை, மக்களின் ஆவிக்குரிய தரம் வளர்ச்சியடைந்ததாகத் தோன்றவில்லை.

அதனருகில் ஒரு ஊழியர் குடியேறி அங்குள்ள மக்களைச் சந்தித்து, ஒரு சிலர் ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடன், ஒரு குடிசையில் ஆராதனையைத் தொடங்கினார். சுற்றிலும் இருந்த ஏழையான பிள்ளைகளுக்கு வார நாட்களில் மாலையில் இலவசமாகப் பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்தார். சில தையல் இயந்திரங்களை வாங்கி ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் இலவசப் பயிற்சி அளிக்க ஏற்பாடுசெய்தார். பல விதங்களில் உதவிசெய்த அவருடைய அன்பைப் பார்த்து அநேகர் சபை ஆராதனைகளில் கலந்துகொள்ளவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், சபைக்கு உதவவும் முன்வந்தனர். ஆலயத்திற்கென்று பலருடைய உதவியால் ஒரு இடம் வாங்கி, ஆலயம் கட்டினார். சபை பெருகிற்று. தொடர்ந்து அவர் மக்களுக்கு உதவிசெய்து வருகிறார். அவருடைய ஆலயத்தில் ஆராதனையில் சபை நிரம்பி வழிகிறது. புதிதாக அநேகர் வருகிறார்கள். சபை மக்களை (குறிப்பாக வாலிபர்களை) ஆத்தும ஆதாயப்பணியில் பழக்கிவிடுகிறார்.

ஏது உயிருள்ள சபை? ஏது செத்த சபை? உங்களின் சபை, ஊழியம் எவ்வாறிருக்கிறது?

# 28. ஊழியர்களுக்கு நியாயத்தீர்ப்பு

கர்த்தருடைய பணியில் ஈடுபடுவோர்க்கும் நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. எவ்வளவு பெரிய புகழ் பெற்ற ஊழியரானாலும், நியாயத்தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். இறுதியில் அவர்களின் ஊழியம் பரிசோதிக்கப்படும்.

நான்கு விதமான தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன.

**தீர்ப்பு 1**

ஊழியர் செய்த பணி நிலைத்தால் வெகுமதி அளிக்கப்படும் (1 கொரி.3:12–14). கர்த்தர் அந்த ஊழியரை நோக்கி, "நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி", என்று மகிழ்ந்து பாராட்டுவார் (மத்.25:21,23).

**தீர்ப்பு 2**

ஊழியர் நன்கு பணிபுரிந்தபோதிலும் செய்த பணி நிலைத்திருக்காவிட்டால் (வெந்துபோனால்) அவர் ஒரு வெகுமதியையும் பாராட்டையும் பெறாவிட்டாலும் அவர் மட்டும் இரட்சிக்கப்படுவார் (1 கொரி.3:15).

**தீர்ப்பு 3**

சரியாகப் பணி செய்யாத ஊழியர் நரகத்தில் தள்ளப்படுவார் (மத்.25:24–30). ஒரு பெரிய கூட்டத்தில் யாவரும் மனம்நொந்து அழுதுகொண்டிருப்பதையும், வேதனையைத் தாங்க இயலாமல் பற்களைக் கடிப்பதையும் பார்த்தால் எப்படியிருக்கும்? இப்படிப்பட்ட நரகத்தில் இத்தகைய ஊழியர் தள்ளப்படுவார்கள் (மத்.25:30). வேதத்தைப் போதிக்கும் ஊழியர் நரகத்திற்குச் செல்வது மிகவும் வெட்கப்படத்தக்க நிலையாகும்.

எப்படிப்பட்ட ஊழியர் இத்தண்டனை அடைவார்? யாருடைய ஊழியத்தில் சபையானது ஆவிக்குரிய தரத்திலும் எண்ணிக்கையிலும் வளர்ச்சியடையவில்லையோ அவரே தாலந்தைப் (புதைத்து வைத்து) பத்திரமாகத் திரும்பக் கொடுத்த ஊழியரைப் போன்றவர்.

ஒரு சில ஆண்டுகள் ஊழியம் செய்தபின் உங்களுடைய ஊழியத்தின் தரமும், விசுவாசிகளின் ஆவிக்குரிய தரமும், விசுவாசிகளின் எண்ணிக்கையும்

குறையவில்லையெனில் மகிழ்ச்சியடையாதீர்கள். குறையாமல் அப்படியே இருந்தால் தண்டனையே உண்டு (மத்.25:30).

கர்த்தரோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான் (லூக்.11:23) என்பதால், புதிய ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாத ஊழியர் சபைகளைச் சிதறடிக்கின்றனர். இவர்களுக்குக் கிடைக்கம்போகும் 'வெகுமதி' எவ்வாறு இருக்கும்?

**தீர்ப்பு 4**

**பாழாக்கும் ஊழியர்**

இழப்பு இல்லாத ஊழியத்திற்குத் தண்டனையென்றால், சரியாகப் பணி செய்யாததால் விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையும் எண்ணிக்கையும் குறைந்துபோனால் அந்த ஊழியருக்கு என்ன கிடைக்கும்!

தங்கள் வாழ்க்கையில் வெளிப்படையாகக் காணப்படும் பாவத்தால் கர்த்தரின் திருப்பெயர் பிறரால் தரக்குறைவாகப் பேசப்படுவதற்கும், பலர் இடறலடைவதற்கும் காரணமாயிருக்கும் கள்ள ஊழியருக்கு அதிக ஆக்கினை இருக்கும்.

கர்த்தருடைய ஆற்றலைச் சந்தேகிக்கும்படி பேசும் கள்ள ஊழியருக்கும் அதிக தண்டனை இருக்கும் (2 பேது.2:1,3,12,17).

| | இறுதி நிலை | தீர்ப்பு |
|---|---|---|
| 1. | உண்மையாக உழைத்தவர் – ஊழியம் நிலைத்தல் | பரலோகம் சேர்தல், வெகுமதி பெறுதல் |
| 2. | உண்மையாக உழைத்தவர் – ஊழியம் நிலைக்கவில்லை | பரலோகம் சேர்தல், வெகுமதி இல்லை |
| 3. | ஆவிக்குரிய வளர்ச்சியும் எண்ணிக்கை வளர்ச்சியும் இல்லை – அதற்காக உழைக்காதவர் | நரகத்தில் தள்ளப்படுதல் |
| 4. | முன்மாதிரியான வாழ்க்கை இல்லாததால் பிறருக்கு இடறலாயிருப்பவர் – பாழாக்குபவர், கள்ளப்போதகர் | என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது (2 பேது.2:17) |

அன்பான ஊழியரே, உமது நிலை என்ன?

# 29. இது காலமா?

"... பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்பு களையும், திராட்சத்தோட்டங்களையும், ஆடுமாடுகளையும், வேலைக் காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கு இது காலமா?" என்று எலிசா தீர்க்கதரிசி தனது வேலைக்காரனான கேயாசியைக் கேட்டதை 2 இரா.5:26இல் காண்கிறோம்.

**தேவனுடைய ஊழியர் என்று அழைக்கப்படுகிறவரே!**

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் ஆடம்பரமாக வாழ இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் ஆடம்பர சொகுசு கார் வாங்க இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் உங்களுக்கு மாளிகை கட்ட இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் நிறைய நிலங்களை வாங்க இது காலமா?

அளவிற்கு மீறி கடன்வாங்கி மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கையை வங்கி வட்டிக்குச் செலுத்த இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் தேவையற்றபோது விமான பயணம் செல்லவும், வெளிநாடு செல்லும்போது விமான பயணத்தின் பணக்காரர் வகுப்பு **(Executive class)** பயணம் செய்யவும் இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் பெரிய நட்சத்திர விடுதியில் **(5 star hotel)** தங்குவதற்கு இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் புகழ் சேர்ப்பதற்கு இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தில் பல வேலைக்காரர்களைக் கொண்டு பகட்டாகக் காண்பிப்பதற்கு இது காலமா?

மக்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கைப் பணத்தை வழக்குகளில் செலவளிக்க இது காலமா?

பலவித திட்டங்களைக் கூறி, காணிக்கை கொடுங்கள் என்று கேட்பதற்கு இது காலமா?

காணிக்கை கொடுக்கும் பலர் ஏழ்மையில் இருக்கும்போது அவர்கள் தரும் பணத்தில் ஆடம்பரமாயிருப்பது ஆசீர்வாதமாயிருக்குமோ?

சபைக்கு, நிறுவனத்திற்கு இருக்கும் சொத்துக்களை (இரகசியமாக) விற்று, பணம் சுரண்டுவதற்கு இது காலமா?

பல ஊழியர்களின் பணித்தளங்களில் ஆலயம் இல்லாமல் தவிக்கும் பல ஏழையான சபைகள் இருக்கும்போது, 'ஆலயப் புதுப்பித்தல்', 'பளபளப்பான தரை கட்டுதல்', 'இடித்துக் கட்டுதல்', 'விரிவுபடுத்தல்' என்ற பெயரில் காணிக்கை சேகரித்து ஒரு பகுதியைச் சுரண்டுவதற்கு இது காலமா?

**வங்கியில் திரளான பணம் சேர்த்தல்**

ஊழியரே, சபையாரே, காணிக்கைப் பணத்தை வங்கிகளில் திரளாகச் சேர்த்து வைப்பது தேவைதானா? ஓரளவு அவசரத் தேவைக்கு வங்கிகளில் சேர்த்து வைக்கலாம். மீதமுள்ள பணத்தை ஆத்தும ஆதாயப்பணிக்கு செலவிடுங்கள். இங்கு வங்கிகளில் பெரும்பணத்தை வைத்திருந்தால் பரலோக வங்கியில் கணக்கு குறைவாகவே இருக்கும். **நரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் மக்களை விடுவிப்பதற்கில்லாமல் வங்கியில் சபையின் (ஊழிய நிறுவனத்தின்) பெயரில் இருக்கும் காணிக்கைப் பணத்தினால் என்ன பயன்?**

**தசமபாகம் யாருக்கு?**

கர்த்தருக்குத் தசமபாகம், காணிக்கைகள் கொடுக்கவேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது (லேவி.22:30). தசமபாகம் செலுத்துவதைக் குறித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 'இவைகளையும் செய்யவேண்டும்' என்று கூறியுள்ளதால் (மத்.23:23) கிறிஸ்தவர்களாகிய யாவருக்கும் அது பொருத்தமானது.

மல்.3:10ஆம் வசனத்தில் 'தசமபாகங்களைப் பண்டகசாலைக்குக் கொண்டுவரவேண்டும்' என்பதைக் காண்பித்து, "சபை மக்கள் தங்கள் தசமபாகங்களையும் காணிக்கைகளையும், தாங்கள் உறுப்பினர்களாக இருக்கும் சபைக்கு மட்டுமே கொடுக்கவேண்டும்" என்று போதிக்கும் பலர்

இருக்கின்றனர். பழைய ஏற்பாட்டின் தசமபாகம் ஆசாரியருக்கு உரியதல்ல. தசமபாகம் லேவியருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதும் அந்தத் தசமபாகத்தின் தசமபாகமாகிய நூறில் ஒரு பங்கு மட்டுமே ஆசாரியருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதும் வேதத்தில் கூறப்பட்டுள்ள கட்டளை (எண்.18:24–28). மேலும், லேவியருக்கு மட்டுமின்றி, பரதேசிகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் தசமபாகத்திலிருந்து கொடுக்கப்பட்டது (உபா.14:28–29; 26:12–13).

தசமபாகம் கர்த்தருக்குரியது (லேவி.27:30), ஒரு குறிப்பிட்ட சபைப் பிரிவின் ஊழியருக்கு மட்டுமல்ல. தங்கள் சபைப்பிரிவு மட்டும்தான் பண்டகசாலை என்று கூறினால், கர்த்தருக்கென்று தியாகமாக ஊழியம் செய்கிற நற்செய்திப்பணி நிறுவனங்கள் (மிஷனரி இயக்கங்கள்) யாருடைய பண்டகசாலை? ஆத்தும ஆதாயம் செய்வதற்காக காடு மலைகளில் அலைந்து திரிகிறவர்களும் தேவனுடைய ஊழியரல்லவா? 100 அல்லது 200 குடும்பத்தினர் தங்கள் ஒரு குடும்பத்திற்கே தசமபாகம் கொடுக்கவேண்டும் என்று சபை ஊழியர் எதிர்பார்ப்பது பண ஆசையல்லவா!

தங்கள் சபைக்குமட்டும் என்று இல்லாமல் பவுலின் நற்செய்திப் பணியைத் தங்கள் பணத்தால் பலமுறை தாங்கிய பிலிப்பியர் நமக்கு முன்னோடிகள். பிலி.4:10, 15, 16ஐத் தியானித்தால் இது நன்கு புரியும். மேலும், எருசலேமில் வறுமையிலிருந்த பரிசுத்தவான்களுக்கு கலாத்தியா நாட்டு சபைகளும் கொரிந்தியரும் தர்மப்பணம் அனுப்பியதை 1 கொரி.16:1–3 போன்ற பல பகுதிகளில் வாசிக்கிறோம். ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புவது நமது கடமையல்லவா? (நெகே.8:10) தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படி அப்போஸ்தலராகிய யாக்கோபும் கேபாவும் யோவானும் கூறியது நமக்கும் பொருந்தும் (கலா.2:9–10)! **இவற்றை மனப்பூர்வமாக நாம் செய்யவேண்டும்.**

எனவே, கர்த்தருக்குரியதான தசமபாகத்தை, கர்த்தருடைய ஊழியத்தை (ஆத்தும ஆதாயம் செய்கிற, சீடர்களாக்கும் பணியைச் செய்கிற) எந்த சபைப் பிரிவிற்கும், எந்த ஊழியருக்கும், எந்த நற்செய்திப்பணி நிறுவனத்திற்கும் கொடுப்பது சரியானதுதான் என்பதில் சந்தேகமில்லை.

**செய்யவேண்டியது என்ன?**

1) சபை மக்கள் தாங்கள் உறுப்பினராக இருக்கின்ற, ஆவிக்குரிய நன்மைபெறுகின்ற சபைப்பிரிவிற்கு, தாராளமாகக் கொடுக்கவேண்டும்

(கலா.6:6). மேலும், பிற உத்தமமான ஊழியங்களையும் பொருளுதவியால் தாங்கவேண்டும். ஆத்தும ஆதாயம் செய்யாமலிருப்பவர்களுக்கு மிகுந்த பணத்தைக் கொடுப்பது சரியல்ல.

2) பொருளுதவி பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஊழியரும் நிறுவனமும் அதைக் கவனமாகப் பயன்படுத்துவது மட்டுமின்றி, உதவிசெய்தவர்களுக்கு ஆவிக்குரியவற்றைப் போதிக்கவேண்டும் (கலா.6:6; 1 கொரி.9:11).

**கணக்குக் கேளாதிருத்தல்**

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்த தச்சர், சிற்பாசாரிகள், கொற்றர், கல்தச்சர் போன்றவர்கள் உண்மையாக வேலை செய்தபடியால் அவர்களிடம் கணக்குக் கேட்கப்படவில்லை என்பதை 2 இரா.12:11–15இல் வாசிக்கிறோம். இதை மேற்கோள்காட்டி சபை ஊழியரிடம் கணக்குக் கேட்கக்கூடாது என்று சிலர் கூறுகின்றனர். இந்நிகழ்ச்சியின் ஆரம்ப கட்டத்தை, இதற்கு முன் உள்ள பகுதியான 2 இரா.12:4–8இல் வாசியுங்கள். ஆசாரியர் பல ஆண்டுகளாக ஆலயப் பணத்தைச் சரியாகச் செலவிடாததால் பணத்தை நிர்வாகம் செய்யும் பொறுப்பிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டதை அப்பகுதி கூறுகிறது. கர்த்தருக்கென்று கொடுக்கப்படும் பணத்தைச் சரியாக நிர்வாகம் செய்யாவிட்டால் ஒரு நாள் கர்த்தரிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதை நினைவிற்கொண்டு கர்த்தருக்குப் பயந்து ஊழியம் செய்வதே சிறந்தது.

**தேவைகளைச் சந்தித்தல்**

**சபையில் தேவையிலிருப்போருக்கென்று பணம் சேகரித்து உதவலாம். மேலும், விபத்து, நோய் போன்றவற்றால் அவதியுறும் குடும்பத்தினரின் தேவைகளைச் சந்திக்கவேண்டும். தங்களிடம் பணிபுரியும் ஒருவர் மரணமடையும்போது அவர்களின் குடும்பத்தினருக்கு அரசும் நிறுவனங்களும் உதவுவதுபோல, சபை மக்களின் ஒரு குடும்பத்தினர் அவதியுற்றால், அதற்காகப் பணம் சேகரித்து உதவுவதோடு, அவர்களின் எதிர்காலத்திற்கு நிரந்தர உதவியிருக்குமாறு வேலைவாய்ப்பு போன்றவற்றை அமைத்துத் தரவேண்டும் (யாக்.2:14–16; 1:27). செய்வீர்களா?**

# 30. ஊழியர் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே தொடங்கும் (1 பேது.4:17). ஒவ்வொருவரும் கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய நாள் உண்டு (1 கொரி.3:9–15; எசேக்.33:1–9; 34:1–10). கீழ்க்கண்டவாறு ஒரு பட்டியல் தயார் செய்து ஒவ்வொரு மாதமும் அதை அம்மாதத்திற்கேற்றவாறு நிரப்பி, உங்கள் ஆலய அறிவிப்புப் பலகையில் யாவரும் பார்க்கும்படி வையுங்கள்.

| செயல் | கடந்த ஒரு மாதத்தில் | கடந்த ஆண்டில் |
|---|---|---|
| கிறிஸ்தவரல்லாதோருக்கு எத்தனை இடத்தில் நற்செய்தி அறிவித்தீர்கள்? | | |
| நீங்கள் ஆதாயம் செய்த ஆத்துமாக்களின் எண்ணிக்கை | | |
| உங்கள் சபையினர் ஆதாயம் செய்த ஆத்துமாக்களின் எண்ணிக்கை | | |
| உங்கள் சபையில் புதிதாகச் சேர்ந்துள்ள நபர்களின் எண்ணிக்கை | | |
| ஆத்தும ஆதாயப் பணிக்கு உங்கள் சபை எவ்வளவு செலவளித்தது? | | |
| மிஷனரிப் பணிக்கென உங்கள் சபை அனுப்பிய தொகை | | |

மேலும், ஏழைகளையும் விதவைகளையும் எவ்விதம் சபையின் மூலம் பராமரித்தீர்கள், உங்கள் நேரத்தை நீங்கள் எவ்வாறு செலவிடுகிறீர்கள், தேவன் உங்களுக்கு அளித்துள்ள தாலந்துகளை எந்த அளவிற்கு நீங்கள் பயன்

படுத்துகிறீர்கள், உடன் ஊழியரையும் விசுவாசிகளையும் ஊழியத்திற்கென்றும் ஆத்தும ஆதாயத்திற்கென்றும் எந்த அளவு பயன்படுத்துகிறீர்கள் என்று பலவற்றைக் குறித்து நீங்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதை நினைவிற்கொண்டு செயல்படுங்கள்.

**கர்த்தரின் எச்சரிப்புகள்**

கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக் கொள்கிறவன் சபிக்கப்பட்டவன் (எரே.48:10).

மல்யுத்தத்தைச் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான் (2 தீமோ.2:5).

மறுபடியும் பிறக்கும் அனுபவமும், தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்கும் அனுபவமும் இல்லாத எவரும் தேவனுடைய அரசிற்குள் பிரவேசிக்க முடியாது (யோவா.3:3,5). எனவே இந்த அனுபவம் இல்லாமல் ஊழியராயிருப்பவர் தாமே அதில் பிரவேசிக்க முடியாமல் இருக்கிறார். இவர் சபையை வழி நடத்துவது குருடனுக்கு வழிகாட்டும் குருடன் நடத்துவது போன்றது (மத்.15:14; 23:16,24; லூக்.6:39). இந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளாமல் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் உயிருள்ளவர்களென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவர்களாயிருக்கிறார்கள் (வெளி3:1,15–19).

உங்கள் சபையின் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் கர்த்தரிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபி.13:17). உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப்.20:28).

பயனற்ற ஊழியக்காரன் புறம்பான இருளில் தள்ளப்படுவான்; அங்கு அழுகையும் பற்கடிப்பும் இருக்கும் (மத்.25:30).

கனிதராத அத்திமரம் சபிக்கப்பட்டது போன்று உங்களுக்கு நேரிடாதிருப்பதாக (மத்.21:19). கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத்.3:10).

நீங்கள் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை சேர்க்காவிடில் சிதறடிக்கிறீர்கள் (மத்.12:30; லூக்.11:23). நீங்கள் சேர்க்கிறவரா சிதறடிக்கிறவரா? சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிட்டால் ஐயோ (1 கொரி.9:16).

கர்த்தரின் சித்தத்தின்படி செய்யாத ஊழியர் அநேக அடிகள் அடிக்கப்படுவார் (லூக்.12:47,48).

உங்கள் பகுதியைச் சார்ந்த எல்லர மக்களின் இரத்தப்பழியும் உங்கள்மீது உள்ளது.

எசே.3:17–21; மத்.23:4–30; லூக்.11:40–47 பகுதிகளையும் தியானியுங்கள்

**இவை யாவற்றையும் செய்ய முடியுமா?**

இதில் அநேக குறிப்புகளைப் பின்பற்றி மிகவும் வெற்றிகரமான போதகராயிருக்கும் சிலர் இன்றும் இருக்கின்றனர். நீங்கள் அப்படிப் பட்டவர்களில் ஒருவராக இருப்பீர்களா? ஆவியானவரின் வழி நடத்துதலால் மட்டுமே அவ்வாறு செயல்பட முடியும். அனுதினமும் ஆவியில் நிரம்பியிருந்து, ஜீவனை வெறுத்து, தியாகமாய் ஊழியம் செய்யும்படி அழைக்கப்படுகிறீர்கள் (யோவா.12:25).

**உபத்திரவங்கள் இருக்குமா?**

ஆம். சபைக்குள்ளிருந்தும் வெளியிலும் பொல்லாதவனிடமிருந்தும் உபத்திரவங்கள் இருக்கும். ஆனாலும் திடன்கொள்ளுங்கள். கிறிஸ்து உங்களோடு இருக்கிறார் (யோவா.16:33, மத்.10:16–42). **"இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன், பின்னோக்கேன் நான்"** என்ற பாடலை அடிக்கடி பாடி உங்கள் மனவுறுதியைச் சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எசேக்.33:1–9; 34:1–10, 2 கொரி.6:3–10; 1 தீமோத்தேயு; 2 தீமோத்தேயு; தீத்து ஆகியவற்றைத் தியானியுங்கள்.

**கர்த்தர் உங்களைத் தமது இருதயத்திற்கேற்ற ஊழியராக மாற்றுவாராக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் (1 தெச.5:24)**

# 31. ஊழியரின் பயம், சோர்வு

பயம் என்ற உணர்ச்சி தேவையானது என்பதில் சந்தேகமில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு மாடு ஒரு மனிதனைத் தாக்குவதற்கு ஓடிவரும் போது அந்த மனிதனுக்குப் பயமில்லையெனில் அவன் தப்பி ஓடி முயற்சிக்காமல் மாட்டின் தாக்குதலில் காயமடைவான். எனவே பயம் இன்றியமையாததாகும். பயம் வரும்போது, தேவன் தந்திருக்கும் ஞானத்தையும் அறிவையும் பயன்படுத்தி ஆபத்துகளுக்குத் தப்பித்துக் கொள்ளலாம்.

### தேவனுக்குப் பயப்படவேண்டும்

நாம் தவறு செய்தால் தேவன் கோபம்கொண்டு தண்டிப்பார் என்று தேவனுக்குப் பயப்படுவதைவிட 'நமது எண்ணங்களும் சொற்களும் செயல்களும் தேவனுடைய மனதைப் புண்படுத்திவிடக்கூடாதே' என்ற பயம் ஒவ்வொருவருக்கும் தேவை. அநேக ஊழியர் கர்த்தருடன் நெருங்கிப் பழகியதாலும் தேவனுடைய அன்பை ருசித்ததினாலும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாமல் வாழ்கிறார்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவிக்கவும் நடுக்கத்துடனே களிகூரவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (சங்.2:11; மத்.10:28).

### மனித பயம் தேவையில்லை

நமக்குத் தொல்லை தருபவர்களுக்கும் சத்துருவாகிய சாத்தானின் வல்லமைக்கும் நாம் பயப்படத் தேவையில்லை. "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்" என்று கர்த்தர் தெளிவாகக் கூறியுள்ளார் (மத்.10:28). தேவனுடைய அனுமதியின்றி நமக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. நமது தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத்.10:30). சர்வவல்லவருடைய நிழலில் இருப்பவர்களைத் தொடுவதற்கு மற்றவர்களுக்கு முடியாது (சங்.91:1). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் பெற்றிருக்கும் கிறிஸ்து சகல நாட்களிலும் நம்முடன் இருக்கும்போது நாம் ஏன் பயப்படவேண்டும் (மத்.28:18–20)? பிதா கிறிஸ்துவை அனுப்பியதுபோன்று கிறிஸ்து நம்மை அனுப்புகிறபடியால் எதற்கும் பயப்படாமல், எதற்கும் கவலைப்படாமல் ஊழியம் செய்வோமாக (யோவா.20:21).

**பிசாசிற்குப் பயப்படத் தேவையில்லை**

சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்வதற்குக் கிறிஸ்து நமக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். இந்த அதிகாரத்தை விசுவாசத்துடன் பயன்படுத்தி வெற்றிபெறுவோமாக. நம்மை எதுவும் எவ்விதத்திலும் சேதப்படுத்த முடியாது (லூக்.10:19).

**எவற்றிற்கும் பயமில்லை**

அரசுகள், அதிகாரிகள், தீய மக்கள், பிசாசுகள், வியாதிகள், தரித்திரம், கிருமிகள், வேலை, மரணம், சூழ்நிலைகள், வாகன ஓட்டிகள், விபத்துகள் போன்ற யாவும் கர்த்தரின் ஆளுகைக்குக் கீழ் இருப்பதை நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால் நமக்கு பயம் தேவையில்லை. யேகோவா யீரேயாக இருக்கிற கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் அல்லவா? கர்த்தரின் அனுமதியின்றி உங்கள் தலைமயிரில் ஒன்றுகூட கீழே விழாது (மத்.10:30). தலைமயிரைப் பாதுகாக்கிறவர், உங்கள் உடல் உறுப்புகளையும் உயிரையும் உடைமைகளையும் குடும்பத்தையும் பாதுகாப்பது அதிக நிச்சயம் அல்லவா!

**நாம் பெற்றிருப்பது பயமுள்ள ஆவி அல்ல**

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோ.1:7). நாம் பயப்படுவதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம் (ரோம.8:15). தேவன் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு எதிராயிருப்பவன் யார் (ரோம.8:31)?. ரோம.8:31–39 பகுதியைத் தியானியுங்கள்.

**போராட்டம் இருக்கலாம்**

பெருமையடையாதபடிக்கு ஒரு முள்ளைப் பவுலுக்கு அனுமதித்தது போன்று தேவன் நமக்கும் அனுமதிக்கலாம். ஆனால், அதைத் தாங்கவும், அதின் வேதனையின் மத்தியில் சிறப்பான ஊழியம் செய்யவும் தேவன் நமக்குக் கிருபை தருவார் (2 கொரி.12:7–9).

**சோர்வு**

தோல்வியையும் போராட்டங்களையும் கண்டு துவண்டுபோகாதீர். ஒருபோதும் விழாமலிருப்பதில் அல்ல, ஒவ்வொரு முறை விழும்போதும் திரும்ப எழுந்திருப்பதுதான் சரியான வாழ்க்கை. ஆனால் இதை ஒரு சாக்குப்

போக்காகக் காட்டி திரும்பத்திரும்ப விழுந்துகொண்டிருக்காதீர். "எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசா.60:1).

**வெற்றி மனப்பான்மை**

நமது கண்களுக்குத் தெரியாவிட்டாலும் உத்தம ஊழியரின் வாழ்க்கை வெற்றியடைந்தே தீரும். பரலோகத்தில் யாவற்றிற்கும் கணக்கு உண்டு. கிறிஸ்துவுக்குள் நாம் எப்பொழுதும் வெற்றியடைகிறவர்கள் (2 கொரி.2:14). நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் (ரோம.8:37).

**காத்திருத்தல்**

உடனடி விளைவுகள் வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள் உண்டு. அதற்காக உழையுங்கள். ஆனால் சோர்ந்து போகாமல் காத்திருங்கள். தொடர்ந்து பணிபுரியுங்கள். கர்த்தருடைய வேளைக்காகக் காத்திருங்கள். தேவன் உங்களுக்கு அளித்த பணியை விட்டுவிடாதீர்கள். விளைவானது எண்ணிக்கையில் மட்டுமல்ல, பணியின் தரத்திலுமுள்ளது.

# 32. ஊழியத்தில் கள்ளர்கள்

**கள்ளக் கிறிஸ்துக்கள்**

'நான்தான் கிறிஸ்து' என்று கூறுபவர்கள் கள்ளக் கிறிஸ்துக்கள் ஆவர்.. இவர்கள் கிறிஸ்து போன்று நடிப்பார்கள். பலர் இவர்களைக் கிறிஸ்து என்று கூறுவதும் உண்டு. ஏற்கனவே பலர் இவ்வாறு தங்களைக் கிறிஸ்து என்று கூறியுள்ளது நடந்துவிட்டது. இவர்கள் பல அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்யக்கூடும். கள்ளக்கிறிஸ்துக்களைப்பற்றி கர்த்தர் மத்.24:23–27; மாற்.13:21–22இல் கூறியுள்ளார்.

கிறிஸ்து இவ்வுலகிற்கு மீண்டும் வரும்போது உலக மக்கள் யாவரும் அவரைக் காண்பார்கள் (மத்.24:27,30). அவருடைய பாதங்கள் எருசலேமுக்குக் கிழக்கிலுள்ள ஒலிவ மலையின்மேல் நிற்கும். அப்பொழுது ஒலிவ மலை தன் மையத்திலே இரண்டாகப் பிளக்கும் (சக.14:4). யாவரும் காணும்படியாகவும், ஒலிவ மலை இரண்டாகப் பிளக்கும்படியாகவும், ஒலிவ மலையின் மீது பாதங்கள் நிற்கும்படியாகவும் வருகிறவரே உண்மையான கிறிஸ்து. ஒலிவ மலை இன்று வரை பிளக்காமல் இருக்கிறது. கிறிஸ்து பரமேறிய பின்பு ஒலிவ மலை பிளக்காமல் வந்த, வந்திருக்கிற, வரப்போகிற எல்லா மற்ற கிறிஸ்துக்களும் கள்ளக் கிறிஸ்துக்களே.

**அந்திக்கிறிஸ்து**

1) கிறிஸ்துவுக்கு எதிராகச் செயல்படுபவர்கள் அந்திக்கிறிஸ்துக்கள் (1 யோவா.2:18). இவர்கள் பிதாவையும், குமாரனையும் மறுதலிப்பார்கள் (1 யோவா.2:22; 2 யோவா.7).

2) மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைபண்ணாத ஆவியாக அந்திக் கிறிஸ்துவின் ஆவி செயல்பட்டுவருகிறது (1 யோவா.4:3).

3) கர்த்தரின் இரகசிய வருகைக்குப்பின் ஏழு ஆண்டுகள் இருக்கும் உபத்திரவ காலத்தில் உலகத்தில் பெரிய தலைவனாக ஆட்சி செய்பவனை அந்திக் கிறிஸ்து என்று வேதம் கூறுகிறது (1 யோவா.2:18). அவனுக்கு மிருகம், கேட்டின் மகன், அக்கிரமக்காரன், பாழாக்கும் அருவருப்பு என்ற பல பெயர்கள் உண்டு.

**கள்ள அப்போஸ்தலர்**

அப்போஸ்தலருக்கான அடையாளங்களின்றி தங்களை அப்போஸ்தல

ரென்று அழைத்துக்கொள்பவர்களும் பிறரால் அப்போஸ்தலரென்று அழைக்கப்படுகிறவர்களும் உண்டு (வெளி.2:2). இவர்கள் உண்மையான ஊழியரை விரோதிக்கச் சமயம் தேடுவார்கள். 2 கொரி.11:12–15இல் இவர்களைக் குறித்து எழுதியிக்கிறது.

**கள்ளத்தீர்க்கதரிசிகள்**

தவறான தீர்க்கதரிசனங்களை உரைப்பவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் எனப்படுவர். இதில் மூன்று வகையினர் உண்டு:

1) தாங்கள் உண்மையான தீர்க்கதரிசிகள் என்று ஏமாந்து, தங்கள் மனதில் தோன்றுகிற கருத்துகளைத் தீர்க்கதரிசனம் போன்று கூறுபவர்கள்

2) தாங்கள் காணாத தரிசனங்களையும் கனவுகளையும் தரிசனங்களாகப் பொய்யாகக் கூறுபவர்கள்

3) அசுத்த ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான பல அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்யக்கூடும். இவர்களைப் பற்றி பழைய ஏற்பாட்டின் பல பகுதிகளிலும், மத்.7:15–20; 24:11,24; மாற்.13:22; லூக்.6:26; அப்.13:6; 2 பேது. 2:1இலும் எழுதப்பட்டுள்ளது. இப்பகுதிகளை வாசித்துத் தியானியுங்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொதுவாக நல்ல காரியங்கள் நடக்கும் என்றே உரைப்பார்கள். மக்களின் விருப்பத்திற்கேற்ப இவர்கள் பேசுவதால் மக்கள் மத்தியில் புகழப்படுவார்கள் (லூக்.6:26). மக்களை விசுவாசத்திலிருந்து திருப்ப முயற்சிப்பார்கள் (அப்.13:6–8). எனவே, தீர்க்கதரிசிகள் கூறுவதை நிதானிப்புது அவசியம் (1 கொரி.14:29; 1 தெச.5:21).

எந்த ஒரு காரியத்தையும் யார் முன்னறிவித்தாலும் அவர் கூறியது நிறைவேற சிறிது வாய்ப்பு உண்டு. அவ்வாறு ஊகித்துக் கூறும் காரியம் நடந்துவிட்டாலும் அவர் தீர்க்கதரிசியாக இருக்கவேண்டியதில்லை.

**கள்ளப்போதகர்கள்**

கள்ளப்போதகர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாக நுழையப்பண்ணுவார்கள் (2 பேது.2:1–3). இவர்களின் முடிவு பரிதாபகரமானது (2 பேது.2:20–22). தவறான போதகர்கள் உலகெங்கும் பரவியிருக்கின்றனர். மக்களைப் பரலோகத்திற்கு வழிநடத்தாமல், உலகத்தின் பொருட்களுக்கும் சடங்காச்சாரத்திற்கும், மந்த நிலைக்கும் வழிநடத்துகிறவர்கள் யாவரும் கள்ளப் போதகரே. ஆத்தும ஆதாயம் செய்யாத போதகர்கள் சிதறடிக்கிறவர்களே (லூக்.11:23).

சரியான கருத்துகளுடன் தங்களின் சொந்தக் கருத்துகளையும், அரைகுறை அனுபவத்தில் கண்ட பாதி உண்மைகளையும், யாரோ எழுதிய கருத்துகளையும், தங்கள் கற்பனைக்கு சரியாகத் தோன்றுகிறவற்றையும் கலப்படம் செய்வது கள்ளப்போதகரின் செயலாகும். யார் பேசினாலும் அதை நிதானித்து அறிவது நமது கடமை (1 கொரி.14:29; 1 தெச.5:21).

**வஞ்சிக்கிற ஆவிகள்**

அநேக பொய்களைக் கூறினால் யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே மிகவும் சிறப்பான கருத்துகளையும் உண்மைகளையும் யாவரும் வியக்கும் வண்ணம் கூறினாலும், விசுவாசத்தைக் கெடுத்துப்போடும் ஒரு சில கருத்துகளை, அநேகர் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு, விஷம்போல ஏற்றுவது வஞ்சிக்கிற ஆவியாகும் (1 தீமோ.4:1). ஒரு சில தலைசிறந்த பேச்சாளரும் தலைவரும் இப்படி இருக்கின்றனர். கவனமாக இல்லாவிட்டால் ஏமாந்து போவோம்.

**புதிய உபதேசங்கள்**

சில 'ஊழியர்' தாங்களாகப் புதிய கருத்துகளைக் கூறி, தங்களுக்குப் புகழுண்டாக்கவேண்டும் என்பதில் கவனமாயிருப்பார்கள். இதற்காக வேதத்தை ஆராய்ந்து, தவறான உபதேசங்களையும் வேற்றுமையான உபதேசங்களையும் மக்கள் புரிந்துகொள்ளாத அளவில் நஞ்சைப்போல் புகட்டி விடுவார்கள். தாங்கள் பேசுவதை மிகவும் சிறப்பான, உயர்ந்த பாணியில் அலங்காரமான சொற்களில் பேசுவது இவர்களின் முக்கியமான அடையாள மாகும். இவர்களின் வாழ்க்கையில் ஆவியின் கனியிருக்காது, பாவம் காணப் படும். இப்படிப்பட்ட சாத்தானின் பணியாளரை விட்டு விலகவேண்டும்.

**விழுந்துபோன 'ஊழியர்' தங்களைப் பற்றியே அதிகம் சிந்தித்து, சிறந்த மொழிநடையைப் பயன்படுத்தி, புதிய வேற்றுமையான உபதேசத்தைப் பரப்புவார்கள். இவர்கள் சபையைக் கெடுக்கும் நரிகள் ஆவர்.**

**கனிகளால் அவர்களை அறிவீர்கள்**

எந்த ஊழியராயிருந்தாலும், அவர் எவ்வளவு பெரிய ஊழியத்தைச் செய்தாலும், அவரிடத்தில் எவ்வளவு வரங்கள் இருந்தாலும், அவர் எத்தனை அற்புதங்கள் செய்தாலும், பிசாசுகளைத் துரத்தினாலும், தீர்க்கதரிசனம் உரைத்தாலும் அவரிடம் நல்ல கனி காணப்படாவிட்டால், கெட்ட கனி காணப் பட்டால் அவர் கள்ளத்தீர்க்கதரிசியும் கள்ளப்போதகரும் ஆவார் (மத்.7:15-23). இவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் என்று கர்த்தர் கூறியுள்ளார் (மத்.7:15).

**தேவனுடைய நாமத்திற்கு அவதூறு கொண்டுவருபவர்கள்**

(நிறுவனத் தலைவர், பேராயர், தலைமைப் போதகர் போன்ற) தலைமை ஊழியரும், (பணியாளர், ஆயர், போதகர் போன்ற) ஊழியரும், செயலர்களும், பொருளாளரும், குழு (**Committee**) உறுப்பினர்களும், மூப்பர்களும் ஆகியவர்களில் பலர் பல பாவங்களில் வாழ்தல், (உடை, நடைகளில்) ஆடம்பரம், பெருமை, பதவி மோகம், பணத்தைச் சுரண்டுதல், தன் குடும்பத்தினருக்கும் தனக்கு வேண்டியவர்களுக்கும் தனக்கு இலஞ்சம் கொடுப்பவர்களுக்கும் நிறுவனங்களில் வேலை வாய்ப்பும் பதவி உயர்வும் தருதல், ஊழியத்தை வியாபாரமாக்குதல், நிறுவனத்தின் (சபையின்) சொத்துக்களைப் பிறருக்கு விற்பதின் மூலம் மறைமுகமாகத் தரகு (கமிஷன்) பெறுதல், தவறான கணக்குகள் எழுதுதல், தேர்தல் குழறுபடி செய்தல் போன்ற பல அவலங்களைச் செய்வதால் 'எழுதியிருக்கிறபடி தேவனுடைய நாமம் கிறிஸ்தவரல்லாதோர் மத்தியில் தூஷிக்கப்படுகிறது' (ரோம.2:24). கிறிஸ்தவர்கள் இவ்வாறு இருப்பதே உலகம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாததற்கு முக்கியமான காரணம்.

**ஒழுங்கற்று நடப்பவர்கள்**

ஒரு நிறுவனத்தின் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டவேண்டிய தலைவர் ஒழுங்கற்று நடந்தால் நிறுவனம் பாதிக்கப்படுவதுடன் அந்நிறுவனத்தின் ஊழியரின் ஒழுக்கமும் குறைந்துவிடும். பலர் அவரைப் பின்பற்றி விழுந்து போக நேரிடும். நிறுவனத்தின் ஊழியரைத் தன் சொந்த வேலைக்குப் பயன்படுத்தி, பணம் சம்பாதித்து, நிறுவனத்தின் பணத்தில் அவருக்குச் சம்பளம் கொடுப்பது மறைமுகமான சுரண்டுதல் மட்டுமின்றி, ஒழுங்கற்று நடப்பதற்கான முன்மாதிரியாகும். ஒழுங்கற்று நடப்பவர்களை விட்டு விலக வேண்டும் என்று வேதம் கூறுகிறது (2 தெச.3:6). ஒழுங்கற்று நடப்பவர்களை அகற்றாமல் அவருடன் ஒத்துப்போகும் யாவரும் கர்த்தருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்.

**சபையின் / நிறுவனத்தின் பணத்தைச் சுரண்டுபவர்களும் பரிசுத்தமின்றி வாழ்கிறவர்களும் தவறான போதகங்களைக் கொடுப்பவர்களும் ஒழுங்கற்று நடக்கிறவர்களும் திராட்சத் தோட்டத்தைக் கெடுக்கும் நரிகளாகவும் குள்ளநரிகளாகவும் சபையை / நிறுவனத்தைக் கெடுக்கின்றனர்.**
**இந்த நரிகளைப் பிடித்து, திராட்சத் தோட்டத்திற்கு வெளியே தள்ளவேண்டும் (உன்.2:15; லூக்.20:16)**

ஊழியத்தைக் கெடுக்கும் இப்படிப்பட்ட குழிநரிகளையும் சிறு நரிகளையும் பிடித்து விலக்குவது சபையினரின் கடமை (உன்.2:15). சபையோரே, இதைச் செய்து சபையைத் தூய்மைப்படுத்துங்கள்.

தேவனுடைய நாமம் அவதூறாகப் பேசப்படும்படி (தூஷிக்கப்படும்படி) நடக்கிறவர் யாராயிருந்தாலும் மனந்திரும்பாவிடில், அவர் நரகத்தில் கதறும் நாள் நிச்சயம் வரும்.

> **'பிறரால் தேவனுடைய நாமம் அவதூறாகப் பேசப்படுவதற்கு**
> **நான் ஒரு காரணமாக இருப்பதைவிட,**
> **அதற்கு முன்பே**
> **நான் மரணமடைவது நல்லது'**
> **என்று வாழ்வோமாக.**

# 33. தலைவர்கள்

ஒரு மனிதனைப் பிறர் பின்தொடர்ந்தால் அம்மனிதனைத் தலைவன் என்று அழைக்கலாம்.

**தலைவனாவது எப்படி?**

1) ஒரு மனிதனின் பண்புகள், ஆற்றல் ஆகியவற்றைப் பிறர் கண்டு அவரைத் தலைவராகக் கருதுதல்

2) ஒரு தலைவனின் குடும்பத்தில் அல்லது செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்ததால் தலைவராகுதல்

3) எப்படியாவது தொண்டர்களைச் சேர்த்து தலைவராதல்

4) அதிகார பலம், பணபலம், சாதி, தேர்தல் குளறுபடிகள், வன்முறை போன்றவற்றின் மூலம் தேர்தல் மூலமாகத் தலைவராகுதல்

5) தேர்தலில் நியாயமான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலைவனாகுதல்

6) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு தலைவனாக்கப்படுதல் (எடுத்துக்காட்டு–தாவீது)

தேவன் யாரை வேண்டுமானாலும் தெரிந்தெடுக்கலாம். அரசனின் மகனான யோனத்தானைத் தெரிந்தெடுக்காமல், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இளைஞனான தாவீதைத் தேவன் தெரிந்தெடுத்தார்.

**தேவைதானா?**

தானாக முயன்று, தவறான வழிகளில் தலைவனாகி, அதனால் பலவித சாபங்களையும் இறுதியில் நரகாக்கினையும் அடைவதைவிட, தொண்டனாயிருப்பது சிறந்தது. சொற்ப காலத்திற்கான தலைமைப் பதவி ஏற்று, நித்திய காலமாக அவமானப்படுவது நல்லதுதானா? தேவன் உங்களை உயர்த்தினால் தாழ்மையுடன் எற்றுக்கொள்ளுங்கள். உங்களை நீங்களே உயர்த்த முயற்சிக்காமல் அடங்கியிருங்கள். இந்த உலகத்தில் கர்த்தர் உங்களை உயர்த்தினாலும் உயர்த்தாவிட்டாலும் கர்த்தரின் கரத்தில் அடங்கியிருங்கள் (1 பேது.5:6). பரலோகத்தில் பலன் உண்டு (வெளி.22:12).

**ஏன் தலைவனாக விருப்பம்?**

'தலைவன் ஆகிவிட்டால் தங்களைப் பலர் மதிப்பார்கள்' என்ற ஒரு

எண்ணம் பலரை ஆட்டிப்படைக்கிறது. மனிதரால் வரும் மதிப்பை அற்பமாக எண்ணுவதே சரியானது (யோவா.5:44).

**நான் தலைவனாவதினாலே**

நான் பெருமையடைந்து தேவகிருபையை இழந்துவிடுவேனா?

நான் இப்பொழுது செய்யும் பணியைவிட அதிகமாகச் செய்யமுடியுமா?

நான் இப்பொழுது செய்யும் பணியைவிட்டுச் சென்றால் அதைத் தொடர்ந்து செய்ய யாரேனும் இருக்கிறார்களா?

என்னால் பிறருக்கு மிகுதியான பலன் உண்டாகுமா?

என்னால் தேவனுடைய நாமம் மகிமைப்படுமா?

என்னால் சிறப்பாக ஏதேனும் செய்ய முடியுமா?

தேவன் அதினால் மகிழ்ச்சியடைவாரா?

என்பதைப் போன்ற யாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, ஜெபித்து, தேவ நடத்துதல் பெற்றால் மட்டுமே தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும். வேறுவழியில் தலைவனாவதைவிட, தொண்டனாயிருப்பதே மேலானது. தேவன் என்ன பொறுப்பைத் தந்தாலும் அதை மட்டும் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு பணியாற்றுவது சிறந்தது.

**தலைவனாகும்படி பிரிந்துபோதல்**

'தான் தலைவனாக வேண்டும்' என்ற தனிமனிதனின் முயற்சியால் பிரிந்துபோன இயக்கங்களும் சபைகளும் ஏராளம் உண்டு. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அன்பையும் ஒருமனப்பாட்டையும் வளர்ப்பதற்கான வற்றைச் செய்யாமல் பிரிவினைகளை உண்டாக்குவது கர்த்தரின் பார்வையில் சரியாயிருக்குமோ? உபதேசத் தவறுகளைச் சகிக்காமல் பிரிந்து போகலாம். ஆனால், தன் இச்சையின்படி செய்வதற்காக (நீதி.18:1), தனக்குப் பதவி உயர்வு தரவில்லை என்பதற்காக, தன்னை வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்ததற்காக, சுயநலத்திற்காகப் பிரிந்துபோகிறவர்களை, துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர், ஜென்ம சுபாவத்தார், ஆவியில்லாதவர்கள் என்று வேதம் கூறுகிறது (யூதா 18–19). தாழ்மையும், பொறுமையும், கர்த்தரிடமிருந்து வரும் ஊழியத்தை மட்டும் செய்யவேண்டும் என்ற அர்ப்பணிப்பும் இல்லாத இவர்கள் பரிசுத்தவான்கள் போன்று நடிப்பார்கள்.

பதவி உயர்வு கிடைக்காததையும், இடமாற்றத்தையும், பிற பிரச்சனை களையும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்பதை விசுவாசித்து (ரோம.

8:28), எல்லாவற்றிலும் தேவனுக்கு நன்றியும் துதியும் ஏறெடுப்பதே சரி (1 தெச.5:18). ஏற்ற காலத்தில் தேவன் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரத்தில் அடங்கியிருப்பவரே உத்தமமான ஊழியர் (1 பேது.5:6). எல்லா உயர்வும் ஈவும் வரமும் மனிதனிடமிருந்து அல்ல, தேவனிடமிருந்துதான் வருகிறது (யாக்.1:17). 'உயர்வு தரவில்லை' என்று நிறுவனத்தைக் குறை கூறுவது சரியல்ல. உலகத்தில் பதவி உயர்வுக்காக ஊழியத்தைப் பிரிந்து போகிறவர் பரலோகத்தை இழக்க நேரிடலாம்.

**நாசமாக்குவதற்கு ஒரு தலைவன் போதும்**

**ஒரே ஒரு தலைவன், தான் இருக்கும் இயக்கத்தைக் கெடுத்து, குட்டிச் சுவராக்கமுடியும். ஆனால் ஒரு தலைவன் மட்டும் இயக்கத்தைக் கட்டியெழுப்பமுடியாது. பலருடைய ஒத்துழைப்பினால் மட்டுமே சரியாகக் கட்டியெழுப்ப முடியும்.**

**தரிசனம்**

எதை நோக்கிச் செல்கிறோம் என்ற தரிசனம் தலைவருக்கும் நடத்தப் படுபவர்களுக்கும் தேவை. ஆண்டவரிடம் தரிசனம் பெற்று பணிசெய்ய வேண்டும் (நீதி.29:18). தரிசனத்தை இழந்துபோகாமல், தொடர்ந்து ஊக்கமாக உழைக்கவேண்டும்.

**வசனத்தைப் போதிப்பவர்கள் நிர்வாகத்தில் ஈடுபடுதல்**

வசனத்தைப் போதிக்கும் அழைப்பு பெற்றவர்கள் நிறுவனங்களுக்குப் பொறுப்பேற்று நிர்வாகத்தில் ஈடுபடுவது சிறந்தது அல்ல (அப்.6:2–4). இவ்வாறு செயல்பட்டால் அவர்களின் சொந்த வாழ்க்கையும், தவறின்றிப் போதித்தலும், நிறுவனமும் பாதிக்கப்படும்.

**பெருமையில்லாத தலைவர்**

பெருமையில்லாத தலைவர்கள் மிகவும் அரிது. எனினும், ஒன்றிரண்டு பேரை மட்டும் அவ்வாறு நான் பார்த்திருக்கிறேன். எனவே, பெருமையில்லாத தலைவராக இருப்பது நடக்கக்கூடியதே.

**பிறரை மதித்தல்**

பிறருடைய நற்பண்புகளையும் அவர்களின் நற்செயல்களையும் தியாகத்தையும் எண்ணிப் பார்த்து உளமாரப் பாராட்டும் பண்பை வளர்த்துக் கொண்டால், பிறரை நன்கு மதிப்பதற்குக் கற்றுக்கொண்டால், பெருமை குறைய வாய்ப்பு உண்டு. நமக்கு உதவியாளராக இருப்பவரிடம், நம்மைவிட குறைந்த நிலையில் இருக்கும் நபரிடம், நம்மைவிட அதிக ஆற்றல், திறமை,

நற்குணம், தாழ்மை போன்ற எதையாகிலும் நிச்சயம் காணமுடியும். அதைக் கொண்டு அவரை உயர்வாகக் கருதலாமே.

ஒரு பெரிய தலைவர் ஆவியின் வரங்களைப் பெற்றிருந்தபோதிலும் ஆவியின்கனி காணப்படுவதில் மிகவும் குறையுள்ளவராக இருந்தார். இவரிடம் பணியாற்றிய ஒரு சிலர் தங்கள் வாழ்க்கையில் ஆவியின் கனியுடையவர்களாக விளங்கினர். தேவனுடைய பார்வையில் அந்தத் தலைவரைவிட மற்றவர்களே சிறந்தவர். பரலோகத்திலும் அந்தத் தலைவரை விட மற்றவர்களே உயர்த்தப்பட்டிருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

**பதவியைத் தக்கவைத்துக்கொள்வது**

'தன்னுடைய பதவி தன்னைவிட்டுப் போய்விடுமோ' என்ற பயத்தில் பல செயல்களில் ஈடுபடுவோர் உண்டு. தனக்கு 'ஆமாம் சாமி' போடுகிறவர்களை மட்டும் 'பொதுக்குழு' முதற்கொண்டு 'ஆட்சிக் குழு' **(Executive committee)** போன்ற யாவற்றிலும் உறுப்பினராக வைத்துக்கொள்வது இவர்களின் வழக்கம். இவ்வாறு செய்கிறவர்கள் தங்களின் ஏதேச்சாதிகாரத்திற்கு வழிவகுக்கின்றனர். நமது தவறுகளை நம்மிடம் தைரியமாக எடுத்துக் கூறும் நபர்களிடம் ஆலோசனை கேட்டால் மட்டுமே திறமையாகப் பணிபுரிய முடியும்.

**ஆலோசனை கேட்டல்**

பல தலைவர்கள் பிறரிடம் ஆலோசனை கேட்பதில்லை. மிகவும் சிறியவர்கள் கூறும் ஆலோசனையையும் கேட்டு ஜெபத்துடன் முடிவெடுப்பதே சிறந்தது. அநேக ஆலோசனைக்காரர் இருந்தால் எண்ணங்கள் உறுதிப் படும், வெற்றி கிடைக்கும் (நீதி.15:22; 24:6).

தனது தலைமைப் பொறுப்பிலும் எழுத்து ஊழியத்திலும் அநேகரின் ஆலோசனையைப் பெற்று உழைத்த ஒருவரை நான் அறிவேன். எனவே இவ்வாறிருப்பது யாவராலும் முடியும். பிறரிடம் ஆலோசனை கேட்பவர் தாழ்மையுள்ளவராக இருப்பது எளிது. யார் வாயிலாக ஆலோசனை வந்தாலும் தன்னைத் திருத்திக்கொள்ள ஆவலாயிருப்பது ஒவ்வொருவருக்கும் தேவையானதாகும். இவ்வாறின்றி 'நான் நினைப்பது மட்டும்தான் சரி. எனக்கு யாவும் தெரியும்' என்று கருதுபவர்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டு இயக்கத்தை(சபையை)க் கெடுப்பார்கள்.

பல தலைவர்கள் பிறரின் செய்திகளைக் (பிரசங்கங்களை) கேட்பதில்லை. நம்மைவிட வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்கள்கூட நமக்குத் தெரியாத நல்ல கருத்துகளையும் விளக்கங்களையும் அளிக்கக்கூடும் என்பதை உணர்ந்து, செய்திகளைக் கவனமாகக் கேட்கவேண்டும்.

### கோள் கேட்டல், ஆணவம்

ஒருவரைப்பற்றி அவர் இல்லாத இடத்தில் புறங்கூறும் பலர் உண்டு. இவ்வாறு தலைவர்களிடம் பிறரைக்குறித்து கூறி, தங்களுக்கு நற்பெயர் தேடிக்கொள்ளும் பலர், தலைவர்களின் உள்ளத்தில் தவறான, பொய்யான எண்ணங்கள் உண்டாக்கும் தகவல்களைத் தருவது வழக்கம். சில தலைவர்கள் தங்களிடம் கோள் சொல்வதற்கென்றே ஆட்களை வைத்திருக்கிறார்கள்.

எந்தத் தலைவனும், தன்னிடத்தில் யார் கோள் சொன்னாலும் அவர் சொல்வதை உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல், உண்மை நிலையைக் கவனமாக ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும்.

ஒரு நிறுவனத்தின் தலைவரிடம் அங்குள்ள ஒரு ஊழியரைப் பற்றி ஒரு சிலர் தவறான கருத்துகளைக் கூறி ஏமாற்றினர். அத்தலைவர் அந்த ஊழியரை அழைத்துப் பேசினார். அந்த ஊழியர் எதாவது கூற முயற்சிக்கும் போது "நீர் பேசவேண்டாம், எனக்கு எல்லாம் தெரியும்" என்று தலைவர் கூறி அவரைப் பேச அனுமதிக்கவில்லை. இது தலைவரின் ஆணவத்தையும் அகந்தையையும் குறிக்கிறது. வேறு வழியின்றி ஊழியர் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார். அந்த நிறுவனத்திலிருந்த பிற முதிர்ந்த சில ஊழியர்கள் தலைவரைச் சந்தித்து "அந்த ஊழியர் தெய்வ பயமிக்கவர், திறமையுள்ளவர், உண்மையானவர்" என்பதை எடுத்துரைத்தனர். இவற்றை ஏற்கனவே அறிந்திருந்த தலைவர் "நான் யோசித்து, பதிலளிக்கிறேன்" என்று கூறினார். அவரிடம் கோள் சொன்னவர்கள் "உங்களைவிட அந்த ஊழியர் அதிகப் புகழ் பெறும் வாய்ப்பு இருக்கிறது" என்று கூறியதாலோ வேறு என்ன காரணத்தினாலோ அந்த ஊழியர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்.

நமக்குக் கீழ் பணிபுரிபவர்கள் நம்மைவிடச் சிறந்து விளங்கினால் அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து அவருக்கு உதவி செய்து அதிக வாய்ப்புகள் கொடுக்கவேண்டும். ஊழியம் கர்த்தருடையது. "என் புகழுக்காக மற்றவர்களை மட்டந்தட்டுதல் கர்த்தருடைய பார்வையில் எப்படியிருக்கும்" என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### காட்சிக்கு எளியனாயிருத்தல், பிறருக்கு மரியாதை தருதல்

பல தலைவர்களைச் சந்திப்பதே மிகவும் கடினம். தனக்குக் கீழ் பணிபுரியும் எந்த ஊழியரும் தன்னைச் சந்திக்க வந்தால், சில நிமிடமாவது அவர்களை நேரில் சந்தித்துப் பேசுவது மிகவும் அவசியம். "எனக்கு நேரமில்லை" என்று கூறுவது பொய். சந்திக்க நேரமில்லாதவர்கள் அந்தப்

பதவிக்கு அருகதையற்றவர்கள். மேலும் தன்னைச் சந்திக்க வருபவர்களை மரியாதையாக நடத்தவேண்டும். தன்னிடத்தில் வருகிற எவனையும் புறம்பே தள்ளாத கர்த்தரின் ஊழியர் அவரைப்போன்று வாழவேண்டும் அல்லவா (யோவா.6:37)!

கல்லூரிகளில் கல்லூரி முதல்வரைச் சந்திப்பது மிகவும் சிரமமாயிருக்கும். மாணவர் சேர்க்கை காலத்தில் பெருங்கூட்டம் அவரைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கும். தாங்கள் யாரையும் நேரில் சந்திக்க முடியாது என்று இருக்கும் சில முதல்வர்கள் உண்டு. ஆனால் ஒரு சில முதல்வர்கள் எவ்வளவு நேரமாயினும் ஒவ்வொருவரையும் நேரில் சந்திப்பதை நான் கண்டிருக்கிறேன். மேலும், ஒரு கல்லூரி முதல்வர் தன்னைச் சந்திக்க வரும் ஒவ்வொரு ஆசிரியரையும் "முதலாவது உட்காருங்கள். பின் நீங்கள் கூற விரும்புவதைக் கூறுங்கள்" என்று மரியாதையாகவும் அன்பாகவும் கூறுவார். அவ்வாறே தன்னைச் சந்திக்க வரும் மாணவரின் பெற்றோர் ஒவ்வொருவரையும், அவர்கள் எவ்வளவு எளிய உடை அணிந்திருந்தாலும், உட்காரச் சொல்லி "நான் உங்களுக்கு என்ன உதவி செய்யவேண்டும்" என்று அன்பாகக் கேட்பார். மாணவரும், பெற்றோரும் ஆசிரியர்களும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட யாவரும் அவருக்கு அளித்த மரியாதையைச் சொல்லவும் முடியுமோ! எந்த மாணவரும் அவரைச் சந்திக்க உடனடியான அனுமதி பெற்றனர். அவர்களின் குறைகளைக் கருத்தாகக் கேட்டு, குறித்து வைத்துக் கொண்டு, உடனடியாகச் செயலாற்றி, குறைகளை நீக்கினார். ஆசிரியர், மாணவர், பெற்றோர் அல்லது பிறர் கூறும் வேண்டுதல்களை ஏற்கமுடியாது என்றால், அவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்கமாகத் தெரிவித்து ஒப்புக் கொள்ள வைத்தார். ஆனால், தவறுகளைக் கண்டித்துத் திருத்துவதிலும் தேவையானபோது தண்டனை அளிப்பதிலும் கவனமாக இருந்தார். இவரைப் பார்த்து, இவரின் செயல்களைப் பின்பற்றி சிறப்பாகப் பணிபுரிந்தவர்கள் உண்டு. நீங்கள் இவ்வாறு இருக்க முடியும்.

யாரையும் அற்பமாக எண்ணாதீர். கிறிஸ்து அந்த மனிதருக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்.

**குற்றமின்மை**

தானியேல் தீர்க்கதரிசியின் பல உயர்ந்த பண்புகளை நாம் அறிவோம். அவற்றுள் ஒன்று 'தானியேல் தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றவனாகக் காணப்பட்டது மட்டுமின்றி, தனக்கு மேலான அரசருக்கு முன்பாகவும் நீதிகேடு செய்ததில்லை' என்பது ஆகும் (தானி.6:4,5,21–22). இவ்வாறு இருக்குமாறு நாம் அழைக்கப்படுகிறோம்.

### முன்மாதிரியாயிருத்தல்

தான் எழுதும் எதையும் யாரிடமும் கொடுத்து திருத்தவோ ஆலோசனை பெறவோ விரும்பாத, பெருமையுள்ள ஒரு தலைவர் இருந்தார். இவரது இயக்கத்தில் பணிபுரிந்த ஒரு ஊழியர் சிறப்பாக எழுதத் தொடங்கினார். அப்பொழுது அவர் எழுதும் எதையும் தான் சரிபார்க்கவேண்டும் என்று தலைவர் வற்புறுத்தினார். தான் செய்யாத, செய்ய விரும்பாத ஒன்றைத் தன்னிடம் பணிபுரிபவரிடம் கேட்டதால் அந்த ஊழியர் பதவியை விட்டு விலக நேரிட்டது. தலைவர் முன்மாதிரியாக நடந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது. மேலும், 'தனக்குத்தான் எல்லாம் தெரியும்' என்று தற்பெருமைகொண்ட அந்தத் தலைவர் நாளடைவில் நயவஞ்சகமான போதகங்களைக் கொடுக்க ஆரம்பித்ததோடு வாழ்க்கையிலும் தவறி, தன்பெயருக்கும் ஆண்டவரின் பெயருக்கும் களங்கம் ஏற்படும்படி நடந்துகொண்டார்.

**முன்மாதிரியாக நடக்காத தலைவர் குருடருக்கு வழிகாட்டும் குருடன். வாழ்க்கையில் நடந்து காட்டாமல் வெறும் தகவல்களைத் தரும் தலைவர், அறிவு பெருத்திருந்தவராயிருந்தாலும் பயனற்றவர்.**

### மேலான ஆசனங்களில் உட்காருதல், வந்தனங்கள் பெறுதல்

தலைவர்களை மேலான ஆசனங்களில் உட்காரவைப்பது என்ற வழக்கம் சரியானதுதான். தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுதான். 'ஆசனத்தில் எப்படி உட்காருகிறேன்? மரியாதையை எப்படி ஏற்றுக்கொள்கிறேன்? என் பார்வையிலும் நடையிலும் அகம்பாவம் இருக்கிறதா?' என்று ஒவ்வொரு தலைவரும் தன்னைச் சோதித்துப்பார்க்க வேண்டும். மேலும், உயர்ந்த ஆசனத்தையும் மரியாதையையும் எதிர்பார்ப்பது சரியன்று (மத்.23:6–7).

"நான் ஓர் ஊழியக்காரன். என்னை அவர்கள் மதிக்கவில்லை. என்னைச் சரியாக நடத்தவில்லை" என்று ஒரு ஊழியர் குறை கூறினார். தாழ்மையுள்ளவரிடமிருந்து இப்படிப்பட்ட பேச்சு வராது.

### நான் பிறருக்கு என்ன செய்ய வேண்டும்?

'மற்றவர்கள் தனக்கு என்ன செய்யவேண்டும்' என்று எதிர்பார்ப்பவர் பலர். ஒரு தலைவன், "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்று கேட்பவனாக இருப்பது அவசியம். கர்த்தர் இவ்வாறு கேட்டார் (1 இரா.3:5; மத்.20:21,32; மாற்.10:51; லூக்.18:41). தன்னால் பிறருக்கு என்ன உதவி களெல்லாம் செய்ய முடியும் என்று சிந்தித்து, செயல்படுபவரே சிறந்த தலைவர்.

தனக்கும், தனது பெயர் பிரபலமாவதற்கும், தனது செயல்களில் உதவிசெய்வதற்கும் தன் உடன் ஊழியரைப் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்குடன் செயல்படுபவர் சுயநலம் கொண்டவர்.

## தவறுகளைத் திருத்துதல்

ஒரு தலைவர் தனது நிறுவனத்தில் பணிபுரிபவர்களின் பணிகளைக் கண்காணிக்க வேண்டும். குறிப்பாக ஒரு நற்செய்திப் பணி இயக்கத்தின் தலைவர், தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஒவ்வொரு மிஷனரியும் என்ன செய்கிறார்கள், ஆத்தும ஆதாயம் செய்கின்றனரா, பொறுப்புகளை நிறைவேற்றுகின்றனரா என்பதைக் கருத்தாகக் கண்காணிக்கவேண்டும். கண்காணிப்பதற்கென ஒரு குழுவை ஏற்படுத்தலாம். சரியாகச் பணிபுரியாத ஒவ்வொரு நபரின் பிரச்சனையையும் கண்டறிந்து அவரைப் பணிசெய்யும்படி செய்யவேண்டும். ஊழியத்தைக் கெடுக்கிற 'குழிநரிகளையும், சிறு நரிகளையும்' பிடிக்கவேண்டும் (உன்.2:15). இவ்வாறு செய்யாதவர் தனது பொறுப்பைச் செய்யத் தவறுகிறார். உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால் பதவியைவிட்டு விலகுங்கள். ஊழியத்தைக் கெடுப்பவராக இருப்பதைவிட பதவி விலகுவது சிறந்தது.

## தவறுகளுக்குப் பொறுப்பேற்றல்

பல தலைவர்கள் தங்களின் தவறுகளை, தங்களின் மேற்பார்வையில் பணிபுரியும் பிறர்மீது சுமத்துவது உண்டு. நான் பணிபுரிந்த ஒரு கல்லூரியில் ஒரு பேராசிரியர் பணியாற்றினார். கல்லூரி முதல்வர் அவருக்கு ஒரு முக்கியமான பொறுப்பை அளித்தார். தனது துறையிலிருந்த ஒரு சில உதவிப் பேராசிரியர்களைப் பயன்படுத்தி அந்தப் பொறுப்பை நிறைவேற்றியபோது ஒரு சிறு தவறு நடந்துவிட்டது. அந்தப் பேராசிரியர் தன்னிடம் பணிபுரிந்தவர்களிடம் "இப்படிச் செய்து விட்டீர்களே?" என்று கேட்டார். ஆனால், கல்லூரி முதல்வரிடம் சென்று அந்தத் தவறுக்குத் தானே காரணமென்று பொறுப் பேற்றுக்கொண்டு தவறைச் சரிசெய்தார்.

நாம் சில தவறுகளைச் செய்வது நடக்கக்கூடியதே (யாக்.3:2). நம்முடைய தவறுகளை ஒப்புக்கொண்டு, நம்மைச் சரிசெய்து, மீண்டும் அத்தவறைச் செய்யாதபடி கவனமாயிருக்கவேண்டும். தவறுகளுக்கு மன்னிப்பு கேட்கும் தாழ்மையோடிருப்பவரே ஆவிக்குரிய தலைவர்.

## தவறுகளைச் சுட்டிக்காட்டுபவரை நேசித்தல்

பேதுருவின் மாய்மாலத்தை பவுல் முகமுகமாய் எதிர்த்து நின்றதை வேதம் கூறுகிறது (கலா.2:11–21). இவ்வாறு தன்னைக் கண்டித்த பவுலை 'நமக்குப்

பிரியமான சகோதரன்' என்று பாசத்துடன் பேதுரு தனது நிருபத்தில் குறிப்பிடுகிறார் (2 பேது.3:15). இவ்விதமாக, தவறுகளைச் சுட்டிக்காட்டு கிறவர்களிடம் அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து நம்மைத் திருத்திக்கொள்வதுடன் அவர்களை முழுமனதுடன் நேசிக்கவேண்டும்.

**ஆத்தும ஆதாயம்**

ஒவ்வொரு தலைவரும் இயேசுவைப்போல தனிநபர் ஆத்தும ஆதாயத்தையும் தொடர்ந்து செய்யவேண்டும். 'நேரமில்லை, கூட்டத்தில் தான் பேசுவேன், எனது பொறுப்பு பெரியது' என்றெல்லாம் கூறுவது சரியல்ல. தலைவர் ஒவ்வொருவரும் தங்களுடன் பணியாற்றும் யாவருக்கும் முன்மாதிரியாக ஆத்தும ஆதாயத்தைச் செய்தே ஆகவேண்டும்.

தனிநபர் ஆத்தும ஆதாயத்தை விட்டுவிட்ட எந்த நபரும் கிறிஸ்தவ நிறுவனத்தின் பொறுப்பாளராக, தலைவராக இருப்பதற்குத் தகுதியற்றவர். ஏனென்றால், அவர் சிதறடிக்கிறவர் (லூக்.11:23).

"எனக்கு இப்பொழுது ஆத்தும பாரமே இல்லை" என்று மிஷனரி இயக்கத்தின் ஒரு தலைவராக இருப்பவர் கூறினார். இவரது ஊழியமும், நிறுவனத்தின் நிலைமையும் குறுகிக்கொண்டே போகின்றன. சாரமற்றுப் போன உப்பு வெளியே கொட்டப்படுவதற்கும் மனிதரால் மிதிக்கப் படுவதற்குமே தகுதியுள்ளது (மத்.5:13).

**தலைவனின் பொறுப்பு**

தன்னுடன் பணிபுரிபவர்களுக்குப் பொருள்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்தளித்து அவர்களைக் கண்காணிப்பது தலைவனின் பணியாகும். சரியாகப் பணிசெய்தால் உயர்வும் ஆசீர்வாதமும் உண்டு. இல்லையேல் தண்டனை கிடைக்கும் (மத்.24:44–51).

**பாரபட்சமின்மை**

வேலை செய்கிறவர்களுக்கே அதிக வேலையைக் கொடுப்பதும், வேலை செய்யாமல் ஏமாற்றுகிறவர்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும் அநேக தலைவர்களின் வழக்கம். அவ்வாறு இருக்கலாகாது. மேலும், பொறுப்புகள் அளிப்பதிலும் பதவி உயர்வுகள் அளிப்பதிலும் பாரபட்சம் கூடாது. நான் அறிந்த ஒரு நிறுவனத்தில் பல ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு நபரை விட்டுவிட்டு அவரைவிட மிகக்குறைந்த அனுபவமுள்ளவரை அவருக்கு மேலாகப் பதவி உயர்வு அளித்தனர். அந்த உண்மை ஊழியர் எவ்வளவு மனம் நொந்து போயிருப்பார் என்று கொஞ்சமும் கவலைப்படாத தலைவர் மனிதாபிமானம் உள்ளவராக இருக்க முடியுமா?

30 ஆண்டுகளுக்கு மேலாக உத்தமமாகப் பணியாற்றிய ஒரு ஊழியர் "அண்ணன், நான் இத்தனை ஆண்டுகளாகப் பணிபுரிந்தபோதிலும், இதுவரை எந்த ஒரு குழுவிலும் (பொதுக்குழு போன்ற கமிட்டி) என்னைச் சேர்க்கவில்லை" என்று என்னிடம் கூறி வேதனைப்பட்டார்.

"வேலை செய்கிறவனுக்கு அதிக வேலை கொடு
வேலை செய்யாதவனுக்குச் சம்பள உயர்வு கொடு
குழப்பம் விளைவிக்கிறவனுக்குப் பதவி உயர்வு கொடு'

என்ற பழமொழியின்படி நடப்பது கர்த்தருக்குகந்ததல்ல. நீதி நியாயம் செய்வதில் எந்த நிறுவனத்திலும் தவறு இருக்கக்கூடாது.

### ஆளுகை செய்தல்

தலைவர் தனது விருப்பப்படி ஆளுகைசெய்தல் உலக வழக்கம். இதற்கு மாறாக, தலைவர் பிறரின் கால்களைக் கழுவுவது கிறிஸ்துவின் முன்மாதிரி. எந்த நிறுவனம் எதேச்சாதிகாரமாகவோ, பணபலத்தாலோ நடத்தப் படுகிறதோ அது ஆவிக்குரிய ஊழியம் அல்ல. தாழ்மையோடு இருப்பவர்கள் தவறு செய்கிறவர்களைத் தட்டிக் கேட்பதிலும் கவனமாயிருக்கவேண்டும்.

### மிகுந்த மகிழ்ச்சி எப்பொழுது?

தங்கள் குழந்தைகள் தங்களைவிட உயர் பதவிக்கு வரவேண்டும் என்றும் தங்களைவிட அதிக வசதியுடன் வாழவேண்டும் என்றும் பெற்றோர் விரும்புவார்கள். அவ்வாறு நடக்கும்போது மனநிறைவும் மிகுந்த மகிழ்ச்சியும் அடைவார்கள். அவ்வாறே, நம்மால் ஊழியத்தில் பழக்குவிக்கப்பட்டவர்கள், நமக்குக் கீழ் பணியாற்றுபவர்கள், நம்மால் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப் படுகிறவர்கள் நம்மைவிட நன்றாக ஊழியம் செய்வதைக் கண்டு மனநிறைவும் மிகுந்த மகிழ்ச்சியும் அடைபவரே ஆவிக்குரிய தலைவர். அவ்வாறில்லாதவர் மாம்சத்துக்குரிய சுயநலவாதி.

### தலைவரின் தனிமை

"எனக்கு நண்பர்களே இல்லை" என்றும் "வேடிக்கையாகப் பேசும், தாராளமாக இயல்பாக இருக்கும் நபர்கள் எனக்குத் தேவை" என்றும் கூறும் தலைவர்கள் உண்டு. இவ்வாறு தனிமைப்படுத்தப்படுவதற்கு அந்த மனிதரே முக்கிய காரணம். அவர் பிறரைத் தன் அளவிற்கு ஏற்றுக்கொண்டு, உண்மையாக மதித்து, தாராளமாகப் பேசிப் பழகினால், அவருக்குத் தனிமை வராது. நிறைய நண்பர்களைக் கொண்ட தலைவர்கள் உண்டு.

### பிறரிடம் சொல்லமுடியாதவை

தலைவராயிருப்பவருக்கு மட்டுமின்றி, யாவருக்கும் இரகசியங்கள்

உண்டு. நல்மனச்சாட்சியுடனும் ஜெபத்துடனும் இருக்கும் யாராயினும் இதைக்குறித்து கவலைப்படுவதற்குத் தேவையிருக்காது. நமது இரகசியங்களைப் பிறரிடம் கூறவேண்டிய அவசியமில்லை.

**முகப்புகழ்ச்சியில் ஏமாறுதல்**

பலவிதமான முகப்புகழ்ச்சியினால் (முகஸ்துதி) ஏமாந்துபோன தலைவர்கள் பலருண்டு. 'ஏன் முகப்புகழ்ச்சி செய்கிறார்கள்' என்று ஆராய்ந்து பார்ப்பதும் அவ்வாறு செய்கிறவரின் பணிகளைச் சரிபார்ப்பதும் தலைவரின் கடமை. பொதுவாக, நன்றாகப் பணிபுரிபவர்கள் முகப்புகழ்ச்சி செய்யமாட்டார்கள் என்பதால் முகப்புகழ்ச்சி செய்பவரைப்பற்றி கவனமாயிருக்கவேண்டும்.

**ஊழியத்தை வியாபாரமாக்குதல்**

ஒரு ஊழியம் வியாபாரமாக மாறுவதற்கும், வியாபாரமாக இருந்த நிறுவனம் ஊழியமாக மாறுவதற்கும் அதின் தலைவர்தான் முக்கிய பொறுப்பு. வியாபாரத்தை நம்பாமல் கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்து, கர்த்தர்மீது சார்ந்துகொண்டு பணிசெய்கிறவன் பாக்கியவான்.

**சீடர்களை உருவாக்குதல்**

இளம் தலைமுறையினரைப் பழக்குவித்து சீடர்களாகவும் தலைவர்களாகவும் உருவாக்குதல் தேவையானது. அநேக தலைவர்கள் தங்களுக்கென்று சீடர்களையும் தொண்டர்களையும் உருவாக்குகின்றனர். தனக்கல்ல, கிறிஸ்துவுக்கென்று சீடர்களை உருவாக்குபவரே சரியான தலைவர்.

**தலைமைத்துவ பயிற்சி**

பல தலைமைத்துவ பயிற்சிகள் நடத்தப்படும் காலம் இது. காலைக் கழுவும் தாழ்மையை முன் மாதிரியாக செய்து, கற்றுக்கொடுத்து பழக்குவதும், ஆவியானவரின் வழிநடத்துதலிலும் ஜெபத்திலும் வாழ்வதற்குப் பயிற்சியளிப்பதும் சிறந்த பயிற்சியாகும்.

**நிர்வாகக் குழுக்கள்**

ஆலோசனைக்காரர் தேவையென்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது (நீதி.11:14; 15:22; 24:6). இதற்கேற்ப, இக்காலத்தின் பல சபைப்பிரிவுகளிலும் ஊழிய நிறுவனங்களிலும் பொதுக்குழு, நிர்வாகக்குழு போன்று பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குழுவில் உறுப்பினராக இருப்பது ஒரு பொறுப்பான ஊழியம் ஆகும்.

**குழுவிற்கு யாரைத் தெரிந்தெடுக்கலாம்?**

பரிசுத்த ஆவியில் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற சபையின் (நிறுவனத்தின்) அங்கத்தினரையே தெரிந்தெடுக்கவேண்டும் (அப்.6:3). மேலும், இந்நூலிலுள்ள அத்தியாயம் 7, 8இலுள்ள தகுதிகளும் இருக்கவேண்டும்.

**நிகழ்ச்சி நிரல்**

குழுக்கள் கூடும்போது, அதற்கு முந்தைய கூட்டத்தின் அறிக்கை போன்றவற்றில் தொடங்கி வேறுபல விவாதிக்கவேண்டிய கருத்துகளை நிகழ்ச்சி நிரலாகக்கொள்வது வழக்கம். இப்படிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களில் ஆவிக்குரியவற்றைக் கடைசியில் சேர்ப்பதால் அதற்கென்று தேவையான நேரத்தை ஒதுக்குவதில் பல குழுக்கள் தவறிவிடுகின்றன. பணி இடமாற்றங் கள், பணக் கணக்குகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஒரு நற்செய்திப்பணி நிறுவனத்தினர் (மிஷனரி நிறுவனம்) தங்கள் நிர்வாகக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் 'நற்செய்தி அறிவித்தல்' **(Evangelism)** என்ற கருத்தை பட்டியலின் கடைசியில் சேர்த்திருந்தனர். மற்ற கருத்துகளை விவாதிப்பதில் நேரம் அதிகமாகச் செலவிடப்பட்டதால் 'நற்செய்தி அறிவித்தல்' என்பதைப் பற்றிப் பேசவேயில்லை. நற்செய்தி அறிவிப்பதைக் குறித்த விவாதத்திற்கு அல்லவா முன்னுரிமை அளித்திருக்க வேண்டும்? பணக்கணக்கிற்கு முன்பாக ஆத்தும ஆதாயக் கணக்கைக் குழுவில் தாக்கல் செய்யுங்கள். எதிர்காலப் பணச்செலவு (பட்ஜெட்) பற்றிய விபரங்களை விவாதிக்குமுன்பாக ஆத்தும ஆதாயப் பணியில் என்ன வெல்லாம் செய்யலாம் என்று விவாதியுங்கள்.

மூப்பர்களே, செயலாளர்களே, பொருளாளரே, குழு உறுப்பினர்களே, நீங்கள் எந்த ஒரு குழுவில் இருந்தாலும் ஆவிக்குரிய பணியில் கருத்தாயிருங்கள். நீங்கள் எடுத்துக்கொண்ட பொறுப்பு பரிசுத்தமானது. பரிசுத்தமாகவும் ஆவிக்குரியதாகவும் நீங்கள் செயல்படாவிடில் இறுதியில் கர்த்தரிடம் பதில் சொல்லவேண்டும். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் தொடங்கும் (1 பேது.4:17) என்பதை எப்பொழுதும் நினைவிற்கொண்டு ஆவியானவரின் வழிநடத்துதலோடும் தாழ்மையோடும் செயல்படுங்கள்.

**ஆராதனைகளும், எழுப்புதல் கூட்டங்களும்**
**பரிசுத்த ஆவியின் அக்கினியின் பிரசன்னத்தால்**
**நடத்தப்படுவதுபோன்றே,**
**ஒவ்வொரு குழுவின் அலுவல் கூட்டங்களும் நடத்தப்படவேண்டும்.**

# 34. சாத்தானின் ஊழியக்காரரின் அடையாளங்கள்

கீழ்க்கண்ட எல்லா அடையாளங்களும் சாத்தானின் ஊழியக்காரனான ஒவ்வொரு மனிதனிடமும் இல்லாவிடினும் ஒரு சில அடையாளங்களையாவது அவர்களிடம் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும். அப்படிப்பட்ட ஊழியரை விட்டு விலகவேண்டும்.

**எப்படி இருப்பார்கள்?**

1. அப்போஸ்தலருக்குரிய அடையாளங்கள் இல்லாதவர்கள் (2 கொரி.12:12)
2. மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர் (1 தீமோ.4:1)
3. மாய்மாலக்காரர்கள் (மத்.7:15; 23:1–33; லூக்.11:35)
4. கிறிஸ்தவத்தை அழிப்பதற்கென்றே தங்களை அர்ப்பணித்திருக்கிறவர்கள் (1 பேது.2:1–9; யூதா 4–11)

**துணிகரமான செயல்கள்**

5. கிறிஸ்துவை மறுதலிப்பார்கள் (2 பேது.2:1; 1 யோவா.4:1–6)
6. பிசாசுகளின் பெயரில், தேவதூதர் பெயரில், பரிசுத்தவான்கள் பெயரில் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் (உபா.18:20)
7. பொய்த் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் (எரே.14:13–14)
8. தேவபக்தியின் பெலனை மறுதலிப்பார்கள் (2 தீமோ.3:5)
9. சத்தியத்திற்கு எதிர்த்து நிற்பார்கள் (2 தீமோ.3:8)
10. அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருப்பார்கள் (தீத்து1:10)
11. தேவனை அறிந்திருக்கிறோம் என்ற அறிக்கைபண்ணியபோதிலும் செய்கைகளினாலே அவரை மறுதலிப்பார்கள் (தீத்து1:16)

**மேன்மை பாராட்டல்**

12. தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்வார்கள் (2 கொரி.10:12)
13. மற்றவர்களோடு தங்களை ஒப்பிடுவார்கள் (2 கொரி.10:12)
14. தங்களைக் குறித்து மேன்மைபாராட்டும் தருணங்களை நாடுவார்கள் (2 கொரி.11:12)
15. மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டிக்கொள்வார்கள் (2 கொரி.11:12)

வாழ்க்கை

16. சோம்பேறிகளாயும், பேராசையுள்ளவர்களாயும் (பண ஆசை) இருப்பார்கள் (ஏசா.56:10–11; எரே.6:13; எசேக்.22:27)
17. அருவருப்பானதைச் செய்ய வெட்கமில்லாதிருப்பார்கள் (எரே.6:15)
18. மிருக குணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடார்கள் (ஜெபத்தில் தரித்திருக்கமாட்டார்கள்) (எரே.10:21)
19. விபசாரம் செய்வார்கள் (எரே.23:14)
20. வஞ்சகராயிருப்பார்கள் (எரே.48:10; ரோம.16:18; எபே.4:14; கொலோ. 2:4–8; 2 தீமோ.3:5–7,13)
21. பலவித பாவங்களைச் செய்வார்கள் (எசேக்.22:25–28)
22. தன்னலமிக்கவர்களாயிருப்பார்கள் (எசேக்.34:2–3)
23. அக்கிரமம் (பணத்தைச் சுரண்டுதல் போன்றவை) நடப்பிப்பார்கள் (மத்.7:15–23)
24. (ஆவிக்குரிய) குருடர்கள் (மத்.15:14)
25. வெட்கமான அந்தரங்க காரியங்களில் வாழ்வார்கள் (2 கொரி.4:2)
26. தந்திரமாய் நடப்பார்கள் (2 கொரி.4:2)
27. மாம்சத்தின்படி போர் செய்வார்கள் (2 கொரி.10:3)
28. உண்மை ஊழியரை விரோதிக்கச் சமயம் தேடுவார்கள் (2 கொரி.11:12)
29. உயர் பதவிகளை நாடுவார்கள் (2 கொரி.11:13; 3 யோவா.9)
30. பொருளாசையுடையவர்களாயிருப்பபார்கள் (2 பேது.2:3)
31. அறிவு முதிர்ச்சியடையாத பெண்களிடம் பேசி வசப்படுத்துவார்கள் (2 தீமோ.3:6–7)
32. பாவிகளைப் போன்று வாழ்வார்கள் (ஏசா.28:7)

அறியாமை

33. நீதியைக் குறித்த சரியான அறிவில்லாதிருப்பார்கள், உண்மைக்கு எதிராகப் பேசுவார்கள் (ஏசா.5:20)
34. ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அறிவில்லாதிருப்பார்கள் (ஏசா.29:11–12)
35. தேவனுடைய வார்த்தைக்கேற்ப போதிக்கும் வெளிச்சமில்லாதிருப்பார்கள் (ஏசா.8:19–20)

36. வெளித்தோற்றத்தின்படி பார்ப்பார்கள் (2 கொரி.10:7; மத்.23:27–28)

37. வீணாய் (பெயருக்கென்று, நிர்விசாரமாய், கவலையீனமாக, ஏனோதானோவென்று, பழக்க வழக்கத்திற்காக மட்டும்) ஆராதனை செய்வார்கள் (மத்.15:9)

**ஏமாற்றுதல்**

38. தேவன் சொல்லாததை அவர் சொன்னதாகத் துணிச்சலாகக் கூறுவார்கள் (உபா.18:20)

39. பொய்களைப் போதிப்பார்கள் (ஏசா.9:14–16), பொய்யராயிருப்பார்கள் (எரே.6:13)

40. சத்தியத்தைச் சமயத்திற்கேற்றாற்போல திரித்து, கேட்பவர்களுக்கு இதமாக இருக்கும் வண்ணம் போதிப்பார்கள் (ஏசா.30:10)

41. சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் என்று சொல்லி மக்களின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குவார்கள் (எரே.6:14; எசேக்.13:10; 22:28)

42. நயவசனிப்பாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாத மக்களை வஞ்சிப்பார்கள் (ரோம.16:18)

43. தேவ வசனத்தைப் புரட்டுவார்கள் (2 கொரி.4:2)

44. கள்ள (போலி) அப்போஸ்தலர் வேடம் போடுகிறவர்கள் (2 கொரி.11:13)

45. நீதியின் ஊழியக்காரரின் வேடத்தைத் தரித்துக்கொள்வார்கள் (2 கொரி.11:14–15)

46. கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணுவார்கள் (2 பேது.2:1; 2 யோவா.7–11)

**போதனை**

47. தேவனுடைய வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதனை தருவார்கள் (நீதி.19:27; ஏசா.3:12)

48. மனிதர்களின் உபதேசங்களைப் போதிப்பார்கள் (மத்.15:9)

49. மனிதருடைய கட்டளைகளை உபதேசங்களாகப் போதிப்பார்கள், பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படி கற்பனைகளை ஒதுக்கி விடுவார்கள் (மாற்.7:7–9)

50. தேவ வசனத்தைக் கலப்பாகப் பேசுவார்கள் (2 கொரி.2:17)

51. பிசாசுகளின் உபதேசங்களைப் போதிப்பார்கள் ( 1தீமோ4:1)

52. திருமணம் பண்ணாதிருக்கவும் சில உணவுகளை விலக்கவும் கட்டளையிடுவார்கள் (1 தீமோ.4:2–3)

53. இறுமாப்புள்ளவர்களாகவும், வேற்றுமையின் உபதேசங்களைப் போதிப்பவர்களாகவும் இருப்பார்கள் (1 தீமோ.6:3–21; 2 தீமோ.2:14–18; தீத்து 1:10–15; அப். 20:3)

54. நிதானமாய்ப் போதிக்கமாட்டார்கள் (2 தீமோ.2:15)

**பணி**

55. பாவத்தைப் பாராட்டி ஊக்குவிப்பார்கள் (வன்முறையைத் தூண்டுதல் போன்றவை) (எரே.23:14, எசேக்.13:14)

56. வேலையைச் சரிவரச் செய்வதில் உண்மையற்றிருப்பார்கள் (எசே.34:4–10)

57. இயேசு கிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்யாமல், தங்கள் வயிற்றுக் கென்று ஊழியம் செய்வார்கள் (ரோம16:18)

58. மற்றவர்களின் வேலையைக் கவர்ந்துகொள்வார்கள் (2 கொரி.10:15–16)

59. ஆத்துமாக்களை வேட்டையாடுவார்கள் (நரகத்திற்கென்று) (எசேக்.13:18–19)

60. கபடுள்ள வேலையாட்கள் (2 கொரி.11:13)

**விளைவு**

61. மக்களை தேவனை விட்டு தூரமாக்குவார்கள் (உபா.13:1–5)

62. பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குவார்கள் (ரோம.16:17)

63. விசுவாசிகளை நியாயப்பிரமாணத்துக்கு அடிமைகளாக்க முயற்சிப் பார்கள் (கலா.2:4)

64. பாழாக்கி, சிதறடிப்பார்கள் (எரே.12:10; 23:1)

இவற்றில் குறுப்பிடப்பட்டுள்ள வேத வசனங்களை வாசித்துத் தியானியுங்கள். மேலே கூறப்பட்டுள்ள குணங்களில் ஏதேனும் உங்களில் காணப்படுகிறதா என்று உங்களையே சோதித்தறிந்து மனம் திரும்புங்கள்.

**குறிப்பு:** கீழ்க்கண்ட வேதப்பகுதிகளையும் தியானியுங்கள்.
2 பேது.2:1–22, மத்.23:1–31, லூக்.6:26, 11;43–46, 52.

**தெரிந்தும் தெரியாமலும் சாத்தானுக்கு, பணத்திற்கு, இவ்வுலக மேன்மைக்கு ஊழியம் செய்யும் பலருண்டு. நிங்கள் எப்படி?**

## 35. ஊழியர் திருமணமின்மை

திருமணம் செய்துகொள்ளவேண்டாம் என்று தேவன் எரேமியா தீர்க்க தரிசியைக் கேட்டுக்கொண்டார் (எரே.16:2). எனவே, எரேமியா திருமண மின்றி வாழ்ந்தார். இவ்விதமாக தேவனால் அறிவுறுத்தப்பட்டு திருமணமின்றி ஊழியம் செய்பவர்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பரலோக அரசிற் கென்று தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டு தியாகமாக ஊழியம் செய்வது சிறந்ததும் மேன்மையானதும் ஆகும் என்பதில் சந்தேகமில்லை. இதைக் குறித்து கிறிஸ்து தெளிவாகக் கூறியுள்ளார் (மத்.19:12). ஊழியத்திற்கென்று திருமணமின்றியிருப்பதைப் பவுலும் தமது ஆலோசனையில் வலியுறுத்தியுள்ளார் (1 கொரி.7:7, 32–35). பிறரின் கட்டுப்பாடு, சபைப்பிரிவின் ஒழுங்கு ஆகியவற்றினால் அல்ல, தாங்களாக முன்வருபவர்கள் மட்டுமே அவ்வாறு இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பவர்கள் உண்மையாயிருப்பது அவசியம். திருமண எண்ணங்கள், விருப்பங்கள் இருக்குமானால் திருமணம் செய்து கொள்வது சிறந்தது. வேகிறதைப் பார்க்கிலும் விவாகம்பண்ணுகிறது நலம் (1 கொரி.7:9).

**பேதுருவைப்போன்று திருமணமாகியோ, பவுலைப்போன்று திருமணமாகாமலோ ஊழியம் செய்வது சரியானதே.**

பிரம்மச்சாரிய கட்டுப்பாட்டைப் பேணி வாழ்பவர்கள் கிறிஸ்தவத்தில் மட்டுமின்றி எல்லா மதத்திலும் உண்டு. ஆவியானவரின் பெலத்தால் திருமணமின்றி வாழ்வதற்கும் மதம், சபைப்பிரிவு, மக்களின் எதிர்பார்ப்பு, சூழ்நிலை ஆகியவற்றின் கட்டாயத்தால் அவ்வாறு வாழ்வதற்கும் வேறுபாடு உண்டு. திருமணம் செய்து கொள்ளாமல் ஊழியம் செய்பவர்கள் தங்களைப் பிறரைவிட சிறந்தவர்கள் என்று கருதுவதும் கூறுவதும் போலியான பரிசுத்தம் ஆகும். மக்களை நோக்கி 'உங்களுக்காக நாங்கள் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்கிறோம்' என்று கூறுவது மாயமான தியாகம். யாரும் அவர்களை அவ்வாறு வாழும்படி கேட்கவில்லை. இவ்வாறு கூறுபவர், 'வேகிறவர்' (1 கொரி.7:9). 'திருமணம் செய்துகொள்ளாத ஊழியர் மட்டுமே பூரணமாகுதலை உபதேசிக்க வேண்டும்' என்று கூறுவது வேதத்திற்குப் புறம்பானது. ஊழியர் 'ஒரு மனைவியையுடைய மனிதராக (புருஷனாக) இருக்கவேண்டும்' என்றே வேதம் கூறுகிறது (1 தீமோ.3:2, 12; தீத்து 1:6). ஊழியத்திற்கென்று தாங்களாக மனமுவந்து திருமணத்தை ஏற்றுக்கொள்ளா மலிருப்பது சிறந்ததுதான். யாவருமல்ல, பின்பற்ற முடிந்தவர்களே இவ்வாறு இருக்கவேண்டும் (மத்.19:10–12). (இச்சைகளில்) வேகிறதைக் காட்டிலும்

விவாகம்பண்ணுகிறது நலம் (1 கொரி.7:9). திருமணமாகாமல் வாழ்வதைக் குறித்து மேன்மை பாராட்டக்கூடாது. திருமணம் செய்யக்கூடாது என்று போதிப்பது தவறான போதகம் ஆகும் (கொலோ.2:20–23; 1 தீமோ.4:1–4). ஒருபக்கம் வளமானவாழ்வு போதகம் **(Prosperity Gospel)** மறுபக்கம் துறவியாயிருக்கப் போதித்தல் ஆகிய இரண்டுமே சரியானவையல்ல. 'தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்' (1 தீமோ.4:4–5). 'நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்த துண்டானால் இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து, தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிற தென்ன? இவையாவும் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும் மாயமான தாழ்மையையும், சரீர ஒழுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுவதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப் படாது' (கொலோ.2:20–23).

திருமண மஞ்சம் அசுசிப்பட்டதல்ல என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (எபி.13:4). விபசாரம் செய்வதே பாவம். 'ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே...' என்று வெளி.14:4ல் கூறப்பட்டவர்கள் திருமணமாகாதவர்கள் மட்டுமே என்று கூறுவது தவறு. திருமணமாகி தனது மனைவிக்கு துரோகம் செய்யாமல் வாழ்கிறவர்கள் கறையுள்ளவர்கள் அல்ல. மேலும் இந்த வசனத்தில் கற்புள்ளவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது மூலமொழியில் 'கன்னிகைகள்' என்று பொருள்படும். இயேசுவின் தாயாகிய மரியாள் இயேசுவைக் கர்ப்பந்தரிக்கும்போது 'கன்னிகையாக' இருந்ததைக் குறிக்கும் இடத்தில் (லூக்.1:27) பயன்படுத்தப்பட்ட அதே சொல் வெளி.14:4இலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. எனவே வெளி.14:4இல் கூறுவது திருமணமாகாத, திருமணமாகிய ஆண்களையும், பெண்களையும் குறிக்கும் என்பதே ஏற்புடையது. மேலும் இதில் கூறப்பட்டுள்ள 144,000 பேர் யூதர்கள் மட்டுமே என்பதை வெளி.7:3–8; 12:5; 14:1 ஆகியவற்றைக் கவனமாக ஆராய்ந்தால் கண்டுகொள்ளலாம்.

குறிப்பு: கர்த்தருடைய ஊழியத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்காக, திருமணத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாழ்பவர்களை நான் உளமாரப் பாராட்டுகிறேன். அவர்களைக் குறித்து வேதத்திற்குப் புறம்பாகச் சொல்லப்படும் கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளேன்.

# 36. பெண்களைப் போதகராக, தலைவராக ஏற்படுத்தலாமா?

பெண்களை மிகவும் அடிமைப்படுத்தியிருந்த காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறிவரும் காலத்தில் வாழ்கிறோம். 'பெண்களும் மானிடப் பிறவிகள்தான். அவர்களுக்குத் தேவையான உரிமைகளும் பாதுகாப்பும் மரியாதையும் பதவிகளும் கொடுக்கப்படவேண்டும்', என்பது சிறந்த கருத்து மட்டுமின்றி நடைமுறையில் செயல்படுத்தப்படவேண்டிய முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். 'ஆணும் பெண்ணும் சமம்' என்பதும் (கலா.3:28), 'ஆணின்றி பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை' என்பதும் (1 கொரி.11:11) முற்றிலும் உண்மையாகும்.

**குடும்பத் தலைவர்**

ஆதாமும் அவரது மனைவியும் ஏதேன் தோட்டத்தில் இருந்தவரைக்கும் சமாதானம் நிலவியதால் குடும்பத்திற்குத் தலைவர் தேவையில்லாம லிருந்தது. மனித குலத்திற்குள் பாவம் நுழைந்தபோது குடும்பத்திலும் (மற்ற எல்லா அமைப்புகளிலும்) தலைமைத்துவம் தேவைப்பட்டது. எனவே, அச்சமயத்திலிருந்து கணவன் குடும்பத்தின் தலைவனாக தேவனால் ஏற்படுத்தப்பட்டான் (ஆதி.3:16). புதிய ஏற்பாடும் கணவனே குடும்பத் தலைவன் என்று கூறுகிறது (1 கொரி.11:3; எபே.5:23). தலைவன் என்றால் அடக்கி ஆள்வது என்பதல்ல, அன்பினால் வழிநடத்துவதாகும்.

**வேறுபாடுகள்**

ஆண், பெண் ஆகிய இருவரது உயரம், உருவ அமைப்பு போன்றவற்றில் மட்டுமின்றி பண்புகளிலும் வேறுபாடுகள் இருக்குமாறு தேவன் மனிதரைப் படைத்திருக்கிறார். பொதுவாக, ஆண்களைவிடப் பெண்கள் மென்மையான பண்பு கொண்டவர்கள். குழந்தைகளையும், குடும்பத்தினரையும் கவனிப் பதிலும், வேறு பலவற்றிலும் ஆண்களைவிடப் பெண்கள் சிறந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. இந்த வேறுபாடுகளால் குடும்பமும் உலகமும் சிறப்பாக இருக்குமாறு தேவன் அமைத்துள்ளார். குடும்பத்தில் ஆண் களுக்கும் பெண்களுக்கும் சற்று மாறுதலான பொறுப்புகள் இருப்பதைப் போன்று, சபையிலும் சில வழிமுறைகளைக் கர்த்தர் வகுத்துள்ளார். அவற்றை நாம் அறிந்துகொள்ளும்படி வேதத்தில் எழுதி வைத்துள்ளார். நமது சொந்தக் கருத்துகளையும், விருப்பு வெறுப்புகளையும் தள்ளிவிட்டு தேவன் கூறுகின் றவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வது நமது கடமையாகும்.

**சபையில் பெண்கள்**

ஜெபிக்கவும் தீர்க்கதரிசனம் சொல்லவும் பெண்களுக்கு உரிமை உண்டு (1 கொரி.11:5). அவ்வாறு செயல்படும்பொழுது முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்று வேதம் கூறுகிறது. தீர்க்கதரிசனம் கூறுகிற பெண்கள் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இருந்தார்கள் (அப்.21:8,9). முதிர்வயதான பெண்கள் இளம் பெண்களுக்குப் போதிக்கவேண்டும் என்றும் வேதம் கூறுகிறது (தீத்து 2:4, 5). பெண்கள் சாட்சி கூறி மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தலாம் என்பதை யோவா.4:39இலிருந்து அறிகிறோம். இவ்வாறே, ஞாயிறு பள்ளி, விடுமுறை வேதாகமப் பள்ளி போன்ற சிறுவர் ஊழியத்தையும் பெண்கள் சிறப்பாகச் செய்யலாம்.

ஆனால், பெண்கள் உபதேசம்பண்ணவும் அதிகாரம் செலுத்தவும் வேதம் அனுமதிக்கவில்லை (1 தீமோ.2:12). அடக்கமுடையவர்களாயிருக்கவும் அமைதலோடு கற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள் (1 தீமோ.2:11). 'சபைகளில் உங்கள் பெண்கள் பேசாமலிருக்கக்கடவர்கள், பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்கிறது' (1 கொரி.14:34) என்றும் 'பெண்கள் சபையில் பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே' (1 கொரி.14:35) என்றும் 'ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால் நான் (பவுல்) உங்களுக்கு எழுதுகிறவை **கர்த்தருடைய கற்பனைகளென்று** அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்' (1 கொரி.14:37) என்றும் பவுல் மூலமாக ஆவியானவர் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இதை எதிர்ப்பவர்களும், அறியாதவர்களும், அறிந்தும் அறியாததுபோன்று எதிர்வாதம் பேசுகிறவர்களும் அப்படியே இருக்கட்டும் (1 கொரி.14:38).

**வேதம் குறிப்பிடும் பெண் ஊழியர்**

'கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய சகோதரி பெபேயாளை'ப் பற்றி ரோம.16:1 குறிப்பிடுகிறது. ஊழியக்காரி என்ற இச்சொல்லின் மூலமொழியான கிரேக்க மொழிச் சொல் **diakonon** என்பதாகும். இதைச் சார்ந்த இன்னொரு சொல் **diakonos** ஆகும். இவற்றின் பொருள் 'இன்னொருவருடைய கட்டளையை நிறைவேற்றும் பணி செய்பவர்' ஆகும். கர்த்தர் "எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன்" என்று மாற்.9:35இல் கூறியதில் ஊழியக்காரன் என்பதற்கு இச்சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. மேலும், கானாவூர் திருமணத்தின்போது கற்சாடிகளில்

தண்ணீர் நிரப்பிய வேலைக்காரரையும் இச்சொல் குறிக்கிறது (யோவா. 2:5,9). இன்னும் பல இடங்களில் பணிவிடைக்காரரையும், கிறிஸ்துவையும், அரசு அலுவலர்களையும், சாத்தானின் பணியாட்களையும் குறிப்பதாக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு இடத்திலும் ஆளுகை செய்பவர் என்றோ, கண்காணிப்பாளர் (சபைப் பொறுப்பாளர்) என்றோ பொருள்படாமல் பணிபுரிபவரைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. எனவே, ரோம.16:1இல் 'ஊழியக்காரி' என்று எழுதப்பட்டிருப்பது சபை நடத்துபவரையோ, மூப்பரையோ, போதகரையோ குறிப்பிடாமல், உதவி செய்பவரையே குறிப்பிடுகிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**வேதத்தின் தீர்ப்பு**

எந்தவொரு கருத்தையும் 'அது வேதத்தின்படி சரிதானா?' என்று கவனித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு கணிப்பதற்கு **இரு நியதிகள்** உள்ளன.

1) குறைந்தது இரு இடங்களிலாவது அக்கருத்து கூறப்பட வேண்டும். ஏனெனில், சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும் (2 கொரி.13:1).

2) கூறப்படும் கருத்திற்கு எதிரான வசனமோ, எடுத்துக்காட்டோ வேதத்தில் இருக்கக்கூடாது.

1 கொரி.14:34–35; 1 தீமோ.2:11–12 ஆகிய இரு இடங்களில் கூறப்பட்டுள்ளதாலும் அதற்கெதிரான வசனமோ, எடுத்துக்காட்டோ இல்லாததாலும் 'பெண்களை ஒரு சபையின் தலைவராகவோ, போதகராகவோ, கிறிஸ்தவ நிறுவனத்தின் தலைவராக நியமிப்பது வேதத்தின்படி சரியல்ல' என்று தீர்க்கிறோம்.

**கண்காணியானவன் ஒரு மனைவியையுடைய புருஷனாயிருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (1 தீமோ.3:2; தீத்து 1:6). எந்தப் பெண்ணும் இவ்வாறு இருக்கமுடியாது.**

எனவே, பெண்களைப் போதகராகவோ, நிறுவனத் தலைவராகவோ ஏற்படுத்துவது வேதத்தின்படி சரியல்ல.

**'கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'.**

# 37. ஊழியரின் மனைவி

நான் ஒரு உத்தமமான ஊழியரையே, நற்செய்தியாளரையே (மிஷனரி யையே) திருமணம் செய்து, வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்குப் பணிபுரிவேன் என்று தன்னையே தியாகமாக அர்ப்பணிக்கும் பெண்கள் உண்டு.தனது மகளை சபை ஊழியருக்குத் திருமணம் செய்துகொடுத்தால் மகள் வசதியோடும் சமுதாயத்தில் மதிப்புடனும் வாழமுடியும் என்று கருதும் சில சபை மக்களும் உண்டு.

**எளிதானது அல்ல**

ஒரு ஊழியரின் மனைவியாக இருப்பது எளிதன்று. கிறிஸ்தவர்களும் பிறரும் ஊழியரின், ஊழியரின் மனைவியின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் உன்னிப்பாகக் கவனிப்பார்கள். தன்னைப் பற்றிய உண்மையும் பொய்யுமான பல வதந்திகளை மட்டுமின்றி, விரும்பத் தகாததும் தேவையற்றதுமான பல விமரிசனங்களையும் அபாண்டமான வசைச் சொற்களையும் ஊழியரின் மனைவி சந்திக்க நேரிடும். ஊழியரின் மனைவியின் சிறு தவறுகளும் ஊழியத்தைப் பாதிப்பதோடு, கர்த்தரின் திருப்பெயரைப் பிறர் அவதூறாகப் பேசுவதற்கேதுவாக அமையக்கூடும். மிகவும் கவனமாகவும் பொறுப்போடும் வாழவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உண்டு. ‘இதைச் செய்தார்கள்’ என்றும் ‘இதையெல்லாம் செய்யவில்லை’ என்றும் அநியாயமாகப் பழித்துரைப்பதற்கு அநேக வாய்கள் ஆவலாயிருக்கும். ‘எனது பணியை யாரும் கவனிக்காமலிருக்கின்றனரே, எனக்கு உதவிசெய்ய யாரும் முன்வரவில்லையே’ என்ற வேதனை நிறைந்த பொறுப்பு ஊழியரின் மனைவிக்கு உண்டு.

தனது கணவரின் ஊழியத்தில் உதவிசெய்வது மட்டுமின்றி, ஊழியத்தில் கணவருக்கு வரும் பல தொல்லைகளிலும் பாடுகளிலும் முழுமனதோடு மௌனமாகப் பங்கேற்கவும், அநேகரை உபசரிக்கவும், பலவிதங்களில் கடினமாக உழைக்கவும் நேரிடும். யாவரையும் (தன்னைப் பழிகூறுகிறவர் களையும்) நேசிக்கும் பண்பும், பணத்தேவைகள், தொல்லைகள் போன்ற வற்றைச் சமாளிக்கும் நீடியபொறுமையும் கடின உழைப்பினால் வரும் ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய களைப்பையும் சோர்வையும் தாங்கும் இதயமும் ஊழியரின் மனைவிக்குத் தேவை. ஊழியர் அடிக்கடி பயணம் செய்ய நேரிடும்போது தனிமையாகக் குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய

பொறுப்பையும் பொறுமையாகக் கையாளவேண்டும். கணவர் கடினமாக உழைப்பதால் குடும்பத்தில் குழந்தைகளைக் கவனிப்பதிலும் பிற பொறுப்புகளிலும் மனைவி அதிகக் கவனம் செலுத்த நேரிடும்.

கணவரின் உள்ளம் சமாதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதற்கேற்ப நடந்து கணவனின் சரீரப்பிரகாரமான, மனநிலைப் பிரகாரமான தேவைகளை மகிழ்ச்சியுடன் சந்திக்கவேண்டும். கணவருக்குப் பிற பெண்கள் வாயிலாக அநேக சோதனைகளை சாத்தான் கொண்டுவரக்கூடும். எனவே கணவரைத் திருப்திப்படுத்துவதோடு அவரை உங்கள் அன்பில் எப்பொழுதும் மகிழ்ந் திருக்கச் செய்யவேண்டும். தனது கணவரைப் பற்றி யாரிடமும் குறை கூறாமல் கணவனுக்காகவும், ஊழியத்திற்காகவும் ஊக்கமாக ஜெபிப்பவர் களாயிருப்பது மிகவும் அவசியம். கணவனின் தவறுகளை அவரிடம் அன்புடன் கூறி அவரைத் திருத்துவதுடன், தேவைப்படும் போதெல்லாம் பணிவுடன் ஆலோசனை கூறவும் வேண்டும். யாவற்றிற்கும் மேலாக, 'எங்கள் அம்மா' என்று மக்கள் கூறும் அளவிற்கு வாழும்படி ஊழியரின் மனைவி எதிர் பார்க்கப்படுகிறார்கள்.

**எடுத்துக்காட்டு**

ஒரு மிஷனரி குடும்பத்தினரிடம் நான் நெருங்கிப் பழகியுள்ளேன். அவர்கள் கணவனும், மனைவியுமாக மிகவும் ஆர்வமாக உழைத்து, பல ஆத்துமாக்களை ஆதாயம்செய்து வழிநடத்தினார்கள். அவர்கள் பணியாற்றிய நிறுவனத்தின் வாலிப மிஷனரி ஒருவரிடம் ஒரு மூத்த மிஷனரி, 'நீங்கள் திருமணம் செய்துகொள்வதற்குக் காலமாயிற்றே' என்று கேட்டார். அதற்கு வாலிப மிஷனரி, 'நமது நிறுவனத்தில் பணிபுரியும் அந்த ஆண்ட்டி **(aunty)** அவர்களைப் போன்று உழைக்கும் ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்துக் கூறுங்கள். நான் திருமணம் செய்துகொள்கிறேன்' என்று கூறினார். ஒவ்வொரு ஊழியரின் மனைவியும் இவ்வாறு இருந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!

**வேதம் என்ன கூறுகிறது?**

1 தீமோ.3:11இல் 'அந்தப்படியே ஸ்திரீகளும்' என்று எழுதப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இதில் 'ஸ்திரீகள்' என்ற சொல் மூலமொழியான கிரேக்கத்தில் **'gune'** என்பதாகும். இச்சொல் புதிய ஏற்பாட்டின் 80இற்கும் மேற்பட்ட பகுதிகளில் 'மனைவி', 'மனைவிகள்' என்றும் பல இடங்களில் 'ஸ்திரீகள்' என்றும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. பல ஆங்கில வேதாகமங்களில் இந்த வசனத்தில் இச்சொல் **'wives** (மனைவிகள்)' என்றே எழுதப்பட்டுள்ளது.

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளவை எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும் என்ற போதிலும், இவ்வசனத்திற்கு முன்பு இருக்கும் பகுதியான வசனங்கள் 1–10இலும், இவ்வசனத்திற்குப் பின்பு வரும் பகுதியான வசனங்கள் 12–13இலும் சபைப்பொறுப்பாளர் (கண்காணி), உதவிக்காரர் ஆகிய ஊழியரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதால், வசனம் 11 ஊழியர்களின் மனைவிகளைப் பற்றிக் கூறுகிறது என்று ஏற்றுக்கொள்வது பொருத்தமானது. இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளவற்றை ஒவ்வொரு ஊழியரின் மனைவியும், ஒவ்வொரு பெண்ணும் பின்பற்றுவது நல்லது.

இவ்வசனத்தில் நான்கு பண்புகள் கூறப்பட்டுள்ளன. நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும்.

**நல்லொழுக்கமுள்ளவர்களாயிருத்தல்**

கிரேக்க மொழியில் இச்சொல் **'semnos'** ஆகும். இதன் பொருள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருத்தல், யாவரும் மதிக்கக்கூடியவராயிருத்தல் என்பதாகும். ஊழியரின் மனைவி என்பதால் பிறர் மரியாதையாக நடத்துவது மட்டுமின்றி, உங்கள் குணநலன்களைப் பார்த்து உங்களை யாவரும் மதிக்கும்படி வாழ்வது சிறந்தது. மிகுந்த தாழ்மையும், பரிசுத்தமும், எளிமையும் உள்ளவர்களாக வாழவேண்டும். ஆடம்பரமாக வாழாமல் கவனமாயிருக்க வேண்டும். கண்ணியமான ஆடையணிபவர்களாக இருப்பது மிகவும் அவசியம். ஆலயத்திற்கும் ஊழியத்திற்கும் சரியான நேரத்தில் வரவேண்டும்.

போதகர் ஒருவர் ஒரு கிராமத்தில் பணியாற்றி வந்தார். அவரது மனைவிக்கு ஊழியத்தைவிட ஆடம்பர வாழ்க்கையில் அதிக ஆர்வம் உண்டாயிற்று. தனது கணவரைப் பார்த்து, 'உங்களைத் திருமணம் செய்துகொண்டதில் நான் என்ன சுகத்தைக் கண்டேன்?' என்றெல்லாம் கூறி அவரது மனதை மிகவும் புண்படுத்தினார்கள். மனைவியின் தொல்லை தாங்காமல் பலவிதங்களில் பணம் சேகரிப்பதில் கவனம் செலுத்தி, அதனால் நன்மதிப்பை இழந்தார். இவ்வாறு நடக்காமல் கணவருக்கு நல்லாலோசனைகளையும், ஊழியத்தில் உற்சாகத்தையும் அளிப்பவராக நடக்கவேண்டும்.

ஒரு போதகரின் மனைவி சபைமக்களிடம் நன்கு பழகி அவர்களது குடும்பங்களின் மகிழ்ச்சியிலும் துயரங்களிலும் கரிசனையோடு பங்கேற்று வந்தார். அந்தப் போதகர் இடமாற்றம் பெற்று வேறே ஓர் இடத்திற்கு மாறுதலாகிச் சென்று பல மாதங்கள் கழித்து அவர் விட்டுச்சென்ற ஊரின் ஒரு குடும்பத்தில் ஒரு மரணம் நேரிட்டது. அக்குடும்பத்திலிருந்த ஒரு

நடுத்தர வயதான ஒரு தாய், 'இதற்கு முன்னாலிருந்த அம்மா (போதகரின் மனைவி) இப்படிப்பட்ட சமயங்களில் வேதனையில் பங்கேற்று ஆறுதல் கூறுவார்கள். இப்பொழுது எங்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு அப்படிப்பட்ட தாய் இல்லையே' என்று கூறி அழுதார்கள். இதிலிருந்து அந்த 'அம்மா'வின் தாயுள்ளத்தையும், மக்கள் மீதான கரிசனையும், ஆற்றித்தேற்றும் பண்பையும் நாம் புரிந்துகொள்கிறோம். ஒவ்வொரு ஊழியரின் மனைவியும், தனது கணவர் பணிசெய்யும் மக்களிடம் கரிசனையுள்ளவர்களாயிருப்பது அவசியம்.

**அவதூறு பண்ணாதவர்களாயிருக்கவேண்டும்**

இச்சொல் பிசாசாக **(diabolar)** இருக்கக்கூடாது என்று மூலமொழியில் எழுதப்பட்டுள்ளது. பிசாசின் குணமாகிய குற்றஞ்சாட்டுதல், அவதூறாகப் பேசுதல் ஆகியவையின்றி இருக்கவேண்டும் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.

பெண்களில் பலர் எப்பொழுதும் பிறரைப் பற்றிப் பேசுவது வழக்கம். பிறரின் நற்குணங்களையும் நற்செயல்களையும் பாராட்டிப் பேசலாம். ஊழியரின் மனைவி எல்லாவற்றிலும் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியும் கேட்கிறவர்கள் பக்திவிருத்தியடையும்படியும் பேசவேண்டும்.

பிற பெண்களிடம் (குறிப்பாக சபையிலும் ஊழியப் பகுதியிலும் உள்ள எல்லாப் பெண்களிடமும்) நன்கு பழகி, நட்புள்ளவர்களாக இருக்கவேண்டும். யாவரையும் ஆர்வத்துடனும் புன்னகையுடன் வாழ்த்துகிறவர்களாகவும் உற்சாகமூட்டுகிறவர்களாகவும் இருப்பது சிறந்தது. பல தொலைபேசி அழைப்புகள் வந்தாலும் பொறுமையாகப் பதில் கூறவேண்டும். அடிக்கடி பலர் வீட்டிற்கு வந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்று உபசரிக்கவேண்டும்.

ஒரு போதகரின் மனைவி புதிதாகக் கிறிஸ்தவளான ஒரு வாலிபப் பெண்ணை 'ஏன் சென்ற வாரம் ஆலயத்திற்கு வரவில்லை?' என்று மிகவும் கோபத்துடன் கேட்டதை நான் பார்த்தேன். அந்தப் பெண் போதகரின் மனைவியைத் தாய் என்றா, தேவதூதனைப் போன்றவர்கள் என்றா அல்லது பிசாசைப் போன்றவர்கள் என்றா, எப்படி நினைத்திருப்பாள்? கோபத்திற்குப் பதிலாக அன்பைக் காண்பித்தல் மிகவும் அவசியமன்றோ.

இன்னொரு போதகரின் மனைவி சபையிலுள்ள விசுவாசிகள், வாலிபர்கள் ஞாயிறு பள்ளிப் பிள்ளைகள், மிகவும் சிறுபிள்ளைகள் ஆகிய யாவரையும் முறைத்துப் பார்ப்பது, திட்டுவது ஆகியவற்றில் பெயர்பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்களைப் பார்த்து யாவரும் பயப்பட்டனர். சபையின் ஒரு ஜெபக்குழு உறுப்பினர் நோயுற்றபோது, சபையின் வேறொரு குழுவிலுள்ளவர்கள்

அவர்களைப் பார்க்கச் சென்று ஜெபித்ததையே குறை கூறினார்கள். 'சபை கட்டுப்பாடு' என்ற பெயரில் இவ்வாறு பிசாசைப்போன்று நடப்பது தவறு.

கர்த்தருடைய பிள்ளைகளை இறுமாப்பாக ஆளக்கூடாது என்றும் கடினமாக அதிகாரம் செலுத்தக்கூடாது என்று கர்த்தர் ஊழியருக்குக் கூறியது (மத்.20:25–27), ஊழியரின் மனைவிக்கும் பொருத்தமானதே.

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும்**

மூலமொழியில் **(nephalous)** என்று கூறப்பட்டுள்ள இச்சொல்லிற்கு, 'தெளிந்தபுத்தியுள்ளவராயிருத்தல், விழிப்புள்ளவராயிருத்தல், எச்சரிக்கையாயிருத்தல்' என்று பொருள்கொள்ளலாம். ஊழியரின் மனைவி, தனது வாழ்க்கையிலும் தனது குடும்ப வாழ்க்கையிலும் சபையின் காரியங்களிலும் தெளிவான கருத்துகளும் நடவடிக்கையும் உள்ளவர்களாயிருப்பது அவசியம். தேவைப்படும்போதெல்லாம் ஊழியத்தில் பங்கேற்பது சிறந்தது. நீங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருப்பதோடு பிற பெண்களுக்கு ஏற்ற நேரத்தில், சரியான ஆலோசனை சொல்வதற்கு எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். அதேசமயம், குடும்பத்தைக் கவனிப்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். உங்கள் கணவர் முழுமனதுடன் ஊழியம் செய்வதற்கு ஏதுவாக குடும்பத்தில் சமாதானமும் மகிழ்ச்சியும் இருக்கும்படி பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு.

வாலிபர்கள், மாணவர்கள் மத்தியில் ஊழியம் செய்த ஒரு சகோதரர் ஊழியத்தினிமித்தம் அடிக்கடி இரவில் மிகவும் பிந்தியே வீட்டிற்கு வருவார். அவரது மனைவி ஆசிரியையாகப் பணியாற்றியபோதிலும், சற்றும் மனவருத்தப் படாமல் தாங்களாக முன்வந்து வீட்டிற்குத் தேவையான யாவற்றையும் பார்த்துக்கொண்டார்கள். எனவே, அந்த ஊழியரின் குடும்பத்தில் சமாதானமும் அன்பும் மகிழ்ச்சியும் தங்கியிருக்கிறது. மேலும் அந்த சகோதரர் குடும்ப பாரமின்றி மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்ததால் அவரது ஊழியம் சிறந்து விளங்கியது. பிறருக்குத் தெரியாமல் மறைமுகமாக கணவரின் ஊழியத்தில் பங்கேற்கும் அநேக சகோதரிகள் உண்டு.

தனது சபையினரை ஊழியத்தில் ஊக்குவித்து ஊழியத்திற்காக ஊக்கமாக ஜெபிக்கும் சகோதரிகளுக்கு ஊழியத்தின் ஆசீர்வாதத்தில் மிகவும் சிறப்பான பங்கு உண்டு (சங்.68:12–13).

ஒரு சகோதரியின் கணவர் பல சபைகளின் தலைமைப் போதகராக இருந்தார். அந்த சகோதரி ஞாயிறு பள்ளிகள், வாலிபர் ஊழியம், விடுமுறை

வேதாகமப் பள்ளி (VBS) ஆகியவற்றை ஒருங்கிணைத்து அநேகரைப் பயிற்றுவித்து பல இடங்களுக்குச் சென்று மிகவும் சிறப்பாகப் பணியாற்றி னார்கள். நீங்களும் முயற்சிக்கலாமே.

**யாவற்றிலும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்**

இதன் மூலமொழிச் சொல்லான **pistor** என்பதற்கு உண்மையுள்ளவரா யிருத்தல், அசையாதிருத்தல் **(steady)** என்று பொருள். ஊழியரின் மனைவி தனது கணவருக்கும் கர்த்தருக்கும் யாவருக்கும் உண்மையுள்ளவர்களா யிருத்தல் மிகவும் அவசியமாகும். விசுவாசத்திலும், நற்செயல்களிலும், உபசரிப்பதிலும், பிற நற்பண்புகளிலும் ஒரே சீராக, தடுமாற்றமின்றி வாழவேண்டும். தேவபக்தியுள்ளவர்களாயிருப்பதோடு ஜெபிக்கும் பழக்க முடையவர்களாயிருப்பது மிகவும் தேவை. மேலும் பல விதங்களில் உங்களுக்கு வரும் சோதனைகளில் விழுந்துவிடாமல் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்.

ஊழியரின் மனைவிகளில் சிலர் தங்களின் எல்லைகளை உணராமல், அதிகமாகத் தலையிட்டு, அகந்தையுடன் இருப்பது உண்டு. அவ்வாறின்றி தாழ்மையுடன் இருக்கும்படியும் ஊக்கமாக ஜெபிப்பதுடன் யாவரிடமும் கருணையுடனும் பரிவுடனும் நடந்துகொள்ளும் தாயாகவும் இருக்கும்படியும் கர்த்தர் உங்களை அழைத்துள்ளார்.

**குழந்தைகளை நேசித்தல்**

குழந்தைகள் யாவரையும் அன்புடன் நேசிப்பதுடன் குழந்தைகள் அதை உணரும்படி நடந்துகொள்ளவேண்டும்.

குடும்பத்தில் அடங்காமல் இருந்ததற்காக, சபை உறுப்பினரின் ஒரு குழந்தையை, ஒரு போதகரின் மனைவி அடிப்பதை நான் பார்த்து மிகவும் வேதனையடைந்தேன். எந்தக் குழந்தையையும் அடிப்பதற்குப் போதகருக்கோ, அவரது மனைவிக்கோ, எந்த மூப்பருக்கோ, ஞாயிறுபள்ளி ஆசிரியருக்கோ, விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியருக்கோ எந்த அதிகாரமும் கிடையாது. அன்பினால் மட்டுமே யாரையும் திருத்துவதற்கு முற்படவேண்டும்.

> **கணவரின் ஊழியத்தை உன்னத நிலைக்கு உயர்த்த ஊழியரின் மனைவியால் முடியும்.**
>
> **கணவரின் ஊழியத்தைக் கெடுத்துப் பாழாக்கவும் ஊழியரின் மனைவியால் முடியும்.**

# 38. சகோதரரே, ஊழியருக்காக வேண்டிக்கொள்ளுங்கள்

"சகோதரரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று பவுல் அப்போஸ்தலருடன் சேர்ந்து உங்களைக் கேட்டுக்கொள்வது எனக்கு நலமாகத் தோன்றிற்று (1 தெச.5:25). 'நாங்கள்' என்பது போதகர்கள், மிஷனரிகள், ஆத்தும ஆதாயம் செய்யும் நற்செய்தியாளர்கள், ஆவிக்குரிய நூல்களை எழுதுபவர்கள், கிறிஸ்தவ நிறுவனத்தில் பணிபுரியும் கர்த்தருடைய பிள்ளைகள், தன்னார்வ ஊழியர், பகுதிநேர ஊழியர் போன்று கிறிஸ்துவுக்காக உத்தமமாகப் பணிபுரியும் ஊழியர் அனைவரையும் குறிப்பிடுமாறு இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது.

**ஊழியரும் மனிதர்தான்**

கர்த்தருக்காக உழைக்கும் நாங்கள் வானத்திலிருந்து வந்தவர்கள் அல்ல. நாங்கள் மாம்சத்தின்படி ஞானிகள், வல்லவர்கள், பிரபுக்கள் அல்ல. உலகத்தில் பைத்தியமானவைகளையும், பலவீனமானவைகளையும், இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்தகொண்டார் (1 கொரி.1:26–28). நாங்கள் எல்லா கர்த்தருடைய மக்களோடும் சேர்ந்து கர்த்தருடைய அரசை நோக்கிச் செல்கிறவர்கள் **(Fellow pilgrims)**. நாங்கள் முற்றும் தேறினவர்கள் அல்ல (பிலி.3:12). தேவனுடைய கிருபை எங்களைத் தாங்காவிட்டால் எந்நேரத்திலும் கீழே விழக்கூடிய மனிதர்களே நாங்கள். எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது (2 கொரி.3:5). நாங்கள் எவ்வளவு சிறப்பான ஊழியம் செய்தபோதிலும் பயனற்ற (அப்பிரயோஜனமான) ஊழியர்தான் (லூக்.17:10). ஆனால் கர்த்தர் எங்களை அவருடைய ஊழியத்திற்கென்று அழைத்ததால் நாங்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறோம்.

**உங்கள் ஜெபம் தேவை**

'மேய்ப்பரைத் தாக்கி விழச்செய்தால் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்' (சக.13:7) என்பதை அறிந்த பிசாசானவன், ஊழியரை விழச்செய்வதற்காக எல்லாவிதத்திலும் முயன்றுகொண்டிருக்கிறான். பெருமை, பொருளாசை, இச்சை, போராட்டங்கள், பாடுகள், குடும்பத்தில் பிரச்சனை

போன்ற பலவற்றை ஊழியர் சந்திக்கவேண்டியதுள்ளது. எனவே, உங்கள் ஜெபம் எங்களுக்கு மிகவும் தேவையாயிருக்கிறது.

### எங்கள் வாழ்க்கைக்காக ஜெபியுங்கள்

மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், சிறப்பாக கர்த்தருடைய மக்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடு நடக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுங்கள் (2 கொரி.1:11–12). நாங்கள் கிறிஸ்தவர்களுக்குப் புகழ்ச்சியாகவும், பயனுண்டாகும்படியும் வாழவேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுங்கள் (2 கொரி.1:14–15). எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும் படியும் வேண்டிக்கொள்ளுங்கள் (2 கொரி.1:20). நாங்கள் நல்மனச்சாட்சி யுள்ளவர்களாய் யோக்கியமாய் நடக்கும்படி எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் (எபி.13:18).

### முன்மாதிரியாக இருக்கும்படி

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல என்னைப் பின்பற்றுங்கள்" என்று பவுல் சொன்னதுபோல (1 கொரி.4:16; 11:1), நாங்களும் சொல்லும் படியான முன்மாதிரியாக நாங்கள் வாழும்படி ஜெபியுங்கள் (1 தீமோ.4:12).

### அக்கினி ஜூவாலையாக இருக்கும்படி

'தமது ஊழியரை அக்கினி ஜூவாலைகளாகவும் செய்கிறார்' (சங்.104:4; எபி.1:7) என்ற வேத வசனங்களின்படி எங்களை அக்கினி ஜூவாலைகளாகச் செய்து பாவம், வியாதி, கட்டுகள், பிசாசின் பிடிகள், அறியாமை போன்றவற்றை எங்கள் மூலமாகக் கர்த்தர் சுட்டெரிக்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள்.

### சரியாகப் பேசும் கிருபைக்காக

நற்செய்தியைப் பற்றிப் (சுவிசேஷத்தைப் பற்றி) பேசவேண்டியபடி (எழுதவேண்டியபடி) தைரியமாய்ப் பேச(எழுத)த்தக்கதாக, சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு (கருத்துகள், வார்த்தைகள்) எங்களுக்குக் கொடுக்கப்படும்படி வேண்டிக்கொள்ளுங்கள் (எபே.6:19–20; கொலோ.4:3). சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைச் சரியாக அறிவிப் பதற்கு நாங்கள் கவனமாயிருக்கும்படி ஜெபியுங்கள் (1 கொரி.1:23; 2:2).

### திறந்த வாசலுக்காக

உலகின் பல நாடுகள், பல இடங்கள், பல இனங்கள் கர்த்தரின் நற்செய்திக்கு அடைக்கப்பட்டிருக்கின்றன. உலகெங்கும் கர்த்தருடைய

பணிக்கு எப்பொழுதும் திறந்தவாசல் இருக்கும்படியாகவும், இப்பொழுது அடைக்கப்பட்டிருக்கும் வாசல்கள் திறக்கும்படியாகவும் ஊக்கமாக ஜெபியுங்கள் (கொலோ.4:3). மேலும், நாங்கள் பேசும் இடங்களிலெல்லாம் வசனத்திற்கு இருதயங்கள் திறக்கும்படியாகவும் வேண்டிக்கொள்ளுங்கள்.

**கர்த்தருக்காகப் பாடுபடுவோருக்காக**

பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது சபையார் இரவு நேரத்தில் ஜெபித்துக்கொண்டிருந்தனர் (அப்.12:12). கர்த்தர் தமது தூதனை அனுப்பி, பேதுருவை விடுதலை செய்தார் (அப்.12:1–17). நாமும் உபத்திரவங் களிலும் பாடுகளிலும் வேதனைகளிலும் சிறைச்சாலைகளிலும் இருக்கும் கர்த்தருடைய பிள்ளைகள் யாவருக்கும் ஜெபிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நாம் ஜெபிப்பது அவர்களுக்கு விடுதலையளிப்பதாக முடியும் (பிலி.1:7,19).

**பிரபலமாகாத ஊழியர்**

எழுத்து வடிவம் இல்லாத மொழியினர் வாழும் அடர்ந்த காடு, மலைகளுக்குச் சென்று, அங்கே வாழ்ந்து, அவர்களிடம் பழகி, அவர்களின் மொழியைப் புரிந்துகொண்டு, அம்மொழிக்கு எழுத்துகளை உருவாக்கி, வேதப்பகுதிகளை அந்தமொழியில் மாற்றி, அச்சிட்டு, விநியோகித்து, எழுத்துகளைக் கற்றுக்கொடுத்து, அந்த மக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் பணி மிகவும் சிரமமானதும் தியாகமானதும் ஆகும். இவ்வாறு இந்தியாவிலும் உலகின் பல நாடுகளிலும் நடக்கும் பணிக்காக ஊக்கமாக வேண்டிக்கொள்ளுங்கள்.

மனிதரைக் கொன்று சாப்பிடும் மக்கள் இருக்கும் இடங்களுக்கும் சென்று அவர்களிடம் பழகி நற்செய்தி அறிவிப்பதற்காகச் செல்வோர் உண்டு. சொல்லப்படாத, சிரமமான இடங்களில் பணிபுரியும் அவர்களுக்காக ஜெபிப்பவர்கள் குறைவு. தன்னார்வமாக ஊழியம் செய்யும் பலருண்டு. இவர்களுக்காக ஜெபியுங்கள். இப்படிப்பட்ட இடங்களுக்கு மிஷனரிகள் செல்வதற்கு விமான வழிமட்டுமே பயன்படும். இதற்கென்று இருக்கும் விமான சேவைக்காக, அதில் பணிபுரியும் விமான ஓட்டுநருக்காக, மற்ற பணியாளர்களுக்காக ஜெபியுங்கள்.

**எழுதுபவர்களுக்காக**

ஆவிக்குரிய நூல்கள் எழுதும் எழுத்தாளர் பலர் உண்டு. ஆவியானவரின் நடத்துதலால் சரியாக எழுதும்படி எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். ஆவிக்குரிய நோக்கத்துடன் எழுதும்படி ஜெபியுங்கள். கிறிஸ்தவ

பத்திரிகைகள், கைப்பிரதிகள், பாடல்கள் போன்றவற்றை எழுதுபவர்களுக்காக ஜெபியுங்கள்.

**இலக்கிய விநியோகப் பணி**

வியாபார நோக்கத்துடன் இலக்கியப் பணி செய்யும் பல நிறுவனங்கள் உண்டு. இலாபத்தை எதிர்பாராமல் வேதாகமமும் கர்த்தருடைய வசனத்தை விளக்கும் நூல்களும் பலருக்குக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படும் நிறுவனங்களும் உண்டு. இவற்றிற்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

நூல்களும், கைப்பிரதிகளும், மாத இதழ்களும் அவற்றை வாங்குவோருக்குப் பயன்தருகிறவையாக இருக்கும்படி ஜெபியுங்கள். தேவையான இடத்தில், சரியான இலக்கியம் விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

**தொலைக்காட்சி, வானொலி ஊழியங்கள்**

பல இடங்களில் பெரிய அளவில் கூட்டங்கள், மாநாடுகள், முகாம்கள், கருத்தரங்குகள் நடத்துபவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். தொலைக்காட்சி, வானொலி, ஒலி நாடா, DVD போன்ற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

**நோயுற்றோர் சந்திப்பு, பலவித ஊழியங்கள்**

சுகவீனமாயிருப்பவர்களைச் சந்தித்து, கர்த்தருக்குள் வழிநடத்தி, அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் பெயர் தெரியாத பல ஊழியர் உண்டு. சிறைச்சாலைகளிலிருப்போரைச் சந்திக்கச் செல்லும் ஊழியர் உண்டு. ஏழைகளையும் அநாதைகளையும் ஆதரிக்கும் ஊழியர் உண்டு.

இன்னும் பல ஊழியங்கள் உண்டு. ஊழியம் செய்யும் யாவருக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்.

**நாங்களும் மனிதர்கள்தான்**

கொர்நேலியு தனது காலில் விழுந்து வணங்க வந்தபோது பேதுரு தடுத்து "நானும் ஒரு மனிதன்தான்" என்றார் (அப்.10:25–26). தங்களைத் தேவர்கள் என்று எண்ணி தங்களுக்குப் பலியிட மனதாயிருந்த மக்களிடம் "நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனிதர்தானே" என்று பவுலும் பர்னபாவும் கூறினர் (அப்.14:11–15). இக்காலத்தின் ஊழியர் பலர் பாவங்களில் விழுந்துவிட்டு "நாங்களும் மனிதர்தான்" என்கின்றனர். இந்த அவல நிலை நீங்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள்.

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்**

# 39. கடைசியாக

**தேவனுடைய கட்டளை:**

**தேவனாகிய கர்த்தர், பவுலின் மூலமாக உங்களுக்குக் கட்டளையிடுகிற தாவது: 'நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:**

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு...**

**நீயோ, எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று' (2 தீமோ.4:1–2,5). '... நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக...' (கொலோ4:17).**

அடிக்கடி இந்தக் கட்டளையை வாசித்துப் பின்பற்றுங்கள்.

**யார் தேவனுடைய இருதயத்துக்கேற்ற போதகர்?**

தனது வாழ்வின் இறுதியில் தேவனை நோக்கி, "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" (யோவா.17:4) என்றும், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 தீமோ.4:7) என்றும் சொல்லக்கூடியவர் தேவனுடைய இருதயத்திற்கேற்ற போதகர். உங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே நீங்கள் இவ்வாறு இருக்கமுடியும் (பிலி.4:13).

இப்படிப்பட்டவரை இயேசு நேரடியாகச் சந்தித்து, "நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று கூறி (மத்.25:21,23) நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார் (2 தீமோ.4:7–8).

**'பிதாவாகிய தேவனே, இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் இக்கிருபையைப் பெற்றுக்கொள்ளும்படி செய்வீராக. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்'.**

## Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் விளக்கங்கள் எழுதியுள்ள வாழ்வியல் விளக்க வேதாகமம்



*வேதத்தின் பேருண்மைகளை அறிந்து கொள்ளவும்*
*தேவன் விரும்புகிறபடி வாழவும்*
*தேவனுக்கு ஊழியம் செய்யவும்*
*வழிகாட்டியாக அமைவது*

# வாழ்வியல் விளக்க வேதாகமம்

## வாழ்வியல் விளக்க வேதாகமத்தின் சிறப்புகள்

**விளக்கக் கட்டுரைகள்:** 80 இற்கும் மேலான விளக்கக் கட்டுரைகளில் வேதத்தின் எல்லா முக்கிய கருத்துகளும் எளிதில் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளன. 'திரித்துவம்' போன்ற கடினமான தலைப்புகளிலும், வாழ்வியல் சார்ந்த தலைப்புகளிலும், தேவத்துவம், இரட்சிப்பு, திருமுழுக்கு (ஞானஸ்நானம்), ஆவியினால் திருமுழுக்கு (அபிஷேகம்), ஆவியின் வரங்கள், ஆவியின் கனி, நற்செய்திப்பணி போன்ற பல தலைப்புகளிலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன ஆபிரகாமின் காலத்திலிருந்து இன்றுவரையுள்ள எருசலேமின் வரலாறு, படைப்பின் வரலாறு, ஆதாம்வரை ஆண்டுக் கணக்கு போன்ற வரலாற்றுக் கட்டுரைகளில் பல முக்கிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் வேதாகமத்தின் வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது.

**இணைப்பு:** 'டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கொள்கை தவறானது' என்பதற்கான அறிவியல் (Scientific) ஆதாரங்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன.

**வாழ்க்கை வரலாறு ஆய்வு :** 75 இற்கும் மேலான வேதாகம மனிதர்களின் வாழ்க்கை ஆய்வுக் குறிப்புகளின் தொகுப்புகள் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணைகள்:** வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நகரங்களின் தூரங்களைக் கூறும் அட்டவணைகளும், எபிரெய மாதங்கள், எடைகள், அளவுகள், தீர்க்கதரிசிகளின் காலங்கள் போன்ற பல தலைப்புகளில் அட்டவணைகளும் பட்டியல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

**அறிமுகங்கள்:** வேதத்தின் ஒவ்வொரு நூலுக்கும் பல குறிப்புகளுடன் அறிமுகம் தரப்பட்டுள்ளது. மேலும், வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, ஐந்தாகமங்கள், தீர்க்கதரிசிகளின் நூல்கள், நிருபங்களுக்கான அறிமுகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**விளக்கக் குறிப்புகள்:** இறையியல், வரலாறு, சமுக வாழ்க்கை, விளக்கங்கள் போன்ற வற்றுடன் ஜெபத்திற்கும் தியானத்திற்கும் துதிப்பதற்கும் வாழ்க்கைப் பயனீட்டிற்கும் ஏற்ற குறிப்புகள் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முரண்பாடுகளாகக் கருதப்படும் வசனங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. உன்னதப்பாட்டிற்குச் சிறப்பான அறிமுகம் உள்ளது.

**ஒத்த வாக்கியங்கள், கடினமான சொற்கள்:** ஒவ்வொரு பக்கத்திலும் ஒத்தவாக்கியங்கள், வேதத்தின் இறுதியில் ஒத்தவாக்கிய அகராதி, கடினமான சொற்களுக்குப் பொருள் தரும் பட்டியல் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

**படங்கள்:** ஆங்காங்கே விளக்கப்படங்களும் இறுதியில் பலவண்ண தேசப்படங்களும் தரப்பட்டுள்ளன.

மேலும், **வேதவாசிப்பு திட்டங்கள்**, நற்செய்தி நூல்களின் நிகழ்ச்சிகள் தொகுப்பு போன்ற பல சிறப்பம்சங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

**நான்காம் பதிப்பு எல்லா கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்**

## Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் எழுதியுள்ள நூல்கள்

**வேதத்தைத் தியானிப்பது எப்படி (தமிழ்)**
**HOW TO MEDITATE ON THE BIBLE (English)**

வேதத்தைத் தியானிப்பதற்கான, எளிதில் பின்பற்றக்கூடிய முறைகளும் எடுத்துக்காட்டுகளும் அடங்கிய நூல். பல மொழிகளில் 30,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**நற்செய்திப்பணி செய்வது எப்படி (தமிழ்)**
**HOW TO DO GOSPEL WORK (English)**

நற்செய்திப்பணிக்கு நம்மை உற்சாகப்படுத்தி வழிகாட்டும் சிறந்த நூல். பல மொழிகளில் 25,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**கடவுளைக் காண்பிக்கிறேன் வாருங்கள் (Tamil)**
**COME I'LL HELP YOU SEE GOD (English)**

கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தும் நூல். பலமொழிகளில் 70,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி (தமிழ்)**
**How to be prepared for the Lord's coming (English)**

கிறிஸ்துவின் வருகைக்கு கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்தும் நூல். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் உள்ளது.

**ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி (தமிழ்)**
**BAPTISM IN THE SPIRIT, GIFTS AND FRUIT OF THE SPIRIT (English)**

சகோதரர் லயணலுடன் இணைந்து எழுதிய வேத ஆய்வு நூல். மூன்றாம் பதிப்பு.

**இதோ சீக்கிரம் வருகிறார் (தமிழ்)**

கர்த்தரின் வருகையைக்குறித்த உபதேச நூல். மூன்றாம் பதிப்பு

**தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஊழியர் (தமிழ்)**

ஊழியர்களும் சபை மக்களும் அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் அடங்கிய நூல். இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் (Presidency College) பேராசிரியராகவும், பின்னர் அரசுக் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர் ஆவார். இவர் பல ஆவிக்குரிய கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள், சபைகள், ஆசிரியர் மாநாடுகள், வாலிபர் கூட்டங்கள், போதகர்கள் மாநாடுகள் ஆகியவற்றில் தேவசெய்தி அளிக்கவும், நோயுற்றோரைச் சந்திக்கவும் ஆவிக்குரிய நூல்களை எழுதவும் தேவனால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறார். கர்த்தருடைய கிருபையால் பலரை இரட்சிப்பிற்குள்ளும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்குள்ளும் வழிநடத்தியுள்ளார்.

ஆவியானவரின் வழி நடத்துதலாலும் நீண்டநாட்கள் மிகவும் முயற்சி செய்து உழைத்ததாலும் இந்நூல் எழுதப்பட்டு வெளியிடப்படுகிறது. தம்முடைய ஊழியர் எப்படி இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புவதை இந்நூல் வேதத்தின் அடிப்படையில் தெளிவாகக் கூறுகிறது. தேவன் விரும்பும் விதத்தில் ஊழியம்செய்ய வாஞ்சிக்கும் யாவருக்கும் இந்நூல் பயனுள்ளதாயிருக்கும் என்பது நிச்சயம். ஒவ்வொரு ஊழியரும் இந்நூலை அடிக்கடி வாசித்துப் பின்பற்றினால் அவர்களின் ஊழியம் தொடர்ந்து சிறப்பாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தங்கள் சபையின் ஊழியர் எவ்வாறு இருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ளவும், அவ்வாறு இருக்குமாறு தங்கள் ஊழியருக்காக ஜெபிக்கவும் சபை மக்களுக்கு இந்நூல் பயனளிக்கும்.

இவரது பிற நூல்களும், 'வாழ்வியல் விளக்க வேதாகமும்' ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பயனுள்ளவை. வாங்கி, பயன்படுத்தி, ஆசீர்வாதம் பெறும்படி அழைக்கப்படுகிறீர்கள்.

WORD OF CHRIST
# 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road
Kellys, Chennai - 600 010, India